# திருக்குறியீட்டியல்

முதல் பாகம்

## தமிழக தொ(ல்)லியல் குறியீடுகள்




நூலாசிரியர்கள்

தி.லெ.சுபாஷ் சந்திர போஸ்

முனைவர் வை.இராம் குமார்

கா.பாலகிருஷ்ணன்

# திருக்குறியீட்டியல்

## (திருக்கோயில் திருக்குறியீடுகள்)

நூலாசிரியர்கள்

**தி.லெ.சுபாஷ் சந்திர போஸ்**

**முனைவர் வை.இராம்குமார்**

**கா.பாலகிருஷ்ணன்**

## நூல் குறிப்புக்கள்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | திருக்குறியீட்டியல் (திருக்கோயில் திருக்குறியீடுகள்) |
| நூலின் தன்மை | : | தத்துவம்-புராணம்-சடங்கு |
| நூல் உரிமை | : | ஆசிரியர்களுக்கே |
| நூல் அளவு | : | 150 மி.மீ x 210 மி.மீ. |
| முதல் பதிப்பு | : | ஜூலை, 2014 |
| அச்சு எழுத்தும் அளவும் | : | செந்தமிழ், 14 புள்ளி |
| பக்கங்கள் | : | 168 |
| நூல் விலை | : | உரூபா 250/= |
| ***ISBN*** | : | ***978 - 1 - 62847- 403 - 9*** |

**அச்சிட்டோர்**

தி பிரிண்டிங் ஹவுஸ்,
எண். 6. ரேஸ் கோர்ஸ் ரோடு,
திருச்சிராப்பள்ளி- 620 023

**வெளியீடு**

அறிவோம் அறிவிப்போம் மையம்,
பாரதி கோச்சிங் சென்டர் வளாகம்,
இந்தியன் வங்கி காலனி, கே.கே.நகர் ரோடு
திருச்சி- 620 023. தொலைபேசி எண்: 0431-4050144

**அட்டைப் படங்கள்**

முன்பக்கம்: கோவை மாவட்டம், பெரிய தடாகம், ஸ்ரீ லலிதாம்பிகை அம்மன் திருக்கோயில்.
பின்பக்கம்: திருச்சி மாவட்டம், குழுமணி, அகிலாண்டபுரம்.
வடிவமைப்பு: தி.லெ.சுபாஸ் சந்திர போஸ்

# பொருளடக்கம்


| வ.எண் | | பக்கம் |
|---|---|---|
| 01. | மந்திரம் | 12 |
| 02. | யந்திரம் | 17 |
| 03. | தந்திரம் | 24 |
| 04. | திருக்கோயில் | 31 |
| 05. | திருக்கோபுர நிலைகால்படிக் குறியீடுகள் | 43 |
| 06. | பிரபஞ்ச அதிசயம் | 54 |
| 07. | மங்கலகரமானச் சின்னங்கள் | 73 |
| 08. | ஆயுதங்களும் பிற சின்னங்களும் | 87 |
| 09. | இந்து சமய சின்னங்களின் உட்பொருள் | 160 |
| 10. | நிறைவு | 163 |



**தவத்திரு முனைவர் ஸ்ரீ ஜகன்னாத சுவாமிகள்,**

ஸ்ரீ லலிதாம்பிகை பீடம்,

ஸ்ரீ லலிதாம்பிகை திருக்கோயில்,

பெரியதடாகம், சின்னதடாகம் அஞ்சல்,

கோவை- 641 108

09.06.2014

## வாழ்த்துரை

திருக்கோயில்களில் காணப்படும் புனிதமான குறியீடுகளைப் பற்றிய அரிய விளக்கங்கள் அடங்கிய தொகுப்பாக மலரும் திருக்குறியீட்டியல் எனும் இந்நூல் இளைய தலைமுறையினருக்கு ஆன்மிக வழிகாட்டும் ஓர் அற்புதமான படைப்பாக உருவாகியுள்ளது.


இந்நூலில் தொகுக்கப்பட்ட விவரங்கள், அவற்றிற்கான சான்றாதாரங்கள் ஆகியவற்றைத் திரட்டி, ஒருங்கிணைத்து ஒரு கலைக்களஞ்சியம் போல உருவாக்கியுள்ளமை பாராட்டுதற்குரியது. உபநிடதக் குறிப்புக்களையும் இணைத்து விளக்கங்கள் தரும் பாங்கு நூலாசிரியர்களின் ஆழ்ந்த ஞானத்தையும் விவேகத்தையும் காட்டுகிறது.

பொதுவாக நவீன ஆய்வாளர்கள் அளவையியல் அடிப்படையில் மட்டுமே காரணகாரியங்களை ஆயும் தற்கால ஆய்வியல் போக்கினின்று முற்றிலும் மாறுபட்டுப் புலன் கடந்த மெய்ப்பொருளியல் நோக்கில் இந்நூலாசிரியர்கள் ஆய்வுப் பதிவுகளைச் செய்திருக்கின்றனர் என்பதை நாம் கருத்திற் கொண்டாக வேண்டும். அதுவே வருங்கால ஆய்வறிஞர்களுக்கு இந்நூல் செய்யும் பெரும் வழிகாட்டுதலாகும்.

திருக்குறியீட்டியல் நூலாசிரியர்களுக்கும், வெளியீட்டாளர்களுக்கும் எமது மனமார்ந்த பாராட்டுக்களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னை ஸ்ரீ லலிதாம்பிகை திருவருள் நிறையட்டும்.

அன்புடன்,

தவத்திரு முனைவர் ஸ்ரீ ஜகன்னாத சுவாமி



**முனைவர் குடவாயில் பாலசுப்ரமணியன்**

எண்.6. வள்ளலார் தெரு, நிர்மலா நகர்

தஞ்சாவூர்- 641 108

29.06.2014

## அணிந்துரை

திருக்குறியீட்டியல் என்னும் பொதுத்தலைப்பின் கீழ் திருக்கோயில் திருக்குறியீடுகள் என மலர்ந்துள்ள இந்நூல் தமிழ்நாட்டுத் தொல்லியல் சின்னங்கள் சிலவற்றுள் பொதிந்துத் திகழும் குறியீடுகளுக்கு ஆன்மீகம் சார்ந்த உண்மைப் பொருளை விளக்கிடும் ஓர் அற்புதப் படைப்பாகும். பொதுவாகத் தொல்லியல் வல்லுநர்கள் தொல்லியல் சான்றுகளாக விளங்கும் பழமையான கல்வெட்டுக்கள், செப்பேடுகள், காசுகள், இலச்சினைகள், தொல்பழங்கால ஓவியங்கள் போன்ற தரவுகளுக்கு உரிய விளக்கங்களை எடுத்துரைப்பர். ஆன்மீகம் சார்ந்த துறைகளில் வல்லோர் அத்துறைகள் சார்ந்த விளக்கங்களைத் துலக்குவர். ஆனால் இவ்விரு துறைகளையும் இணைக்கும் பாலமாக விளங்கும் குறியீடுகள் பற்றி அறிந்து அவற்றை எளியோர்க்கும் எடுத்துரைப்பது இருவேறுபட்ட துறைகளிலும் ஆழங்கால்பட்ட வல்லுநர்களால் மட்டுமே இயலும். அதனைத் தான் இவ்வரிய நூல் வாயிலாக மூவர் பெருமக்கள் சாதித்துக் காட்டியுள்ளனர்.

தமிழ்நாட்டு வரலாற்றுக்குப் பல அரிய கண்டுபிடிப்புக்களை நாளும் நாளும் மேற்கொண்டுத் துலங்கச்செய்யும் அன்பு கெழுமிய நண்பர் போஸ், மாணவச் செல்வங்களுக்கு வரலாற்றைப் போதித்துப் பல அறிஞர்களை உருவாக்கும் முனைவர் இராம்குமார், அறிவோம் அறிவிப்போம் மையத்தின் அமைப்பாளர் பாலகிருஷ்ணன் ஆகிய மூவர் தம் நுண்மாண் நுழைபுலம் இந்நூலில் பக்கங்கள் தோறும் மிளிர்ந்து குறியீடுகளின் உண்மை விளக்கங்களை எடுத்துரைக்கின்றன.

மந்திரம், தந்திரம், யந்திரம், கோயில்களின் தத்துவார்த்தங்கள், நிலக்கால் படிகளில் காணப்பெறும் குறியீடுகள் கூறும் செய்திகள், பிரபஞ்சத்தின் பேருண்மை, மங்கலகரமான சின்னங்களின் மாண்பு நெறி, ஆயுதங்களும் சின்னங்களும் உணர்த்திடும் உண்மைகள், சமயச் சின்னங்களின் உட்பொருள் விளக்கங்கள் என இந்நூல் உரிய படக் காட்சிகளுடன் நம்மைக் ககனவெளியில் சஞ்சரிக்கச் செய்கின்றது. உன்னத தத்துவக் கோட்பாடுகளைக் குறியீடுகள் வாயிலாக உலகுக்குக் காட்டிய தமிழனின் மாண்புகுறித்து பன்னாட்டுச் சிந்தனையாளர்களின் கருத்துக்களின் ஒப்புமையோடு நமக்குப் போதிக்கும் இம்மூவரின் படைப்பு பல்லோராலும் போற்றப்பெறும் தகைமையதாம். அவர்களுக்கு பல்லாண்டுகூறி வாழ்த்துகின்றேன்.

அன்பன்,

குடவாயில்பாலசுப்ரமணியன்



**முனைவர் இல.தியாகராஜன்,**

முதல்வர்,அரசுக் கலைக் கல்லூரி,

அரியலூர்.

*05.05.2014*

## வாழ்த்துரை

திருவாளர்கள் சுபாஷ் சந்திர போஸ், இராம்குமார், பாலகிருஷ்ணன், ஆகிய மூவரும் இணைந்து விரிவான களஆய்வுகள் நடத்தி திருக்குறியீட்டியல் திருக்கோயில் திருக்குறியீடுகள் என்னும் இந்நூலை எழுதியுள்ளனர்.

ஏற்கனவே இவர்கள் குறியீடுகள் பற்றிக் கூறுகின்ற உருவதிகாரம் என்ற நூலை எழுதியுள்ளனர். அறிஞர்களிடையே பெரும் வரவேற்பை அந்நூல் பெற்றது, அதே போன்று திருக்குறியீட்டியல் என்னும் இந்நூலும் பரவலான வரவேற்பைப் பெரும் என்பதில் ஐயமில்லை. நம்முன்னோர்கள் பெற்ற அறிவொளியின் அடையாளங்களாக விளங்குபவை திருக்குறியீடுகள் என்பது இந்நூலாசிரியர்களின் கருத்தாகும். கோயில்களில் பல்வேறு வரைப்படங்கள் கோட்டு உருவங்களாக எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். அவற்றின் பொருளை நம்மால் அறியமுடியவில்லை. அத்தகையகுறியீடுகள் எதை உணர்த்துகின்றன என்பதை இவர்கள் அறிவுபூர்வாக ஆன்மிக கருத்துக்களின் விளக்கமாக அக்குறியீடுகளில் உள்ளன என்பதை ஆராய்ந்து வெளிப்படுத்தி உள்ளனர்.

மந்திரம், யந்திரம், தந்திரம், ஆகிய மூன்று கருத்துக்களை எவ்வாறு குறியீடுகள் நமக்கு தெரியப்படுத்துகின்றன என்று விளக்கியுள்ளனர். பல்வேறு ஆகமங்கள், உபநிடதங்கள் தருகின்ற நுண்ணிய கருத்துக்களை பொருத்தமான வகையிலே அனைவரும் விளங்கி கொள்ளும் முறையில் இந்நூலில் கொடுத்துள்ளனர். திருக்கோயிலின் அமைப்புகள் எவ்வாறு மனித உடலின் கூறுகளை விளக்க ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று தெளிவாக எழுதியுள்ளனர்.

திருக்கோபுர நிலைக்கால் படிக்குறியீடுகள், எந்திரங்களின் வகைகள், மகாபுருசனின் அங்கங்களும், திருக்கோயிலின் அமைப்பும், பிரபஞ்ச அதிசயம் ஆகிய தலைப்புக்களில் குறியீடுகளின் உள்பொருள் அடக்கத்தை விளக்குகின்றன. பிரசவ வலியின்றி குழந்தைப் பேறு பெறுதல் எனும் தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள மந்திரவிளக்கம் மிக அருமையானதாகும். மங்கலகரமான சின்னங்கள் என்ற தலைப்பில் கோயில்களில் செதுக்கப்பட்டுள்ள பல்வேறு தெய்வங்களின் பெயர்கள், ஆயுதங்கள், விளக்குகள், பூர்ணகும்பம், நந்தி, சங்கு, கண்ணாடி, தாமரைமலர் ஆகியவற்றில் உண்மை விளக்கம் கூறப்பட்டுள்ளது.

இதில் புண்ணியாவாசனம் என்னும் சடங்கு பற்றிய விளக்கமும், பூர்ணகும்பம் பற்றிய விளக்கமும் மிகவும் அற்புதமாக உள்ளன. ஆன்மா, உடல், சிருகம் ஆகியவற்றைத் தூய்மைபடுத்தும் சடங்கில் மாவிலை, நூல், தேங்காய், புனிதநீர் வைக்கப்படுவதின் விளக்கத்தை மிக அருமையாகக் கூறியுள்ளனர். மனிதனுக்கு மூன்று பிறப்புக்கள் என்பதைக் குறிக்கும் முக்கோணங்கள், ஆன்மாவைக் குறிக்கும் மூன்று பறவையின் வடிவங்கள் பற்றிய விளக்கம் அருமையாக உள்ளது. குழுமணி, பெரியகருப்பூர் குறியீடுகள், சக்ரவியூகம் போல் அமைந்திருப்பதை தாயின் கர்ப்பத்தோடு ஒப்பிட்டு ஆய்வு செய்துள்ளது மிகச்சிறப்பாக உள்ளது. ஸ்வஸ்திக வடிவம் பற்றி மிக விரிவான விளக்கங்கள் இதுவரை அறிந்திராதவையாகும்.

ஆயுதங்களும் பிற சின்னங்களும் என்றத் தலைப்பில் அவற்றின் மந்திர உட்பொருட்கள் கூறுப்பட்டுள்ளன. உடுக்கை, ஏர்கலப்பை ஆகியவை வேளாண் சின்னங்களாகும். சூலம் பொறிக்கப்பட்ட எல்லைக் கற்களிலுள்ள குறியீடுகள் பற்றிய விளக்கங்கள் அருமையானது. மேலும் பல்வேறு குறியீடுகள் பற்றியவிளக்கங்கள் அற்புதமானவை. அவற்றில் குறிப்பாகக் கொடியின் விளக்கம், காயத்திரி மந்திரத்தின் அற்புதங்கள், கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படும் சந்திராதித்தன் உள்ளவரை என்ற தொடரின் விளக்கம், நமஸ்காரம் என்ற சொல்லின் விளக்கம், மனம் என்னும் அட்டமலர்கள் என்பதன் விளக்கம், இந்துசமய சின்னங்களின் உட்பொருள், ஆயுதங்களின் நிறங்களும் தத்துவங்களும் போன்ற தகவல்கள் தொல்லியல் கல்வெட்டு கோயிற்கலை ஆய்வாளர்கள் இதுவரை அறிந்திராதவையாகும்.

நானும் பல ஆண்டுகளாகக் கோயில்களுக்குச் சென்று கல்வெட்டுகளைப் படித்து ஆராய்ச்சி செய்துவருகிறேன் என்றாலும் கோயில் படி, திண்ணை, மண்டபபடிக்கட்டுக்கள், தூண்கள் மற்றும் பிற இடங்களில் உள்ள குறியீடுகள் பற்றி எந்தொரு அடிப்டை அறிவும் இல்லாமலேயே அவற்றை வெறும் கோடுகளாக எண்ணிப் பார்த்து வந்த நிலை, இம்மூவரும் எழுதிய இந்நூல், இதற்கு முந்தைய நூலான உருவதிகாரம் நூல் ஆகியவற்றைப்படித்தவுடன் மாறிவிட்டது. அவைபற்றி நானும் தரவுகளைச் சேகரிக்கத் தொடங்கியுள்ளேன்.

இதுவரை ஆராய்ச்சியாளர்கள் யாரும் எட்டிப்பார்க்காத பிரதேசமாக இந்த குறியீடுகள் இருந்து வருகின்றன. இந்நிலையை மாற்றிட இவர்கள் தங்களின் தொடர் ஆராய்ச்சியின் மூலம் இத்தகைய நூல்களை வெளியிட்டுக் குறியீடுகளின் புதிர்களை மக்கள் அனைவரும் புரிந்துக் கொள்ளுமாறு செய்யவேண்டுமெனக் கேட்டுக் கொண்டு இவர்களின் பணி தொடர மனமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புடன்,

முனைவர் இல.தியாகராஜன்,



**முனைவர் கு.குமாரசாமி**
பேராசிரியர், புவியியல் துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி- 620 024
31.05.2014

## வாழ்த்துரை

தமிழ்மொழியும், தமிழ் மண்ணும் சமீப காலமாக ஒரு மறுமலர்ச்சியைச் சந்தித்து வருகின்றன. நம்முன்னோர்களின் வாழ்வியல் வெளியீடான குறியீடுகளைப் பாறையிலும், கோயில்களிலும், வாழ்விடங்களிலும், செதுக்கி வைத்தவற்றை மீட்டறிவது என்பது அரிதிலும் அரிதான ஒரு பணியும், கலையுமாகும்.

இதற்கு, காலம், பொருள், அவா, ஒத்துழைப்பு முதலிய அனைத்தும் தேவை. இவற்றைத் தியாகம் செய்து தமிழர் வாழ்வியல் பற்றிய உண்மைகளை உள்ளவாறு வெளிக்கொணர தி.லெ.சுபாஷ் சந்திர போஸ், முனைவர் வை. இராம்குமார், கா.பாலகிருஷ்ணன் ஆகிய மூவரின் தலைமையிலான ஒரு படை தமிழகத்தின் மையப் பகுதியிலிருந்து கிளம்பி இருக்கின்றது. சுயநலமில்லாத இந்தப் படைத்தளபதிகளைத் தமிழ் மண்ணும், அதன் மக்களும் என்றென்றும் போற்றி நினைவில் கொள்ளுவர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

மேலும் இந்தப் படைத்தளபதிகளின் சீடர்களும், அவர்களின் வழித் தோன்றல்களாகித் தமிழர் வரலாற்றை வெளிக்கொணர வேண்டுமென்ற பேராவலோடும், வேண்டுதலோடும் திருக்குறியீட்டியல் திருக்கோயில் திருக்குறியீடுகள் நூலின் அடுத்த பாகங்களும் விரைவில் வெளிவர வேண்டும் எனவும், இத்தமிழகம் மேன்மேலும் பயனுற வேண்டும் எனவும் வாழ்த்துகிறேன்.

அன்புடன்,

முனைவர் கு.குமாரசாமி

# ஆசிரியர்கள் உரை

பழங்காலக் குறியீடுகளைப் பற்றி நாங்கள் மேற்கொண்ட ஆய்வுப்பணியில் கண்டறிந்தவற்றில் ஒரு சிறு பகுதியை திருக் குறியீட்டியல் என்ற தலைப்பில் ஒரு நூலாகத் தொகுத்தளித்துள்ளோம். குறியீடுகள் என்பதற்கு அகத்தில் காண முடியாதவற்றைப் புறத்தில் காணக் கூடியதன் வாயிலாக அறிவிக்கும் திறன் படைத்தவை என விளக்கலாம். அகத்திலுள்ளதை அனுபூதியில் அறிந்துணர்வதே அனைத்து ஜீவராசிகளின் பிறப்பின் ரகசியம். எனவே குறியீடுகளின் உட்பொருள் எக்காலமும் மாறாமலும் மறையாமலும் இருக்க வேண்டும் என்பதே இந்நூலின் முக்கியக் குறிக்கோளாகும். அக் குறிக்கோளின் அடிப்படையில் இந்நூலில் கூறப்பட்டுள்ளவை பல்வேறு முன்னூல்களில் இருந்து தொகுக்கப்பட்டவை. அதற்கான ஆதாரச் சான்றுகள், எங்களாலும், பல்வேறு அறிஞர் பெருமக்களாலும் கண்டறியப்பட்டவை.

அச்சான்றுகளைக் கண்டறிந்த தமிழ் நாட்டு அறிஞர் பெருமக்களுக்கும், மேலை நாட்டு ஆதாரக் குறிப்புகளைக் கொடுத்து உதவிய ஆய்வாளர்களான, தென்ஆப்பிரிக்காவைச் சேர்ந்த Rob Milne, அமெரிக்காவைச் சேர்ந்த Gene D.Matlock, Gary A David, Jack Andrews, Kathey Dorre ஆகியோருக்கும், இந்திய நாட்டு ஆதாரக் குறிப்புகளைக் கொடுத்து உதவிய இந்திய அரசு இந்தியத் தொல்பொருள் துறை, தமிழகத் தொல்லியல் துறை, இந்து சமய அறநிலையத் துறை, அரசு அருங்காட்சியகங்கள், தன்னார்வ ஆய்வு நிறுவனங்கள் அனைத்துக்கும், நாங்கள் என்றென்றும் நன்றிக் கடன்பட்டுள்ளோம். இந்நூல் செம்மைப் பெற உதவிய முனைவர் பி.தமிழகன் அவர்களுக்கும், வரைபடங்களை வரைந்தருளிய ஓவியர்கள் அ.சின்ராஜ், கா. மோகன், அவர்களுக்கும், ISBN பெற உதவிய அமெரிக்காவைச் சேர்ந்த Mrs. Anitha kumar அவர்களுக்கும், இந்நூலை வெளியிட்ட திருச்சிராப்பள்ளி அறிவோம் அறிவிப்போம் மையத்திற்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்புடன்,

நூலாசிரிர்கள்

**01.05.2014**

# முன்னுரை

மனிதன் எப்போது இறைவனின் படைப்பில் அறிவால் பலவான ஜீவராசிகளுடன் தன்னையும் ஒப்பிட்டு, அந்த இறைவனைப் பற்றி சுயேச்சையாகச் சிந்திக்க துவங்கினானோ, அப்போதே அவனுள்ளே ஒடுங்கியிருந்த அவனது ஞானம் விரிவடையத் துவங்கி உள்ளது. அதுவே ஒரு தேடல் உணர்வாகவும் அவனிடமிருந்தே வெளிப்பட்டுள்ளது. அத்தேடலின் வாயிலாக அவன் தேடி அறிய விரும்பியது எது? எதை அறிந்தால் மரணமில்லாப் பெருநிலையைப் பெற முடியுமோ, அதுவே அவன் தேடி அறிய விரும்பியதாகும். மரணமில்லா பெருநிலை என்பது எது? அதுவே புறத்திலும், அகத்திலும், ஒலியும் ஒளியுமாக நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனுடன் ஜீவாத்மா ஒன்றுபடும் நிலை எனும் **சாயுச்சியம்.**

நம் பாரத நாட்டின் ஒவ்வொரு இந்துவும் தவறானதிலிருந்து உண்மையைத் தேடவில்லை. சற்றே தாழ்வான உண்மை நிலையிலிருந்து உயர்வான உண்மை நிலையைத் தேடினான். இறைவன் ஒருவனே என்ற உண்மையைப் புற அறிவின் வாயிலாக அறிந்த பின்னர், அதனை அக ஞானத்தின் வாயிலாக அனுபூதியில் அறிந்துணர்ந்தான்.

அவனது அனுபவ அறிவான அனுபூதியைத் தத்தம் சந்ததியருக்கு வஞ்சனையின்றி வாரி வழங்கினான். அங்ஙனம் அவன் வாரி வழங்குவதற்கு தேர்ந்தெடுத்தது எது? அதுவே எக்காலத்திலும் எவராலும் மாற்ற முடியாதபடி உள்ளதை உள்ளபடி உணர்த்தக் கூடிய குறியீடுகளாகும். அந்த குறியீடுகளின் வாயிலாக அவன் அறிவித்த அனுபூதியே முதன் முதலில் தத்துவம்-புராணம்- சடங்கு ஆகியவை உள்ளடங்கியதொரு மதமாகி பின்னர் அதுவே பலவாகியுள்ளது.

கிளிப்போர்ட் கீர்ட்ஸ் எனும் மேலை நாட்டு அறிஞரின் ஆய்வின் படி தற்காலம் வரை ஏறத்தாழ 4000-க்கும் மேற்பட்ட மதங்கள் உலகில் தோன்றியுள்ளாக கூறுகிறார். (நன்றி: தினமலர், 28.07.2013,ப.5) அவற்றில் நம் பாரத நாட்டின், பழைமையான அறவொழுக்கம் எனும் **சனாதன தர்மம்** உலக வரலாற்றுக் காலத்திற்கும் முற்பட்டது. இதையே இந்து மதம் என ஆங்கிலேயர் அறிவித்தனர்.

பிரபஞ்சத்தில் அழியாமல் நிலைத்திருக்கும் பழைமையான இந்த அறவொழுக்கம் யாராலும் எழுதப்படவில்லை. மாறாக இவை காடுகளிலும் மலைக் குகைகளின் வாழ்ந்த ரிஷிகளால் அறியப்பட்டவை - என்றனர் நம்முன்னோர்.

உலகம் - மனிதன் - இறைவன் என்ற மூன்றில், மனிதன் அறியாமையாலும் உலகப்பற்றாலும் பிறப்பு-வாழ்க்கை-இறப்பு எனும் பிறவிச் சுழலில் சிக்கி, இன்ப துன்பத்தை அனுபவிக்கிறான்.

எப்போது அவனது அறியாமை அகற்றப்படுகிறதோ அப்போதே அப்பிறவிச் சுழலில் இருந்து விடுபட்டு, பேருண்மைப் பொருளாகிய இறைவனை அறிந்து முக்தி அடைகிறான்- என அந்தப் பழைமையான அறவொழுக்கம் பகர்கிறது.

மேலும் அது, எவ்வாறு இருட்டறையில் உள்ள ஒரு பொருளைக் காண்பதற்கு ஒளி தேவையோ, அவ்வாறே அறியாமை எனும் இருளை அகற்றி உண்மைப் பொருளாகிய இறைவனை அறிய **அறிவொளி** அவசியம் என முழங்குகிறது. இறைவனைப் பற்றிய அனுபூதியின் வெளிப்பாடே **ஞானம்** எனும் அறிவொளி என விளக்கமளிக்கிறது.

நம் பாரத நாட்டில் வாழ்ந்த நம் முன்னோர்களால் முன்னறிந்து அறிவித்துள்ள அத்தகைய அறிவொளியின் அடையாளங்களின் மிகச்சிறியத் தொகுப்பே திருக்குறியீட்டியல் எனும் இந் நூலாகும்.

திருக்குறியீட்டியல் (திரு+குறியீடு+ இயல்) என்பதில், **திரு** என்பது ஓர் மங்கலகரமானச் சொல், **குறியீடு** என்பது குறியாக இட்டாளும் பெயர். **இயல்** என்பது தன்மை; தகுதி; ஒழுக்கம்; ஒப்பு; இலக்கணம்; நூல்; பெருமை; எனப் பொருள்படும். **திருக்குறியீட்டியல்** (*The Sacred Symbology*) என்பது ஓர் மங்கலகரமான குறியாக இட்டாளும் பெயருடைய இலக்கணம் எனப் பொருள்படும். **திருக்கோயில் திருக்குறியீடுகள்** எனும் இத் தொகுப்பு முதல் பாகமாகும்.

இந்நூல் அனைவருக்கும் பயனளிக்க அன்னை அருள் புரிய வேண்டி கோயம்புத்தூர், பெரிய தடாகத்தில் எழுந்தருளியுள்ள **அன்னை ஸ்ரீ லலிதாம்பிகையின்** திருப்பாதங்களில் இத் தொகுப்பை எங்களது காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

## மந்திரம்

அனைத்துச் சித்திகளைத் தரும் சக்திகளை உள்ளடக்கிய ஒலியே **மந்திரம்** அல்லது **மந்த்ரம்.** அதனை மன்+த்ர எனப்பிரித்து மன் - சிந்திப்பது, த்ர- விடுதலை, அதாவது விடுதலையைச் சிந்தித்தல் எனப் பொருள் அறியலாம்.[1] அத்தகைய மந்திரங்களில் முதன்மையானதே **தீர்க்க பிரணவ மந்திரம்** எனும் **ஓம்.**


**ஓம்**

**உத்கீதம்** [2] எனும் ஓங்காரமே ஓம். ஸ்தூல மந்திரம், மூல மந்திரம் என்பதும் இஃதே. இது ஒலி ரீதியில் ஆதி மூலத்திலிருந்து வெளிப்பட்ட, அ, உ, ம் எனும் மூன்று ஒலி அணுக்களின் ஒருமித்த ஒலியாகும். பிரபஞ்சத்தின் தோற்றம், அபிவிருத்தி, அறுதி ஆகிய மூன்று நிலைப்பாடுகளைக் குறிப்பிடுவதாகும். அதாவது அ, உ, ம் எனும் மூன்றில், அ - ஆரம்பம் (**ஆதிமாத்வ**), உ- விருத்தியாம்சம் (**உட்கார்ச**), ம் - இறுதி (**மிட்டி**) எனப்பொருள்படும்.[3]

அ - நாக்கு வாயின் எப்பகுதியையும் தொடாமல் வெளிப்படும் ஓசை, உ- குறுகிய உதடுகளின் வாயிலாக உள்ளிருந்து வெளிப்படும் ஓசை, ம்- இரு உதடுகளும் மூடிய நிலையில் உள்ளிருந்து வெளிப்படும் ஓசை [4] ஆகிய மூன்று ஓசைகளின் ஒருமித்த ஒலியே ஓம். நாம் பேசும் மொழியின் சொற்கள் அனைத்துமே ஓம் எனும் ஓங்காரத்தின் வெளிப்பாடே - என முழங்கியவர் நம் நாட்டின் அவதாரப் புருஷரும் இந்து சமய வீரத் துறவியுமான சுவாமி விவேகானந்தர். இம் மந்திரத்தின் உட்பொருளை அறிவதற்கு முன்பு, அதனது வடிவத்தைக் காண்பது நன்று.

ஓம் எனும் **ஓங்காரம்** (ஒலி), ஆரம்ப காலத்தில் மூன்று மழை மேகங்களுக்கு இடையில் தோன்றியதொரு மின்னலின் (ஒளியின்) வடிவமுடையதாக இருந்துள்ளதெனவும்[5] பின்னர் அம் மூன்று மலைகளுக்கும் மேலே சந்திரப் பிறையும் அதன் மய்யத்தில் புள்ளியும் கொண்டதாக மாற்றம் பெற்றுள்ளதாகவும் அறியமுடிகிறது.

அதற்குச் சான்றாக உத்தர பிரதேசம், கோரக்பூர், சோகௌராவில் கண்டறியப்பட்டதும் பொ.ஆ. மு. 400-300 யைச் சார்ந்ததுமான வெண்கலத் தகட்டின் மேலே நடு நாயகமாக மூன்று மலைகளும், பிறையும் பிறையின் மய்யத்தில் புள்ளியும் கொண்ட குறியீட்டைத் தக்கதொருச் சான்றாகச் சுட்டிக் காட்டலாம்.[6] (நன்றி: இந்தியத் தொல்பொருள் துறை)




அதில், **ஶ்ரீமான், வம்சகிராம** ஆகிய இரண்டு கிராமங்களில் மூன்று அடுக்கில், நான்கு விதமான உணவு தானியங்கள் சேமித்து, அவற்றைத் தேவையான காலத்தில் வினியோகம் செய்யப்பட்டதை அந்த (பிரகிருதி மற்றும் பிராமி எழுத்துப் பொறிப்புக்கள் கூறுவதாக இந்தியத் தொல்லியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். (நன்றி: இந்தியத் தொல் பொருள் துறை)



மேற்கண்ட வடிவமே, பிற்காலத்தில் இமயமலையின் ஓர் அங்கமான ஓம் பர்வதத்தில் காணப்படும் பனிப்படலத்தின் வடிவமாக மாற்றமடைந்துள்ளது எனத் தெரியவருகிறது. அதற்கான சான்றினைத் திருச்சி மாவட்டம், திருவெள்ளறையில் பெ.ஆ. 801-இல் கம்பன் அரையனால் கட்டப்பட்டதும் சுவஸ்திக வடிவம் உடையதுமான மாற்பிடுகு பெருங்கிணறு என்ற பெயருடைய மிகப் பழமையான வரலாற்றுச் சின்னத்தின்( கீழ்திசை - தென் திசை திருப்புமுணையில்) மதில் சுவரில் பதிவு செய்யப்பட்டுள்ளதை இந்நூலாசிரியர்கள் கண்டறிந்துள்ளனர்.[7]



ஒளி ரீதியில் இந்த ஓம் எனும் வடிவத்திலிருந்தே தமிழ் மொழியின் முதலாம் உயிர் எழுத்தான **அ -வும்**, எண்களின் வரிசையில் நட்பு எண் அல்லது விந்தை எண் எனப்படும் எண் **ஒன்பதும்** தோன்றின என்பதும் அறியமுடிகிறது. மேலும் இதில், **அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு**- எனத் தெய்வப்புலவன் படைத்த முதலாம் திருக்குறளின் உட்பொருள் பிரதி பலிப்பையும் காண முடிகிறது. பொ.ஆ. 800-ஐ சார்ந்த 1 முதல் 10 வரையிலான எண்கள் அக்கிணற்றின் வடக்குத் திசை படிகளில் பொறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



(நன்றி: தமிழகத் தொல்லியல் துறை)



மேற்கண்டதை அடுத்து அநேகமாக பொ.ஆ. 1000-யைச் சார்ந்த மற்றொரு ஓம் வடிவம், 2005 -ல் தென்னாப்பிரிக்காவில் தொல்லியல் அறிஞர் ரேப் மில்லன் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவ் வடிவம் பொறிக்கப்பட்டுள்ளப் பகுதிக்கு, இந்நூலாசிரியர்களில் ஒருவரான தி.லெ.சு.ச. போஸ் நுழைவாயில் (படம், ப.159) எனவும் பெயரிடப்பட்டுள்ளது. அக் குறியீட்டில் தச மகா வித்யாக்களில் ஒருத்தியான காளி எனப்படும் தாராவின் 21 மந்திரங்களைக் குறிக்கும் 21 ஒளி ரேகைகளும், பிரபஞ்சக் குறியீடும், ஒலிஒளியுமான ஓம் எனும் வடிவத்தை சூழ்ந்திருப்பதை காணலாம்.

(ஸப்தாயாஸன் பரிய:ணு த்ரி ஸப்த: ஸமித: க்ருதா:ணு) **த்ரிஸ் ஸப்த**[8] - இருபத்தொரு தத்துவங்கள் எனப் புருஷ ஸூக்தம் கூறுகிறது. ஐந்து பூதங்கள், ஐந்து தன்மாத்திரைகள், ஐந்து ஞான இந்திரியங்கள், ஐந்து கர்ம இந்திரியங்கள், அந்தகரணம் ஒன்றுமாக சமித்துக்கள் என்பவையே அந்த த்ரிஸ் ஸப்த என்பவையாகும். சமித்து [9] என்பதற்கு தீ வளர்க்கும் ஆல் முதலியவற்றின் சுள்ளிகள் எனப் பொருள்படும்.

அமெரிக்கா, அரிசோனா மாநிலம் பலாட்கியில் ஜாக் ஆண்டுரூஸ் அவர்களால் கண்டு பிடிக்கப்பட்ட மற்றொரு ஓம் குறியீடு[10] பொ. ஆ. மு. 1000- க்கும் முற்பட்டதாகும். ஜாக் ஆண்டுரூஸ், கேரி ஏ டேவிட் ஆகிய இரண்டு அமெரிக்க நாட்டு ஆய்வாளர்களின் உதவியிடன்



இவ்வடிவமுள்ள குடவரைப் பகுதியை பொ.ஆ, 2007-ல் தி.லெ.சுபாஷ் சந்திர போஸ் களஆய்வு மேற்கொண்டுள்ளார்.[11]

**தீர்க்க பிரணவ மந்திரம்**

ஓம் - இறைவனின் ஒலி. இந்த ஓம் எனும் ஓங்காரத்தை, மந்திரம் என்றோ பிரணவ மந்திரம் என்றோ குறைத்துக் கூறுவதைத் தவிர்த்து, ஈடு இணையற்றதும் ஒப்பற்றதுமான இம் மந்திரத்தை **தீர்க்க பிரணவ மந்திரம்**[12] என்று குறிப்பிடுவதே சிறந்ததாகும்.

தீர்க்க என்பதற்கு முழுமையடைந்தது அல்லது மிகத் தெளிவானது எனவும், பிரணவ என்பதற்கு எப்போதும் புதிதானது எனப் பொருள்படும். மந்திர என்பதை மந் + திர எனப்பிரித்து, மந் -என்பது மனது, திர- என்பது வழிகாட்டி அல்லது பாதுகாப்பது எனவும் பொருள் அறியலாம். அதாவது மந்திரம் என்பதற்கு மனதிற்கு வழிக்காட்டியாக இருந்து பாதுகாக்கக் கூடியது எனவும் பொருளாகும். எனவே தீர்க்க பிரணவ மந்திரம் என்பதற்கு இறைவனை மிகத்தெளிவாக அறியக்கூடிய திறமையை மனதிற்கு அளித்துப் பாதுகாப்பான வழியைக் காட்டக் கூடியது எனவும் பொருள் கொள்ளலாம்.

இறைவனின் ஒலிக் குறிப்பே பிரணவம் என்பதை; கடவுளைக் குறிக்கும் வார்த்தை ஓம் என்ற பிரணவம்[13] - என ஸ்ரீ பதாஞ்சலி யோகமும், ஓம் என்ற மந்திரமே இறைவன்[14] - என கட உபநிடதமும், ஓம் என்ற எழுத்தே பிரம்மம்[15] - என ப்ரஹ்மவித்யோபநிடதமும் கூறுகின்றன. ஓம் என்ற இந்த உலகம் அனைத்தும் ஓங்காரமே. சென்றவை, இருப்பவை, வருபவை எல்லாம் ஓங்காரமே. மூன்று காலங்களையும் கடந்ததாக எது உள்ளதோ அதுவும் ஓங்காரமே[16] - என மாண்டூக்கிய உபநிடதமும், ஓங்காரம் தான் இறைவனைக் குறிக்கின்ற குறியீடு[17] - என ஞான தீபமும், ஓங்காரம் யூபஸ்தம்பம்[18] - என ப்ராணாக்னிஹோத்ரோபநிடதமும் முழங்குகின்றன.

அ, உ, ம் எனும் மூன்று அக்ஷரங்களை கொண்டதும் **ஓங்காரத்வனி** என்பதுமான இதன் ஒலி அதிர்வுகளின் மகிமைகளைச் சொல்லாலும் எழுத்தாலும் விவரிக்க இயலாது. எனினும் அதனை ஆழ்ந்து அனுபவித்து உணரமுடியும் என்பது அதனது தனிச் சிறப்பாகும். ஓங்காரத்வனி, வாயால் உச்சரிக்கப்படுவதன்று; அது மெய்யெழுத்தும் அன்று, உயிரெழுத்தும் அன்று; கழுத்திலிருந்தோ, தாடையிலிருந்தோ, உதட்டிலிருந்தோ, நாசியிலிருந்தோ, ர முதலிய எழுத்துதிக்கும் இடத்திலிருந்தோ தோன்றுவதன்று.

மற்ற ஒலிகளைப் போல் தோன்றி மறையாமல் இருப்பதால் தான் இதற்கு **அக்ஷரம்** என்ற பெயர் பொருந்தும் [19] - என அம்ருத நாதோபநிடதம் விளக்கமளிக்கிறது. மற்ற ஒலிகளைப் போல் தோன்றி மறையாமல் இருப்பதால் தான் இதற்கு **அக்ஷரம்** என்ற பெயர் பொருந்தும் [19] - என அம்ருத நாதோபநிடதம் விளக்கமளிக்கிறது.

ஓம் - எனும் தீர்க்க பிரணவ மந்திரத்தை முறையாக உச்சரித்து பிரம்மத்தை உணருங்கள் என உய்யும் நெறிக்கு வழி காட்டுகிறது யஜுர் வேதம். புலனடக்கத்துடன் மனதை ஒரு நிலைப்படுத்தி பிராணனை தலைக்குள் வாங்கி, யோகத்தில், ஓம் எனும் (ஏக) அக்ஷரத்தை உச்சரித்து என்னை தியானிப்பவர், அவர் உடலைவிட்டு பிரிந்த பின்னர் மிக உயர்ந்த நிலையை பெறுவர் - என ஸ்ரீமத் பகவத்கீதை கூறுகிறது.[20] உள்ளத்தினுள்ளே ஆனந்த ஸ்வரூபமாக விளங்கும் பிரம்ம புருஷனுடைய வடிவமே பிரணவம். அ,உ.ம் எனும் மூன்றெழுத்தின் தொகுதி பிரணவம், அதுவே ஓம். அதை ஜபித்து யோகியானவன் ஜன்ம ஸம்ஸார பந்தத்தினின்று முக்தியடைகிறான் - என ஆத்மப்ரபோத உபநிடதம்[21] கூறுகிறது. ஓம் என்பதை வில்லுடன் ஒப்பிட்டு (ப.111) விவரிக்கிறது முண்டக உபநிடதம்.[22]

## நூல் குறிப்புக்கள்


1. ஸ்வாமி, பதஞ்சலி யோக சூத்ரம், 4. கைவல்யபாதம் விளக்கம், ப. 300
2. சுவாமி ஆசுதோஷானந்தர்(விளக்கியவர்), சந்தோக்ய உபநிடதம் சூ.1.1
3. Swami Harshananda, Principal Symbols of world religions, p.5
4. ibid
5. Alex Patterson, Rock Art Symbols of the great Southwest, p.60-61
6. Ep.I. Vol.XXII.p.2
7. தி.லெ.சு. ச.போஸ், கா.பாலகிருஷ்ணன், வை.இராம்குமார், உருவதிகாரம், ப.95
8. புருஷ ஸூக்தம் சூ. 1.7
9. மெய்யப்பன் தமிழ் அகராதி
10. Gary A David, Eye of the Phoenix, p.159
11. ibid, p.159
12. Swami Sivananda, Kundalini Yoga, p.55
13. ஸ்வாமி, ஸ்ரீ பதஞ்சலி யோக சூத்திரம் சூ.27, ப.67
14. சுவாமி ஆசுதோஷானந்தர்(விளக்கியவர்), கட உபநிடதம் சூ.1.2.16
15. அண்ணா, 108 உபநிடத் சாரம், (2-ஆம் பாகம்)ப்ரஹ்மவித்யோபநிடதம்
16. சுவாமி ஆசுதோஷானந்தர்(விளக்கியவர்), மாண்டுக்கிய உபநிடதம் சூ.1
17. ஞான தீபம், 1.437
18. அண்ணா, 108 உபநிடத் சாரம், (3-ஆம் பாகம்)ப்ராணாக்னிஹோத்ரோபநிடதம் சூ.5
19. அண்ணா, 108 உபநிடத் சாரம், (2-ஆம் பாகம்)அம்ருதநாதோபநிடதம் சூ.25.
20. Swami Swarupananda, Srimad Bhagavad Gita, 8.11-15 ( ps.186-187).
21. அண்ணா, 108 உபநிடத் சாரம், (2-ஆம் பாகம்) ஆத்மப்ரபோத உபநிடதம் சூ.1.1
22. சுவாமி ஆசுதோஷானந்தர் (விளக்கவுரை), முண்டக உபநிடதம், சூ.2.2.3-4.

## யங்கிரம்

அருவமாகிய மந்திரத்திற்கு அடுத்தது அருவுருமான யந்திரம். சூட்சுமம் என்பதும் இஃதே. இது சக்கரம், மண்டலம் என இருவிதமாகக் கூறப்படுவதுண்டு.

மண்டலம் என்பதற்கு வட்டம் என்ற பொருளுமுண்டு. இதில் க்ஷேத்ரகணிதம் எனும் வடிவியல் அல்லது உருவியல் முக்கியத்துவம் பெற்றுள்ளது அறியத்தக்கது.

ஒவ்வொரு தெய்வத்திற்கும் பிரத்யோகமான ஒரு யந்திரம் உண்டு. அவற்றில் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது ஶ்ரீ யந்திரம் எனப்படும் ஶ்ரீ சக்கரம். இதற்குச் சக்கரங்களின் அரசன் அல்லது சக்கர ராசா போன்ற சிறப்புப் பெயர்களுண்டு.

ஶ்ரீ சக்கரத்தை **மஹா சக்ர நாயகம்**[1] - என த்ரிபுராதாபின்யுபநிடதம் சுட்டிக்காட்டுகிறது.

### ஶ்ரீ சக்கரம்

ஶ்ரீ சக்கரத்தை மெய்ஞ்ஞான ரீதியில் பிரம்மத்துடன் இணைக்கக் கூடிய திறன் படைத்த மண்டலம் எனவும், மிகவும் சக்தி வாய்ந்ததாகவும் கூறுவர். ஶ்ரீ சக்கரத்தை வழிபடுவதற்கு சில விதி முறைகளும் உண்டு எனவும், இதனை வழிபடுபவர்கள் இறை நம்பிக்கை உடையவராகவும், விரதங்களை மேற்கொள்ளும் மனம் படைத்தவராகவும், மனதை ஒரு நிலைப்படுத்தித் தியானம் செய்யும் தகுதி உடையவராகவும் இருக்கவேண்டும் என்பர்.

மேற்கண்ட நெறி முறைகளைக் குருவின் வாயிலாகவே அறியவேண்டுமெனவும் குறிப்பிடுவர்.

ஶ்ரீ சக்கரம்; நீளம், அகலம், உயரம் எனும் முப்பரிமாணம் கொண்ட மஹா மேருவின் இருபரிமாணத் தோற்றமாகும். அதாவது நீளம், அகலம் எனும் இரு அளவுகள் உடையது. இது மிகத் துல்லியமாகவும் ஆகம விதிப்படியும் உருவாக்கப்பட்டதென ஶ்ரீ வித்யா தத்துவம் - தியானம் - வாழ்க்கை நெறி கூறுகிறது.[2]

முப்பரிமாணமுடைய மகாமேருவின் உச்சியில் பறக்கும் ஒரு பறவையின் கண்களுக்கு அதன் வடிவம் எவ்வாறு தோன்றுமோ அவ்வாறே (க்ஷேத்ர கணித) உருவியல் கணித முறைப்படி சித்திரித்துக் காட்டப்படும் இருபரிமாண வடிவமே ஶ்ரீ சக்கரமாகும்.

*ஸ்ரீ சக்கரமானது வடிவியல் ரீதியில் பிந்து எனும் ஓர் புள்ளி, ஒரு கீழ்நோக்கிய முக்கோணம், எட்டு முக்கோணங்கள், பத்து முக்கோணங்கள், மீண்டும் பத்து முக்கோணங்கள், பதினான்கு முக்கோணங்கள், எட்டு இதழ்கள் கொண்ட தாமரை மலர், பதினாறு இதழ்கள் கொண்ட தாமரை மலர், மூன்று வட்ட வடிவ ரேகைகள், கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய நான்கு புவியின் திசைகளில் நுழைவாயில்களைக் கொண்ட மூன்று சதுர வடிவ ரேகைகள் என விவரிக்கப்படுகிறது.*

*ஸ்ரீ சக்கரம் - ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், பூமி* [3] *ஆகிய ஐந்து அக்னிகளின் (Five Elements) தன்மை, நிறம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். பிரமாண்டம் எனப்படும் அண்டத்திலுள்ளது அனைத்துமே பிண்டாண்டம் எனப்படும் பிண்டத்திலும் உள்ளது என்றத் தத்துவத்தை தன்னகத்தே தக்கவைத்துள்ள வடிவமே ஸ்ரீ சக்கரம் எனலாம்.*

*ஒன்பது வாயில்கள் உடையதாகத் தோன்றும் தேகம் ஸ்ரீ குருவின் வடிவமாகும்.*[4] *ஒன்பது சக்கரங்களைக் கொண்ட இதுவே ஸ்ரீ சக்கரத்தின் வடிவமாகும்.*[5]

*ஸ்ரீ சக்கரத்தின் மய்யத்திலுள்ள வடிவியல் வடிவம் (9 x 3=27) இருபத்தேழு கோடுகளைக் கொண்ட ஒன்பது முக்கோணங்களின் வெளிப்பாடாகும்.*

*அதில், (3 x 5 =15) பதினைந்து கோடுகள் கொண்ட ஐந்து கீழ் நோக்கிய முக்கோணங்கள் சக்தி சக்கரங்கள்*[6]*, (3 x 4=12) பன்னிரண்டு கோடுகள் கொண்ட நான்கு மேல் நோக்கிய முக்கோணங்கள் சிவசக்கரங்கள்*[7]*.*

*அதாவது சிவசக்கரங்கள் நான்கு, சக்திசக்கரங்கள் ஐந்து, என (4+5=9) ஒன்பது சக்கரங்களால் வெளிப்படும் வடிவமே ஸ்ரீ சக்கரம்*[8] *- என ஸ்ரீ லலிதா த்ரிசதீ, உத்தரபாகம் கூறுகிறது. இதையே, ஒ பஞ்ச-ச-து: சக்த்யநலா என வரிவஸ்யா- என ரஹஸ்யம் (2-42) கூறுகிறது.*

*சிவ சக்கரங்களுக்கும் சக்தி சக்கரங்களுக்கும் உள்ள இணைபிரியாத ஸம்பந்தத்தை எவன் அறிகிறானோ அவனே ஸ்ரீ சக்கரத்தை அறிந்தவனாவான்*[9] *எனவும் கூறப்படுகிறது.*

*இங்ஙனம் சிவசக்தியாக ஒருங்கிணைந்த அந்த ஒன்பது முக்கோணங்களே நாற்பத்து மூன்று முக்கோணங்கள் கொண்ட ஸ்ரீ சக்கர வடிவமாக வெளிப்படுகின்றன. இதில் மூன்று கோடுகள் ஒன்றோடு ஒன்றாக வெட்டும் மய்யங்கள் பதினெட்டு. இம் மய்யங்களை மிகவும் சக்தி படைத்த* ***மர்மம்***[10] *என்றும், இரண்டு கோடுகள் வெட்டும் இடத்தை* ***வெட்டு*** *என்றும், இரண்டு கோடுகள் ஒன்றொடு ஒன்று சந்திக்குமிடத்தை* ***சந்தி***[11] *-என ஸௌந்தர்யலஹரீ பாஷ்யம் சுட்டிக்காட்டுகிறது.*

மர்மங்களை பிராணன்களின் இயக்கசக்தியுடன் ஒப்பிட்டு, இதில் தவறுகள் எதுவும் இருக்கலாகாது எனவும், தவறுகள் ஏதும் இல்லாத ஸ்ரீ சக்கரமே மிகவும் சக்திபடைத்ததாகக் கருதப்படுகிறது.



ஸ்ரீ சக்கரத்தின் சக்தியையும் அதன் மகிமையையும் விவரிப்பதற்கு வானமே எல்லை என்றாலது மிகையாகாது. அதற்குச் சான்றாக, சென்ற 2005ம் ஆண்டு சித்திர பௌணர்மி அன்று கோவை, பெரியதடாகம் ஸ்ரீ லலிதாம்பிகை அம்மன் திருக்கோயிலில் பிரபஞ்ச நலத்திற்காக நிகழ்ந்த ஸ்ரீ சக்கர பூசை நிகழ்ச்சிகளின் புகைப்படங்களில் வெளிப்பட்ட வட்டவடிவமானதொரு ஒளியைச் சுட்டிக்காட்டலாம்.

இது ஒரு க்ஷேத்திர கணித வடிவம் தானே, இதனை எளிதாக உருவாக்கி விடலாம் என எண்ணிய அறிஞர்கள், கணிதவியல் வல்லுநர்கள் ஏராளம். அவர்களில் தம்மால் இதனை உருவாக்க இயலவில்லை எனத் தமது தோல்வியை ஒப்புக் கொண்டோரும் உண்டு. நம் இந்திய நாட்டு அறிஞர்கள் மட்டுமின்றி பல்வேறு உலக நாடுகளைச் சேர்ந்த அறிஞர் பெருமக்கள் இன்றளவும் தொடர்ந்து முயற்சித்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ சக்கரத்தை உருவாக்க ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கும் மேலாக முயற்சித்துப் பல முறை தோல்வியைத் தழுவிய பின்னரே இதனை உருவாக்குவது எளிதானதன்று என்பதும், அதற்கென நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகள் உண்டு என்பதும் யாம் அனுபவ ரீதியில் உணர்ந்த உண்மைகளாகும். மேற்கண்ட உண்மைகளைக் கூறுவோர் ஒருபுறம் இருந்தாலும், அடையாளப்படுத்த இயலாத ஆகாய மார்க்கங்களின் (*UFO*) மூலம் வேறு கிரஹங்களில் இருந்து பூமிக்கு வந்து இறங்கிய வேறு கிரகத்தாரால் வரையப்பட்ட வடிவம் எனப் பொய் உரைப்போரும் மறுபுறம் உண்டு.

மேலும் அவர்கள் அறிந்த ரகசியத்தை தாங்கள் மட்டுமே அறிந்துள்ளதாகவும் அதனைக் கற்றுத்தருவதற்கென பெருந்தொகையை கட்டணமாக வசூலித்து வரும் மேலை நாட்டு ஏமாற்று வித்தகர்களும் உண்டு என்பது ஓர் அறிவிப்புச் செய்தியாகும்.



உண்மையில் ஶ்ரீ சக்கரத்தை உருவாக்கும் ரகசியத்தை அறிந்தவர் ஓர் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு மௌனமாகி விடுவதால், அது எப்போதும் ரகசியமாகவே உள்ளது.

இதனால், ஶ்ரீ சக்கரத்தை உருவாக்கும் நெறிமுறை மறைந்து விடுமோ அழிந்துவிடுமோ என்ற சிந்தனைக்கு இடமளிக்காது, அதற்குரிய காலக்கட்டத்தில் தகுந்ததொரு ஜீவாத்மாவின் வாயிலாக தமது அருஉருவ வடிவமான (சூட்சுமமான) ஶ்ரீ சக்கரத்தை நிச்சயமாக அன்னையே உருவாக்கிக் கொள்வாள் என்பது எமது (தி.லெ.சு.ச.போஸ்) அனுபூதி.

அறிபவனும் அறிவும் அறியப்படுவதும் ஒன்றே (ஜ்ஞாத்ரு - ஜ்ஞான- ஜ்ஞேயானாமபேத- பாவனம் ஶ்ரீசக்ரபூஜனம்) என்ற அபேத பாவனையே ஶ்ரீ சக்கர பூஜை - என பாவனோபநிஷதம் கூறுகிறது.[12] அத்தகைய ஶ்ரீ சக்கரத்தைப் பற்றிய மேலும் பல குறிப்புக்கள், ஶ்ரீ வித்யா தத்துவம்-தியானம்-வாழ்க்கை நெறி எனும் நூலின் பாகம் ஒன்று, பக்கங்கள் 23 முதல் 34 வரையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஶ்ரீ சக்கர வழிபாட்டு (பூசை) முறை, மந்திரம் ஆகியவை பற்றிய மேலும் பல விபரங்களை, ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதம், பௌணர்மி நாளன்று, பிரபஞ்ச நலத்திற்காக, கோவை, பெரிய தடாகம் அன்னை ஶ்ரீ லலிதாம்பிகை அம்மன் திருக்கோயிலில், முனைவர் தவத்திரு ஶ்ரீ ஜகநாதசுவாமிகள் தலைமையில், நிகழும் ஶ்ரீ சக்கர பூஜையில் கலந்து கொண்டு அனுபவ ரீதியில் அறியலாம்.

## கோட்டுருவங்களும் புடைப்பு உருவங்களும்

பழங்கால ஶ்ரீ சக்கரத்தின் கோட்டுருவங்களை சேலம் மாவட்டம் ஊத்துமலையிலும், திருவானைக்காவிற்கு வடதிசையில் உள்ளதும், திருவரங்கம் அருள்மிகு ரெங்கநாத சுவாமி திருக்கோயிலின் கீழ்திசையில் உள்ளதும், காதறுத்தான் மண்டபம் என மக்களால் குறிப்பிடப்படுவதுமான மண்டபத்தின் இடிபாடுகளுக்கு இடையே உள்ளதொரு மண்டப மேற்கூரைப் பரப்புக் கல்லில் காணலாம். திருச்சிராப்பள்ளி, ஶ்ரீரங்கம்-திருஅரங்கநாதரின் ஆலயத்தின் தென் திசையிலுள்ள இராஜகோபுரத்து உத்தரத்தின் கீழ் தாரியிலும், திருவானைக்கா - அருள்மிகு ஜம்புநாதரின் ஆலயத்தின் மேற்குத் திசை இராஜகோபுரத்து உத்தரத்தின் கீழ் தாரியிலும், பெரம்பலூருக்கு அருகில் உள்ள செட்டிக்குளம் - அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்தின் கிழக்குக் கோபுரத்து மண்டபத்தின் மேற்கூரையின் மய்யத்திலும், நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை -

சிவாலயத்தின் மண்டப மேற்கூரையிலும் ஸ்ரீ சக்கரத்தின் புடைப்புக் கோட்டுருவங்களைக் காணலாம். (குறிப்பு: உத்திரத்தின் கீழ்தாரி என்பது உத்திரத்தின் கீழ்நோக்கும் அடிப் பகுதியாகும்.)

## ஸ்ரீ சக்கரம் வழிபடப்படும் திருத்தலங்கள்

அருள்மிகு காஞ்சி காமாட்சியம்மன், சென்னை, திருவொற்றியூர் ஸ்ரீ முகாம்பிகை அம்மன், தஞ்சை பாஸ்கர ராஜபுரம், கன்னிவாடி ஸ்ரீ இராஜகாளியம்மன், மாங்காடு ஸ்ரீ காமாட்சி அம்மன், பொள்ளாச்சி மாசானி அம்மன், கோவை பெரியதடாகம் ஸ்ரீ லலிதாம்பிகை அம்மன், திருச்சி அகிலாண்டேஸ்வரி அம்மன், ஆந்திர மாநிலம் ஸ்ரீ கனகதுர்கை அம்மன், கர்னாடகா மாநிலம் ஸ்ரீரங்கப்பட்டினம் நிமிஷாம்பா ஆகியன ஸ்ரீ சக்கரம் வழிப்படப்படும் திருத்தலங்களாகும். இவை மட்டுமின்றி மேலும் பல புண்ணியத் தலங்களும் உள்ளன.

அவற்றில் குறிப்பாகத் தமிழகத்தில், ஸ்ரீ சாந்தானந்த சுவாமிகள் நிறுவிய ஸ்கந்தாஸ்ரமம், புதுக்கோட்டை ஸ்ரீ புவனேஸ்வரி பீடம், கடலூர் பண்ருட்டி கண்டிகை கிராமத்திலுள்ள ஸ்ரீமஹாமேரு தியான நிலையம், ஈரோடு மாவட்டம் முசிறி திருஈங்கோய்மலை ஸ்ரீ லலிதா சமாஜ் தியான நிலையம். நெரூர் பிரமேந்திராள் அதிஷ்டானம் ஆகிய புண்ணிய ஸ்தலங்களில் ஸ்ரீமகாமேரு, ஸ்ரீசக்கர, ஆகிய இரண்டு வழிபாடுகள் நடைபெறுகின்றன.[13]

பொதுவாக ஸ்ரீசக்கரத்தை பூர்ஜ இலை, பித்தளை, தாமிரம், வெள்ளி, தங்கம் ஆகிய உலோகத் தகடுகளில் வரைந்து இல்லங்களில் வழிப்படுவர். மஹாமேருவை (தாமிரம், வெள்ளி, தங்கம், ஈயம், துத்தநாகம் ஆகிய ஐந்து உலோக கலவையான) பஞ்சலோகத்தில் செய்து ஆலயங்களில் வழிபடுவர்.

தங்கத்தாலான ஸ்ரீ சக்கரங்களே மிகச் சிறந்ததது என்பது மட்டுமின்றி அச்சக்கரங்களே ஆலயங்களின் கர்ப்பக்கிரகத்தில் பிரதிஷ்டை செய்யப்படும் மூலவரின் சிற்பத்தின் அடியில் நவரத்தினங்களோடு இடம் பெறுவதாகும். குடியிருக்கும் இல்லங்களில் இனிப்பானப் பதார்த்தங்களை படைத்து, அதற்கான மந்திரங்களை முறைப்படி உச்சரித்து ஸ்ரீ சக்கரங்களை வழிபட்டு நற்பலன்கள் அடைந்தோர் ஏராளம்.

முறைப்படி உருவாக்கப்படாத ஸ்ரீ சக்கரம் நீரின் மீது வரையப்பட்டதற்கு ஒப்பாகும். மேலும் ஓர் ஸ்ரீ சக்கரம் தங்கத் தகட்டில் முறைப்படி உருவாக்கப்பட்டிருந்தாலும், அது முறைப்படி வழிப்பாடு செய்யப்படாமல் இருந்தால் அது ஒரு தங்கத் தகடாகவே கருதப்படும்.

(குறிப்பு: அரியவகையான ஓர் எண் வடிவ ஸ்ரீ சக்கரத்தைப் பற்றிய விபரங்களை திருக்கோபுர நிலைக்கால் படிக் குறியீடுகள் என்றத் தலைப்பில் (ப.47) விரிவாகக் காணலாம்.)

### சித்தியளிக்கும் கிருஷ்ண யந்திரம்

*ஸ்ரீ கிருஷ்ண என்பதை ஸ்ரீ க்ருஷ்ந (க்ருஷ் + ந) எனவும், அதில் **கிருஷ்** என்பது பூமியையும் **ந** என்பது மகிழ்ச்சியையும் குறிக்கும். எனவே **க்ருஷ்ந** என்றப் பெயர்ச் சொல் பூமியை மகிழ்விக்குமொரு சக்தியைக் குறிப்பிடுவதாகும்.*

*ஸ்ரீ சக்கரத்தைப் போலவே சித்தியளிக்கும் ஸ்ரீ கிருஷ்ண யந்திரத்தைப் பற்றி கோபாலதாபினி உபநிடதம்[14] கூறுவதாவது; முனிவர்கள், பிரம்மனிடம் ஸ்ரீ கிருஷ்ணனுடைய உபாஸனா மார்க்கத்தை கூறியருளுமாறுக் கேட்டனர்.*

*அதற்கு பிரம்மா; பொன் மயமான பீடத்தில் எட்டிதழ்த் தாமரையும் அதனுள்ளே இரு முக்கோணங்களாலான அறுகோணமும் வரைக.*

*ஆறு கோணங்களிலும் க்லீம்-க்ருஷ்-ணா-ய-ந-ம என்ற ஆறு அக்ஷரங்களையும் எழுதுக. எட்டிதழ்களிலும் ஓம் - க்லீம் என்று எழுதுக. பின்னர் கமலத்திற்கு வெளியில் நாற்கோட்டு பூபுரம் வரைந்து அதை மூல மந்திரத்தால் சூழச் செய்து அதைச் சுற்றிக் கிருஷ்ணனுடைய அங்கமான வசுதேவர், ருக்மணீ ஆகியோரையும், இந்திரன் முதலிய திக்பாலர்களையும் பரிவாரமான அர்ஜுனன் முதலியோரையும் அஷ்டநிதிகளையும் தியானித்து ஸந்தியா காலங்களில் பக்தியுடனும், வாழ்த்தியும் பூஜித்தால் எல்லாம் சித்திக்கும் என்றார் - எனக் கூறுகிறது.[15]*

### பிரபஞ்ச தத்துவம் எனும் பிரம்ம பந்தம் அல்லது சக்கரம்

*பிரம்மம், **சூட்சுமத்தில்** சிவசக்தியாக பிரபஞ்சம் முழுமையும் நீக்கமற நிறைந்துள்ள சக்தி என்பர். அவ்வாறு நிறைந்துள்ள சிவத்தைப் புருஷதத்துவம் எனவும் சக்தியை (மூல) ப்ரக்ருதி தத்துவம் எனவும் இரண்டு தத்துவங்களாகப் பிரித்துக் கூறப்படுகிறது.*

*புருஷனின் பகுதிகள் பதினாறு என பிரச்ன உபநிஷதம் (சூ.6.2) கூறுகிறது. ப்ரக்ருதி தத்துவத்தை இருபத்து நான்கு என்பதால் பிரபஞ்ச தத்துவம் நாற்பது எனக் கருதலாம்.*

*அக் கருத்திற்குச் சான்றாக ஓர் சக்கரம் கும்பகோணம், குடவாசல் எனும் ஊருக்கு அருகே உள்ள திருச்சிறுகுடி **அருள்மிகு சூட்சுமபுரீஸ்வரர்** சிவாலயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள செய்தி தினமலர் நாளிதழ் வாயிலாக அறியப்பட்டது. (நன்றி: தமிழக இந்து சமய அறநிலையத் துறை)*

*இது பிரம்மபந்தம் எனும் சக்கரமாகும். இவ்விடத்து **பந்தம்** என்பதற்குக் கட்டு, உறவு, தீவட்டி எனப் பொருள்.[16]*



| | | | |
|---|---|---|---|
| 12 | 19 | 2 | 7 |
| 6 | 3 | 16 | 15 |
| 18 | 13 | 8 | 1 |
| 4 | 5 | 14 | 17 |

தமிழ் எழுத்துக்களை எண்களைக் கொண்ட அந்த பிரம்ம பந்தத்தில் 1,2,3,4,5,6,7,8,12,13,14,15,16,17,18 ஆகிய 16 எண்கள் உள்ளன. அவற்றின் மொத்தக் கூட்டுத்தொகை எண் 160. அப்பதினாறு எண்களை 16 கட்டங்களில் முறைப்படி வரிசைப் படுத்தி, அவற்றை எவ்வாறு கூட்டினாலும் அவற்றின் கூட்டுத் தொகை 40-ஆக வருமாறுஅமைக்கப்பட்டுள்ளது. மையத்திலுள்ள 3,16,8,13 ஆகியவற்றின் கூட்டுத்தொகை 40; அது மொத்தக் கூட்டுத் தொகையான 160-யில் கால்பங்கு மட்டுமே. மீதமுள்ளது முக்கால் பங்காகும். இது பற்றி புருஷசுக்தம் (சூ.1.3) கூறுவதாவது; இங்கு காணப்படுவது எல்லாம் இவருடைய மஹாத்மியமே, இவ்வனைத்தையும் காட்டிலும் அப் பரம புருஷனோ அதிகமானவர். உண்டாகியவை எல்லாம் இவருடைய கால்பங்கு; இவருடைய முக்கால் பங்கு அழிவற்றதாய் பரமபதத்திலிருக்கிறது - எனக் கூறுவதுடன் ஒப்பிடலாம்.

## நூல் குறிப்புக்கள்

01. அண்ணா, உபநிடத் ஸாரம் (3 -ஆம். பாகம்), த்ரிபுராதாபின்யுபநிடதம், சூ. 2.2
02. முனைவர். ஸ்ரீ ஜெகநாத சுவாமி, ஸ்ரீ வித்யா தத்துவம்-தியானம் -வாழ்க்கை நெறி ப.24
03 அண்ணா, உபநிடத் ஸாரம் (3 -ஆம். பாகம்), பாவனோபநிடதம், சூ. 2
04. ibid சூ. 1
05. அண்ணா- ஸௌந்தர்யலஹரி-பாஷ்யம்அனுபந்தம்- பாவனோபநிடதம், சூ.3 ப.185
06. அண்ணா ஸ்ரீ லலிதா த்ரிசதீ, உத்தரபாகம் சூ. 11
07. ibid .
08. ibid .
09. ibid, சூ. 15
10. அண்ணா (உரையாசிரியர்) ஸௌந்தர்ய லஹரீ-பாஷ்யம் ப.183
11. ibid.
12. அண்ணா, உபநிடத் ஸாரம் (3 ம். பாகம்), பாவனோபநிடதம், சூ.1
13. முனைவர். ஸ்ரீ ஜெகநாத சுவாமி, சக்தி விகடன்,ஜெயம் தரும் ஸ்ரீ சக்கரம் பக்.84-87
14. அண்ணா, உபநிடத் ஸாரம் (3 ம். பாகம்), கோபாலதாபினி உபநிடதம், சூ.1.1
15. ibid , சூ.1.2
16. மெய்யப்பன் தமிழ் அகராதி

## தந்திரம்

மந்திரம் (அருவம்), யந்திரம் (அருவுருவம்) ஆகிய இரண்டை அடுத்து மூன்றாவது தந்திரம் (உருவம்) ஆகும். அதில் சொல் எனும் வாக்கும் அதன் அருத்தமும் தனித்தனியாக இல்லாமல் ஒன்றைவிட்டு மற்றொன்று பிரியாமல் சிவசக்தி எனும் ஓர் உருவமாக இணைந்திருக்கும்.

அவன் போனான், அவன் வந்தான், அவன் நின்றான், அவன் ஓடினான் என்பதில், அவன் (பகுதி) + போனான், வந்தான், நின்றான், ஓடினான் (விகுதி) எனும் பகுதியும் விகுதியும் சிவமும் சக்தியுமாக உள்ளன.

அதாவது அவன் என்பது நிலையான பகுதி அல்லது பிரகாசம். சிவப்பிரகாசம் என்ற பெயர்ச்சொல்லின் உட்பொருள் அஃதேயாகும். அடுத்ததாக உள்ள போனான், வந்தான், நின்றான், ஓடினான் ஆகியவை வினைகள் எனும் செயல்களைக் குறிப்பிடுவதாகும்.

சலனப்படுவது அதாவது மாறுபடுவது என்பதே வினைகளாகும். அங்ஙனம் சலனத்திற்கு உட்படும் வினைகளே விகுதி அல்லது விமர்சனமாகும்.

மேற்கண்டவற்றின் அடிப்படையில் பிரம்மம் என்பதே பிரகாச விமர்சன சாமரஸ்ய உரூபிணி[1] அல்லது ரூபமாகும்.

ஸ்ரீ வித்தையின் சித்தாந்தத்தில் பிரகாச உரூபத்தை காமேஸ்வரர் எனவும் விமர்சன உரூபத்தை காமேஸ்வர பத்தினி எனவும் கூறப்படுகிறது. காமம் என்பது தமிழ்மொழிச் சொல். அதற்குக் காதலால் கனிந்த அன்பு எனப்பொருள்படும். **அன்பே சிவம்** என்பதன் உட்பொருளும் இஃதேயாகும்.

சிவசக்தி என்பதில் சொல்லும் அருத்தமும் (சொல்லும் பொருளும்) எங்ஙனம் இணைபிரியாமல் உள்ளதோ அவ்வாறே சொல்லும் சிந்தனையும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமல் பின்னிப்பிணைந்துள்ளது. அதற்கு அம்மா என்ற சொல்லை ஓர் உதாரணமாக எடுத்துக் கொள்வோம். அச்சொல்லின் உட்பொருளை அறிந்தால் அம்மாவின் அன்பாகிய தாயன்பு அல்லது தாய்ப் பற்றின் மாபெரும் சக்தியை உணரலாம். அத்தகையப் பற்றை **த்வனிப் பற்று** [2] என்பர்.

அப்பற்று இல்லாவிட்டால் அம்மா என்ற சொல் அர்த்த மற்றதொரு சொல்லாகவும், புரியாத ஒரு மொழியாகவும் மாறி நம் சிந்தனைக்கு அப்பாற்பட்டதாகவும் எவ்வகையிலும் பயனற்றதொரு ஒலியாகவும் மாறிவிடும். அங்ஙனம் மாறாதிருக்க பிரம்மத்தின் முதல் வெளிப்பாடான பரத்துவத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டதே சொல், அர்த்தம், சிந்தனை, ஆகியவை மூன்றையும் கொண்டதொரு மொழி. அம் மூன்றோடு நான்காவதாக உருவமும் இணைந்ததே தமிழ்மொழி. எனவே **தமிழ் மொழி ஒரு தெய்வத் திருமொழியாகும்.**

## அர்(ரு)த்தநாரீச(சுர)ன்

திருத்தலங்களின் தேவகோஷ்டங்களில் அமைக்கப்பெறுவது அர்(ரு)த்தநாரீச(சுர)ன் உரூபம். அதனை அருத்தம் + நாரி + ஈசுவரன் எனப்பிரித்து **அருத்தம்** என்பது பாதி; சொற்பொருள்; பொன்; பொருள்; எனவும், **நாரி** என்பது நாணி; பார்வதி; பெண்; தேன்; சேனை; எனவும் பொருள்படும். **ஈசுவரன்** என்பது சிவத்தை சுட்டும் சொல். அன்னை பார்வதி தேவிக்கு உமையம்மை என்ற மற்றுமொருப் பெயருமுண்டு. அர்(ரு)த்தநாரீச(சுர)ன் என்பதை உமையொருபாகன் அல்லது **அம்மைஅப்பர்** என அன்னையை முன்னிருத்தி மேற்கண்டத் தெய்வத்திரு மொழியாம் தமிழ் மொழியில் குறிப்பிடப்படுவதாகும்.

அணுவுக்கு அணுவாகவும், பெரியதிலும் பெரியதாகவும் உள்ளவர் ஆத்மாவாக இந்த ஜீவனுடைய இதயகுகையில் குடிகொண்டுள்ளார். ஆசை நீங்கப் பெற்றவன் ஆத்மாவை கண்டு, தனது சோகம் நீங்கப் பெற்று அந்தகரணங்களின் தெளிவால் மேன்மை மிகு இறைவனைக் காண்கிறான் [3] என்பர். அதற்குச் சான்றாகக் கயிலை மலையானை காணச் சென்ற திருநாவுக்கரசர்,

மீளும் அத்தனை உமக்கினிக் கடன் என விளங்கும்
தோளும் ஆகமும் துவளுமுந் நூல்முனி சொல்ல
ஆளும் நாயகன் கயிலையில் இருக்கைகண் டல்லால்
மாளும் இவ்வுடல் கொண்டுமீ ளென் [4] - எனப் பாடினார்.

தன் பக்தனின் வைராக்கியத்தை அறிந்து அவனது எண்ணம் நிறைவேற, கயிலைமலையானே ஒரு முனிவனாகத் திருவுருவம் கொண்டு, அவர் முன் தோன்றி, இக்குளத்தில் மூழ்கித் திருவையாற்றில் எழுந்து கயிலைக்காட்சியைக் காண்பாயாக எனஅருளினார்.

அவ்வாறே அக்குளத்தில் மூழ்கித் திருவையாற்றில் எழுந்த திருநாவுக்கரசர்,

*மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் என்னும்*

*கோதறு தண்டமிழ்ச் சொல்லால் குலவு திருப்பதி கங்கள்*

*வேத முதல்வர் ஐயாற்றில் விரவுஞ்சாரசரம் எல்லாம்*

*காதல் துணையொடுங் கூடக் கண்டேன்* **[5]** *- எனப்பாடினார்.*

*திருவையாற்றில் எழுந்தருளியுள்ள* ***ஐயாறப்பனைத்*** *தரிசிக்க சென்ற போது, முதலில் பெண், ஆண் யானைகளையும் அவற்றில் பார்வதி, பரமேஸ்வரனின் திருப்பதங்களையும் கண்டார்.*

*அடுத்து கோழியும் சேவலும், மயிலும் அதன் இணையும், பெண் ஆண் வண்டுகளும், குயிலும் அதன் இணையும், பன்றி, மான், நாரை, கிளி என அனைத்தும் அதனது இணையும், பசுவும் காளையுமாக இணையிணையாக வருவதைக் கண்டேன் ! கயிலை மலையானைக் கண்டேன்! பார்வதிபரமேஸ்வராகக் கண்டேன்! எனப் பத்து பதிகங்களில் பாடிப் பரவசமடைந்தார்.*

*அதையே, வார்க்காத்தாவிவ ஸம்ப்ருக் வாகர்த்த ப்ரதிபத்தயே ஜகத: பிதரோவந்தே பார்வதி பரமேஸ்வரௌ - எனக் காளிதாசன் படைத்த ரகுவம்சம் கூறுவதாக வாக்குவாதினியில் நஜன் (எ) நடராசன் குறிப்பிடுகிறார்.* **[6]**

*உமையொருபாகன் எனும் அர்(ரு)த்தநாரீச(சுர)ன் வடிவமே பிரம்மம். அதுவே மந்திரத்தை அடுத்து யந்திரமாகவும், யந்திரத்தை அடுத்து தந்திரமாகவும் வெளிப்பட்டதாகக் கருதலாம்.*

### சிவலிங்கம்

*உலகின் முதுமையான வழிபாட்டுச் சின்னமாக கருதப்படுவது சிவலிங்கம். ஜீவாத்மாக்கள் இறைவனை தியான பாவனா நிமித்தம் திருமேனி (திரு உருவம்) கொண்டுள்ளார் என்பர். அத்திரு உருவம்* ***சகளம், நிஷ்களம், சகள நிஷ்களம்*** **[7]** *என மூவகைப்படும்.*

*அதாவது; தலை, உடல், கை,கால் ஆகிய அவயங்கள் உடையதை* ***சகளம்*** *எனவும், அவயங்கள் ஏதும் இல்லாததை* ***நிஷ்களம்*** *எனவும், சகளம், நிஷ்களம் இரண்டும் அமையப் பெற்ற முகலிங்கம்* ***சகள நிஷ்களம்*** *என்பதாகும்.*

*சிவத் தத்துவமான நிஷ்களமே சிவலிங்கமாகும்.* ***லிங்கம்*** *என்பதை லிங்+கம் எனப்பிரித்து,* ***லிங்*** *என்பதற்கும் ஒடுக்கம் எனவும்,* ***கம்*** *என்பதற்கு தோற்றம் என சிற்ப செந்நூல் பொருள் கூறுகிறது.* **[8]** *யூபஸ்தம்பா* **[9]** *(வேள்வி தூண்) என்பதில் மிருகங்களைக் கட்டி பலியிடுவது பற்றிக் கூறும் மறை நூல்கள், சிவலிங்கத்தை மய்யமாகக் கொண்ட கோயில், யாகசாலை ஆகியவை தியாகத்தின் சின்னங்கள் எனக் கூறுகின்றன.*

சிவலிங்கத்தில் **தாய்- தந்தை - தோற்றுவிக்கும் சக்தி** ஆகிய மூன்று சக்திகளாக[10] உள்ளமை இதனது தனிச்சிறப்பாகும். இச் சிறப்பையே உலகமக்கள் யாவரும் பன்னெடுங்காலமாக இதனை வழிபட்டு வருவதற்கான காரணமாகவும் கருதலாம். சிவலிங்க வழிபாட்டு முறை எப்போது தோன்றியது என்பதை துல்லியமாகக் கூற இயலாது.

பொ.ஆ.மு. 3500 -1500 ஆண்டுகளுக்கு[11] முற்பட்டதாகக் கருதப்படும் சிந்து சமவெளி நாகரீக சின்னங்களில் சிவலிங்கத்தின் உருவம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் சிவலிங்கம் பழங்காலத்திலேயே நம் பாரத நாட்டில் தோன்றி வழிபடும் உருவமாக இருந்துள்ளது எனத் தெரியவருகிறது.

மானுடர், தமது ஒவ்வொரு பிறப்பிலும் **தந்தை, மகன், ஆன்மா** என மூன்று முறை பிறக்கின்றனர் என ஐதரேய உபநிடதம் கூறுகிறது.[12] இந்த மூன்று பிறப்புக்களும் பிரபஞ்சத்தின், தோற்றம், காத்தல், ஒடுக்கம் எனும் சங்கிலித்தொடரின் தத்துவத்தை உணர்த்துவதாகும்.

இந்த மூன்றுத் தத்துவங்களின் உருவமே சிவலிங்கம். ஒடுக்கத்திலிருந்து வெளிப்பட்ட அனைத்தும் மீண்டும் அதிலிலேயே ஒடுங்குகிறது என்ற தத்துவத்தைக் கொண்ட சிவலிங்கம் ஓர் பிரபஞ்ச தத்துவத்தை உணர்த்தும் உருவமாகும். இதில் ஆண், பெண் ஆகிய இரண்டு தத்துவங்களும் ஒன்றோடு ஒன்றாக ஒன்றியுள்ளன. மேலும் இது தோற்றம்- பிரம்மா, காத்தல்- விஷ்ணு, ஒடுக்கம்- உருத்திரன் ஆகிய மூன்று தத்துவங்களும் உள்ளடங்கியதொரு காரண வடிவமுமாகும்.

சிவலிங்கத்தின் அடிப்பகுதி , **பிரம்மபாகம்**[13] - தோற்றத்தைக் குறிக்கும். இதனது வடிவம் சதுரம். சதுரத்தின் பொருள் இடம். அடுத்தது நடுப்பகுதி **விஷ்ணுபாகம்**[14] - காத்தலைக் குறிக்கும் இதனது வடிவம் எண்கோணம்.

எண்கோணத்தின் உட்பொருள் காலமும் இடமும் இணைவதைக் குறிக்கும். பிரம்மபாகமும், விஷ்ணுபாகமும் ஆவுடை எனும் **யோனி பீடமாகிய**[15] பெண் தத்துவத்தில் அதாவது பிரகிருத்தியில் மறைந்திருக்கும். காரியமாகிய ஆவுடையின் வடிவம் வட்டமாகவும், சதுரமாகவும் அமைக்கப்படுவதுண்டு.

அடுத்தது உருளை வடிவமான மேற்பகுதி, இது **உருத்திரபாகம்**[16]- ஒடுக்கத்தைக் குறிக்கும் இதனது வடிவம் உருளை (வட்டம்). வட்டத்தின் பொருள் காலம். ஆவுடையிலிருந்து வெளிப்படும் உருளை **பூஜாபாகம்**[17]. அந்தப் பாகத்தில் காணப்படும் நுட்பமான கோடுகள் **பிரம்ம சூத்திரம்**[18] என்பதாகும். எனவே சிவலிங்கம் ஓர் காலம், இடம், காரணகாரிய ஸ்ரூபம் எனவும் கருதலாம்.

மேற்கண்ட சிவலிங்கத்தின் புறக்கண்களுக்குப் புலப்படும் உருளை வடிவத்தில் **திரிபுண்டரா**[19] எனும் வெண்மை நிற (சாம்பல்) மூன்று படுக்கை கோடுகள் -அ, உ, ம் எனும் மூன்று அட்க்ஷரங்களையும்; சத்வ, ரஜோ, தமோ எனும் முக்குணங்களையும்; மேல், நடு, கீழ் ஆகிய மூவுலகையும்; தோற்றம், காத்தல், ஒடுக்கம் ஆகிய மூன்று செயல்களையும்; ஸ்தூல, சூட்சுமம் காரணம் ஆகிய மூன்று உடல் களையும் குறிக்கும் சிவதத்துவம் என்பர்.

நடுவே உள்ள சிவப்பு நிறமுடைய குங்குமத் திலகம் சக்தி தத்துவத்தைக் குறிக்கும் என்பர். பழைமையான சிவலிங்கங்களின் ருத்ரபாகமாகிய உருளையில் (பிரம்ம சூத்திரத்தில்) ஆண்குறியின் மலர் வடிவத்தையும் காணலாம்.

உருளையின் மேற்பகுதியான அரைக் கோளத்தின் மையத்தில் ஒரு புள்ளியின் வடிவம் மறைந்திருக்கும். அதுவே பிந்துஸ்தானம் என்னும் பிந்து மையமாகும். அதில் பிரம்மம் நீக்கமற நிறைந்து உள்ளதால் அந்த மையத்தில் காலம், இடம், காரண காரியம் என்பதற்கே இடமில்லை என்பர். சிவலிங்கத்தில் மறைந்துள்ள புள்ளியை மேலிருந்து காண்பதே **பிரம்ம தரிசனம்** என்பர்.

அதாவது; புறக்கண்களுக்குப் பிரகாச விமர்சன சாமரஸ்ய ரூபமாகக் காட்சிதரும் சிவலிங்கமே பரம்பொருளின் ஜோதிக்குள் ஜோதி என்றத் தத்துவத்தை உணர்த்துவதுமாகும்.

மேற்கண்ட சிவலிங்க வழிப்பாட்டை, **சல, அசல, சலாசல**[20] முறையே **சலம், அசலம், சலாசலம்** [21] என மூவகைப்படுத்துவர்.

**சலம்** என்பது அசையும் தன்மையுடையது. இது குடியிருப்பு இல்லங்களில் தற்காலிகமாகக் களிமண், அரிசி, இனிப்புக்கலந்த மாவு (மாவிளக்கு) தயாரித்து வழிபடுவதற்குத் தகுந்தவை.

**அசலம்** என்பது அசைக்க இயலாதவை அதாவது ஸ்திரமானவை. இவை தகுந்த கருங்கல்லால் சிற்பசாஸ்திர முறைப்படி சிற்பிகளால் வடிவமைக்கப்படுபவை.

**சலாசலம்** என்பது அசைவதும் அசையாததுமான இரு தன்மைகள் உடைவை.

சிவலிங்கம் செய்யப் பயன்படும் பொருளைக் கொண்டு அதற்குப் பெயரிடுவது சிற்ப சாஸ்திர மரபு. தங்கம், வெள்ளி, செம்பு, வெண்கலம், பித்தளை, உருக்கு, ஈயம் போன்ற உலோகங்களில் செய்யப்படுவது **லோஹஜலிங்கம்.** [22] முத்து, பவழம், வைடூரியம், ஸ்படிகம், புஷ்பராகம், மரகதம், நீலம் ஆகியவற்றால் செய்யப்படுவது **ரத்னஜ லிங்கம்.** [23] சந்தனம், கருங்காலி, இருப்பை, மராமரம், வில்வம், தேவதாரு, அசோகம் ஆகிய வைரம் பாய்ந்த பாலுள்ள அதாவது சத்துள்ள மரங்களால் செய்யப்படுவது **தாருஜ லிங்கம்** [24] எனப்படும்.

கல்லில் வடிவமைக்கப்பட்டதும், திவ்யம், சுவாயும்புவம், தைவதம், காணபம், ஆகரம், சுரம், ஆருஷம், ராக்ஷஸம், மானுஷம், பாணம் எனும் ஒன்பது வகைகள் என்பதுமான வடிவங்களே திருத் தலங்களில் வழிபாட்டிற்குரிய உருவங்களாகும்.**25** சிவலிங்கத்தின் நீள அளவுகளைக் கூறுகளாக்கி, அக் கூறுகளில் இருந்து நிர்ணயிக்கப் படும் அகல அளவுகள் கொண்டு வடிவமைக்கப்படுவதை நாகரலிங்கம், திராவிட-லிங்கம், வேஸர லிங்கம் என மயமதம் எனும் சிற்ப சாஸ்திர நூல் விவரிக்கிறது.**26** (படம்: திருச்சி மாவட்டம், அக்கரைப்பட்டியில் ஆய்வாளர் கண்ணன் கண்டறிந்த நாற்பது கட்டங்கள் கொண்ட சிவலிங்கபந்தம். )

## சிவசக்திக்குரிய சின்னங்களும் அவற்றின் குணங்களும்

### சிவம்

| | | |
|---|---|---|
| சிவம் | - | அறிவு. |
| சூலம் | - | முக்குணம். |
| பரசு (அ) கோடாரி | - | சத்யம் அல்லது ஞானம். |
| கட்கம்(வாள்) | - | பேராண்மை |
| வஜ்ரம் | - | முழுமை அல்லது பிரிக்க இயலாதது |
| அபயம் | - | பேரருளுடைமை |
| நாகம் | - | பாசங்களினின்று நீங்கிய தன்மை |
| உடுக்கை | - | நாத மயம் (ஒலி வடிவு) |
| அக்னி | - | ஒடுக்கம் |
| பிறைச் சந்திரன் | - | நேரம்; ஒடுக்கம்; ஞானம் |
| மூன்று கண்கள் | - | சூரியன்; சந்திரன்; அக்னி அல்லது இட, பிங்கல மற்றும் சூட்சும நாடிகள் |
| கங்கை | - | தேவாமிர்தம் |
| **மகாசதாசிவம்** | - | ஐந்து முகங்கள் |
| கிழக்கு | - | தற்புருடம் |
| தெற்கு | - | அகோரம் |
| மேற்கு | - | சத்தியேசாதம் |
| வடக்கு | - | வாமம் |
| உச்சி | - | ஈசானம். |

**சக்தி**

| | | |
|---|---|---|
| சக்தி | - | அன்பு |
| திரிசூலம் | - | இச்சா சக்தி; கிரியா சக்தி; ஞான சக்தி |
| பாசம் | - | மாயை வடிவம் |
| அங்குசம் | - | நிறமின்மை |
| கரும்பு வில் | - | காமம் |
| அம்பு | - | ஐம்புலனடக்கம் |
| **சிவசக்தி** | - | அறிவும் அன்பும் ஒருங்கிணைந்தும், பிரபஞ்சத்தில் அமைதியாக நீக்கமற நிறைந்தும், அனைத்தையும் இயக்குமொரு மாபெரும் இயக்கச் சக்தியாகும். |

## நூல் குறிப்புக்கள்


*01. நஜன் எனும் நடராஜன், வாக்குவாதினி ப. 13*
*02. ibid,*
*03. அண்ணா, உபநிடத்ஸாரம் 1-ம் பாகம், ச்வேதாச்வதர உபநிடதம், சூ. 3.20*
*04. பெரிய புராணம் எனும் திருத்தொண்டர் புராணம் பா. 1636*
*05. ibid, பா. 1654*
*06. நஜன் (எ) நடராசன், வாக்குவாதினி ப.13*
*07. வை.கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல் அத்தியாயம் 19, ப. 160*
*08. ibid,*
*09 Swami Harshananda Principal Symbols of world Religion, p 8*
*10. ibid,*
*11. ibid,*
*12. சுவாமி ஆசுதோஷானந்தர் (விளக்க உரை) ஐதரேய உபநிடதம், சூ.2. 1-4*
*13. வை.கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல் அத்தியாயம் 19, ப. 161*
*14. ibid,*
*15. ibid,*
*16. ibid,*
*17. Swami Harshananda Principal Symbols of world Religion, p 9*
*18. ibid,*
*19. ibid,*
*20. ibid, சூ.9*
*21. வை.கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல் அத்தியாயம் 19, ப. 161*
*22. ibid, ப. 162*
*23. ibid, ப. 162*
*24. ibid, ப. 162*
*25. ibid, ப. 162*
*26. Bruno Dagens (translation), Mayamata, Chapter 33. verses 109 b- 122 a.*

# திருக்கோயில்

திருக்கோயில் என்பது அ,உ, ம் ஆகிய மூன்று அக்ஷரங்களை கொண்ட **தீர்க்க பிரணவ மந்திரமாகிய ஓம்** எனும் ஓங்காரப் பேரொலி நிறைந்திருக்குமொருத் திருக்கூடம். இத் திருக்கூடம்- ஓம் என்பதை வில்லாகவும், மனத்தை நாணாகவும், ஆன்மாவை அம்பாகவும், **வைராக்கியத்துடன்** மனத்தை ஒருநிலைப்படுத்தி, **தன்னம்பிக்கையுடன்** நாணை இழுத்து, பிரம்மம் எனும் இலக்கை நோக்கி குறித்தவறாமல் எய்து, பிரம்மத்தில் நிலைத்து நிற்கச் செய்யுமொருப் பயிற்சிக் கூடமாகும்.

இவ்விடத்து **தீர்க்கம்** என்பதற்கு முழுமை எனவும், **வைராக்கியம்** என்பதற்கு உலகப்பற்றின்மை எனவும், **தன்னம்பிக்கை** என்பதற்கு தன்னால் முடியும் எனும் மனவுறுதி எனப்பொருள்படும்.

மஹாபுருஷன்; ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், பூமி, இந்திரியம், மனது, அன்னம், அன்னத்திலிருந்து வீரியம், தவம், மந்திரம், கருமம், உலகம், பெயர் ஆகிய பதினாறு கலைகளுடன் கூடிய பொன் போல் ஒளிரும், மங்கள வடிவினர். திருக்கோயிலின் நுழைவாயிலான கோபுரம் முதல் விமானத்தை தாங்கி நிற்கும் கருவறை எனும் கர்ப்பக்கிரகம் வரையிலான அனைத்துப் பாகங்களும் அம் மஹா புருஷனின் 16 அங்க அமைப்பாகும். அனைத்து ஜீவாத்மாக்களும் தம்மை பூஜித்து வணங்கும் பொருட்டு திருக்கோயிலின் கர்ப்பக் கிரகத்தில் அர்ச்சனா மூர்த்தியாக இறைவனே பேரொளியாய் எழுந்திருளி அருள்பாலிக்கிறார் என்பர்.

திருக்கோயிலின் கர்ப்பக்கிரகத்தில் மூலவரின் பிரதமையே இறைவன் எனக் கருதுவதை தவிர்த்து, அப்பிரதமையிலும் இறைவன் இருக்கிறார் என்ற தத்துவத்தை உணர வேண்டும். அதாவது உருவம் தற்காலிகம், உருமற்றது நிரந்தரம் (தத்தாத்திரேயர் சூ.21) என்பதை உணர்வதால் மறுபிறவி உண்டாகாது என்ற உண்மைத் தத்துவத்தை போதிப்பதால் திருக்கோயில் ஓர் தத்துவக்கூடமாகும்.

குறிப்பு: திருக்கோயில் எனும் தலைப்புடைய இப்பகுதியில், ஒரு சிலவற்றை மட்டும் தொகுத்தளித்துள்ளோம். வரும் காலத்தில் நம் இளையத் தலைமுறையினர் எஞ்சியுள்ள அனைத்தையும் தொகுத்தளிக்கும் மாபெரும் பணியை நிறைவு செய்ய முன் வருவர் என்ற பரிபூர்ணமான நம்பிக்கை எங்களுக்குண்டு.

## திருக்கோயில் ஒரு பல்கலைக் கழகம்

இறைவன் தங்களுக்குள்ளேயே இருப்பதை மானுடர் அனைவரும் அணுப்பொழுதும் இடைவிடாது உணரவேண்டும் என்பதற்காகவும், அதற்கு பொதுமக்களிடமும், நல்லாட்சிப் புரிந்த மன்னர்களிடமும் தெய்வ நம்பிக்கை பரிபூரணமாக என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காகவும் தோற்றுவிக்கப்பட்டவையே திருக்கோயில்களாகும்.

**கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்** - எனப் பழங்காலத்தில் வழியுறுத்தப்பட்டதன் உட்பொருளும் இஃதே. **மக்கள் துங்கம் உயர்ந்து வளர்கென கோயில்கள் சூழ்ந்ததும் இந்நாடே** - என்றார் முண்டாசுக் கவிஞர். அதன் காரணமாகவே அரசர்கள் புதிய கோயில்களைக் கட்டினர் போலும்.

பழைய கோயில்களைப் பராமரித்துப் பாதுகாத்தனர். கோயில்களுக்குத் தேவையானவை அனைத்தும் நிறைவாகக் கிடைக்கும் பொருட்டு மானியங்களை வாரி வழங்கினர். விளை நிலங்களை இறையிலியாகவும், கிராமங்களைத் தேவதானமாகவும் கொடுத்தனர். அதனால் அக் கோயில்களில் அனைத்துக் காலப் பூசைகளும், திருவிழா போன்ற நிகழ்ச்சிகளும் முறைப்படியும் தவறாமலும் நிகழ்ந்தன.

அரசர்கள் அரச தர்மத்தைத் தவறாது கடைப்பிடித்து மக்களின் நலனுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து நல்லாட்சி புரிந்தனர்.

அதனால் மனித நேசத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வேற்றுமையில் ஒற்றுமை காணும் எண்ணம் மக்கள் மனத்தில் ஆல மரத்தின் ஆணி வேர் போல வேரூன்றி இருந்தது.

திருக்கோயில்களில் பொது நலத்திற்கான கூட்டுப் பிரார்த்தனைகள் தவறாமல் நிகழ்ந்தன. மக்கள் நல்லொழுக்கத்தை கடைப்பிடித்து சுபிட்சம் எனும் காலம், மழை முதலியவற்றால் உன்டாகுஞ் செழிப்புடன் வாழ்ந்தனர்.

தாய், தந்தை, ஆசான் விருந்தினர் ஆகியோர் தெய்வமாக வணங்கப்பட்டனர்.

நம் முன்னோர்கள் பகர்ந்தளித்த தர்மம், நீதி, ஆன்மிகம் பற்றிய அவர்களது அனுபூதிகளும், ஆன்றோர்களின் அருளுரைகளும், குடி மக்களுக்குச் சிறந்ததொரு வழிகாட்டியாகத் திகழ்ந்தன. அதனால் மக்கள் மனக் கட்டுப்பாட்டுடன் எப்போதும் இறைவனைப்பற்றிய சிந்தனையுடன் அகமகிழ்ந்து வாழ்ந்தனர்.

இவ் உலகத்தைப் பற்றியும் நிலையற்ற மனித வாழ்க்கையைப் பற்றியும் மக்கள் அனைவரும் நன்கு அறிந்திருந்தமையால் அவர்கள் அனைவரும் ஒற்றுமையாகவே வாழ்ந்தனர்.

திருக்கோயில்கள் - ஆலயப்பரிகாரம், வேள்விப் பரிகாரம், தானப் பரிகாரம், தியானப் பரிகாரம் ஆகிய பரிகாரத்திற்கானது மட்டுமின்றி, இயல் - இசை - நாடக ஆகியவற்றின் மாபெரும் கலைக் கூடங்களாகவும், அனைத்து வகையான கல்விகளைப் போதிக்கு மொரு கல்விக்கூடமாகவும், நூல்கள் வெளியிடப்படும் அரங்கமாகவும், சத்சங்கம் நிகழுமொரு பொது இடமாகவும், தியானப் பயிற்சிக்கூடமாகவும், நம் பழம்பெரும் பாரம்பரியங்களின் உரைக்கல்லாகவே திகழ்ந்தன.

எவ்வாறு ஒரு நதியின் நீரோட்டத்துடன் உருண்டோடும் கற்களில் பாசி படிவதில்லையோ அவ்வாறே எப்போதும் இறைவனைப் பற்றிய சிந்தனையில் வாழ்ந்த மக்களது மனத்தில் மாசு படியாதபடி வாழ்ந்தனர். அதற்காகத் திருக்கோபுரம் முதல் விமானம் வரையில் உள்ள அழகு மிகு சிற்பங்களிலும், குறியீடுகளிலும் உயர் அறிவு பற்றிய குறிப்புக்கள் அனைத்தும் பதிவு செய்தனர். மேலும் நம் முன்னோர்கள் தமது ஓய்வு நேரங்களின் பொழுது போக்கு விளையாட்டுக்களில் கூட இறைவனைப் பற்றிய அறிவை சூட்சுமமாகக் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்கண்டவற்றின் வாயிலாக வேறு எந்தவொரு நாட்டிலும் இல்லாத பிரமாண்டமாகத் தமிழகத்தின் கோயில்கள் ஒவ்வொன்றும், புறக் கல்வி, அகக்கல்வி ஆகிய இருகல்விகளைப் போதிக்கும் பல்கலைக் கழகங்களாகவே திகழ்ந்தன என்பதே உண்மையாகும்.

### உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்

வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்

தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்

கள்ளப் புலன்ஐந்தும் காளா மணிவிளக்கே[1] - திருமந்திரம்(1823)

பொருள்: நமது உள்ளமே பெரியதொருக் கோயில். எலும்பு, கொழுப்பு, தசை, நரம்பு, உதிரம் (இரத்தம்) ஆகியவற்றால் ஆன உடம்பே ஆலயம். அன்பர்களின் குறிப்பறிந்து கொடுத்தருளும் இறைவனது வாயே கோபுரவாசல். நன்கு அறிந்த ஞானிகட்கு ஆன்மாவே சிவலிங்கம். மனத்தைத் திருட்டு வழியில் இழுத்துச் செல்லும் ஐந்து புலன்களே அழகிய மணிவிளக்கு. அதாவது ஆலய அமைப்பும், ஆண்டவன் இருப்பும் நம் உடலிலேயே உள்ளது என்பதாகும்.[2]

தேகமே தேவாலயம் எனவும், அதிலுறையும் ஜீவாத்மாவே ஒப்புயர்வற்ற சிவன்- என மைத்ரேயீ உபநிடதமும்[3], உடல் படைத்த எல்லோருக்கும் தேகம் சிவாலயம்- என யோகசிகோபநிடதமும்[4] போதிக்கின்றன. ஆன்மா லயத்திருக்கும் ஆலயத்தை கோயில் எனக் கூறப்படுவதுண்டு.

**கோயில்** என்ற சொல்லை கோ + இல் எனப் பிரித்து, **கோ** என்பதற்கு இறைவன் எனவும், **இல்** என்பதற்கு இறைவன் குடிகொண்டுள்ள இடம் அல்லது **இல்லம்** எனப் பொருள் அறியலாம். அதாவது கோயில் இறைவனின் பெரிய இல்லம் என்பதன் அடிப் படையிலேயே அது **திருக்கோயில்** என்றழைக்கப்படுவதாகும்.[5] அதிலுள்ள **திரு** என்பது தெய்வத்தன்மையைக் குறிக்கும் ஒருச் சிறப்புச் சொல்லாகும்.

## ஸ்ரீ கோயில்

தற்காலத்தில் திருக்கோயில் என்பது முற்காலத்தில் **சீகோயில்**[6] எனக் குறிப்பிடப்பட்டதாகப் பழங்காலத்து சிலாசாஸனங்கள் கூறுகின்றன.

சீ அல்லது திரு என்றத் தமிழ் சொல்லே சிரீ [7] எனவும், பின்னர் அதில் கிரந்த எழுத்தான ஶ - வும் தமிழ் எழுத்தான ரீ - யும் இணைந்து ஸ்ரீ எனும் எழுத்தாக மாறியுள்ளது.

திரு = சீ [8] அல்லது சிரீ = ஸ்ரீ என்பதற்குத் திருமகள்; இலக்குமி; செல்வம்; நல்வினை; அழகு; கண்டாரால் விரும்பப்படும் தன்மை; எனப்பொருள்.

ஸ்ரீ தேவியானவள் மூன்று விதமான (சரஸ்வதி, இலக்குமி, ருத்ராயினி) ரூபங்களை எடுத்துக்கொண்டு பகவத் ஸங்கல்பத்தில் அனுகுணமாக உலகை ரக்ஷிக்கும் வடிவினளாகிறாள். ஸ்ரீ என்றும் லக்ஷ்மி என்றும் காணப்படுகிறாள் - என ஸீதோபநிடதம்[9] கூறுகிறது.

அறிவதற்கு அரியதான பிரம்மவித்தையே ஸ்ரீ வித்தையாகும். வித்யா என்பதிலுள்ள **வித்** என்பதே வித்தை. வித்தை என்பது பதினான்கு நூல்களின் வாயிலாகப் போதிக்கப்படும் பேரறிவாகும்.[10]

ஸ்ரீ வித்யாவின் வெளிச்சம் (பேரறிவின் ஒளி) ஒருவருக்குக் கிடைக்கப் பெற்றதுமே அவர் தனது உடலைப்பற்றிக் கொண்டுள்ள கருத்தாக்கம் புதுப்பிக்கப்படுகிறது. அப்போது அவர் தனது ஆன்ம மேன்மைக்கான கருவியாகத் தன்னுடலைப் போற்றத் தொடங்குகின்றார்.

சிவசக்தி ஒன்றிய வடிவமாக, அன்னை வீற்றிருக்கும் கருவறையாகவே தனது தேகத்தை நினைக்க ஆரம்பிக்கிறார். (நம்) நாடெங்கும் உள்ள இந்து (சமய) ஆலயங்களை எல்லாம் பாருங்கள்.

(அவை) அனைத்துமே ஒரு மனிதனின் (புருஷனின்) உடலை ஒத்த வடிவில் அமைக்கப்பட்டுள்ள உண்மை புலப்படும்[11] என்கிறார் முனைவர் தவத்திரு ஸ்ரீ ஜெகநாத சுவாமிகள்.

திருக்கோயிலில் அர்ச்சனா மூர்த்தியாக எழுந்தருளி அருள் பாவிக்கும் மூலவர் (சிவம்) ஆண்சக்தியும், (சக்தி) பெண்சக்தியும் ஒருங்கிணைந்த ரூபமேயாகும்.

பிரம்மதேவன் - அன்னை சரஸ்வதியைத் தனது நாவிலும், மஹா விஷ்ணு- அன்னை இலக்குமியை தனது மனதிலும், உருத்ரன் அன்னை உருத்ராணியைத் தனது உடலின் சரிபாதியிலும் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பது ஆன்றோர் வாக்கு. அதன் உட்பொருள் சிவம் இல்லையேல் சக்தி இல்லை, சக்தி இல்லையேல் சிவம் இல்லை என்ற பேருண்மையை உணர்த்துவதாகும்.

## திருச்சுற்றுக்கள்

திருக்கோயில்களுக்கு மூன்று, ஐந்து, ஏழு என ஒற்றைப் படை எண் வரிசையில் திருச்சுற்றுக்கள் இருக்கும். அந்த திருச்சுற்றுக்களைப் பிரகாரங்கள் எனவும் கூறப்படுவதுண்டு.

அதில், மூன்று திருச்சுற்றுக்கள் பொதுவானது. ஐந்து திருச்சுற்றுகளுக்குத் திருவானைக்கா திருத்தலமும், ஏழு திருச்சுற்றுகளுக்குத் திருவரங்கனது திருத்தலமும் உதாரணங்களாகக் குறிப்பிடலாம். அத் திருச்சுற்றுக்களின் உட்பொருளாவது;

மூன்று - ஸ்தூல (விழிப்புநிலை), சூட்சும (கனவு நிலை), காரண (ஆழ்ந்த உறக்கநிலை) ஆகிய மூவுடல்களாகும்.

ஐந்து - அன்ன, பிராண, மனோ, விஞ்ஞான, ஆனந்த எனும் ஐந்துமய கோசங்களாகும்.

ஏழு - அன்ன, பிராண, இச்சை, உருவமான, அருவமான, விஞ்ஞான, ஆனந்த எனும் ஏழு மய உடம்புகளாகும்.[12]

## வெள்ளை, காவி நிறங்களுடைய செங்குத்துப் பட்டைகள்

திருக்கோயில்களின் திருச்சுற்றுக்களில் நெடிந்துயர்ந்த மதில்சுவர்கள் காணப்படும். அவை பாதுகாப்புச் சுவர்கள் மட்டுமின்றி, அவற்றின் உள்ளும் புறமும் அடிக்கப்பட்ட வெள்ளை, காவி ஆகிய இரு நிறங்களை கொண்ட செங்குத்துப் பட்டைகள், உயர்ந்ததொரு தத்துவத்தை அறிவிக்கும் அறிவிப்பு பலகையாகும். அதுவானது; சுக்கிலமும், சுரோணிதமும் சஹஸ்ராரமண்டத்தின் மர்மத்தில் தெய்வ ரகசியமாக உள்ளன.[13] அதுவானது அண்டமாகிய பிரபஞ்சம் முழுவதிலும் சிவமும் சக்தியும் நிறைந்துள்ளன. அந்த சிவசக்தியே பிண்டமாகிய மானுட உடலை உருவாக்கியது என்பதைக் குறிப்பதாகும்.



சிவம் என்பது சுக்கிலம் (வெண்ணீர்), அதன் நிறம் வெள்ளை. சக்தி என்பது சுரோணிதம் (செந்நீர்), அதன் நிறம் சிவப்பு அல்லது காவி. மேற்கண்டவையே வெள்ளை, காவி ஆகிய இரு நிறங்களுடைய செங்குத்துப் பட்டைகளின் உட்பொருளாகும். ( நன்றி: திருச்சிமாவட்டம், குண்டூர், அருள்மிகு ஐயனார் கோயில்)

## ஆலய வழிபாட்டின் உட்பொருள்

உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்

உடம்பினு லுத்தமனைக் காண் - ஔவைக் குறள்.

பொருள்: நாம் இந்த உடலைப் பெற்றதன் பயன், இந்த உடலில் குடிகொண்டுள்ள உத்தமனான இறைவனைக் காண்பதே யாகும்.

பிண்டத் தினுள்ளே பேரா திறைவனை

கண்டுதா னர்ச்சிக்கு மாறு - ஔவைக் குறள்.

பொருள்: பிண்டமாகிய உடலினுள்ளே உறையும் பெருமைமிக்க பேராதி இறைவனைக் கண்டு, தானே அந்த இறைவன் என்கின்ற தன்னுணர்வாகவே மாறவேண்டும் என்பதாகும்.

அதாவது; அண்டமாகிய பிரபஞ்சத்தில் சிவசக்தியாக அங்கு, இங்கு என இல்லாமல் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனே பிண்டமாகிய மானுட உடலில் குடிகொண்டுள்ளார் என அந்த இறைவனைக் கண்டு, நாமே இறைவன் என்பதை அறிந்து தன்னுணர்வு பெறுவதற்காவே நாம் மானுடராக பிறந்துள்ளோம் என்பதை உணர்த்துவதாகும்.

அத் தன்னுணர்வால்; அறியாமை எனும் இருள் நீங்கும். மாயை எனும் திரை விலகும். தெய்வச் சிந்தனையுடன் அருள் உணர்வு திரண்டு மெய்யுணர்வாக மேலெழும். அதனால் பிறவிப்பலனை அடைய முடியும் என்பதே மேற்கண்ட இரண்டு ஔவைக் குறள்களின் உட்பொருளாகும்.

**அடியார்களின் உள்ளத்தில் குடிகொண்டுள்ள ஆண்டவன்**

படமாடக் கோயில் பகவற்கு ஒன்றுஈயில்

நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்குஆகா

நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்றுஈயில்

படமாடக் கோயிற் பகவற்கு அதுஆமே [14] - திருமந்திரம் (1857)

பொருள்: அழகுமிகு சித்திரங்களும் வண்ணமிகு ஓவியங்களும் அமைந்த மாடங்களைக் கொண்ட திருக்கோயிலில் அடியார்கள் வணங்கும் பொருட்டு எழுந்தருளியுள்ள இறைவனுக்கு நாம் ஓர் பொருளைக் காணிக்கையாக அர்ப்பணித்தால், அது நடமாடும் உடம்பாகிய கட்டடத்தில் குடி கொண்டுள்ள இறைவனுக்கு ஒப்பான அடியார்களைச் சென்றடையாது. ஆனால் நடமாடும் அடியார்க்கு நாம் கொடுக்கும் அனைத்தும், படம் ஆடும் மாடக் கோயிலில் உள்ள இறைவனிடம் சென்றடையும்.

**இறைவனது உள்ளத்தில் அடியார்கள் இல்லை, அதற்கு மாறாக அவரது அடியார்களின் உள்ளத்தில் தான் இறைவன் இருக்கிறான்.**

இறைவனுக்காகச் செய்பவை அடியார்களைச் சென்றடைவதில்லை, அதற்கு மாறாக அடியார்க்குச் செய்பவை அனைத்துமே இறைவனிடம் சென்றடையும்[15] என அடியார்களின் பக்தி உணர்வைத் திருமூலர் இந்தத் திருமந்திரத்தின் வாயிலாகத் தெளிவுப்படுத்தியுள்ளார்.

சேக்கிழார் பெருமான் அருளிய பெரிய புராணம் எனும் திருத்தொண்டர் புராணத்திலும் அடியார்களின் சிறப்புக் கீழ்கண்டதொரு நிகழ்ச்சியின் வாயிலாக விவரிக்கப்பட்டுள்ளது.

சுந்தரமூர்த்தி நாயனார் என்பவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். அந்நாயனார் பரவையாரோடு வாழ்ந்த காலத்தில், சிவனடியார்களின் பக்தியைக் கண்டு, **இவர்களுக்கு நான் அடியானாகும் நாள் எந்நாள்**, என நினைத்து அடியார்க்கு அடியானாக வேண்டும் என்ற தமது விருப்பத்திற்கு வரமளிக்க வேண்டுமென இறைவனை வேண்டினார்.

அந்நாயனாரது வேண்டுதலை நிறைவேற்றும் பொருட்டு திருக்காட்சியளித்த இறைவன்; **நீ நம்முடைய அடியார்களை வணங்கி அவர்கண்மேலே பதிகம் பாடு**, என்றருளினார். அதற்கு நாயனார்; **சுவாமி அடியார்களின் வரலாறு இன்னது என்றும், அவர்களின் தன்மை இப்படிபட்டது என்றும் அறியாத தமியேன் எப்படிப் பாடுவேன்?** அடியார்களைக் குறித்துப் பாட தாங்களே தமக்கு அருள் செய்ய வேண்டுமென பிரார்த்தனை செய்தார்.



அதற்கிசைந்த இறைவன்; அடியார்களின் வழித் தொண்டு, அவருக்கு தெரியும்படி செய்து, உலகத்தார் உய்யும் வண்ணம் வேதஆகமங்களை அருளச் செய்த தமது அருமைத் திருவாக்கினாலே; **தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்** என்று அடியெடுத்து கொடுத்து மறைந்தருளினார்.

பின்னர் அடியார்கள் யாவர்க்கும் வெவ்வேறாக அடியேன் அடியேன் என்று திருத் தொண்டத்தொகை என்னும் திருப்பதிகம் பாடியதாகச் சுந்தரமூர்த்தி நாயனார் புராணம் அடியாரின் பெருமையைக் கூறுகிறது.[16]

திருக்கோபுர நுழை வாயிலின் நிலைகால் படிகள், திருமாளிகை, திருமாளிகை கல்தூண்கள் ஆகியவற்றில் இருகரம் கூப்பி நின்ற, கிடந்த ஆகிய இருநிலைகளில் வணங்கும் அடியார்களின் கோட்டுருவங்களையும், நின்ற நிலையில் வணங்கும் புடைப்புச் சிற்பங்களையும் மேற்கண்டதற்கானச் சான்றுகளாகச் சுட்டிக் காட்டலாம். மேலும் அச் சிற்பங்கள் யாவும் மேற்கண்ட அடியார்களின் பக்திக்கு நாம் அனைவரும் தலை வணங்குவதே சிறந்தது என்ற தர்மத்தை அதாவது நல்லொழுக்கத்தை உணர்த்துவதாகும்.

## திருக்கோபுரமும் விமானமும்

திருக்கோயில்களின் திருச்சுற்றுக்களில் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய புவியின் திசைகளில் பெரிய நுழை வாயில்களில் 3,5,7,11 நிலைகளுடைய இராஜகோபுரங்கள் அமைந்திருக்கும். அந்நிலைகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடும் வகையில் அவற்றில் மாடங்களும், அதன் உச்சியில் கலசங்களும் அமைக்கப்பட்டிருக்கும்.[17]

இராஜகோபுரங்களின் கலசங்கள் முதல், கர்ப்பகிரகத்தின் மேலுள்ள விமானத்தின் கலசம் வரை, உயிரோட்ட நிலை உள்ளதால் இந்துக்கள் இறைவனை மூல விக்ரகமாகப் பார்ப்பதில்லை. இறைவனே அதில் ஆவாஹனம் (அழைக்கை) செய்திருப்பதாக எண்ணுகின்றனர்.

திருக்கோயிலில் மூல விக்ரகத்திற்கு அனுதினமும் புனித நீரால் அபிசேகமும் தூப, தீப, காந்த ஆராதனையும் செய்வதைப் போலவே, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் எனும் குடமுழுக்கு செய்யப்படுவதால் இராஜகோபுரமும், விமானமும் தூய்மையடைந்து தெய்வீக ஆற்றல் பெறுகின்றன என்பதனால் அவையும் வணங்குதலுக்குரியதாகத் திகழ்கின்றன.

தூய விமானமும் தூலம் அதாகுமால்

ஆய சதாசிவ ஆகும்நற் சூக்குமம்

ஆய பலிபீடம் பத்திர லிங்கமாம்

ஆய அரன்நிலை ஆய்ந்துகொள் வார்கட்கே.[18] திருமந்திரம். (1718)

பொருள்: திருக்கோயிலின் தூய்மையான விமானம் தூல லிங்கம். அதன் மூலஸ்தானத்தில் இருக்கும் தூய லிங்கமாகிய சதாசிவம் சூட்சும லிங்கமாகும். பரந்த பலிபீடம் இடப லிங்கமாகும்[19] எனப் பொருள் கூறப்படுகிறது

கோபுர தரிசனம் - பாப விமோசனம், கோபுர தரிசனம்- கோடிப் புண்ணியம்[20] என்பது ஆன்றோர் திருவாக்கு. அதற்கோர் சான்றாக,

விண்தடவு கோபுரத்தைப் பணிந்துகரம் மேற்குவித்துக்

கொண்டு புகுந்து அண்ணலார் கோயிலினை வலம் செய்து

மண்டியபே ரன்பினொடு மன்னுதிரு நள்ளாறர்

புண்டரிகச் சேவடிக்கீழ்ப் பொருந்தநில மிசைப்பணிந்தார்.[21] (3303)

பொருள்: வானத்தை தொடும் அளவுக்கு நெடிதுயர்ந்து நிற்கும் கோபுரத்தைப் பணிந்து, கைகளைத் தலைமேல் குவித்து வைத்துக் கொண்டு உள்ளே சென்று பெருமை விளங்கும் இறைவனின் கோயிலை வலம் வந்த சுந்தரர், பேரன்பு விளங்க அருள் விளங்கும் திருநள்ளாற்றுப் பெருமானின் தாமரை போன்ற மலர்ப் பாதங்களைத் தமது உறுப்புகள் எட்டும் தரையில் பொருந்தப் பணிந்து எழுந்தார் எனக் கோபுரங்களின் சிறப்பைப் பெரிய புராணம் கூறுகிறது.

## திருக்கோபுர சிற்பங்கள்

இறைவனிடமிருந்து வெளிப்பட்டவை அனைத்தும், மீண்டும் இறைவனிடமே திரும்பச் சென்று ஒடுங்குகின்றன. இந்நிகழ்வு பன்னெடும் காலமாக தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதை உணர்த்துவதே திருக்கோபுர சிற்பங்களாகும்.

வானத்தை முட்டும் அளவுக்கு நெடிதுயர்ந்து நிற்கும் கோபுரங்களின் அழகுடைய பொம்மைகளை மேகக்கூட்டங்கள் முத்தமிட்டுச் செல்வதைக் காணலாம்.

திருக்கோயில்களின் கோபுரங்களில் ஆகம விதிப்படி சிற்பக்கலைஞர்களால் வடிவமைக்கப்படும் இப்பொம்மைகள் வெறும் அழகுக்காக அமைக்கப்பட்டவை அல்ல. அவை ஒவ்வொன்றும், இறைவனாகிய பராபரத்திலிருந்து வெளிப்பட்ட அனைத்தையும் குறிக்கும்.

அதாவது தேவாதி தேவர்கள் முதல் பூமியில் தோன்றிய ஜீவராசிகள் வரை அனைத்தையும் வரிசைப்படுத்தி அறிவிக்கப்பட்டிருக்கும்.

**ஜீவராசிகளின் தோற்றம்**

பராபரத்திலிருந்து பரமும், பரத்திலிருந்து சிவமும், சிவத்திலிருந்து சக்தியும் வெளிப்பட்டன. சக்தியிலிருந்து நாதமும், நாதத்திலிருந்து விந்துவும், விந்துவிலிருந்து சதாசிவமும், சதா சிவத்திலிருந்து மகேஷ்வரனும் வெளிப்பட்டார்.

அந்த மகேஷ்வரத்திலிருந்து உருத்திரனும், உருத்திரனிடமிருந்து விஷ்ணுவும் விஷ்ணுவிடமிருந்து பிரம்மாவும் வெளிப்பட்டனர். அங்ஙனம் வெளிப்பட்ட பிரம்மாவிடமிருந்தே மற்றவை அனைத்தும் உண்டாயின.

அவை முறையே ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், மண் எனும் பூமி ஆகிய பஞ்சபூதங்களாகும். மண்ணிலிருந்து அன்னம் உண்டானது. அந்த அன்னம் என்பதில் மனிதன், மிருகம், பறவை, தாவரவகைகள், சங்கமாதிகள், மலைகள், நதிகள் போன்றவை அனைத்தும் அடக்கமாகும்[22] எனச் சித்தர்கள் கண்ட மானுட நூல் கூறுகிறது.

மேற்கண்ட பிரபஞ்ச அமைப்பிலுள்ளவை அனைத்தும் திருக்கோயிலில் இடம் பெற வேண்டும் என்ற கோட்பாட்டை நமக்கு உணர்த்துவதே இராஜகோபுரத்தில் உள்ள ஒவ்வொரு பொம்மைகளின் உட்பொருளாகும்.

கோபுரங்களில் காணப்படும் சிறப்புடைய பொம்மைகளில் சில, பால் உணர்வைத் தூண்டுவது போலத் தோன்றும். அத்தகையச் சிற்பங்கள் பெரும்பாலும் கோபுரத்தின் இருபுறங்களிலோ அல்லது பின்புறங்களிலோ இடம் பெற்றிருக்கும். மிகவும் அரிதாக முன்புறங்களில் கூட அவைக் காணப்படுவதும் உண்டு.

அவற்றில் சில புடைப்புச் சிற்பங்களாகத் திருக்கோபுரத்தின் முன்புறச் சுவர்களிலும், மண்டபக் கல்தூண்களிலும் காணலாம். திருக்கோயில்களின் தூய்மைக்கு இவை உகந்ததா? என்ற எண்ணம் தோன்றலாம். ஆனால் அப் பொம்மைகள் ஆகம விதிகளின் படியே அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.[23]

கோபுரங்களில் இயற்கையான வாழ்க்கை நடைமுறையில் உள்ளவை அனைத்தையும் மானுடர் அனைவருக்கும் விளங்கும் படியாகத் திருக்கோபுரங்களில் பொம்மைகளாக இடம் பெறச் செய்ய வேண்டும் என்பதே அந்த ஆகம விதியாகும்.

எனவே, இவையனைத்தும் வாழ்க்கை நடைமுறையில் ஓரங்கமாக உள்ளவை என்பதால், இப் பொம்மைகள் பால் உணர்வைத் தூண்டும் காமச் சிற்பங்கள் அல்ல என்பதை உணர்ந்து நம்மைத் தெளிவுபடுத்திக் கொள்வது நன்று.

மானுடர் ஒவ்வொருவருக்கும் **அறிவு, ஞானம்** என இரண்டு சக்திகளுண்டு. **அறிவு** என்பது; மெய்ப்பொருளில் சிறிதளவு ஊடாடிப் பெறுவது, **ஞானம்** என்பது; அதனைத் தெய்வீகப் பார்வையில் தேடிக் கொள்வது. அறிவு, ஞானம் ஆகிய இரண்டும் நமக்குள்ளேயே ஒன்றோடு ஒன்றாக இணைந்துள்ளன.

அறிவின் பரப்பு பிரமாண்டமானது. மேலும் அது அகண்ட எல்லைகளைக் கொண்டது. அதை வழங்குவது ஞானம் என்ற நதியே ஒளி மிகுந்ததாக உள்ளது. எங்கே பகுத்தறிவு முடிவடைகிறதோ அங்கே ஞானம் தொடங்குகிறது என்பது ஆன்றோர் வாக்கு. பகுத்தறிவு என்பது பிரித்தறிவது அல்லது பகுத்து அறிவது என்பதாகும்.

அதாவது அறிவு என்பது விபரங்களை வரையறுத்து, வேறுபடுத்திப் பார்ப்பது. ஞானம் என்பது விபரங்களை ஒன்றுபடுத்திப் பார்ப்பது, வேற்றுமைகளை ஒரே இசைவில் இணைப்பது, மாயத்திரையை அகற்றிப் பார்ப்பது. அதாவது ஞானக் கண் கொண்டு காண முடியாதவைகளை எல்லாம் காண்பது. பகுத்தறிவோடு பார்க்கின்ற போது அவற்றில் பல நமக்கு அருவறுக்க தக்கதாகத் தெரியும்.

ஆனால் அதையே ஞானக்கண் கொண்டு பார்க்கும் போது அருவறுக்கதக்கதாய் எதுவுமே இல்லை என்பது புரியும். அதற்கு உதாரணமாக,

> **நான் அஞ்ஞானத்தில் இருந்தபோது தியானக்கூடம் எனக்குச் சிறைச்சாலையாய் தெரிந்தது. நான் ஞான முற்ற பின்னர் சிறைச்சாலையும் தியானக் கூடமானது - என ஸ்ரீ அரவிந்தர் தமது அனுபவத்தில் அறிந்தருளியதை சுட்டிக்காட்டலாம்.**

எனவே கோபுரத்தில் காணப்படும் பொம்மைகளை ஞானக்கண் கொண்டு பார்த்தால் மட்டுமே அதன் உண்மையான உட்பொருள் விளங்கும்.

அதே போல ஒவ்வொரு ஜீவராசிகள் எவ்வாறு தோன்றின என்பதை ஞானக்கண் கொண்டு ஆழ்ந்து நோக்கினால் அருவறுக்க தக்கதாய் தோன்றியவை எல்லாம், வியக்கத்தக்கதாய் மாறும்.

பிரபஞ்சத்தில், குறிப்பாகப் பூமியில் இனவிருத்தி மிகவும் அவசியம் என்பதால் அதனைக் குறிக்கும் கோபுரப் பொம்மைகளும், புடைப்புச் சிற்பங்களும் காண்பதற்கு அருவறுக்கத் தக்கவை அல்ல என்பது தெளிவு.

## நூல் குறிப்புக்கள்


1. திருமூலர், திருமந்திரம் 1823
2. பாலூர் கண்ணப்பர், தினம் ஒரு திருமந்திரம் (உரையுடன்), ப.281
3. அண்ணா, 108 உபநிடத் சாரம் (2-ம் பாகம்), மைத்ரேயீ உபநிடதம், சூ. 2.1
4. அண்ணா, 108 உபநிடத் சாரம் (3-ம் பாகம்),யோகசிகோபநிடதம், சூ. 1.6
5. ரிஷபானந்தர், சித்தர்கள் கண்ட மானுட ரகசியம், ப.95
6. S.I.I. Vol. XIX. 364
7. தமிழ் நாட்டு வரலாறு-பல்லவர்-பாண்டியர் காலம், முதல் பகுதி, ப. 174.
8. சுபாஷ் சந்திர போஸ், பாலகிருஷ்ணன், இராம்குமார், உருவதிகாரம், ப.66
9. அண்ணா, 108 உபநிடத் சாரம் 2-ம் பாகம், ஸீதோபநிடதம் சூ.4
10. மெய்யப்ன் தமிழ் அகாராதி
11. முனைவர்.ஜெகநாத சுவாமிகள், ஸ்ரீ வித்யா தத்துவம்- தியானம்- வாழ்க்கை நெறி,பாகம்-2, ப.9
12. ரிஷபானந்தர், சித்தர்கள் கண்ட மானுட ரகசியம், ப.100
13. முனைவர்.ஜெகநாத சுவாமிகள், ஸ்ரீ வித்யா தத்துவம்- தியானம்- வாழ்க்கை நெறி, பாகம்-2, ப.31
14. திருமூலர், திருமந்திரம் 1857
15. தெய்வத்திரு. திருமுருக கிருபானந்தவாரியார், ஆலயம் ஏன், ப. 24.
16. ஆறுமுக நாவலர், திருத்தொண்டர் புராணம், பக்.21-22
17. ரிஷபானந்தர், சித்தர்கள் கண்ட மானுட ரகசியம், ப.101
18. திருமூலர், திருமந்திரம் 1718
19. பாலூர் கண்ணப்பர், தினம் ஒரு திருமந்திரம் (உரையுடன்),ப.279.
20. ரிஷபானந்தர், சித்தர்கள் கண்ட மானுட ரகசியம், ப.103
21. பெரியபுராணம் எனும் திருத்தொண்டர் புராணம், பா.3303
22. ரிஷபானந்தர், சித்தர்கள் கண்ட மானுட ரகசியம், பக்.41-47
23. ibid, ப.105


## திருக்கோபுர நிலைக்கால்படிக் குறியீடுகள்

திருக்கோயில்களின் நுழைவாயிலான திருக்கோபுரங்களின் நிலைக்கால் படிகள், நிலைக்கால்கள், உத்திரங்கள், கோபுர மண்டத்தின் மேல்கூரை ஆகியவற்றில் குறியீடுகள், சிற்பங்கள் ஆகியவற்றைக் காணலாம். அவை, அறிபவன்- அறிவு -அறிவிப்பவன் எனும் உலக ஞானம் எல்லாம் உள்ளடங்கிய **திரிபுடி ஞானத்தை**[1] போதிக்கும், இந்து சமயத் தத்துவப் பதிவேடுகளாகும். அப்பதிவேடுகளில் குறியீடுகள் குறிப்பிடத்தக்கவை. பொதுவாக அக்குறியீடுகளை மூவகைப்படுத்தலாம்.

ஓர் சதுர வடிவத்தில் ஜோதியின் திசைகளான வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு ஆகிய நான்கு திசைகளை நோக்கும் தாமரை இதழ்களின் வடிவங்கள் கொண்ட குறியீடு முதல் வகையாகும். ஒன்றுக்கு மேல் ஒன்று என மூன்று செவ்வகங்களில் நான்கு அல்லது எட்டு திசை நோக்கும் கோடுகள் அல்லது புள்ளிகள் கொண்ட கோட்டுருவங்கள் இரண்டாம் வகையாகும். பத்துக் கோடுகளால் உருவானதும் பதினாறு கட்டங்களைக் கொண்டதுமான ஆடுபுலி விளையாட்டிற்கான வரைபடமாகக் கருதப்படும் கோட்டுருவங்கள் மூன்றாம் வகையாகும். இம்மூவகையைத் தவிர வேறு சில குறியீடுகளும் திருக்கோபுர நிலைகால்படிகளில் பொறிக்கப்பட்டிருக்கும்.


**முதலாம் குறியீடு** - கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய புவியின் திசைகளும், வடகிழக்கு,தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு ஆகிய ஜோதியின் திசைகளும் என எட்டு திசைகளிலும், மேலேயும் கீழேயும் என்ற எல்லைகள் அற்ற பரவெளியில் அங்கு இங்கு என இல்லாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் ஜோதி ஸ்ரூபியான ஆனந்தனே ! அர்ச்சனா மூர்த்தியாக இத் திருத்தலத்தில் எழுந்தருளி யுள்ளார் என்பதைக் குறிக்கும். இக்குறியீட்டின் மூல வடிவத்தின் ஒரு பகுதி சிந்து வெளிக் குறியீடுகளில் (எம்.1261ஏ) அடைப்புச் சின்னங்களாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.







எம் - 1261 எ

**இரண்டாம் குறியீடு**- இதுவும் ஒரு க்ஷேத்திரக்கணித வடிவமாகும். இதில் ஒரு பிந்து எனும் புள்ளி, நான்கு அல்லது எட்டு திசைகளை நோக்கும் கோடுகள், மூன்று செவ்வகங்கள் அல்லது வட்டங்கள் ஒன்றுக்கு மேல் ஒன்றாக இருக்கும். இவற்றில் புவியின் திசைகள் எனப்படும் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய நான்கு திசைகளை நோக்கும் கோடுகள் மட்டும் காணப்படுவது பொதுவானதாகும். அந்நான்கு (புவியின்) திசைகளுடன் ஜோதியின் திசைகளாகிய வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு ஆகிய நான்கும் இணைந்து எட்டுத் திசைகளைக் குறிக்கும் கோடுகளுடனோ அல்லது புள்ளிகளுடனோ காணப்படும் குறியீடுகள் அரிதானவை. அதற்கு காரணம் இத்தகைய குறியீடுகள், அனைத்து திருத்தலங்களிலும் காணப்படுவதில்லை.

அதன் உட்பொருள்; நடுவே **பிந்து** (பரம்), **பரத்வம்** (பரலோகம், **வியூகம்** (தேவலோகம்), **விபவம்** (பூலோகம்), **அந்தர்யாமித்வம்** (பூதகணங்கள் வாழும்லோகம்) என இறைவனே தம்மை வெளிப் படுத்துகிறார். மேலும் இறைவனே, இத்திருத்தலத்தில் தம் பக்தர்கள் தம்மை விரும்பி அவரைப் பூசிக்கும் பொருட்டு **அர்ச்சை** எனும் வழிபாட்டிற்குரிய அர்ச்சனா மூர்த்தியாக அதாவது, ஐம்பொன்னாகவும், கல்லாகவும், முப்பரிமாண தோற்றமுடைய உருவமாகத் தம்மைத் தாமாகவே வெளிப்படுத்துகிறார், எனும் **பாஞ்சராத்ர தத்துவத்தை**[2] உணர்த்தும் குறியீடாகும்.

இதில் குறிப்பாக பரத்வத்தின் மய்யத்தில் உள்ளதொரு புள்ளியைத் தவிர புவியின் திசைகளைக் குறிக்கும் கோடுகளோ (கூட்டல் குறி) அல்லது எட்டுக் கோடுகளோ காணப்படுவதில்லை. அதன் உட்பொருள் இறைவன் அளவற்றவர். எல்லையற்றவர். அவரே படைப்புக்கு முன்னர், **காரண** பிரம்மாகவும், படைப்புக்கு பின்னர், **காரிய** பிரம்மமாகவும்- ஜீவாத்மாகிய புருஷனிலும், மூலப்பொருளாகிய பிரக்ருதியிலும் **அந்தர்யாமியாக உள்ளார்** என்பதாகும்.


இறைவன் தம்மை புருஷன், பிரக்ருதி (மூலம்) எனப்பெயர், வடிவமாக வெளிப்படுகிறார். அங்ஙனம் இறைவன் வெளிப்படுவதற்கு காலம், இடம், காரணகாரியம் என ஏதுமில்லை. இறைவன் எங்கும் எதிலும் பரவி அனைத்திலும் நீக்கமற நிறைந்துள்ளார், அனைத்தும் அவர் உள்ளே ஒடுங்கியுள்ளன என்பதே அக் குறியீட்டின் பொருளாகும்.

வட்டம் காலத்தையும், சதுரம் இடத்தையும், செவ்வகம் இயக்கச் சக்தியையும், கூட்டல் குறியீட்டிலுள்ள செங்குத்துக்கோடு நிலையான காரணத்தையும், படுக்கைக் கோடு, சலனமான காரியத்தையும் குறிப்பிடுவதாகும். இரண்டு கோடுகள் வெட்டும் மய்யமே பிந்து எனும் புள்ளி. பரலோகத்தில் ஒரு புள்ளியை மட்டும் பதிவு செய்யப்பட்டுள்ளது மேற்கண்ட தத்துவத்தை சூட்சுமமாக உணர்த்துவதாகும்.

மேற்கண்ட குறியீட்டிலுள்ள வடக்கு - தெற்கு ஆகிய இரண்டு திசைகளைக் குறிக்கும் செங்குத்துக்கோடு, நிலையான, காரண, பிரகாசம் எனும் சிவத்தத்துவத்தைக் குறிக்கும். கிழக்கு - மேற்கு ஆகிய இரண்டு திசைகளைக் குறிக்கும் படுக்கைவசக்கோடு சலனத்திற்கு உட்பட்டு மாறுபடும், காரியம், விமர்சனம் எனும் சக்தித் தத்துவத்தைக் குறிக்கும்.

செங்குத்துக்கோடு பூமியின் விட்டமும், படுக்கைகோடு பூமியின் சுற்றளவும் ஆகும். ஆதலால் இவ்வடிவம் நீள் சதுரமாக (செவ்வகமாக) இருக்கும். அது இயக்க சக்தியைக் குறிக்கும்.

சிவசக்தியாக, அதாவது பார்வதி - பரமேஸ்வரர் ஆகிய இருவருமே ஒருவராக இப் பூலோகத்தில் பிரகாச விமர்சன பேரொளிளாக பிரகாசிப்பதால், மற்றவை இங்கே பிரகாசிப்பதில்லை என்பதே நடுவே உள்ள புள்ளியின் உட்பொருளாகும். மேலும் இறைவனின் ஐவகையான வெளிப்பாடுகளைக் குறிக்கும் பாஞ்சராத்ர தத்துவத்தை தன்னுணர்ந்து நோக்கவேண்டும் என நமக்கு உய்யநெறிக்கு வழி காட்டுவதற்காவே இத் திருக்குறியீடு கோபுரத்தின் நிலைக்கால்படிகளில் பொறிக்கப்பட்டுள்ளது.



சென்ற 20.09.2013 ஆம் தேதியில் திருச்சிராப்பள்ளி, அறிவோம் அறிவோம் மையத்தினர் விழுப்புரம் மாவட்டம், பெருமுக்கலில் உள்ள அருள்மிகு முக்தியாலீஸ்வர் திருக்கோயிலில் திருக்குறியீட்டின் சிறப்பை மேலும் வெளிப்படுத்திக் காட்டும் அரிதான குறியீடு ஒன்றைக் கண்டறிந்துள்ளனர். அந்த அரிய வகையானக் குறியீட்டின் மய்யத்தில் ஓர் புள்ளியும், அதனைச்சுற்றி ஒன்றுக்கு மேல் ஒன்றாக மூன்று செவ்வக வடிவங்களும், புவியின் திசைகளை குறிக்கும் நான்கு கோடுகளும் காணப்படுகின்றன. அதன் வெளிப்பகுதி பதினாறு ஜோதிச்சுடர்களால் சூழப்பட்டுள்ளன.

அதாவது, மூன்றாவது செவ்வக வடிவத்தின் வெளிப்புறத்தில் புவியின் திசைகள், ஜோதியின் திசைகள் ஆகிய எட்டு திசைகளுடன் அவற்றின் உபதிசைகளாகி எட்டு திசைகளிலும் இணைந்து பதினாறு திசைகளில் பதினாறு ஜோதியின் வடிவங்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதே அதனது சிறப்பு அம்சமாகும்.




**மூன்றாம் குறியீடு** - அடுத்த நிமிடத்திற்கு நிலையில்லாத அரசு எனும் மாயா விருஷத்தில் அருமையான இரண்டு பறவைகள் வாழ்ந்து கொண்டிருக்கும். போகங்களை விரும்புகிற அம்மரத்தில் வசிக்கும் ஒரு பறவை அம் மரத்திலுள்ளப் பழங்களை நன்றாக இருக்கின்றன, நன்றாக இருக்கின்றன எனத் தின்னும். அம்மரத்தில் வாழும் மற்றொரு அழகியப் பறவை, அம் மரத்திலுள்ள பழங்கள் எதையுமே நுகராது. அந்த மகத்துவமான பறவையை ஓர் குறிப்புப் பொருளாக வைத்து பெருமை தங்கிய (முண்டக) உபநிடதமானது சிவனையும், ஜீவனையும் (நிஜமும் நிழலும்) பகுத்துக்கூறும் மார்க்கத்தை இக் குறியீடு உணர்த்துவதாகும். மேலும் இதுவே ஒன்றைத் தவிர மற்றொன்று இல்லை என்ற ஸ்ரீ வித்யா எனும் பிரம்ம ஞானத்தைப் போதிக்கும் வடிவமும் ஆகும். (நன்றி: திருச்சி மாட்டம், திருப்பஞ்சீலி சிவாலயம்.)

மேல் நோக்கிய குவிந்த கரங்களுடன், கோயிலின் கருவறையில் எழுந்தருளியுள்ள பரிவார தேவாதி தேவதைகளையும், மூலவரையும், வணங்கி வலம் வந்து, ஆலயப்பரிகாரத்தை முடித்துக் கொண்டு, திரும்பி வரும் போது திருக்கோபுரங்களின் வாயில் நிலைக் கால்களின் படிகளின் முன்னே நின்று உற்று நோக்க வேண்டிய முக்கியப் பகுதி அதன் உத்திரத்தின் கீழ் தாரியும், மண்டபத்தின் மேற்கூரையுமாகும்.

பெரும்பாலும் அப்பகுதியில் அரிய வகையான யந்திரங்கள் பொறிக்கப்பட்டிருக்கும். அதற்கு உதாரணமாக தி.லெ.சு.ச.போஸ் அவர்களால் கண்டறிப்பட்டதும், திருச்சி மாவட்டம், இலால்குடியை அடுத்துள்ள பூவாளூர் எனும் பழமையான சிற்றூரில் உள்ள அருள்மிகு மூலநாதர் எனும் சிவன் கோயில், அருள்மிகு ஐய்யனார் கோயில் ஆகிய இரண்டு கோயில்களின் திருக்கோபுரங்களின் நிலைகால்களின் உத்திரத்தின் கீழ்தாரியில் பொறிக்கப்பட்டுள்ளதுமான இரண்டு வேறுபட்ட யந்திரங்களைக் குறிப்பிடலாம்.

## எண்வடிவ ஸ்ரீ யந்திரம்

திருச்சி மாவட்டம், இலால்குடி, பூவாளூர்அருள்மிகு மூலநாதர் திருக்கோயிலில் எண் வடிவ ஸ்ரீ யந்திரம் இருபுறமும் அடைப்புக் கருக்கணிகளை கொண்டுள்ளது. அது ஒரு செவ்வகப் பகுதியின் நடுவில் 81 கட்டங்கள் கொண்டதொரு சதுர வடிவமாக உள்ளது. அதில் 1 முதல் 9 வரையிலான எண்களைக் குறிக்கும் தமிழ் மொழி எழுத்துகளான எண்கள் இடம் பெற்றுள்ளன. ( நன்றி: இந்து சமய அறநிலையத் துறை)



அந்த எண்களை எப்படிக் கூட்டினாலும் அற்றின் கூட்டுத் தொகை 45 ஆகும். அதாவது எண் 5-ஐ மய்யத்தில் கொண்ட 9 சதுரங்களில் உள்ள எண்களின் கூட்டுத் தொகை 45 ஆகும்.

செவ்வகம் - இயக்கச் சக்தியையும், சதுரம் - இடத்தையும், எண் 81-**ஐக** எனும் பிரபஞ்சத்தையும் குறிப்பிடுவதாகும். 1 முதல் 9 வரையிலான எண்கள் நவகிரகங்களையும், 45 என்ற கூட்டுத் தொகை எண் 45 தேவாதி தேவர்களைக் குறிக்கும்.[4] வாஸ்து புருஷ (பூலோகநாத) மண்டலத்தில் 81 கட்டங்களுடைய **பரமசாயின்** [5] எனப்படும் வரைப் படத்தின் மய்யத்திலுள்ள 9 கட்டங்கள் **க** எனும் பிரம்மத்திற்கு ஒதுக்கபடவேண்டும் என்ற விதிமுறையை மயநூல் சுட்டிக் காட்டுகிறது.

அந்த 9 கட்டங்களைக் கொண்ட மய்யப்பகுதி நவகிரகங்களின் நாயகனான ஆதித்தியனால் ஆளப்படும்; **ஹ்ரீம்** எனும் பீஜாட்சர தியான வழி காயத்திரி மந்திரத்தை உணர்த்துவதாகும். அதிலுள்ள எண்களின் கூட்டுத்தொகை எண் 15- **ஸ்ரீம்** எனும் ஸ்ரீ வித்யா பீடத்தைக் குறிக்கும்[6]. மய்யத்திலுள்ள எண் 5-காக்கும் கடவுளான மஹா விஷ்ணுவின் திருவருளை வாரி வழங்கும் வல்லமை படைத்ததும், ஞானி[7] எனப் போற்றிப் புகழப்படுவதுமான புதன் கிரகத்தை குறிப்பிடுவதாகும்.

## மனநோய் போக்கும் யந்திரம்

திருச்சி மாவட்டம், இலால்குடி, பூவாளூர்அருள்மிகு ஐய்யனார் கோயிலின் திருக்கோபுர கீழ் தாரியில் சதுர வடிவ புடைப்புக் கோட்டுருவங்கள் காணப்படுகின்றன. ஓர் சதுரமும், அதனுள்ளே மூன்று வட்டங்களும், ஒரு மேல் நோக்கும் முக்கோணமும் மற்றொரு கீழ் நோக்கிய முக்கோணமும் பின்னிப் பிணைந்துள்ள தொரு அறுகோண வடிவமும், அதன் மய்யத்தில் பிந்து எனும் ஒரு புள்ளியும் காணப்படுகின்றன.



சதுரவடிவம் பிரபஞ்சத்தின் வெளி (Space)யையும், மூன்று வட்டங்கள் முக்காலத்தையும், பிரம்மகிரந்தி, விஷ்ணு கிரந்தி, உருத்திரகிரந்தி எனும் மூன்று கிரந்திகளையும், **த்ரயம்** எனும் அக்னி, சூரிய, சந்திர **8** ஆகிய மூன்றையும் குறிப்பிடுவதாகும். ஒன்றோடு ஒன்றாகப் பின்னிப்பிணைந்துள்ள இரண்டு முக்கோணங்கள் ஆஞ்யா சக்கரமாகிய மனத்தைக் குறிக்கும். இரண்டு முக்கோணங்களின் நடுவே மறைந்துள்ள அறுகோணம் குருபீடம் எனும் அறிவையும், அதிலுள்ள பரவெளி காயத்ரி பீடம் எனும் ஆன்மஞானத்தையும், பரவெளியின் மய்யத்தில் உள்ளதொரு புள்ளி (பிந்து) பிரம்மத்தைக் குறிப்பிடுவதாகும்.

இந்த அரியவகை யந்திரம் ஐம்புலனடக்கத்திற்கும், மன ஒருமைப்பாட்டிற்கும், மனநோய் போக்கும் மருந்தான தியான பயிற்சிக்கு நம்முன்னோர்கள் தங்களது அனுபூதியில் கண்டறிந்த எந்திரமாகும்.

## வாஸ்து - வாஸ்து புருஷன் - வாஸ்து சில்ப சாஸ்திரம்

வாஸ்து என்பது பிரகிருதி எனும் மூலப்பகுதியாகும். அந்த மூலப்பகுதியிலிருந்து தேவாதி தேவர்கள், மானுடர், என அனைத்து ஜீவராசிகளின் வாழும் இடங்களைக் குறிப்பிடுவதாகும். அதில், அரண்மனைகள், குடியிருக்கும் வீடுகள், பணி மனைகள் ஆகியவற்றைக் கொண்ட பூமி, திருச்சுற்றுகள், மதில் சுவர்கள் எனும் (பிரகாரா) **பிரகாரம்**, வண்டி வாகனங்கள் நிறுத்திமிடம் எனும் **யாளா**, அமரும் நாற்காலி, உறங்கும் கட்டில், பொருள்களைப் பாதுகாப்பாக வைக்கும் அறைகள் எனும் **சயனா**, ஆகிய அனைத்தும் உள்ளடங்கும்.**9** புருஷன் என்பதற்கு நாதர் அல்லது நாதன் எனவும் வாஸ்து புருஷன் என்பதற்கு மூலநாதர் அல்லது ஆதிநாதர் எனப் பொருள்படும். வாஸ்து சில்ப சாஸ்திரத்தில்; சில்ப என்பதற்கு சிற்பம் எனவும், சாஸ்திரம் அல்லது சாத்திரம் என்பதற்கு கலை எனப் பொருள்படும். எனவே **வாஸ்து சில்ப சாஸ்த்திரம்** என்பதற்கு **மூல சிற்பக் கலை விதிமுறைகள்** எனப் பொருள் கொள்ளலாம்.

வாஸ்து சில்ப சாஸ்திரத்தை, **தேவ சில்ப சாஸ்திரம்**, **மனுஷ சில்ப சாஸ்திரம் என** இருவகையாகவும்**10**. அவை முறையே திருக்கோயில் கட்டுமானம், மானிடர் குடியிருப்பு கட்டுமானம் ஆகிய ஆகம விதிமுறைகளைப் பற்றி விவரிப்பதாகவும் கூறப்படுகிறது.

மேலும், வாஸ்து சில்ப சாஸ்த்திரத்தில், நிலங்களைத் தேர்ந்தெடுத்தல், திசை நிர்ணயம் (சங்கு ஸ்தாபனம்), வாஸ்து பதவிந்யாசம் (மூலப்பகுதி விரிவாக்குதல்), விரிவாக்குவதற்கான தேர்வு செய்யப்பட்ட மானா எனும் அளவீடு, ஆயாதி - சதவர்க்கம், பதாகாதி- சத்சந்தா[11] போன்ற மேலும் சில கோட்பாடுகளும் உள்ளடங்கும்.

## திருக்கோயிலில் ஆன்மாவின் ஆறு நிலைகள்

திருக்கோயிலின் இராஜகோபுரம் முதல் கர்ப்பக்கிரகத்தின் விமானத்திலுள்ள கலசம் வரை முக்கிய ஆறு நிலைகள் உள்ளன. அவற்றை ஆறு லிங்கங்களாகவும், ஆறு ஆத்மாக்களாகவும் சர்வஞானோத்தர ஆகமம்[12] கீழ்க்கண்டவாறு ஒப்பிட்டுக் காட்டுகிறது.


| | | |
|---|---|---|
| கோபுரம் | ஸ்தூல லிங்கம் | பூதாத்மா |
| பலிபீடம் | பத்ர லிங்கம் | அந்தராத்மா |
| | | இடபலிங்கம் |
| கொடிமரம் | துவஜஸ்தம்பம் | தத்வாத்மா |
| குரு | ஆன்ம லிங்கம் | மந்திராத்மா |
| மூலவர் | சதாசிவ லிங்கம் | ஜீவாத்மா |
| | | சூட்சும்ம லிங்கம் |
| பிரம்மரந்திரம் | பரவெளி | பரமாத்மா |

இதில் மூன்றாவது தத்துவத்மாவாகிய துவஜஸ்தம்பம் எனும் கொடி மரத்தை, 33 கணுக்களுடைய மானுடரின் முதுகுத் தண்டுவடத்துடன் ஒப்பிடுவதுண்டு. மேலும் அதனை பிரம்மகிராந்தி, விஷ்ணுகிராந்தி உருத்திர கிராந்தி எனவும் அவை முறையே அக்னி (108), சூரிய (116), சந்திர (136), எனவும் அம்மூன்றும் (360) முன்னூற்று அறுபது[13] கிரணங்களுடையதாகவும் கூறப்படுவதுண்டு.

### மஹா புருஷன்

இராஜகோபுரம் - மஹா புருஷன் நின்ற (ஸ்தூல) நிலைக்கும், திருக்கோயிலின் அங்கங்கள் - அவரின் கிடந்த (சூட்சம) நிலைக்கும், கர்ப்பக்கிரகம்- அப் புருஷனின் நின்ற அல்லது அமர்ந்த (காரண) நிலைக்கும் ஒப்பாகும்.

ருக்வேதத்தின் ஓர் அங்கமான புருஷ சுக்தம்[14](சூ.1.15) மஹா புருஷனின் கொப்பூழிலிருந்து வானவெளி தோன்றியது, அவரது தலையிலிருந்து ஸ்வர்க்கலோகம் நன்றாக அமைந்தது. **பாதங்களிலிருந்து பூமி**, காதிலிருந்து திசைகள் அவ்வாறே எல்லா உலகங்களையும் மனம் நிச்சயித்த கால அளவில்



(ஸங்கல்ப மாத்திரத்தால்) தோற்றுவித்தாகக் கூறுகிறது. பூமியானது அவரது பாதங்களிலிருந்து தோன்றியது (படம்,ப.57) எனப் புருஷசுக்தம் கூறுவதை ஆகமசாஸ்திரமும்சுட்டிக்காட்டுகிறது.

### திருக்கோபுரம் மஹா புருஷன் நின்ற நிலை


பஞ்ச பூதங்களில் பூமியைக் குறிக்கும் கோபுரங்களை யாககுண்டமாகவும், அதிலிருந்து வலஞ்சுழித்து மேலெழும், தீ நாக்குகளின் (அக்னி) வடிவமாக கூறப்படுகிறது.[15] திருக்கோபுரத்தின் கட்டுமான அமைப்பு யாககுண்டத்திலிருந்து எழும் ஜோதி ஸ்ரூபமான இறைவனின் உருவமே எனக் கூறப்படுவதுண்டு.[16]( படம் - சிற்ப கலாநிதி ஸ்தபதி வே.இராமன், நன்றி )

அதில் பீடம், உபபீடம், அதிஷ்டானம், கால், வேதிகை, பிரஸ்தரம் ஆகிய முதல் தள அங்க அமைப்பை மகாதுவாரம் என்பர். முதல் தளத்திற்கு மேலே கூடு, சாலை, துவாரா ஆகியவற்றைக் கொண்ட பல தளங்களுடன் சிகரம், கலசம் ஆகியவற்றை முழுமையாகக் கொண்ட அமைப்பைக் கோபுரம் என்பர். மேலும் மஹா புருஷரின் பாதம் முதல் சிகை வரையிலான அங்கங்களைக் கோபுரத்தின் பாகங்களோடு ஒப்பிடுவது சிற்ப சாஸ்திர மரபாகும்.[17]

| | | | |
|---|---|---|---|
| பாதம் | உபபீடம் | அடித்தளம் | சரணம் |
| முட்டி | அதிஷ்டானம் | முழங்கால் முட்டி | ஜானு |
| கைகள் | பதவர்க்கம் | சுவர்கள் | கரம் |
| வயிறு, நாபி | கும்பப்பஞ்சரம் | பானை போன்ற அமைப்பு | உதரம் |
| தோல் | ப்ரஸ்தாரம் | கூரை | பாஹு |
| கழுத்து | கண்டம் | கிரீவம் | கலா |
| தலைமுகம் | சிகரம் | விதானம் | சிரஸ் |
| முடி | உஷனீஷம் | முடிந்ததலைமுடி | சிகா |
| மூக்கு, கண் | மஹாநாசிகா | ஜன்னல் | நாசி, நேத்ரா |

### திருக்கோயில் மஹாா புருஷன் கிடந்த நிலை

மிகவும் பழங்காலத்துக் கோயில்களின் கர்ப்பகிரகம் மேற்குத் திசை நோக்கியும், பிற்காலத்து கோயில்களின் கர்ப்பகிரகம் கிழக்குத் திசை நோக்கியும் அமைக்கப் பெற்றிருக்கும். அதற்கேற்ப மஹாாபுருஷன் முறையே கிழக்கில் தலைவைத்து மேற்கே கால்நீட்டியோ, மேற்கே தலைவைத்து கிழக்கில் கால்நீட்டியோ படுத்திருக்கும் நிலையில் அவரது உடலின் அங்கங்களுடன் ஒப்பிட்டுத் திருக்கோயிலின் பாகங்களும் அமைக்கப்பட்டிருக்கும்.



( படம்-வாஸ்து-சில்ப-கோச, பாகம்-1 கல்பத்தரு ரிசஸ்ச் அக்கடமி, பெங்களூர், நன்றி.)

இராஜகோபுரம் (பாதம்) முதல், மகா பலிபீடம், கொடிமரம், வாகனபீடம், மகாமண்டபம், அர்த்தமண்டபம், மறுபடியும் ஒரு வாகன பீடம், கர்ப்பகிரஹம், மூலவர், விமானத்தில் உள்ள துவாரம், கலசம் (குடுமி) வரையிலான அனைத்தும் மஹாா புருஷனின் உடலின் அங்க அமைப்பாகும். கலசத்திற்கு மேலே உள்ளது பரவெளியாகும். கர்ப்பக்கிரகத்தில் மகாபுருஷர் நின்ற நிலை, அமர்ந்த நிலை, சயன நிலை என மூன்று நிலைகளில் அமைக்கப்பட்டிருக்கும். பெரும்பாலும் மஹாாவிஷ்ணு, நின்ற நிலையிலோ அல்லது சயன நிலையிலோ எழுந்தருள்வதாக அமையப் பெற்றிருக்கும்.

### மஹாா புருஷனின் அங்கங்களும் திருக்கோயிலின் அமைப்பும்[18]

| | |
|---|---|
| பாதம் | - கோபுரம் |
| முழங்கால் | - ஆஸ்தானமண்டபம் |
| தொடை | - நிருத்த மண்டபம் |
| குதம் | - கொடிமர ஸ்தானம் (குதம் முதல் கழுத்துவரை உடல்பகுதி கொடிமரத்தைக் குறிக்கும்) |
| முதுகுத் தண்டு | - கொடிமரம் |
| குய்யம் | - பலிபீடம் |
| தொப்புள் | - அதிகார நந்தி |
| மார்பு | - மகாமண்டபம் |

| | |
|---|---|
| இருதோள்கள் | - கர்ப்பக்கிரக வாயிலின் இருபுறங்கள் |
| கழுத்து | - அர்த்தமண்டபம் |
| தலை (சிரசு) | - கர்ப்பக்கிரகம் |
| மண்ணீரல் | - அம்பிகை |
| மார்பு | - நடராஜர் |
| கழுத்து | - நந்தி |
| வாய் | - ஸநபந மண்டப வாயில் |
| மூக்கு | - ஸநபந மண்டபம் |
| | (ஸனாபதி என்பதற்கு அரசன் அல்லது கோன் எனப்பொருள்) |
| புருவமத்தி | - சிவலிங்கம் |
| தலையின் உச்சி | - விமானம் |

மேற்கண்ட அமைப்புடைய கோயிலின் கர்ப்பக்கிரகத்தில் எழுந்தருளியுள்ள இறைவனது திருவுருவுக்கு முன் ஓர் நந்தா விளக்கு ஒளி வீசிக் கொண்டிருக்கும். நந்தா விளக்கு என்பதற்கு திருக்கோயிலின் கருவறையிலுள்ள அணையா விளக்கு எனப்பொருள்.

அவ்விளக்கின் ஒளிக்கதிர்கள் இறைவனின் திருவுருவை நம்மால் காண்பதற்கு மட்டுமின்றி பசுவாகிய ஜீவாத்மாவுக்கும், கீழ்க்கண்ட பாடல்கள் கூறும் பலவான ஓர் பதியாகிய பரமாத்மாவுக்கும் இடையே உள்ள இணைபிரியா ( பசு : பதி : பாசம் ) திரிபதார்த்தம் எனும் பந்தத்தை அறியச் செய்வதாகும்.

உலகத்திற் பட்ட வுயிர்க்கெல்லாம் மீசன்

நிலவுபோ னிற்கும் நிறைந்து - ஔவைக் குறள்

ஆதியாகிய இறைவன் தாமே பல்வேறு ஜீவன்களானார். அந்த ஜீவன்களில் நிலவின் ஒளியாகவே இறைவன் நிறைந்துள்ளார் என பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் காடுகளிலும் மலைகளிலும் வாழ்ந்த நம்முன்னோர்கள் ஆராய்ந்தறிந்து அறிவித்துள்ளனர்.

திருக்கோயில்களின் நுழைவாயிலான இராஜகோபுரத்தின் உச்சியிலுள்ள 3,5,7,11 ஆகிய கலசங்கள், இறைவனின் பல்வேறு நிலைகளையும், கர்ப்பகிரஹத்தின் ஏகதள விமானத்தின் உச்சியிலுள்ள ஏககலசம், மூல முதல்வரின் ஏகத் தன்மையைக் குறிக்கும்.

எண்ணிறந்த யோனி பலவாய்ப் பரந்தெங்கும்

எண்ணிறைந்து நிற்கும் சிவம் - ஔவைக் குறள்- சதாசிவம் (5)

அதன் பொருளாவது உலகத்தில் தோன்றிய அனைத்து உயிர்களிலும் ஒரே ஒருவரான இறைவனே வியாபித்து பூரண சந்திரனைப் போல பிரகாசித்து கொண்டிருப்பவராவார்.

*ஆதியானது ஒன்றுமே அநேக ரூபமாய்*

*சாதி பேதமாய் எழுந்து சர்வஜீவன் ஆனது - சிவ வாக்கியர் (108)*

அதாவது ஆதியான சிவமே பல்வேறு ரூபமாகவும் வெளிப்பட்டு சர்வ ஜீவியாக உள்ளார், என்ற பேருண்மையை உணர்த்தும் அமைப்பே திருக்கோபுரமாகும்.

## நூல் குறிப்புக்கள்


1 நஜன் எனும் நடராஜன், வாக்குவாதினி, ப. 5

2. சுவாமி, தத்தாத்திரேயர் தத்துவம், ப.10

3. சுபாஷ் சந்திர போஸ், பாலகிருஷ்னன், இராம்குமார், உருவதிகாரம், ப.89

4. *Bruno Dagens (translation) Mayamata. p.21*

5 *ibid, p.22*

6. முனைவர், தவத்திரு ஜெகநாத சுவாமிகள், பாகம்-4, வேத ஜோதிடம், ப. 53

7. *ibid,* நவகிரஹங்களின் முக்கிய அம்சங்கள், ப.10

8. அண்ணா, ஸௌந்தர்யலஹிரீ பாஷ்யம், ப. 27.

9. *Dr. Derebal Muralidhara Rao, Vastu Shipa Shastra and Indian Tradition, p. 29*

10. *ibid, p. 29*

11. *ibid, p. 30*

12. ரிஷபானந்தர், சித்தர்கள் கண்ட மானுட ரகசியம், ப.99

13. அண்ணா, ஸௌந்தர்யலஹிரீ பாஷ்யம், சூ. 14

14. அண்ணா, புருஷசுக்தம் சூ.1.15,

15. முனைவர் குடவாயில் பாலசுப்ரமணியன், தமிழகக் கோயில்கலை மரபு, ப.30

16. *ibid.*

17. ரிஷபானந்தர், சித்தர்கள் கண்ட மானுட ரகசியம், ப.101

18. *ibid, p.98*

## பிரபஞ்ச அதிசயம்

பிரஜாபதியாகிய பிரம்மன் படைக்கும் போது தன்னைத்தானே பிரம்ம-வாக் சக்தி பெண்ணாகவும், பிரம்ம-வீரஜ் சக்தி ஆணாகவும் பிளவுபடுத்திக்கொண்டு உலகத்தை விரிவடையச் செய்தார். **உலகம்,உயிர், இறைவன், என்ற முக்கோணத்தில் தான் படைப்பு போன்ற எல்லா நிகழ்ச்சிகளும், பொருள்களும் அமைகின்றன[1] -** எனப் பதஞ்சலி யோகம், கூறுகிறது.

முக்கோணம்; இறைவனுக்கும், உயிருக்கும் உள்ள நிலையான உறவை சுட்டிக்காட்டும் ஒரு பொதுவான வடிவமாகும். அவ்வடிவமே, பசு (உயிர்), பதி (இறைவன்), பாசம் (உலகம்) எனும் **திரிபதார்த்தம்** என்பதாகும். **பாசம்** என்பதற்கு கயிறு, பந்தம், அன்பு எனப் பொருளாகும்.


மேல் நோக்கிய ஓர் சமபக்க முக்கோணத்தின்- உச்சி அன்பிற்காகவே அன்பு செய்தல், கீழே உள்ள இரண்டு கோணங்களில் முதல் கோணம்- தாய்ப் பாசத்தின் பயமற்றத் தன்மையும், அதன் எதிர்ப்புறமுள்ள மற்றொரு கோணம் - எதையும் எதிர்பாராத அன்பின் தூயத் தன்மையும் குறிக்கும். ஒரு மேல் நோக்கிய முக்கோணத்தை, **அன்பிற்காக அன்பு செய்வதற்கு அன்பே வழி [2]** என்பதைக் குறிக்கும் வடிவமாக சுவாமி விவேகானந்தர், பக்தியோகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### பராயுகா, உபயாத்த பராயுகா

சுல்ப சூத்திர நூல்கள் ஒரு சமபக்க முக்கோணத்தை **பராயுகா[3]** எனப் பகர்கின்றன. அதன் மூன்று முனைகளை, உச்சி, அடிப் பகுதியின் இருமுனைகள் எனவும், உச்சியை பரா எனவும், அடிப்பாகத்திலுள்ள இரண்டு முனைகள் (யு +கா) அல்லது யுகாதி எனச் சுட்டிக் காட்டுன்றன. பரா என்பது மேலான ஒன்றைக் குறிக்கும். யுகா என்பது யுகாதி அதற்கு யுகத்தின் தொடக்கத்தைக் குறிக்கும். பராயுகாதி என்பதற்கு பரா என்பது தொடக்கத்தில் சிவமும், சக்தியாகவும் வெளிப்பட்டதைக் குறிக்கும். இரண்டு முக்கோணங்கள் ஒன்றோடு ஒன்றாக ஒட்டி இருப்பதாக நோக்கினால், ஒன்று மற்றொன்றின் பிரதிபிம்பமாகக் காட்சிதரும். அதுவே சாய்ந்த (டைமன்) சதுர வடிவம். அதனை **உபயாத்த பராயுகா[4]** என்பர். உபயாத்தம் அல்லது உபயார்த்தம் என்பதற்கு இருபொருள் எனப் பொருள்படும்.

இரண்டு முக்கோணங்கள் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்து கொண்டிருந்தால் அது ஆறு முனைகள் கொண்ட நட்சத்திரத்தின் வடிவம். அவ்வடிவம் பிரம்மஞானம் எனும் ஸ்ரீ வித்யா தத்துவத்தைக் குறிக்கும்.

## ஸ்ரீ வித்யா குறியீடு



மேலே கூறப்பட்டதற்குச் சான்றாக திருச்சிராப்பள்ளி - குழுமணி செல்லும் சாலையில் (ஏகிரி அம்மன் கோயிலின் எல்லைப் பகுதியில்) ஒரு சிறிய நீரோடையின் கரையில், சதுர வடிவமான பலகைக்கல் ஒன்று தி.லெ.சு.ச.போஸ் அவர்களால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. அதில் நான்கு புறமும் கோடிடப்பட்ட ஒரு சதுரத்தின் வடிவமும், அதனையடுத்து ஒரு கீழ் நோக்கிய முக்கோணமும், அந்த முக்கோணத்தைச் சுற்றிலும் அதனது பக்கங்களுக்கும் மேலாக மூன்று புள்ளிகளும் உள்ளன. அம்முக்கோணத்தின் மையத்தில் ஆழமானதொரு (குழி) புள்ளி உள்ளது.

கீழ்நோக்கிய முக்கோணத்தைச் சுற்றியுள்ள மூன்று புள்ளிகள் மூன்று கோடுகளால் இணைக்கப்பட்டால் அது ஒரு மேல் நோக்கிய முக்கோணத்தின் முழு வடிவமாக வெளிப்படுகிறது. அதாவது ஒரு மேல் நோக்கிய முக் கோணத்தின் வடிவம் மறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

அதே பலகைக் கல்லைத் தலைகீழாக (180 பாகை) திருப்பிப் பார்த்தால் கீழ்நோக்கிய முக்கோணமானது ஒரு மேல் நோக்கிய முக்கோணமாக மாறுகிறது. அங்ஙனம் திரும்புவது இயக்க சக்தியைக் குறிப்பிடுவதாகும்.

இக்குறியீட்டிலுள்ள சதுரம் பிரபஞ்சத்தின் பரவெளியைக் குறிக்கும். அதனது மையம் ஆகாயத்தையும், வடமேற்கு, தென்கிழக்கு, வடகிழக்கு, தென்மேற்கு ஆகிய நான்கு ஜோதியின் திசைகளின் மூலைகள் முறையே வாயு, அக்னி, நீர், பூமி ஆகிய நான்கும், மையம்-ஆகாயம் என பஞ்சாத்மகம் எனும் ஐந்து அக்னிகளைக் குறிக்கும்.

மனித உடலில், ஆன்மாவின் இருப்பிடம் இதயம். அதுவே ஆகாயம். தலைக்கு மேலே தேவலோகம், காலடியில் பூலோகம் என ஜோதியின் திசைகள் அதனது நான்கு முனைகளில் உள்ளன[5] - என சந்தோக்கிய உபநிடதம் கூறுகிறது.

நடுவே உள்ள ஆகாயத்தைக் குறிக்கும் ஆழமான சிறிய குழி பிந்துவின் வடிவம், அதுவே பரம் (அருவம்), மூன்று புள்ளிகளால் மறைத்துக் காட்டப்பட்டுள்ள மேல்நோக்கிய முக்கோணம் புருஷர் எனும் ஆண் சக்தி (அருவருவம்). கீழ்நோக்கிய முக்கோணம் பிரக்ருதி (மூலப் பொருள்) எனும் பெண்சக்தி (உருவம்).

மேற்கண்ட புருஷத் தத்துவத்தை; ஏவம் த்ரிகோணரூபம் ஸ்யாத் தம் தேவா யே ஸமாயயு ! இவ்விதம் முக்கோண வடிவினராகக் கற்ப விருட்சத்தடியில் வீற்றிருந்த உலகநாயகரை அணுகி தேவர்கள் துதித்தனர் என ஸ்ரீ ராமபூர்வதோபின்யுபநிடதம்[5] கூறுகிறது.

இக் கற்பலகையில் காணப்படும் குறியீட்டின் வாயிலாக பிரம்மம் தம்மை புருஷர் (சிவம்), பிரக்ருதி (சக்தி) ஆகிய இரு சக்திகளாக வெளிப்படுத்தும் தத்துவத்தைக் குறிப்பிடுவதாகக் கருதலாம்.

## உடுக்கை வடிவ மனித உடல்

ஆண் சக்தியான மேல்நோக்கிய முக்கோணத்தின் உச்சியும், பெண் சக்தியான கீழ் நோக்கிய முக்கோணத்தின் உச்சியும், ஒன்றோடு ஒன்று தொடும் போது அது உடுக்கைபோன்றதொரு வடிவமாகும். அவ்வடிவம் மானுடரின் உடலைக்குறிக்கும். உடுக்கை செங்குத்தாக இருப்பின் அது ஸ்தூல (விழிப்புநிலை) உடலையும், சற்றே சாய்ந்திருப்பின் அது சூட்சும (கனவுநிலை) உடலையும், உடுக்கை கிடந்த நிலையில் இருப்பின் அது காரண (ஆழ்ந்த உறக்க நிலை) உடலைக் குறிக்கும்.

ஸ்தூல வடிவத்தை விழுப்புரம் மாவட்டம் பெருமுக்கல் கீறல் வடிவத்திலும், கீழ்வாலை, புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் கோட்டை ஆகிய இடங்களில் வரையப்பட்டுள்ள பாறை ஓவியங்களிலும் காணலாம்.

அத்தகைய சூட்சும வடிவத்தை கீழ்வாலையிலும், காரண வடிவத்தை கர்நாடக மாநிலம், ரெய்ச்சூர் மாவட்டம், இராம்பூரில் உள்ள ஓங்கி மலை பாறை ஓவியங்களில் காணலாம். மேற்கண்ட கருஞ்சிவப்பு நிறமுடைய பாறை ஓவியங்கள் 5500 ஆண்டுகளுக்கும் முற்பட்டதாகும்.

## அறுகோண மகா புருஷர் உடல்

மேல், கீழ் நோக்கிய என இரண்டு முக்கோணங்கள் ஒன்றோடு ஒன்றாக இணைவதால் உருவாகும் ஆறுமுனை நட்சத்திர வடிவத்தின் மய்யத்தில் ஒரு ஆறுகோண வடிவம் வெளிப்படும். அவ்வடிவம் மகா புருஷரின் உடலைக் குறிக்கும். அதற்குச் சான்றாக ஆறுகோண வடிவத்தை உடல் பகுதியை கொண்டதொரு மனித கோட்டுருவம் பொறிக்கப்பட்ட பலகை கல் ஒன்று யூக்குவேடார் நாட்டில் ஜான்மோரீஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.[7]



அக் கோட்டுருவத்தை ஆய்வு செய்த போது ருக் வேதத்தின் ஒரு அங்கமாகத் திகழும் புருஷசுக்தத்தில் கூறப்பட்டுள்ள தத்துவங்கள் புதைந்துள்ளது அறியப்பட்டது. அதுவானது; பதினாறு பகுதிகளுடைய[8] மகா புருஷனின் தலைக்கு மேலே தேவலோகமும் (சந்திர மண்டலமும்), காலடியிலே பூமியும் (பூலோகத்தின் வடிவமும்) உள்ளன என்பதாகும்.

அதில் மானிட உருவத்தின் உடல் பகுதி, காற்றுத் தத்துவத்தைக் குறிக்கும் ஆறு பக்கக் கோணமாகக் காணப்படுவது சான்றுகளுக்கு எல்லாம் தலை சிறந்த சான்றாகத் திகழ்கிறது. அந்த அறுகோண வடிவமே அர்(ரு)த்தநாரீச(சுர)ன் உருவத்தைக் குறிக்கும் குறியீடாகும்.

உலகில் தோன்றிய அனைத்து ஜீவராசிகளிலும், ஏன்? கல்லிலும் கூட ஆண், பெண் என இருத்தத்துவங்கள் உண்டு. அவ்வாறு இரண்டாக இருந்தாலும் இரண்டும் ஒன்றோடு ஒன்றாகப் பின்னிப் பிணைந்துக் கொண்டு ஒரே ஒரு உருவமாகவே இருக்கும். இந்த நியதி மண்ணுலகத்திற்கு மட்டுமல்ல விண்ணுலகத்திற்கும் பொருந்தும் என்றத் தத்துவத்தை உணர்த்துவதாகும்.

**ஏகம் அவே அத்வித்யம்** - ஒன்றைத் தவிர மற்றொன்று இல்லை[9] என்ற பிரம்மஞானத்தை உணர்த்தும் ஸ்ரீ வித்யாவைக் குறிப்பிடும் குறியீட்டில் பிந்து, அதனைச்சுற்றி ஒரு வட்டம், வட்டத்திற்குள்ளே ஆறு முனை நட்சத்திர வடிவம், வட்டத்தைச் சுற்றிலும் எட்டு இதழ்கள் கொண்ட தாமரை மலர் ஆகியவை உள்ளடங்கிய வடிவமாகக் காட்சிதருகிறது. இக்குறியீட்டின் நடுவே ஒரு ஆறுகோணம் அமைந்துள்ளதையும் காணலாம்.

ஸ்ரீ வித்யா தியானத்தில் அமர்ந்து மேற்கூறிய அந்த ஆறு கோணத்தை மையமாகக் கொண்டுள்ள குறியீட்டின் மையத்திலுள்ள பிந்து ஸ்தானத்தை ஆழ்ந்து நோக்குவோமாக. அன்னையின் அருளால்; **இவ்வுலகில் ஒரேஒரு உயிர் வாழ்ந்திருக்கும் வரை நானும் வாழ்வேன் என்பதை உணரும் போது தான் மனிதனால் மரணபயத்தை வெல்ல முடியும்[10]** என்ற அந்தப் பரமரகசியத்தை உற்றதொரு ஆன்மிகக் குருவின் வாயிலாகவும் அறிவோமாக.

***பிரபஞ்ச அதிசயம்***

*பிரபஞ்சங்கள் விரிந்து ஒடுங்குவதும், ஒடுங்கியது விரிவதும் பிரமாண்டத்தில் தொடர்ந்து நடைபெறுவதாகும்.*

*மனித உடலாக மாறுவது ஒரு சிறிய உயிரணு. உண்மையில் அதுவே, முன்னர் ஒடுங்கிய நிலையிலுள்ள மனிதன். அவ்வணுவே விரிவடைந்து முழு மனிதனாகிறது என்கிறார் சுவாமி விவேகானந்தர்.*

*அனுதினமும் பிரபஞ்சத்தில் பல அதிசயமான நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எப்போது நாம் அந்த அதிசயங்கள் நிறைந்த நிகழ்வுகளைப் புரிந்துக் கொள்ளும் நிலையை அடைகிறோமோ அப்போது நாம் உண்மையில் ஆச்சரியத்தில் மூழ்கி விடுகிறோம்.*

*காரணத்திலிருந்து சூட்சுமம், சூட்சுமத்திலிருந்து ஸ்தூலமாக விரிவடைவது போலவே ஒடுங்கிய நிலையில் இருந்த பிரபஞ்ச மனமும் விரிவடைந்து மகிழ்வதாகக் கூறப்படுவதையும் அறியலாம்.*

*பிரபஞ்சத்தைப் பற்றிய இன்றைய விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்கள் நம்மை ஆச்சரியத்தில் மூழ்கடிக்கின்றன. பிரபஞ்சத்தில் நிகழும் அத்தகைய அதிசயங்கள் பல்லாயிரம் ஆண்டுகளாகவே தொடர்ந்து நடைபெறுகின்றன.*

*அவை அனைத்தையும் மிஞ்சும் அதிசயமாகத் தொடர்ந்து நடைபெற்று வருவது ஜீவராசிகளின் பிறப்பாகும். அதில் குறிப்பாக மானிடப்பிறப்பு குறிப்பிடத்தக்கது.*

*இந்து சமய நூல்கள் மானிடராய் பிறக்கும் ஒவ்வொருவரும் அவற்றை அறிந்து, புரிந்து, கடைப்பிடித்து வாழவேண்டிய பல தத்துவங்களையும், உண்மைகளையும் வழியுறுத்திக் கூறத் தவறவில்லை.*

*மானிடப் பிறப்பே எல்லாவற்றையும் மிஞ்சும் அதிசயமான*[11] ***பிரபஞ்ச அதிசயமாகும்.***

*ஒரு ஆறுகோணத்தின் வடிவமே ஜீவராசிகளை உற்பத்திச் செய்யும் உயிர் அணு என்பதை தற்கால விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். (நன்றி: நாசா, அமெரிக்கா.) ஆயினும் ஞானிகள் இதனை முன்னரே கண்டறிந்து ஒரு குறியீட்டின் வாயிலாக அறிவித்துள்ளது சிந்திக்கத் தக்கதாகும். (முற்பகுதியில் கண்ட சுக்கலமும், சுரோணதமும் சஹஸ்ரார மண்டலத்தில் மர்மத்தில் உள்ளதென்பது நினைவு கூறத்தக்கது.)*

## உயிர் அணு

விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அந்த உயிர் அணுவின் மையத்திலிருந்து சற்றுத் தள்ளி ஆறுபட்டைக் கோணத்தின் ஒரு முனையில் சிவப்பு நிறமுடைய கோளம் ஒன்று காணப்படுகிறது. அதனையடுத்து 19 ஆறுபட்டைக் கோணங்கள் ஒன்றோடு ஒன்றாக இணைந்திருக்கும் வடிவமாக அமைந்துள்ளது. அந்த ஆறு பட்டைக் கோணங்களின் ஒவ்வொரு முனையிலும் நீல நிறமுடைய 54 கோளங்களும், அதனைச் சுற்றி மஞ்சள் நிறத்தில் 18 கோளங்களும் உள்ளன. (நன்றி- நாசா ஆராய்ச்சிக் கூடம்)



இன்று போல் விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்கள் இல்லாத பழங்காலத்தில் காட்டிலும், மலைகளிலும், குகைகளிலும் வாழ்ந்த ரிஷிகளாகிய ஞானிகள் உயிர் அணுக்களைப்பற்றிப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கண்டறிந்து அவற்றை வேத, உபநிடதங்களில் குறிப்பிட்டுள்ளது நம்மை மேலும் வியப்பில் ஆழ்த்துகிறது.

உயிரினங்கள் எவ்வாறு உண்டாகின்றன, அதாவது கடவுள் எவ்வாறு நமக்கு ஆதி காரணமாகிறார் என்பதை **இறைவனிலிருந்து வந்தவர்கள் நாம்**[12] எனக் கூறும் முண்டக உபநிடத்திற்கு சுவாமி ஆசுதோஷானந்தர் கீழ்க் கண்டவாறு விளக்கமளிக்கிறார்.

முதலில் இறைவனிலிருந்து வானுலகம் தோன்றியது. இரண்டாவதாக வானுலகில் சஞ்சரிப்பவர்களில் ஒருவரான சந்திரனிலிருந்து மேகங்கள் தோன்றுகின்றன. மூன்றாவதாக மேகங்கள் பெய்கின்ற மழை காரணமாகப் பூமியில் செடிகொடிகள் முளைக்கின்றன. நான்காவதாகப் பூமியில் விடுபட்டஉயிர்கள் மழை வழியாகச் செடிகொடிகளில் புகுந்து, அதை உண்கின்ற ஆண்களிடம் தங்குகின்றன. ஐந்தாவதாக அந்த உயிர்கள் ஆணின் விந்து வழியாகப் பெண்ணிடம் சென்று மீண்டும் உயிரினங்களாகப் பிறக்கின்றன.

மேற்கண்ட பஞ்சாக்கினி வித்தையை எவன் அறிந்தவனோ அவன் பாவிகளுடன் கூடியிருப்பினும் பாவத்தால் பற்றப்படான். அவன் (இயற்கையில்) சுத்தனாகவும், (அக்னிவித்தையால்) மனத் தூய்மை பெற்றவனாகவும் நின்று புண்ணிய உலகங்களை எய்துகிறான். எவன், எவன் இங்ஙனம் அறிந்தானோ அவன், அவன் அந்நிலைக்கு உரியவனாம்[13] - என சந்தோக்கிய உபநிடதம் சுட்டிக்காட்டுகிறது.

**பஞ்சாக்கினி வித்தை**


ஒரு குறிப்பிட்ட காலம் வரை ஜீவன், பிரபஞ்சத்திலுள்ள மேலுலகங்களில் சஞ்சரித்து விட்டுத் திரும்பி வரும் போது ஐந்து அக்னிகளால் ஹோமம் செய்யப்படுகிறான். முதன் முதலில் ஆகாயமாகிய அக்னியில் ஹோமம் செய்யப்படுகிறான். இரண்டவதாக மழையுடன் கலக்கிறான். மூன்றாவதாக மழையால் பூமியில் ஹோமம் செய்யப்பட்டு, செடி, கொடிகளுடன் கலக்கிறான். நான்காவதாகப் புருஷனுடைய ஜடாக்கினியில் ஹோமம் செய்யப்பட்டு நாளடைவில் அவன் வீரியத்துடன் கலக்கிறான். ஐந்தாவதாக ஸ்திரீயின் கருக்குழியிலுள்ள தீயில் ஹோமம் செய்யப்பட்டு உடல் தரிக்கிறான் என்பது மேற்கண்ட சந்தோக்கிய உபநிடதம் கூறும் பஞ்சாக்கினி வித்தைக்கு அண்ணா அருளிய அந்த உபநிடத சாரத்தின் விளக்க உரையாகும்.

மேற்கூறியவை எல்லாம் ஏதோ ஒருவரால் எழுதப்பட்ட காவியமோ கட்டுக் கதையோ அல்ல. அது முற்றிலும் உண்மை என்பதற்கான முக்கியதொரு சான்று பண்டைய காலத்தில் செவ்விந்தியர்கள் வாழ்ந்த நாடான மெக்சிகோ (மெஹிக்கோ) நாட்டில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

ஒன்றின் மேல் ஒன்றாக மூன்று கருமேகக் கூட்டமும், மழையும் என மூன்று குறியீடுகள், அடுத்து மழைத்துளிகள், மழைத் துளிகள் பூமியின் மேல்பரப்பில் தேங்கியுள்ள நீரில் விழும் போது உண்டாகும் ஒன்றின் மேல் ஒன்றாக உருவாகும் வட்டங்களின் வடிவங்கள், மழை நீரால் செழித்து வளரும் தாவரங்கள் ஆகியவற்றைக் காணலாம்.



அத் தாவரங்கள் பூமியில் வளர்வதற்கான விதைகள் மழைத் துளிகளோடு கீழ் நோக்கி வருவது போலுள்ளது. பெரிய வீரியமுள்ள ஆண் அணுவின் வடிவத்தையும், அதற்குள்ளே ஸ்திரீ ஒரு கைக் குழந்தையுடன் அமர்ந்திருப்பது போன்ற உருவத்தையும், **எல் ரே 14** எனும் அந்தப் புடைப்புச் சிற்பத்தில் காணலாம்.



Drawn by James Churchward

Some Interesting Symbols and Vignettes Found on the Naacal Tablets

### நாகல் குறியீடுகள்

ஏறத்தாழ 15,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த **மூ** என்ற மூத்த குடி மக்கள் தற்போதுள்ள பசிப்பிக் மகாசமுத்திரத்தில் இருந்த நிலப்பரப்பில் வாழ்ந்ததாகக் கருதப்படுகிறது. அந்நிலப்பகுதி கடலால் விழுங்கப்பட்டது எனவும் அந் நிலப்பகுதியே தற்போது பசிப்பிக் சமுத்திரத்தில் சிறு சிறு தீவுகளாகக் காணப்படுபவை யாவும் அவற்றின் எச்சங்களே எனச் சரித்திர ஆய்வாளரான ஜேம்ஸ் சர்ச்வார்டு, **மூ** மக்களின் பழங்கால **நாகல்** குறியீடுகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அந்தச் சமுத்திரத்திலிருந்த நிலப்பரப்பில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நம் மூத்த குடிமக்கள் வாழ்ந்துள்ளதாகவும் அவர்கள் விட்டுச் சென்ற எச்சங்களே **மூ** மக்களின் பழங்கால **நாகல்** குறியீடுகள் எனவும் அவர் குறிப்பிடுகிறார். மேலும் அக் குறியீடுகளை அவர் இந்தியாவில் கண்டுபிடித்ததாகவும், இவை உலக உற்பத்தியைச் சுட்டிக்காட்டுபவை எனவும், இவை பர்மா வழியாக இந்தியாவிற்கு வந்திருக்கக்கூடும் என்பது அவரது கருத்தாகும்.

அக்குறியீடுகளைச் சற்று ஆழ்ந்து நோக்கினால் பஞ்சாக்கினி வித்தையில் கூறப்பட்டுள்ளவை அனைத்தும் அக் குறியீடுகளின் வடிவத்தில் உணர்த்தப்பட்டுள்ளது தெரியவருகிறது.15

பிரபஞ்சத்தில் (1 எ); தோன்றிய ஜீவராசிகள் அனைத்தும் ஏழு தலைகள் கொண்ட பாம்பைத் (1 பி) தமது படுக்கையாகக் கொண்டு பிரபஞ்ச கடலில் துயில் கொண்டிருக்கும் நாராயணனின் தோற்றம் என்பதும்; பரிசுத்தமான நீரால் சூழப்பட்ட (2) மேலுலகத்தையும்; ஜீவனையும்(3); அந்த ஜீவன், ஐந்து (பஞ்ச) அக்கினிகளால் ஹோமம் செய்யப்படுவதையும் (4,5, 6எ, 6பி, 6சி, ) சித்திரித்துக் காட்டுகின்றன.

முதன் முதலாகத் தோன்றியதாகக் கருதப்படும் தாமரை மலர் (9); ஒவ்வொரு ஜீவனுக்கும் (மனிதனுக்கும்) உண்டான **மூன்று பிறப்புக்கள்** (10); நிமிர்ந்து வாழும் சக்தி கொண்ட மானிடப் பிறப்பைக் குறிக்கும் (ஈசனின் ஒரு கையிலுள்ள) புள்ளி மான் (11),

பாறை மீது நிற்கும் மான்; கடலால் சூழப்பட்டுள்ள நிலப்பரப்பு; அதன் நடுவே ஞானத்தின் சின்னமான **தாவோ** (தோ) குறியீடு; அதற்கு மேலே புனிதமான செடியிலிருந்து தோன்றும் மரங்கள் (14), எனப் பல்வேறு தத்துவங்களை இக் குறியீடுகளின் வாயிலாக அறியலாம்.

முன்பகுதியில் (ப.13) கண்ட உத்தரபிரதேசம், கோரக்பூர், சோகௌராவில் கண்டறியப்பட்ட வெண்கலத்தகட்டில் பொ.ஆ.மு. 400-300 யைச் சார்ந்த பிரகிருத்தி மற்றும் பிராமி எழுத்துப் பொறிப்புக்களுடன் கூடிய குறியீடுகளை மெஹிக்கோ (மெக்சிக்கோ) நாட்டின் புடைப்புச் சிற்பங்களுடனும், நாகல் குறியீடுகளில் சிலவற்றுடனும் ஒப்பிடலாம்.

## மனிதனுக்கு மூன்று பிறப்புக்கள்

உடல், உயிர் (மனமும், பிராணனும் இணைந்தது), ஆன்மா ஆகியவற்றின் தொகுப்பே மனிதன். தான் செய்த நல்வினை, தீவினைப் பயனாகவும், தான் விரும்பியபடியே உடல்களை மாற்றியபடி செல்கின்ற உயிரின் பயணமே வாழ்க்கை. உயிர் பழைய உடலை விடுவது மரணம், புதிய உடலை ஏற்றுக்கொள்வது பிறப்பு.

பிறப்பு - இறப்பு ஆகிய இரண்டு நிலைகளுக்கு இடைப்பட்ட நிலை வாழ்க்கை. இத்தகைய பிறப்பும், வாழ்க்கையும், மரணமும் நாம் வாழுகின்ற பூமியில் சங்கிலித் தொடர் போல நடைபெறுவதாகும்.

மரம் என்றால் மரிப்பு அதாவது இறப்பு, மனிதர்கள் வாழ்கின்ற பூமியை மரலோகம் என ஐதரேய உபநிடதம்[16] சுட்டிக் காட்டுகிறது.

மரிப்பு என்ற சொல்லில் இருந்து மருவியதே மரணம் என்ற சொல்லாக இருக்கக்கூடும். இம் மரலோகத்தில் மானிடராய் பிறக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் மூன்று பிறப்புக்கள் உண்டு.

அவன் முதலில் அவனது தந்தைக்கு மகனாகப் பிறப்பது முதல் பிறப்பு.பின்னர் அவன் ஒரு மகனைப் பெற்றெடுத்துத் தந்தையாவது அவனது இரண்டாவது பிறப்பு. அதன் பின்னர் வயதாகி மரணமடைந்து தனது நல்வினை மற்றும் தீவினைப் பயன்களை அனுபவிக்க சீவனாக மறு உலகம் செல்வது மூன்றாவது பிறப்பு[17] என ஐதரேய உபநிடதம் விவரிக்கிறது.

உயிர்களின் சந்ததிச் சங்கிலி தொடர்வதற்காவே மனிதன் இவ்வாறு மூன்று முறை பிறக்கிறான். மேற்கண்ட மூன்று பிறப்புக்களுக்கு அமெரிக்காவிலும்[18], இந்தியாவிலும், வாழ்ந்த நம் முன்னோர்களின் ஈமச்சின்னங்களே சான்றுகளாகத் திகழ்கின்றன.





*மேற்கண்ட மூன்று பிறப்பைக் குறிக்கும் மேல் நோக்கிய மூன்று முக்கோணங்களும், அவற்றில் குறிப்பாக அதன் மேலே அமர்ந்துள்ள ஆன்மாவை குறிக்கும் மூன்று பறவையின் வடிவங்களும் நோக்கத்தக்கவை. (நன்றி: அமெரிக்க நாட்டு ஆய்வாளர் கேரி ஏ டேவிட், தமிழ் நாட்டு ஆய்வாளர் முனைவர் வை.இராம்குமார்.)*

*இந்த மரலோகத்தில் புதிய உடலை ஏற்றுக்கொள்வதே பிறப்பு என்பதும், அத்தகைய ஒவ்வொரு பிறப்பிலும் மானிடர் மூன்று பிறப்புகளைப் பற்றிய குறியீடுகளை போலவே, குழந்தை கருதரிப்பதைப் பற்றியக் குறியீடுகள் திருக்கோயில் முன்மண்டபங்களில் பொறிக்கப்பட்டுள்ளன.*

*மக்கள் திரளாக அமர்ந்து மனம் மகிழக்கூடிய ஆலயத்தில் நிகழும் அனைத்து நிகழ்ச்சிகளில் குறிப்பாக, திருமண நிகழ்ச்சிகளுக்கும், இனவிருத்தியைப் பற்றியக் கல்வியை கற்பிப்பதற்கும், திருக்கோயிலின் முன் மண்டங்கள் பயன்பட்டுள்ளன. அதற்குச் சான்றாக அம் மண்டபங்களில் தாயும் சேயும் பற்றிய அரியவகையான குறியீடுகள் பொறிக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டலாம்.*

## தாயும் சேயும்

*ஒவ்வொரு மனிதனுக்கும் (புருஷனுக்கும்) அவனது பூர்வ கர்ம வினைகளுக்கு ஏற்றபடி அவனது இல்லற தர்மத்தில் முக்கியப் பங்கு கொண்டு தனது கர்மத்தைச் செய்து முடிக்க, வாழ்க்கைத் துணைவியாக,* ***சகதர்மிணி*** *என்று சொல்லப்படுகின்ற மனைவியானவள் அமைகின்றாள். மேலும் மனைவியை ஒரு பங்காளிக்கு ஒப்பிட்டு அவளை வெறும் வினையாற்றும் பங்காளியாகச் சுட்டிக்காட்டாமல் அவனை (தனதுகணவனை) இல்லற தர்மத்தின் நெறி தவறாது வாழ வைக்க வந்த தர்மத்தின் வடம் என்பதால் அவளைத்* ***தர்மபத்தினி*** *என நம் முன்னோர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.*

*மனைவியானவள்* ***சஞ்சிதமாகவும்*** *(அநுபவித்தது போக எஞ்சியுள்ள கர்மமாகவும்),* ***பிரார்த்துவமாகவும்*** *(பழவினையாகவும்),* ***அகாமியமாகவும்*** *(மிகுதியான வெண்ணீரையும்) அவனிடமுள்ள கர்ம மூட்டைகளை, பிரார்த்தனம் எனும் வேண்டுகோளாக அள்ளி அணைத்து, கிள்ளி எடுத்து, ஒரு சிசுவின் வடிவில்*

இந்த உலகத்திற்கு அவனது வம்ச வாரிசாக வழங்குகிறாள். தனது புருஷனின் ஜீவாத்மா தொடர்ந்து இவ்வுலகை அனுபவிப்பதற்கு வழி வகுப்பதோடு மட்டுமின்றி அவனது இப்பிறவியின் பாரத்தைக் குறைக்க வந்த **தர்ம தேவதையாகவும்** விளங்குகிறாள்.

அந்த தர்ம தேவதை எனும் மனைவியானவள் தனது கணவனின் ஆத்மாவை அன்புடன் ஏற்று, தனது கருக்குழியில் அதற்கு உடலாகிய வடிவம் கொடுத்து, இப்பிறப்பில் அவனுக்கு மக்கட்பேறு பெற வழிவகுத்து நிற்கும் கருணையின் திருவுருமாகவே ஓர் தாய் விளங்குகின்றாள்.

மேற்கண்டவற்றின் காரணமாகவே தான் நம்முன்னோர்கள், ஒவ்வொரு புருஷனுக்கும் நல்லதொரு மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

## திருமணம்

திருமணம் என்பது, ஒரு ஆண்மகன், ஒரு பெண்மகள் ஆகிய இருவரது உடலின் உணர்ச்சிகளுக்கு வடிகால் அல்ல, ஒரு ஆண்மகனின் உள்ளத்தின் உணர்ச்சிகளுக்கு வடிகாலாகத் திருமகளைப் போன்றதொரு பெண்மகளைத் தேர்ந்தெடுத்து, அவ்விருவரது மனமிரண்டும் ஒன்றாக இணையச் செய்து, அவர்களது இல்லற வாழ்க்கையைத் துவங்கச் செய்யப் பல மனங்கள் ஒன்று கூடி நிகழ்த்தும் ஓர் சடங்காகும்.

ஒரு ஆண்மகனின் பெற்றோர்கள் ஒரு பெண்மகளின் பெற்றோர்களை அணுகி, எங்களது வம்சக்கொடி தொடர்ந்து தழைத்து வளர்ந்திடவும், மக்கட்பேற்றினை ஈன்று தரவும், உங்களது பெண்ணை எங்களது மருமகளாக நீங்கள் தாரை வார்த்துத் கொடுத்திட வேண்டுவதும், அப்பெண்ணின் பெற்றோர்களும் அதற்குச் சம்மதித்துத் தங்களது மகளைத் தாரை வார்த்துக் கொடுப்பதும், திருமணத்தின் போது நடைபெறும் சடங்குகளில் முக்கியமானதாகும். திருக்கோயில்களில் திருமணம் நடை பெறுவதே சிறந்தது என்ற பழங்கால மரபு குறிப்பிடத்தக்கது.

அதற்குச் சான்றாகத் தெய்வத் திருத்தலங்களில் நடைபெறும் இறைவன் இறைவியின் திருமண சடங்குகளைச் சுட்டிக்காட்டலாம்.

## மக்கட்பேறு (மானிட விஸ்த்தீரணம்), கர்ப்பம்

மக்கட்பேறுக்கு உவமையாக வாழை, மா மரங்களுடன் ஒப்பிட்டு, திருமணம் நடைபெறும் இல்லங்களின் வாயில்களிலும், மணப்பந்தல்களிலும் வாழை மரங்கள், மாவிலைத் தோரணங்கள் கட்டுவது பழங்கால மரபை எடுத்துக் காட்டுவதாகக் கருதலாம்.

மணமக்களை வாழையடி வாழையாக வாழ வேண்டுமென வாழ்த்துவதும் அதனடிப்படையிலாகும். எக்காலத்திலும் குறையாத மிகுந்த எழிலும், இன்பமும் மக்கட்பேறு ஒன்றில் மட்டுமே உண்டு. அதனை அடைய விரும்பும் தம்பதியர் இருவரும் இறைவனை வணங்கி, கைதொழுது முயற்சிக்க வேண்டும். அதன் காரணமாக இருவருக்கும் இடையே பேரன்பு உண்டாகிறது, அந்த பேரன்பின் பெருக்கால் இருவரும் அகம், புறம் என இரண்டிலும் மனம் ஒத்துக்கூடுவர் என சித்தர்கள் கண்ட மானுட நூல் குறிப்பிடுகிறது.

ஒரு பெண்ணானவள், இப்பூலோகத்தில் பெண்ணாகப் பிறந்து, பூப்பெய்தி, தகுந்த காலத்தில் இறைவன் நிச்சயித்தப்படி தனக்கு ஏற்ற ஆண்மகனின் திருக்கரங்களால் திருமாங்கல்யம் சூடி, இல்லற வாழ்வைத் துவங்கி அதனால் அடையும் இன்பத்தைவிட, மேலானதொரு பேரின்பத்தை அவள், தாய்மை அடைந்த பின்னரே அடைகிறாள் என்பதே உண்மையாகும். அதற்கு அன்னை பார்வதிதேவி கருவுற்றுத் தனது பதியுடன் (சிவபிரானுடன்) பூலோகத்தில் சில காலம் வாழ்ந்ததாகக் கூறப்படுவது ஓர் மிகச்சிறந்தச் சான்றாகும்.

### சிசுவின் வளர்ச்சி

சிசுவின் வளர்ச்சியைப்பற்றி சித்தர்கள் கண்ட மானுட ரகசியம் எனும் நூல் மேலும் கூறுவதாவது;[19] தேவலோக நடனமாதான ஊர்வசி இந்திரனின் சாபத்தால் பூமிக்கு வருகிறாள். இங்கு வந்த ஊர்வசி சித்தர்களிடம் சித்த நெறிகளைக் கற்றுக்கொண்டு தனது பஞ்சரத்தினத்தில் சிசுவின் வளர்ச்சியைப்பற்றி கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளாள்.

அமிர்தமயமான கணவனது வெண்ணீரான சுக்கிலமும், மனைவியின் யோனியின் உள்ளே இருக்கும் செந்நீரான சுரோணிதமும் ஒன்று கூடி ஒரு கனி போல் பிரகாசமானதாகக் கடலில் முத்து உதித்தைப்போலவும், அருகம் புல்லின் மேல் பனித்துளி நிற்பது போல் தோன்றிப் பயிராகும்.

கடுகின் அளவில் பத்தில் ஒரு பங்கே அளவு உள்ளதான சுக்கிலமும் சுரோணிதத்தில் சேர்ந்தவுடன் திரண்டு ஓர் உருவமாகும். உடனே அதனை வாயுவானது மூடிக்கொண்டு, மதில்சுவர் போலவும், சுற்றிலும் அடைக்கப்பட்டது போலவும் உயரமாக வளர்ந்து, அதனைக் காப்பாற்றும்.

அந்த விந்துவுடன் பிராணவாயுவும் கூடிக்கொள்ளும். உதானவாயு என்ற உணவைத்தரும் வாயு நாதமும் விந்தும் கூடிய கருவை வளர்க்கும்.

அதனோடு வினைப்பயன்களும் வந்து சேர்ந்து கொள்ளும். இறைவன் நிர்ணயித்தக் கணக்கின்படி ஐந்து நாட்களில் அது அரும்பாகும்.

பத்து நாட்களில் திரண்டு ஓர் உருவமாகும். பதினைந்து நாட்களில் ஒரு முட்டையாக வளர்ந்துவிடும். ஒரு மாதத்தில் வச்சர கம்பம் போல் உருப்பெற்று விளங்கும்.

இரண்டாவது மாதத்தில் தலை, முதுகு என்ற உறுப்புக்கள் தோன்றும். மூன்றாவது மாதத்தில் இடுப்பு, கை, கால்கள் விரல்கள் ஆகியவைத் தோன்றும். நான்காவது மாதத்தில் பாதங்களும் மூக்கும் தோன்றும். ஐந்தாவது மாதத்தில் வாய், நாக்கு, காது, கண், விழி ஆகியவைத் தோன்றும்.

ஆறாவது மாதத்தில் நகங்களும், ஏழாவது மாதத்தில் மயிர், எலும்பு, நரம்புகள் ஆகியவை உண்டாகும். நரம்பு முதலானவற்றுடன் கூடிய இப்பிண்டத்தைச் **சடல நீர் [20]** சூழ்ந்து கொண்டிருக்கும். இருப்பினும் சூரிய சந்திர கலைகளுடன் கூடிய மூச்சும் நடைபெறத் தொடங்கும்.

எட்டாம் மாதத்தில் தாய் உண்ணும் உணவில் உள்ள சக்தி ஒளிக்கதிர் போலும், விழும் அருவி போலும் தொடர்ந்து கபால வாசலின் (உச்சியின்) வழியாக சிசுவின் உடலில் பாயும். அதனைச் சிசுவானது ஓர் வண்டு தேனை உண்பது போல் உண்டு வளரும்.

சிசுவாக வளரத் துவங்கும் அதனது உடலின் உச்சந்தலையைப் பிளந்து கொண்டு, அவ்வாசலின் வழியாக இறைவன் உள்ளே புகுந்து விடுகிறார். அந்த ஒரு வாசலின் பெயர் **விக்ருதி**. விக்ருதி என்றால் பிளக்கப்பட்டது என்பது பொருள்.

பிரம்மரந்திரம், ஆனந்தத்தின் உறைவிடம் என்பதும் அஃதே. இதன் வழியாக பிரம்மம் உள்ளே புகுவதால் இதனை **பிரம்மவழி** என்பர். இவ்வழியே, இறைவனை அடைவதற்கான ஒரே வழி; மீண்டும் பிறப்பற்ற நிலையை அடைய உதவும் வழி. இவ் வழியை (ச இந்த்ரயோனி) **இறைவழி [21]**, எனத் தைத்திரிய உபநிடதம் கூறுகிறது.

ஒன்பதாம் மாதத்தில் பூர்வ ஜென்ம வாசனையால் தன்னை உண்டாக்கிய ஈசன் திருவடிகளை நினைத்தபடி கரம் கூப்பி; இறைவா அருள்வாயாக! என்று வேண்டித்தவம் செய்யும்.

பத்தாம் மாதம் இறைவனின் திருவருளால், தாயின் வயிற்றில் உள்ள அபான வாயு பிடித்துத் தள்ள காலால் உதைத்துக்கொண்டு சிசுவின் தலையானது யோனியின் வாயிலை முட்டிக்கொண்டு வந்து பிறக்கும். அத்தருணத்திலேயே சிசுவாகப் பிறக்கும் ஜீவன் தனக்கும் இறைவனுக்கும் உள்ள நினைவுகளை மறந்து விடும்.

மாயாசக்தி, கிரியாசக்தி ஆகிய சக்திகளால் வசப்பட்டு மாயையால் பூர்வ ஜென்ம நினைவுகளையும் மறந்து நல்வினை, தீவினை என்ற இரண்டு வினைகளையும் ஏந்தி, அவ் வினைகளின் பயனாய் உண்டான பிணிகளுடன் கொடியோடு கூடிய சுரையைப் போல் புவியில் வந்து விழும்-என்பவை ஊர்வசி குறிப்பிட்டதாகும்.

ஒவ்வொரு பெண்ணும் கர்ப்பம் தரித்துத் தாய்மை அடைந்து மக்கட்பேறு பெறுவதின் முக்கியத்துவத்தை ஞானிகளாகிய சித்தர்கள் நன்கு உணர்ந்துள்ளனர். தம்பதியினர் தத்தம் வம்சக்கொடி தொடர்ந்து வளர்ந்திட குழந்தைகள் பிறந்திட வேண்டும் என்பதற்கான மந்திரத்தையும், யந்திரத்தையும் கண்டறிந்தனர். குறிப்பாக ஒவ்வொரு பிரசவ காலமும் ஒரு பெண்ணின் மறுஜென்மம் எடுக்கும் காலம் என்பதை அறிந்துணர்ந்த அத் தவப் புதல்வர்களாகிய ஞானிகள், பிரசவ வேதனையின்றி சுகப்பிரசவம் ஆவதற்கு உச்சரிக்கப்படவேண்டிய மந்திரத்தையும், அதற்கான யந்திரத்தையும் கண்டறிந்தனர்.

மந்திரங்களை வேத, உபநிடதங்களிலும், யந்திரங்களை குறியீடுகளாவும் பதிவு செய்தனர். குழந்தைப் பிறக்க கருதரிப்பதற்கான குறியீடுகளைத் திருக்கோயில்களின் முன்மண்டபங்களிலும், பிரசவ வேதனையின்றி சுகப்பிரசவம் ஆவதற்கான குறியீடுகளை ஊருக்குச் சற்று ஒதுங்கிய இடங்களில் உள்ள கற்பாறைகளிலும் பொறித்து வைத்தனர். அநேகமாக அவ்விடத்திற்கு அருகே அருள்மிகு விநாயகரின் ஆலயம் அமைந்திருக்கவும் வாய்ப்புண்டு.

## குறியீடுகள்



அக்குறியீடுகளின் நடுவே பிந்து எனப்படும் புள்ளியின் வடிவமும், கூட்டல் குறி போன்ற வடிவமும், அக் கூட்டல் குறியின் கரங்கள் புவியின் திசைகளாகிய கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆகிய நான்கு திசைகள் நோக்கியபடி அமையப்பெற்றிருக்கும். அதன் நான்கு கரங்கள் ஏழுசுற்றுக்களின் அமைப்பை உருவாக்கும் கோடுகளோடு இணைந்திருக்கும். அந்த ஏழு சுற்றுக்கள் ஜோதியின் திசைகளாகிய வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு ஆகிய நான்கு திசைகளில் திரும்பி வலம் வருவது போன்று அமையப் பெற்றிருக்கும்.



பொதுவாக, கோயில்களில் காணப்படும் குழந்தை உண்டாவதற்கான யந்திரத்தின் நுழைவாயில், வலப் புறத்திலும் கிழக்குத் திசை நோக்கியபடியும் அமைந்திருக்கும்.ஊருக்கு ஒதுக்கு புறங்களில் காணப்படும் பிரசவ வேதனையின்றி சுகப்பிரசவம் ஆவதற்கான குறியீட்டின் நுழைவாயில், இடப் புறத்திலும் தெற்குத் திசை நோக்கியபடி அமைந்திருக்கும்.

இவ்விரு குறியீடுகள் திருச்சி மாவட்டம் குழுமணி, பெரியகருப்பூர் ஆகிய ஊர்களில் தி.லெ.சு.ச.போஸ் கண்டறிந்தவையாகும்.

## குறியீட்டின் பெயர்

**சக்கர வியூகம்** [22] எனப்படும் இக் குறியீட்டில் பேறு கால (பிரசவகால) வலியினால் அவதிப்படும் பெண்ணின் கவனத்தையும், சிந்தனையையும் ஒருமுகப்படுத்துவதற்தாக, அவளது பார்வையைச் சமயகுருவானவர் சக்கரவியூகத்தில் நிலைபெறச் செய்வார். கூர்மையான பார்வையாலே சக்கர வியூகத்தின் நுழைவாயிலின் வழியாகச் சுற்றிச்சுற்றி உள்ளே சென்று மையத்திலுள்ள பிந்துவை அடையச் செய்வார்.

பின்பு பிந்துவில் இருந்து தொடங்கி அதே போன்று சுற்றிச்சுற்றி வாயில் வழியாக வெளியே வரச் செய்வார். இவ்வாறு பேறுகால வலியுடன் உள்ள பெண்ணின் கவனத்தையும், சிந்தனையையும் ஒருமுகப்படுத்துவதால், தாயாகப்போகும் பெண்ணின் மனவலிமை கூடுகிறது. அத்துடன் வலி குறைந்தும், குழந்தை பிறப்பு எளிதாகவும் மாறிவிடுகிறது எனக் கூறப்படுகிறது. யந்திரம் என ஒன்று இருந்தால் அதற்கான மந்திரமும் நிச்சயமாக இருக்கத்தான் வேண்டும்.

உலக பிரசித்தி பெற்ற ஆய்வு அறிஞரான பிராங் வாட்டர், தமது **தி புக் ஆப் ஹோப்பி** எனும் நூலில், அமெரிக்கப் பழங்குடி மக்களான ஹோப்பி எனும் பிரிவினர் சக்ரயூகத்தை **தாபுத்** (தாயும் சேயும்) எனக் கூறுவதாகக் குறிப்பிடுகிறார்.

அதாவது ஒரு தாயின் கர்ப்பத்தை நாம் வாழும் பூமித் தாயின் கர்ப்பத்தோடு அவர்கள் ஒப்பிடுகின்றனர். மேலும் நமது மூதாதையர் இப்பூலோகத்தில் மீண்டும் மானிடப்பிறவி எடுக்கும்படியாகவும் **இறைவனால் உருவாக்கப்பட்ட பாலம்** என இக்குறியீட்டைப்பற்றி அவர் விவரிப்பது நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது.

இது போன்ற குறியீடுகள் கிரேக்கம், அமெரிக்கா போன்ற மற்ற நாடுகளிலும் அதிகமாகக் காணப்படுகின்றன. மேலை நாடுகளில் இக்குறியீட்டைப் பெரிய அளவில் தரையில் வரைந்து, அதன் நுழைவாயில் வழியாக உள்ளே சென்று பிந்து ஸ்தானத்தைச் சென்றடைந்து பின்னர் சென்ற வழியாகவே திரும்புகிறார்கள். அவ்வாறு உள்ளே சென்று திரும்பி வருவதால் அவர்களது உடல் நல்ல ஆரோக்கியமாக இருப்பதாகத் தங்களது அனுபவங்களைக் கூறுகின்றனர்.

மலைப் பகுதியில் பயிர்சாகுபடி செய்யும் நிலங்களை இந்தக் குறியீட்டின் வடிவத்தில் வடிவமைத்து விவசாயம் செய்வதால் பயிர்கள் நன்றாகச் செழித்து வளர்கின்றன என மேலை நாட்டு விவசாயிகள் குறிப்பிடுவதும் அறியத்தக்கதாகும். மேற்கண்டவை குழந்தை பிறப்புடன் சம்பந்தபட்ட இந்தச் சக்கர வியூக குறியீட்டைப் பற்றிய விபரங்கள் நம்மை மேலும் ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது அல்லவா?






இவ்வாறு நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் இக் குறியீடுகள் உண்மையில் எதைக் குறிக்கின்றன என எண்ணி, அதற்கான சான்றுகளைத் தேடி அலைவோரது கண்களுக்கு மட்டும் புலப்படும் வகையில் குழந்தை கருதரிப்பதற்கானது திருச்சி மாவட்டம் ஊட்டத்தூரில் கா.பாலகிருஷ்ணனாலும், குழந்தை பிறப்பதற்கானது தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி கசவன் குன்றிலுள்ள ஒரு கல்மண்டபத்தில் ஸ்தபதி வே. இராமனாலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[23]

இக் குறியீடுகளின் மையத்தில் ஒருபுள்ளியும் (பிந்து), கூட்டல் குறியீடும், ஏழுசுற்றுக்களும் உள்ளன. அதன் நுழைவாயில் தெற்கு நோக்கியபடி, முதலாவதில் வலது புறத்திலும், இரண்டாவதில் இடது புறத்திலும் உள்ளன. பொதுவாக வட்டவடிவில் ஏழுசுற்றுக்கள் கொண்ட குறியீடுகளைக் காணலாம். ஆனால் இவற்றிலுள்ள ஏழுசுற்றுக்கள் செவ்வக வடிவில் உள்ளது அவற்றின் தனிச் சிறப்பாகும்.

இச்சிறப்புக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் வகையில் குழந்தை பிறப்பதற்கான குறியீட்டில் மற்றுமொரு குறியீடு அதன் மேல் புறத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் ஒரு வட்டமும், அதற்குள்ளே இரண்டு கரங்களை உயர்த்தியும், இரண்டு கால்களை அகட்டியபடியும், மர்ம உறுப்பிலிருந்து ஏதோ ஒன்று வெளிப்படுவது போன்றதொருக் கோட்டுருவமும் அறியப்படுகின்றன.

அக்கோட்டுருவத்தை ஒரு பெண்ணாகக் கருதி மேற்கண்ட வற்றை ஒப்பிட்டுப் பார்க்கையில், இது குழந்தை பிறப்பைச் சுட்டிக்காட்டும் குறியீடு என்பது தெரியவருகிறது.

குழந்தை பிறப்பதைச் சித்திரித்துக் காட்டும் தேர்களில் காணப்படும் மரச் சிற்பங்களும், திருக்கோயில்களின் மண்டபங்களின் அதிஷ்டானப் பகுதிகளிலுள்ள புடைப்புச் சிற்பங்களும், திருக்கோபுரங்களில் காணப்படும் பொம்மைகளும் மற்றும் பாறை ஓவியங்களும் மேற்கண்டதற்குத் தகுந்த சான்றுகளாகத் திகழ்கின்றன.

**ஊமைப்புலி எறிதல் மற்றும் உடைத்தல்**

பழங்காலத்தில் கோயில் திருவிழாவின் போது பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் குறிப்பாக அம்மன் கோயில் திருவிழாக்களில் நடைபெறும் நடுநிசி பூசைகள் சற்று வித்தியாசமாகவே இருக்கும்.

அப்பூசைகளில் ஊமைப்புலி எறிதல், ஊமைப்புலி உடைத்தல் போன்றவை மிகவும் பழைமை வாய்ந்தவை. தற்காலத்தில் இப்பூசைகளுக்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுக்கப்படாத காரணத்தால் அவற்றைப் பற்றிய விபரங்கள் மறைந்து வருகின்றன என்பது வருந்தத்தக்கதொரு செய்தியாகும்.

மேற்கண்ட நிகழ்வுகளில் **ஊமைப்புலி எறிதல்** போன்ற நிகழ்வுகள் முற்றிலுமாகவே மறைந்துவிட்டன. ஏதோ ஒரு சில கிராமங்களில் மட்டும் **ஊமைப்புலி உடைத்தல்** என்ற நிகழ்வு மட்டும் நடைபெறுகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஜீயபுரத்திற்கு அருகில் உள்ள பெரியகருப்பூர் என்ற கிராமத்திலுள்ள சாமுண்டீஸ்வரி அம்மன் கோயில் திருவிழாவின் போது **ஊமைப்புலி உடைத்தல்**[24] என்ற பூசை தற்போதும் நடைபெறுகிறது. அந்த பூசையின் வாயிலாக, சக்கரவியூக குறியீட்டைப் பற்றிய விபரங்கள் நம்மால் அறியமுடிகிறது.

ஊமைப்புலி உடைத்தல் என்ற அப் பூசையின் போது கோயில் பூசாரி, ஒரு மண்பானையில் அரிசி சோறு, குருதி கலந்த ஆட்டின் இறைச்சி ஆகியவை கலந்ததொரு கலவையை ஒரு மண் பானையில் இட்டு அதனது வாயை மூடி விடுகிறார். அப்பானையைக் கையில் எடுத்துக்கொண்டு, (தெற்குத் திசை நோக்கியபடி இடது புறம் வாயில் கொண்ட) சக்கரவியூக குறியூட்டைச் சுற்றி வலம் வருகிறார். அவ்வாறு வலம் வரும் போது வலியால் அனத்துவது போல ம்.... ம்....போன்ற ஒலியெழுப்புகிறார். வலம் வந்த பின் வடக்குத் திசை நோக்கி நின்று, பானையைத் தலை கீழாகக் கவிழ்த்து, அதாவது பானையின் வாயைக் கீழ்நோக்கச் செய்து, தரையில் போட்டு உடைக்கிறார்.

குருதி கலந்த இறைச்சியும், சோறும் தரையில் விழுந்து சிதறுகிறது. குழந்தை பிறப்பின் போது நிகழும் நிகழ்வுகளான குருதி வெளிப்படுதல், பிரசவ வலியால் தாய் அனத்துதல் போன்றவைகளும், தலைகீழாகச் சிசு வெளிவந்து இப்புவியில் பிறப்பது ஆகியவை ஊமைப் புலி உடைக்கும் சடங்காக அமைந்திருக்கும் பொருத்தப் பாட்டினை என்னவென்பது.

ஞானிகளாகிய ரிஷிகள், குழந்தை பிறப்புப் பற்றிய குறிப்புக்களை ஸ்தூல, சூட்சும, காரண நிலைகளாகவும் அவை முறையே பொம்மைகள் அல்லது புடைப்புச் சிற்பங்கள் (உருவம்), குறியீடுகள் (அருவுருவம்), மந்திரங்கள் (அருவம்) என மூவகையில் அறிவித்துள்ளனர். அம் மந்திரங்களை அதர்வன வேதத்தில் பதிவு செய்துள்ளனர்.

### மக்கட்பேறு 25

புருஷனான நான், பர்வத்தினின்று ஜோதியின் மூலத்தினின்று அங்கம். அங்கத்தினின்று ஒன்று சேர்ந்து கர்ப்பத்தில் ஒரே தசை சரத்தில் சிறகு போல் ஸ்தாபிப்பேனாக. இப்பெரிய புவியானது பொருள்களின் கருவைத் தரிப்பது போல் நான் உனது சினையை உன்னில் ஸ்தாபனம் செய்கிறேன். நான் அதன் துணைக்கு உன்னை அழைக்கிறேன்.

சினீவாலியே கருவை ஸ்தாபி. சரஸ்வதியே சினையை ஸ்தாபனம் செய்; கமல மாலைகளுக்குள்ள இரு அசுவனிகள் உனது கருவை ஸ்தாபிப்பார்களாக. மித்திரனும், வருணனும் உனது கருவை ஸ்தாபிப்பார்களாக. தாத்ரு உனது கருவை ஸ்தாபிப்பார்களாக.

விஷ்ணு யோனியைப் பக்குவமாக்கட்டும். துவஷ்டா ரூபங் களை அலங்கரிக்கட்டும். பிரஜாபதி பொழியட்டும். தாத்ரு உனது கருவை ஸ்தாபிக்கட்டும். வருணனான இராஜனறிவதும், தேவி சரஸ்வதியறிவதும், விருத்திரனிழிக்கும் இந்திரனறிவதுமான, கருக்கரணத்தை நீ பருகுவாயாக.

நீ ஓஷதிகளின் கருப்பம், வனஸ்பதிகளின் கருப்பம், விசுவப்பொருள்களின் கருப்பம். அக்னியே ! நீ இங்கு கருவை ஸ்தானஞ் செய், நீ எழுந்திரு, வீரனாகவும், கருப்பாயசத்தில் கருவை ஸ்தாபி, நீ வீரியன், நீ வீரியமுள்ளவன், நாங்கள் உன்னை இங்கு பிரஜைக்காக அழைக்கிறோம்.

பார்ஹத்ஸாமே நீ பக்குவமாகவும், உன் மூலஸ்தானத்தில் கருச்சாயட்டும். தேவர்கள் சோமபானர்கள் உனக்கு உனதும் எனதுமான ஒரு மகனையளித்துள்ளார்கள். தாத்ருவே இந்த ஸ்திரீயின் அங்கத்தில் உயரிய ரூபத்தால் பத்தாவது மாதத்தில் பிறக்க புருஷப் பிரஜையை ஸ்தாபனஞ் செய். துவஷ்டாவே ஸ்தாபனஞ் செய். ஸவிதாவே ஸ்தாபனஞ் செய். பிரஜாபதியே ஸ்தாபனஞ் செய்.

### பிரசவ வலியின்றிக் குழந்தைப் பேறு பெறுதல் 26

பூஷனனே ! அரியமான் இந்த பிரஸவத்தில் ஆற்றலுள்ள ஹோதாவாய் உனக்கு வஷட்டை (யக்ஞ முழுக்கத்தை) கூறுக, அவளது அங்கங்கள் பிரஸவத்துக்குப் பக்குவமாகுக.

சோதியின் திசைகள் நான்கு; புவியின் திசைகள் நான்கு. அத்திசைகளில் கருப்பாசயத்தால் சூழ்ந்துள்ள சிசுவைத் தேவர்கள் சலனமளிப்பார்கள்.

அவர்கள் ஸ்திரியை பிரஸவத்திற்கு பொருத்தம் செய்க. பூஷனை புறஞ் செய்க, சன்னாங்கத்தை நாங்கள் விசாலமாக்குவோம்.

அன்னையே! உனது அங்கத்தை தளர்த்திக்கொள், பிஷ்கலையே நீ பாலனைக் கீழே பிரேரனை செய். மாசு மிகும் பசையுள்ள நஞ்சுக்கொடி மாமிஸத்தில் கொழுப்பில் பற்றாதது போல், மச்சைகளிலும் ஸ்தாபிதமாகாமல் நாய் புசிக்க கீழே வருக, நஞ்சுக்கொடி கீழே வருக.

*நான் உனது மர்ம அங்கத்தை விசாலமாக்குகிறேன். நான் மூலஸ்தானத்தை அகலமாக்குகிறேன். இருபக்கங்களின் நாடிகளை விசாலமாக்குகிறேன். தாயையும் பாலனையும் பிரித்துத் தனிமை யாக்குகிறேன். குமாரனை நஞ்சுக் கொடியினின்றும் நீக்குகிறேன். நஞ்சுக்கொடி இறங்குக.*

*எப்படி வாயு, எப்படி மனம், எப்படி பறவை பறக்கின்றனவோ, அப்படிப் பத்து மாத பாலனான நீயும் ஜராயுயோடு ஓடிவா, ஜராயு இறங்குக. (ஜராயு- சராயுசம் எனும் கருப்பையிற்றோண்டுவது)*

**நூல் குறிப்புக்கள்**


1. *பதஞ்சலி யோகம், பாகம் 2, சூ. 16*
2. *சுவாமி விவேகானந்தர், எழுந்திரு! விழித்திரு!) ஞானதீபம்: சுடர் 1, நான்கு யோகங்கள் ப. 91*
3. *Swami Shree. Satya prakash Sarasvathi, Geometry in ancient India p. 73*
4. *ibid*
5. *Swami Swaahananda (translation) Chandogya Upanishad, verse 3.15.1*
6. *அன்னா, 108 உபநிடத் சாரம் (3- ஆம் பாகம்)ஸ்ரீ ராமபூர்வதோபின்யுபநிடதம் (சூ.4)*
7. *Eric Von daniken, In Search of Ancient Gods, p. 175*
8. *சுவாமி ஆசுதோஷானந்தர் (விளக்கியர்), பிரச்ன உபநிஷதம், சூ. 6.2*
9. *Swami Vivekananda, Mundaka Upanisad Verses 3.1-2, p. 41*
10. *சுவாமி விவேகானந்தர், ஞான தீபம், மனிதனின் உண்மை இயல்பு, ப.41*
11. *சுவாமி ஆசுதோஷானந்தர் (விளக்கியர்) ஐதரேய உபநிடதம், சூ. 2. ப.34*
12. *சுவாமி ஆசுதோஷானந்தர் (விளக்கியர்)முண்டக உபநிடதம், சூ. 2.1.5*
13. *அண்ணா (உரையாசிரியர்), சந்தோக்கிய உபநிடத் சாரம் சுலோகம் 5.10.10*
14. *எல் ரே (An early- preclassic Olmec bas-relief found at Chalcatzingo,south of Puebla, Mexico, which is named "El Rey", may have been founded around 1500 B.C.)*
15. *James Churchward, The Last Continent of Mu, p. 22*
16. *சுவாமி ஆசுதோஷானந்தர் (விளக்கியர்) ஐதரேய உபநிடதம் சூ. 1.2*
17. *ibid சூ. 2.1-4*
18. *Gary A. David Eye of the Phoenix, The Great Pyramids of Arizona, p. 36.*
19. *சித்தர்கள் கண்ட மானுட ரகசியம் ப.143-145*
20. *ibid, ப.144*
21. *சுவாமி ஆசுதோஷானந்தர் (விளக்கியர்)தைத்திரீய உபநிடதம், 1.6.2*
22. *Madhu Khanna, Yantra, p. 157.*
23. *இராமன், சு.ச.போஸ், சீனிவாசன், பழங்காசு, இதழ் -8, சக்ரவியூகம், ப.43*

23. *இராமன், சு.ச.போஸ், சீனிவாசன், பழங்காசு, இதழ் -8, சக்ரவியூகம், ப.43*

24. *லெ.சுபாஷ் சந்திர போஸ், பழங்காசு, இதழ் -2, சக்ரவியூகம், 18-20*
25. *எம்.ஆர். ஜம்புநாதன் (தமிழ் மொழி பெயர்ப்பு)அதர்வனவேதம்*
26. *ibid,*

## மங்கலகரமானச் சின்னங்கள்

மங்கலகரமான சின்னங்கள் எனும் இப்பகுதி; இறைவனின் எண்ணம், பெயர் வடிவம் ஆகிய பல்வேறு வெளிப்பாடுகளை அறிந்து நம் மனம் தெளிவு பெற உதவுமொரு ஞானக் கருவூலமாகும்.

அத்தகைய மங்கலகரமானச் சின்னங்களைப் பற்றிக் கூறும் பல்வேறு நூல்களில் குறிப்பாக சிற்பச் செந்நூல்[1] குறிப்பிடத்தக்கது. அதில் அச் சின்னங்களை போர்க் கருவிகள், தொழில் கருவிகள், இசைக்கருவிகள், உயிரினங்கள், மலர்கள், கனிகள், தருக்கள், வண்ணங்கள் என எட்டு வகைகள் எனவும் மற்றவற்றைப் பிறச் சின்னங்கள் எனவும் வரிசைப்படுத்தி அவற்றை வடிவமைக்கும் நெறிமுறைகளும் கூறப்பட்டுள்ளன.

### மங்கலம் பதினாறு

மங்கலகரமானச் சின்னங்களில் குறிப்பாகப் பதினாறு சின்னங்களுக்கு **மங்கலம் பதினாறு**[2] எனும் சிறப்புப் பெயருண்டு. அவை; கவரி, நிறை குடம் (பூர்ணகும்பம்), கண்ணாடி, கோட்டி (வீட்டு வாசல் அல்லது கோபுர வாயில்), முரசு, விளக்கு, கொடி, இணைக்கயல் ஆகிய எட்டும், அவற்றோடு வாள், குடை, ஆலவட்டம் (விசிறி), சங்கம் (சங்கு), தவிசு (பீடம்), திரு (திருமகள்), அரசியவாழி (நல்லாட்சி வழங்கும் செங்கோல்), ஓமாலிகை (நறும்புனலில் இடும் மணப்பொருட்கள்) ஆகிய எட்டும் என பதினாறு சின்னங்களாகும்.

### போர்க் கருவிகள்

பொதுவாக, போர்க் கருவிகள் பரஹரனா, பானிமுக்தா, யந்திரமுக்தா [3] என மூவகைப்படும். அவை முறையே அடித்து தாக்குவது, எறிந்து தாக்குவது, இயந்திர விசை மூலம் தாக்குவது எனப்பொருள்படும்.

முதல் வகையான அடித்து தாக்கும் போர்க் கருவிகளில் உடைவாள், சூலம், கத்தி, கெதை, சம்மட்டி, தண்டம், பரசு ஆகியவையும், இரண்டாம் வகையான எறிந்து தாக்குவதில், சூலம், வஜ்ரம், ஈட்டி, வேல், சக்ரவடிவ கத்தி, டொமாரா போன்றவைகளும், மூன்றாம் வகையான இயந்திர விசை மூலம் தாக்குவதில், வில்லில் இருந்து வெளிப்படும் அம்பு, பிற்காலத்தைச் சார்ந்த ஆயுதங்களான துப்பாக்கி, பீரங்கி போன்றவைகள் உள்ளடங்கும்.

### பத்து(தசா)ஆயுதங்கள்

மேற்கண்ட மூன்று வகையான போர்க்கருவிகளுள் பத்து ஆயுதங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைத் **தசாயுதங்கள்** என சிற்பச் செந்நூல்[4] பட்டியலிட்டுக் காட்டுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 01. வஜ்ரம் | **தாராசம்** | வஜ்ரம் | தாராசம் |
| 02. சக்தி | கபாலம் | சக்தி | நாகம் |
| 03. தண்டம் | தண்டம் | சாமரை | தண்டம் |
| 04. கத்தி | கட்கம் | கத்தி | குந்தாலி |
| 05. பாசம் | பாசம் | பாசம் | பாசம் |
| 06. அங்குசம் | அங்குசம் | அங்குசம் | அங்குசம் |
| 07 .கெதை | வேதாளம் | கெதை | வேதாளம் |
| 08. திரிசூலம் | சுரிகை | சூலம் | சூலம் |
| 09. சக்கரம் | துடி | சக்கரம் | வில் |
| 10. பத்மம் | கொடி | பத்மம் | குடை |

(**தாராசம்** என்பதற்கு இருப்புச் சலாகை எனப் பொருள்)

### அட்டமங்கலச் சின்னங்கள்

அஷ்டமங்கலச் சின்னங்கள் என்பது எட்டு புனிதமான சின்னங்களாகும். அவைகள், ஸ்வஸ்திகம், வெண்கவரி (இரட்டைச் சாமரங்கள்), பூர்ணகும்பம் (கும்பம் அல்லது நிறைகுடம்), அடுக்கு தீபம் (தீபம் அல்லது விளக்கு), இடபம், வலம்புரிசங்கு, ஸ்ரீ வத்சம், குடை ஆகிய எட்டு சின்னங்களாகும். மேலும் தீபம் (விளக்கு), கவரி, கண்ணாடி, தொரட்டி, இணைக்கயல், முரசு, நிறைகுடம், கொடி என சூடாமணி நிகண்டு[6] (12.90) கூறுகிறது. மேற்கண்ட அஷ்டமங்கல சின்னங்கள் அனைத்துமே ஸ்ரீ எனும் திருமகளின் இருப்பிடங்கள் எனவும் அவற்றை எட்டு தேவியர்களோடு ஒப்பிட்டு அவற்றின் உட்பொருள் கூறப்படுவதுண்டு.[5]

| அஷ்டமங்கலச்சின்னங்கள் | - தேவியர்கள் | - உட்பொருள் |
|---|---|---|
| 01. இரட்டைச்சாமரம் | - காவேரி | - சப்தமாதர்கள் |
| 02. ஸ்ரீவத்சம் | - ஸ்ரீதேவி | - இலக்குமி |
| 03. ஸ்வஸ்தீகம் | - சரஸ்வதி | - சரஸ்வதி |
| 04. தீபம் | - ஆகாயம் | - ஆகாயம் |
| 05. பூர்ண கும்பம் | - கங்கை | - ஜலேஸ்வரன்(வருணன்) |
| 06. விருஷபம்/ ரிஷபம் | - பூமாதேவி | - கர்மம் |
| 07. கண்ணாடி | - உமாதேவி | - சூரியன் |
| 08. சங்கு | - சசிதேவி | - படைப்பு |



## இரட்டை சாமரங்கள்

இரட்டை சாமரங்கள் என்பது மரத்தாலான கைப்பிடியுடன் யாக்[7] எனும் ஓர் மிருகத்தின் வால் முடியிலிருந்து தயாரிக்கப்பட்டது. இதனை வெண்சா மரங்கள் எனவும் கூறுவர்.

ஆரம்ப காலத்தில் கௌரவத்தை குறித்த இச் சின்னங்களை வலது, இடது ஆகிய இருபுறங்களில் இரு பணியாளர்களின் கரங்களில் காணலாம். இவ்விரண்டுக்கும் நடுவே உள்ள கௌரவமான சின்னத்தின் சிறப்பினை மேலும் உயர்த்திக் காட்டும் வடிவங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதனைத் தீய சக்திகளை அழிக்கும் அன்னையான (தென்) கங்கையின் ஆயுதமாகவும் கூறப்படுவதுண்டு.[8]

ஸ்ரீ விஷ்ணுவை கௌரவிக்கும் இச் சின்னம் நல்வினைப் பயனின் அடையாள வடிவமாகும். இச் சின்னங்களை திருச்சி மாவட்டம், கீழக்குறிச்சி கிராமத்தின் தென் திசையிலுள்ள விவசாய நிலத்தில் தி.லெ.சு.ச.போஸ் அவர்களால் கண்டறியப்பட்டதும் பொ. ஆ. 10ம் நூற்றாண்டைச் சார்ந்ததுமான ஒரு கல்தூணின் மேல் பகுதியின் வலது, இடது ஆகிய இரு புறங்களிலும் காணலாம்.



## ஸ்ரீ வத்சம்

**ஸ்ரீ எனும் இலக்குமியை**[9] குறிக்கும் இச்சின்னம் எட்டு மங்கலகரமான சின்னங்களில் ஒன்று. மகா விஷ்ணுவின் மார்பின் வலது புற (காம்பின்) ஸ்தன வட்டத்திற்கு மேல், **அபின்னையாக**[10] அதாவது பிரிக்க முடியாதவளாகவும், சுயமாகவும், ஓர் மச்சமாகவும், தோன்றியதாகக் கூறப்படுகிறது. (படம்: திருச்சி, இலால்குடி தாலுகா, மாந்துரை சிவாலயம். நன்றி: தமிழக இந்து சமய அறநிலையத்துறை.)

**இலக்குமியை (மார்பில்) தாங்கும் மகிழ்பவர்**[11] என்பதன் அடிப்படையில் அன்னையை முன்னிருத்தி மகாவிஷ்ணு; ஸ்ரீ நிவாஸன், இலட்சுமி நரசிம்மன், இலட்சுமிபதி என்றழைக்கப்படுகிறார். அருகக் கடவுளுக்குத் **திருமறுமார்பன்**[12] என்ற பெயருமுண்டு.

பழங்காலச் சிற்பங்களில், ஸ்ரீ வத்சத்தை முக்கோண வடிவமாகவும், அதனது மய்யத்தில் மூன்று இலைகளுடையதாக, சிற்பக் கலை வல்லுநர்கள் வடிவமைத்துக் காட்டுவர். இவ்வடிவத்தை **அருபலக்ஷ்மி**[13] எனக் குறிப்பிடுவர்.

மேலும் அந்த முக்கோண வடிவத்தில் அன்னை தாமரை மலரின் மீது அமர்ந்த கோலத்தில் நான்கு கரங்களுடன் மலர்ந்த முகத்துடன் காட்சியளிக்கின்றாள்.

அந்நான்கு கரங்களில், வலது மற்றும் இடது ஆகிய இரண்டு மேல் கரங்களில் தாமரை மலர்களை கொண்டு, இரண்டு கீழ் கரங்களில் ( ஸ்ரஸிஜ நிலயே ! ஸரோஜ ஹஸ்தே ! ) பயப்படாதே நான் துணையாக இருக்கிறேன் எனும் **அபயமுத்திரை**யுடனும், நமது தேவைகளை எல்லாம் பூர்த்தி செய்கிறேன் பெற்றுக்கொள் எனும் **வரதமுத்திரை**யுடனும் அருள் புரிகிறாள்.

### ஸ்வஸ்திக, ஸ்வஸ்தி ஸ்ரீ, ஸ்வஸ்திக், ஸ்வஸ்திக்க

ஸ்வஸ்திக, ஸ்வஸ்திஸ்ரீ, ஸ்வஸ்திக், ஸ்வஸ்திக்க ஆகிய சொற்களில் ஸ்வஸ்தி[14] என்பது பொதுவானது. ஸ்+வ+ஸ்+தி ஆகிய நான்கு எழுத்துக்கள் இணைந்துள்ள அச்சொல் மங்களகரமான தன்மையைக் குறிப்பதாகும்.

**க** என்பது (ஆன்மாவையும்) பரமனையும்[15], **சிரீ** என்னும் **ஸ்ரீ** என்பது அன்னையையும், திக் என்பது (திக்கங்கர்களையும்) திக்குத் திசைகளையும், **க்க** என்பது பத்து பிராணன்களையும் குறிக்கும்.

அந்நான்கும் முறையே பரமனின் அருளாலும், அன்னையின் அருளாலும், திக்குத்திசைகளின் அதிபதிகளான எட்டு திக்கங்கர்களாலும், பத்து பிராணணன்களாலும் மங்களம் உண்டாகட்டும்- எனப் பொருளாகும்.

**க** - எனும் பரமனின் (பரமாத்மாவின்) நிழலே **க்க** எனும் பிராணன். பத்து பிராணன்கள் அதாவது பத்துக்கோடுகளால் வெளிப்படும் பதினாறு கட்டங்கள் கொண்டதொரு வடிவமே பிரபஞ்சக் குறியீடாகும். அந்தப் பதினாறு கட்டங்கள் பரமபுருஷரின் அங்கங்களுடன் ஒப்பிடுவர்.

அப்பதினாறு கட்டங்களிலிருந்து வெளிப்படும் **ஸ்வஸ்திக்** வடிவம் எட்டுத் திசைகளை நோக்கி வரையப்பட்ட கோடுகளின் ஒருங்கிணைந்த வடிவமாகக் காட்சி தரும் இச்சின்னம் இருவகைப்படும்.

முதல் வகையில், மையத்திலிருந்து வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய நான்கு திசைகள் நோக்கியபடி நீண்ட கோடுகள் வலது புறமாகத் திரும்பி, முறையே வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு ஆகிய நான்கு திசைகளைச் சென்றடைந்து, நான்கு கரங்களுடையதொரு வடிவமாகக் காணப்படுகிறது.

இத்தகைய வடிவம் ஆண் தத்துவத்தையும், முதன்மை தெய்வமான (இடையூறுகளை அகற்றும் ஈசுவரன்) விக்னேசுவரன் எனும் விநாயகப் பெருமானையும், வியாபிக்கும் தத்துவத்தையும் உணர்த்துவதாகும்.

இரண்டாம் வகையில், மையத்திலிருந்து வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு ஆகிய நான்கு திசைகள் நோக்கியபடி நீண்ட கோடுகள் இடது புறமாகத் திரும்பி, முறையே வடமேற்கு, வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு ஆகிய நான்கு திசைகளைச் சென்றடைந்து, நான்கு கரங்களுடைய தொரு வடிவமாகக் காணப்படுகிறது.

இத்தகைய வடிவம் பெண் தத்துவத்தையும், வடதிசை நோக்கும் பெண் தெய்வமாகிய காளியையும், ஒடுங்கும் தத்துவத்தையும் உணர்த்துவதாகும்.

மேற்கூறிய இரு வகையான ஸ்வஸ்திக் சின்னங்களைப் பற்றியக் குறிப்பு, இந்தியாவின் பழமையான குறிப்புக்களின் பதிவேடுகளைப் பாதுகாக்கும் இங்கிலாந்து நாட்டின் அலுவலகத்தில் உள்ளதாக அறியப்படுகிறது.

பொ.ஆ.மு. 3500-1500-யைச்சார்ந்ததாக கருதப்படும் சிந்து வெளி நாகரீக சின்னங்களில் பல்வேறு விதமான சுவஸ்திக் வடிவங்கள் அகழாய்வில் கண்டறியப்பட்டுள்ளன. அச் சின்னங்களில் ஒன்றான, எச். 165- க்கும் தமிழகத்தில், தி.லெ.சு.ச.போஸ் கண்டறிந்த திருச்சி மாவட்டம், திருநெடுங்களம் 16 சுவஸ்திக் வடிவத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பு நோக்கத்தக்கது.



பூமியின் சூழற்சியால் ஏற்படும், ஒவ்வொரு நாட்களின் சூரிய உதயம், நடுப்பகல், சூரிய அஸ்தமம், நடு இரவு ஆகிய நான்கு காலங்களை ஸ்வஸ்திக் சின்னத்தின் நான்கு கரங்களுடன் ஒப்பிட்டு அவை துஷ்ட சக்திகளிடமிருந்து காக்கும் சக்தியுடையதாக கூறப்படுவதுண்டு.17

பெர்ட்ரண்ட் என்ற மேலை நாட்டு ஆய்வு அறிஞர் தனது பல்லாண்டு கால ஆய்வின் வெளிப்பாடாக, ஸ்வஸ்திக என்ற சொல்லும், சின்னமும் ஆரியர்களின் காலத்திற்கும் முற்பட்டது எனக் குறிப்பிடுகிறார்.

பேராசிரியர் மாக்ஸ் முல்லர் இச் சின்னம் இந்தியாவில் தோன்றியது எனவும் பண்டையக்கால சமஸ்கிருத இலக்கணத்தின் தந்தையாகப் போற்றப்பட்ட பாணினி முனிவரின் சூத்திரங்களில், இலக்கணத்தில் ஸ்வஸ்திக சின்னம் ஒரு குறியீடாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வடஆப்பிரிக்கா மீது போர் தொடுக்கச் சென்ற ஜுலியஸ் சீசரது போர்ப்படை வீரர்கள் ஸ்வஸ்திக சின்னத்தை ஏந்திச் சென்றதாகவும், யூதமக்களை எகிப்திலிருந்து இஸ்ரேல் நாட்டிற்கு வழிகாட்டி அழைத்துச் சென்ற ஆப்ரகாமின் வம்ச வழியினர் ஸ்வஸ்திக சின்னத்தைத் தம்மோடு எடுத்து வந்தனர் என்பதாகவும், மொகலாய மன்னர் பாபர் ஆக்ராவில் ஸ்வஸ்திக வடிவில் தோட்டம் ஒன்றை அமைத்தார் என்பதாகவும், போர்க்களங்களில் அமைக்கப்படும் பாசறைகளும் பாதுகாப்பாக ஸ்வஸ்திக வடிவத்திலேயே அமைக்கப்பட்டன என்பதாகவும் ஆய்வாளர்களின் ஆய்வுக் குறிப்புக்களின் வாயிலாக அறிய முடிகிறது.

இத்தகைய சிறப்புகளுடைய ஸ்வஸ்திக சின்னத்தை **மாயச்சக்கரம்** எனக் குறிப்பிடப்படுவதுண்டு.

நம் தமிழகத்தில் தத்தம் குடியிருப்பு வீடுகளின் வாயில் நிலைக் கால்களில் ஸ்வஸ்திக சின்னத்தை வரைந்து வணங்கி வழிபடுவது பழங்கால மரபு.

வருடாந்திரவியாபாரக்கணக்கேடுகளின்முதல்பக்கத்தில்ஸ்வஸ்திகசின்னத்தை மஞ்சள் சாந்தால் வரைந்து, அதன் மய்யத்தில் குங்குமத் திலகமிட்டு புது வருடக் கணக்கைத் துவங்கும் மரபை இன்றளவும் வணிகப் பெருமக்கள் தொடர்ந்து கடைபிடிப்பது குறிப்பிடத்தக்கது.

குழந்தை பிறந்து ஆறாவது நாளன்று ஸ்வஸ்திக சின்னம் கொண்ட துணியில் தொட்டில் கட்டி முதன்முதலில் அக்குழந்தையைப் படுக்க வைப்பது, குஜராத் மற்றும் சில வட மாநிலங்களில் இன்றும் கடைபிடிக்கப்பட்டு ஒரு சடங்காகவே நிகழ்கிறது.

முற்காலத்தில் இறந்தவர்களை மண்ணில் புதைக்கப் பயன்படுத்தப்பட்ட முதுமக்கள் தாழிகளில் ஸ்வஸ்திக சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளதைத் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் வாயிலாக அறியமுடிகிறது.

யோக நிலையில் அமர்வதற்கு (ஸ்வஸ்திக - கோமுக - பத்ம - வீர - ஸிஹ்ம - பத்ர - முக்த - மயூராக்க்யா ஆஸனான்யஷ்டௌ : ) ஸ்வஸ்திக, கோமுகம், பத்மம், வீரம், ஸிஹ்மம், பத்ரம், முக்தம், மயூரம் என முக்கியமான எட்டு ஆசனங்கள்[18] உண்டு என சாண்டில்யோபநிஷதம் கூறுகிறது. (ஸ்வஸ்தி காஸன:) ஸ்வஸ்தி எனும் ஆசனத்தில்[19] அமர்ந்து மேற்கொள்ளும் யோகப் பயிற்சியைப் பற்றி ஜாபாலதர்சனோபநிஷதம் விவரிக்கிறது.

பழங்காலம் முதல் தற்காலம் வரை பெரும்பாலான நிகழ்வுகள் மற்றும் சடங்குகள் அனைத்திலும் முக்கிய அங்கம் வகிக்கும் ஸ்வஸ்திக சின்னம் ஓர் மங்கலகரமானது என்பதற்கு மேற்கண்டவை மிகச் சிறிய சான்றுகளாகும்.

திருச்சி திருவெள்ளறையில் பொ.ஆ. 801-ல் கட்டப்பட்டுள்ள ஸ்வஸ்திக வடிவ மாற்பிடுகு பெருங்கிணறு ஒன்று, இச் சின்னத்தின் சிறப்பிற்கு மிகச்சிறந்த சான்றாகக் கருதலாம்.

## இரண்டு குத்துவிளக்குகள்

பூலோகத்தில் பிறவி எடுத்த ஒவ்வொரு மானிடரும் தத்தம் கர்ம வினைகளுக்கு ஏற்ப அவர் தம் கடமைகளை நிச்சயமாக செய்து முடிக்க வேண்டும். அதனைச் செய்யத் தவறுவோருக்கு அருள் ஒளி கிடைப்பதில்லை. மருள் என்ற இருளில் கிடந்து உலவ வேண்டி இருக்கிறது எனப் பேராசான் திருவள்ளுவரின் கீழ் கண்டத் திருக்குறள் கூறுகிறது.

பொருள் அல்லவற்றைப் பொருளென்று உணரும்

மருளானாம் மாணாப் பிறப்பு.

உலகத்தைப் பலர் பலவிதமாகப் பார்க்கிறார்கள். இந்த வேறுபாட்டை இல்லாத பொருள்களிலிருந்து தெரிந்து கொள்ள முடியாது. இருக்கின்ற பொருள்களிலிருந்துதான் அவற்றைத் தெரிந்து கொள்ளமுடியும். ஞானம், நேயம், ஞாதுரு எனும் அறிவு; அறியப்படும் பொருள்; அறிபவர்; ஆகிய மூன்றையும் பகுத்து உணர வேண்டும். எல்லாம் மாயை என்று சொல்லுகிற மாயாவாதக் கொள்கையும் தவறானது. மனதுக்குப் புறம்பாக வேறு உலகம் இல்லை என்ற கொள்கையும் தவறானது. பொருள் வேறாகவும், அதை அறிந்து கொள்கிற மனம் வேறாகவும் இருப்பதனால் தான் அறிவு வளர்கிறது என்றார் சுவாமி விவேகானந்தர்.

உயிர், உலகம், இறைவன் எனும் மூன்றும் உண்மை, இயற்கை, உறுதி, (பசு, பாசம், பதி) என நிச்சயிக்கப்பட்டுள்ளது. மனமானது உண்மையை உணரும்போது அறிவு வளர்கிறது. அறிவு வளர்வதால் ஞானம் உதயமாகிறது எனப் பதஞ்சலியோகம் கூறுகிறது.

மேற்கண்டவாறு அறிவு வளர்வதையும், ஞானம் உதயமாவதையும் குறிப்பிடுவதே குத்துவிளக்கேற்றி வழிபடுதலின் உட்பொருளாகும். அங்ஙனம் பெண்கள் வழிபடும் போது, இறைவா! என்னை இருட்டில் இருந்து வெளிச்சத்திற்குக் கொண்டு வருவாயாக. அறியாமையில் இருந்து ஞானநிலைக்குக் கொண்டு வருவாயாக, என இறைவனின் அருள் வேண்டி வணங்குவர்.





அனைத்து சுபகாரியங்களை ஆரம்பிக்கும் போது முதலில் குத்துவிளக்கேற்றித் துவங்குவது இந்து சமய மரபு. குத்துவிளக்கேற்றி வழிபடுதலால் சர்வமங்கலம் உண்டாகும் என்பது இந்துக்களின் பரிபூர்ணமான நம்பிக்கையாகும்.

அதாவது தீப ஒளியில் தேவியை வழிபட்டால் இலக்குமி கடாக்ஷமும், நோயற்ற வாழ்வும், சர்வமங்கலமும் நமக்கு சர்வமங்கலியான தேவி அருள்வாள் [20] என ஸ்ரீ தேவி பாகவதம் கூறுவதே அப்பரிபூர்ண நம்பிக்கையாகும். திருத்தலங்களில் பெண்கள் ஒன்று கூடி, குத்துவிளக்கேற்றி, அன்னையின் புகழ்பாடி, வணங்கி, வழிபடும் 108, 1008 திருவிளக்குப் பூசை அதற்கானதொரு சிறந்த சான்றாகும்.

திருச்சிமாவட்டம், மேலரசூரில் உள்ள சிவாலயத்தில் தி.லெ.சு.ச.போஸ் கண்டறிந்த கல்தூண், திருச்சி - முசிரி செல்லும் நெடுஞ்சாலையின் வடபுறமுள்ள துடையூருக்கு அண்மையில் உள்ள ஸ்ரீமகா விஷ்ணுவின் ஆலயத்தைச் சார்ந்ததும், கி.ஸ்ரீதரன் கண்டறிந்ததுமான கல்தூண் ஆகிய இரண்டில் காணப்படும் அழகிய இரண்டு குத்து விளக்குகளின் புடைப்புச் சிற்பங்களைக் காணலாம். மேலரசூர் கல்தூணிலுள்ள வட்டவடிவம் பாணிமுக்தா எனும் எரிந்து தாக்கும் சக்ரா எனும் அரியதொரு ஆயுதம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நன்றி: இந்து சமய அறநிலையத் துறை.)

## பூர்ண கும்பம்

ஆலயங்களை மகா புருஷனின் உடலுடன் ஒப்பிடுவர். ஆலயத்தின் கோபுரத்தை மகா புருஷனின் நின்ற நிலையிலும், திருக்கோபுரம் முதல் கர்ப்பகிரகம் வரையிலான பகுதிகளை அவரின் கிடந்த நிலையில் ஒப்பிட்டு அமைக்கப்பட வேண்டும் என்ற ஆகமவிதி முறைகள் முன்பகுதியில் பேசப்பட்டன. அம் மகாபுருஷனது உடலை மானுட உடலுடன் ஒப்பிட்டு, அசுத்தமான மானுட உடலை உள்ளும் புறமும் சுத்தப்படுத்தப்பட வேண்டும் என்பதை பூண்யாஹவாசனம் என்பர். அந்த தேகமாகிற தேவாலயத்தின் புண்யாஹவாசனம் பற்றி சிவானந்த லஹரீ [21] விவரிக்கிறது. அதுவானது:

*பக்தோ பக்திகுணாவ்ருதே முதம்ருதா பூர்ணே ப்ரஸன்னே மன:-*

*கும்பே ஸாம்ப தவாங்க்ரி - பல்லவயுகம் ஸம்ஸ்த்தாப்ய ஸம்வித்பலம்:*

*ஸத்வம் மந்த்ர -முதீரயந்- நிஜசரீராகார- சுக்திம் வஹன்,*

*புண்யாஹம் ப்ரகடீகரோமி ருசிரம் கல்யாண - மாபாதயன். (36)*



பார்வதியுடன் கூடியவரே ! பக்தனாகிய நான், பக்தியாகிய நூல் சுற்றப்பட்டதாயும், சந்தோஷமாகிற தீர்த்தம் நிறைந்ததாயும், பிரகாசம் பொருந்தியதாயும் உள்ள, மனதாகிய குடத்தில், உம்முடைய இரு திருவடிகளாகிய மாவிலைகளையும், ஞானமாகிய தேங்காயையும் வைத்து, சத்துவ குணத்தை வளர்க்கும் பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜபித்து, எனது தேகமாகிய வீட்டிற்குப் பரிசுத்தத்தை உண்டாக்கு பவனாய், மனதிற்கு உகந்த மங்கலத்தைத் தேடுபவனாய் இப்படிப் பட்ட புண்யா ஹவாசனத்தை வெளியிடுகிறேன்- என்பது மேற்கண்ட பாடலின் பொருளாகும்.

அதாவது, எவ்வாறு அசுத்தமடைந்த ஓர் குடியிருப்பு வீடு புண்ணியாஹவாசனம் செய்வதன் வாயிலாக புனிதமடையச் செய்யப்படுகிறதோ, அவ்வாறே அசுத்தமடைந்த உடலை உள்ளும் புறமும் புனிதமாக்குவதற்கான ஆத்யாத்மிகமான புண்யா ஹவாசனம் செய்வதற்கு தேவையானவை அனைத்தும் இங்கேயே உள்ளன.

அதற்கான குடம், நீர், தேங்காய், மாவிலைகள் ஆகியவை எல்லாம் உள்ளேயே சித்தமாக இருப்பதால் வெளிப்பொருள்கள் தேவையற்றன என விவரிக்கிறது.

தங்களது வீடும், பரிசுத்தமான தேகமுடையோர் வாழும் வீடு போன்று அமைய வேண்டும் என்பதற்காகவே இந்துக்கள் தத்தம் குடியிருப்பு வீட்டின் வாசல் கதவு நிலைகளின் மேலே பூர்ண கும்பத்தின் வடிவத்தை இடம்பெறச் செய்வது நம் பழங்கால மரபாகும்.

மேலும் பூர்ண கும்பம் மங்களகரமானது மட்டுமின்றி, அருள்மிகு அன்னையின் சின்னமாகவே கருதப்படுகிறது.[22]

பூர்ணகும்ப மரியாதையுடன் ஒருவரை வரவேற்பது மிகவும் சிறப்பான செயலாகும்.[23] பூர்ணகும்பத்தை அமிர்தம் நிறைந்த குடம் மற்றும் கலசம் என்பர். இந்துக்கள் அக்கலசத்தை வழிபாட்டிற்குரிய ஒரு குறிப்பிட்ட தெய்வத்தின் திருஉருவமாக கருதி வழிபடுவதுண்டு.

மேலும் செல்வத்தை வழங்கும் ஸ்ரீ லட்சுமியையும் பிரம்மஞானத்தை போதிக்கும் ஈசனையும் குறிக்கும் சின்னமாகவும் கூறுவர்.

நகரத்தாரால் திருப்பணி செய்யப்பட்ட ஆலயங்களில் காணப்படும் விருத்தஸ்டித அமைப்புடைய அழகிய (கலசக்கும்ப) வடிவத்தை **கும்பலதா** என்பர். லதா என்பதற்கு கொடி என ஸ்தபதிகள் சுட்டிக்காட்டுவர்.[24]

## இடபம்-ரிஷபம்-நந்தி



சிற்பிகள், ஈசனை உமையம்மையுடன் இடபம் எனும் ரிஷபத்தின் மீது அமர்ந்த நிலையில் சித்திரித்தது காட்டுவர். அதில் ஈசன் தமது நான்கு கரங்களில், மேற்புற வலது மற்றும் இடது கரங்களில் முறையே பரசு, மானையும், கீழ்ப்புற வலது கரத்தில் சூலத்தையும் இடது கரத்தை உடலோடு சேர்த்து கொண்டிருப்பார்.

இத்தோற்றத்தை ரிஷபருத்திரர் என்பர். **வ்ருஷபத்வம்**[25] என்பதற்கு ஈசனது விருஷபத்தன்மை எனப் பொருள். இத் தோற்றத்தில் ஈசன் பக்தர்களுக்கு வறுமையை நீக்கி வேண்டியவை அனைத்தும் கிடைக்கும் பொருட்டு எழுந்தருளி இருப்பதாகக் கூறுவர்.

இத்தோற்றத்தில் ஈசன் பக்தர்களுக்கு வறுமையை நீக்கி வேண்டு பவை யாவும் கிடைக்கும்படியாக வரம் அளிக்க வல்லவர் என அவரது பெருமையை[26] மயமதம் எனும் சிற்ப சாஸ்திர நூல் குறிப்பிடுகிறது.



இறைவனின் வாகனமாக நந்தியைத் திருமுற்றங்களில் எழுந்தருளியுள்ள ஈசனை நோக்கி அமர்ந்த நிலையில் இருப்பதாக அமைக்க வேண்டுமென சிற்பசாஸ்திரம் கூறுகிறது. சிவகணங்களின் தலைவனாகிய நந்தியை **சந்தோஷம் - மகிழ்ச்சி - ஆனந்தம்** ஆகியவற்றுடன் ஒப்பிடுவர். நந்தியின் வடிவத்தை மனிதனின் ஆண்மை, மிருகத்தன்மையின் வலிமை, ஆகியவற்றுடன் ஒப்பிடுவர்.

நந்தி, தனது பார்வையை இறைவனை நோக்கியும் அதனது முகம் மட்டும் சற்றே திரும்பியவாறு அமர்ந்திருக்கும். அதற்கு மனிதனின் மிருகத்தன்மையே ஜீவனை இறைவனை விட்டு விலகி செல்லச் செய்கிறது.

ஆனால் இறைவனின் கருணை மனமோ ஜீவனை (ஜீவாத்மாவை) அங்ஙனம் விலகிச் செல்லாமல் தம்மோடு தடுத்தாட் கொள்கிறது என்ற தத்துவத்தை உணர்த்துவதாகப் பொருள் கூறப்படுகிறது.

மேலும் நல்லொழுக்கத்தையும் தர்மத்தையும் உணர்த்தும் நந்தியின் வடிவத்தை[27] வணங்கி வழிபட்டு ஆலயத்திற்குள் செல்ல வேண்டும் என்பதை, நந்திஎம்பிரான் முதற்கணநாதர்கள் நலங்கொள்பன் முறைகூட,அந்தமில்லவர் அணுகிமுன்தொழு அணுக்கனாந் திருவாயில் - எனப் பெரிய புராணம் (2062) கூறுகிறது.

ரிஷபத்தை தர்மத்தின் சின்னமாகவும், அதனது நான்கு கால்கள் **சமம்**, **விசாரம்**(கவலை), **சந்தோஷம்**, **சாதுரங்கம்** (மாணிக்கவகை) எனும் நான்கு குணங்களுடன் ஒப்பிட்டு, ஈசன் ரிஷபத்தின் மீது அமர்ந்து மேற்கண்ட தர்மத்தைக் காக்கும் நான்கு குணங்களைக் கொண்டுள்ள அனைத்து உயிர்களுக்கும் அருள் புரிகிறார் எனக் கூறப்படுவதுண்டு.

**கண்ணாடி**

கண்ணாடியை **தர்பனா**[28] எனக் குறிப்பிடுவர். இதனை நிலையற்ற இவ்வுலகத்தின் மாயத் தன்மையுடன் ஒப்பிட்டு நிர்மல ஞானத்தையும் சூரியனைச் சுட்டிக் காட்டும் சின்னம் என்பர். இதனை ஈசன் தமது இடது கரத்தில் கொண்டிருப்பதை அவருடைய தோற்றமற்ற அருவ நிலையைக் குறிக்கும் என்பர்.

இச்சின்னம் துர்க்கையின் அச்சுறுத்தும் கோரத் தன்மையைக் குறிப்பிடுவதாகக் கருதப்படுகிறது.



மனமாகிய கண்ணாடியைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். அதனால் மெய்பொருளின் தரிசனம் உள்ளது உள்ளபடியே அதில் (பிரதிபலிக்கும்) தெரியும். ஆகவே அங்கும், இங்கும் ஓடி ஆற்றலை வீணாக்காமல், கண்ணாடியைத் (மனதைத்) தூய்மையாக வைத்துக் கொள்வதில் ஆற்றலைச் செலவழிப்பதே மேலாகும் - என சுவாமி விவேகானந்தர் கூறுகிறார். [29]



## வலம்புரிச் சங்கு

சங்கின் சுழியின் அமைப்பைக் கொண்டு இடஞ்சுழிச் சங்கு, வலஞ்சுழிச் சங்கு என வேறுபடுத்தப்படுகிறது.

**சுழி** என்பதற்கு **சுழலுகை; அங்கச்சுழி; கடல்;** எனப் பொருள்படும். சுழி என்பதற்குப் பதிலாக சுருள் எனப்படும் **புரி** என்றச் சொல்லை இணைத்து இடம்புரிச் சங்கு, வலம்புரிச் சங்கு எனவும் குறிப்பிடுவர். வலம் புரிச் சங்கு, இப் பிரபஞ்சத்திலுள்ள விரிவாக்கும் சக்தியுடனும், அறியாமையை அகற்றும் வல்லமை உடையதாகவும், இடம் புரிச் சங்கு பிரபஞ்சத்தின் ஒடுக்கத்தையும் உருத்திரனைச் சுட்டிக் காட்டுவதாகவும் கூறப்படுகிறது.

சங்கின் ஓடு கடினமாக இருந்தால் அது ஆண் தத்துவத்தையும், மெல்லியதாக இருந்தால் அது பெண் தத்துவத்தையும் குறிப்பிடுவதாகக் கருதப்படுவதுண்டு. ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் கரத்திலுள்ள சங்கை **பாஞ்சஜன்யம்** என்பர்.

கோலார் மற்றும் தெலுங்கு தேசத்தில் வேளாண்மை புரிந்த ஓர் பிரிவினருக்கு சங்கு ஒரு அடையாளச் சின்னமாக இருந்துள்ளது. சிற்பிகள் சங்கின் மேலேயும் இருபுறமும் தீ கொழுந்துகளுடனும் சிற்ப கலை வேலைபாடுகளுடன் அலங்கரித்து அதனை சிறப்புப் பெறச் செய்வர்.

சங்கிலிருந்து வெளிப்படும் ஒலியின் முழக்கம், ஆக்கல் தொழிலைக் குறிக்கும் சின்னம்[30] எனக் கூறுவர். வெண்மையான சங்கிலிருந்து வெளிப்படும் ஒலி யோகிகளின் தனிச் சிறப்பை வெளிப்படுத்துவதாகவும் கருதப்படுகிறது.[31]

புதிதாகக் கட்டப்பட்ட வீட்டின் நுழைவாயிலின் தரையில் சங்கைப் பதித்து பூசிப்பது இந்து சமய மரபாகும்.

பழங்காலத்தில் சங்கை முழங்கி, ஓர் செய்தியை பிரகடனம் செய்வதும், யுத்தத்தை ஆரம்பிப்பதும், அக்னி குண்டங்களில் யாகம் வளர்ப்பதும், இந்து சமய சடங்குகளைத் துவங்குவதும் ஓர் மரபாக இருந்துள்ளது. இத்தகையச் சிறப்புக்களுடைய வலம்புரிச் சங்கின் அழகிய வடிவத்தைக் கரூர் மாவட்டம், வீரக்கணம்பட்டி, குடிவண்டை ஈசுவரன் பாறையில் பொறிக்கப்பட்டுள்ள பொ.ஆ. 800- 900 ஐ சார்ந்ததும், கரூர் பாலசுப்ரமணியன் அவர்களால் கண்டறியப்பட்டதுமான கல்வெட்டின் (படம், ப.86) கீழ்ப்பகுதியிலுள்ள குறியீடுகளின் நடுவே காணலாம்.



### தாமரை மலர்

அகில உலகமும் தாமரை மலரை ஒரு புனிதமான மலராக ஏற்றுக் கொண்டுள்ளது. அதற்கு மிகப் பழமையான சான்றாக, மூ எனும் மூத்தமக்கள் விட்டுச் சென்ற குறியீடுகளில் தாமரை மலரின் வடிவமும் ஒன்றாகும். பூ வகைகளில் ஒன்றான தாமரை மலர், மூ எனும் மூத்தகுடி மக்களைக் குறிப்பிடுவதாகும்.

இதுவே பூமியில் முதன்முதலில் தோன்றிய மலர் என்பதால் இதனை பூமித்தாயின் சின்னமாகவே நம் முன்னோர்கள் கருதினர், என ஜேம்ஸ் சர்ச்வார்டு தமது தி லாஸ்ட் சான்டினென்ட் ஆப் மூ என்ற நூலில் பதிவுசெய்துள்ளார்.

தாமரை மலரானது ஆகாயம், காற்று, நீர் மற்றும் பூமி ஆகிய நான்கிலும் செழித்து வளரக்கூடியது. இதன் இலைகள் தண்ணீரில் இருந்தாலும் அவற்றின் மீது நீர்த்துளிகள் ஒட்டாதது[32] இம்மலரின் புனிதமான தன்மைகளில் ஒன்றாகும்.

இத்தன்மையை ஆன்மிக ரீதியில், மனிதன் உலகப்பற்றற்று வாழவேண்டும் என்பதற்கு உதாரணமாக சுட்டிக் காட்டப்படுவதுண்டு. அழகான பல இதழ்களாக விரியக்கூடிய அற்புதமான இம் மலரின் செயலை யோக நிலையில் குண்டலினி சக்தியுடன் ஒப்பிடுவதும், ஒவ்வொரு ஆதாரங்களை இம்மலரின் இதழ்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டு இறுதியில் ஆயிரம் எனச் சுட்டிக்காட்டுவதும் இதனது தனிச்சிறப்பாகும்.


தாமரையின் மேல் நோக்கும் இதழ்கள் ஞானத்தையும் கீழ் நோக்கும் இதழ்கள் அறியாமையையும் குறிப்பிடுவதாகக் கருதுவோரும் உண்டு.

**ஶ்ரீ** எனும் சரஸ்வதியை, தட்டு போன்ற தாமரை மலரில் வீற்றிருக்கும் அன்னையே! எனக்குறிப்பிடுவதும், படைப்புக் கடவுளான பிரம்மன் தாமரை மலரில் அமர்ந்து இருப்பதாகக் குறிப்பிட்டு இம்மலரின் சிறப்பை அனைவரையும் அறியச் செய்வர்.

தாமரை மலரின் சிறப்பைச் சாந்தோக்ய உபநிடதம் மிகவும் அழகாகக் கூறுகிறது. அதுவானது; இந்த உடம்பினுள் தாமரை போன்ற மாளிகை உள்ளது. அதனுள் அகவெளியுள்ளது. அதில் இருப்பதைத் தேடவேண்டும்...(புற) வெளி எவ்வளவு பெரியதோ இதயத்தின் உள்ளே உள்ள (அக) வெளியும் அவ்வளவு பெரியது. இந்த வெளியில் ஆன்மா உள்ளது, என்கிறது.

## நூல் குறிப்புக்கள்


1. வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல்
2. மெய்யப்பன் தமிழ் அகராதி
3. S.K. Ramachandra Rao, Vastu-Silpa- Kosha (part-2),ps. 263,264
4. வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல்
5. ibid, ப.123
6. சூடாமணி நிகன்டு, பா. 12.90
7. J.R. Santiago, Sacred Symbols of Hindusim p.71
8. ibid,
9. அண்ணா, 108 உபநிடத் சாரம் (2-ஆம் பாகம்), ஸீதோபநிடதம்,சூ. 4
10. வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல்,ப.133
11. அண்ணா, 108 உபநிடத் சாரம்( 2-ஆம் பாகம்), ஸ்ரீ இராமபூர்வதாபின்யுபநிடதம்,சூ. 4
12. சூடாமணி நிகண்டு, பா. 1.5
13. வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல்,ப.133
14. Swami Harshananda Principal Symbols of world Religions, p. 2
15 Bruno D. Agens (translation) Mayamata, p. 216
16. தி.லெ.சுபாஷ் சந்திர போஸ், கா.பாலகிருஷ்ணன், வை.இராம்குமார், உருவதிகாரம், ப.78
17. Swami Harshananda Principal Symbols of world Religions, p. 25
18. அண்ணா, 108 உபநிடத் சாரம் (3-ஆம் பாகம்),சாண்டில்யோபநிடதம், சூ.1
19. அண்ணா, 108 உபநிடத் சாரம் (3-ஆம் பாகம்),ஜாபாலதர்சனோபநிடதம், சூ.5
20. ப்ரஹ்ம ஸ்ரீ வ.கை. கேதாரீச்வர சர்மா (தொகுப்பு) ஸ்ரீ தேவி பாகவதம் தீப ஒளியில் தேவிப. 156
21. அண்ணா, சிவானந்த லஹரீ பாஷ்யம் (சு.36)
22. Swami Harshananda Principal Symbols of world Religions, p. 20
23. ibid, ps. 20-21
24. ஸ்தபதி வே. இராமன், பழங்காசு- இதழ்-4, திருக் கோயிலைத் தெரிந்து கொள்வோம், ப. 59
25. அண்ணா, சிவானந்தலஹரீ பாஷ்யம், சூ. 82. ப.123
26. Bruno D. Agens (translation) Mayamata, Iconography verses. 36.62 b-64, p. 347-348
27. Swami Harshananda Principal Symbols of world Religions, p. 18
28. J.R.Santiago/ Sacred Symbols of Hindusim, p. 67.
29. சுவாமி விவேகானந்தர் ஞான யோகம், பன்மையில் ஒருமை, ப. 223.
30. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல் ப. 130
31. J.R. Santiago, Sacred Symbols of Hindusim,p.58
32. அண்ணா, 108 உபநிடத் சாரம் (2-ஆம் பாகம்), யோக சூடாமணி உபநிடதம், சூ.88

கரூர் மாவட்டம், வீரக்கணம்பட்டி, குடிவண்டை ஈசுவரன் பாறை கல.வெட்டு.

## ஆயுதங்களும் பிற சின்னங்களும்

சூலந்தண்டு ஒள்வாள் சுடர்பறை ஞானமாய்
வேல்ம்பு தமருக மாகிளி விற்கொண்டு
காலம்பூப் பாசம் மழுகத்தி கைக்கொண்டு
சோலஞ்சேர் சங்கு குவிந்தகை எண்ணதே (திருமந்திரம் 1398)

திரிசூலம், கதை, வாள், ஒளிவிடும் ஞானவடிவமாகிய வேலாயுதம், அம்பு, உடுக்கை, கிளி, வில், நீண்டகாம்புடைய தாமரைப்பூ, பாசக்கயிறு, மழு, கத்தி, அழகிய சங்கும் கொண்டு, தனது திருவடி சுட்டிநிற்கும் திருக்கோலமுடையவளாய் விளங்கும் அன்னையை எண்ணித் துதிப்பாயாக எனக் கூறும் திருமந்திரத்தின் வாயிலாக தெய்வத் திருஉருவங்களின் திருக்கரங்களிலுள்ள ஆயுதங்களையும் பிற சின்னங்களையும் போர் கருவிகள் என்றோ, அச்சுறுத்தும் வடிவங்கள் என்றோ கருதாமல், அவை ஜீவன்களைத் தீய சக்திகளிடமிருந்து பாதுகாத்து, உலகைப் பற்றை அறுத்து, அறியாமை எனும் இருள் அகற்றி, அறிவொளி காட்டி, முக்தி பெறுவதற்கு உய்யநெறி காட்டுபவையாகும் என அறியலாம்.

### இரட்டை சின்னங்கள்

சில சின்னங்கள் இரட்டையாகவே இருக்கும். அதற்கு; மான் - மழு, பாசம் - அங்குசம், வில் - அம்பு, கத்தி - கேடயம், சங்கு - சக்கரம் ஆகியவை உதாரணங்களாகும்.

### தச (பத்து) ஆயுதங்கள்

சில குறிப்பிட்ட ஆயுதங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை தசாயுதங்கள் என சிற்பச் செந்நூல் **2** பட்டியலிட்டுள்ளது ஈண்டு நோக்கத்தக்கது.

சைவம், சாக்தம், கௌமாரம், சௌரம், வைணவம் ஆகியவை சனாதன தர்மம் எனும் இந்து சமயத்தின் உட்பிரிவுகள் என்ற அடிப்படையில் அவற்றைச் சார்ந்த ஆயுதங்கள், பிறச் சின்னங்கள் ஆகியவைப் பற்றியக் குறிப்புக்கள் இப்பகுதியில் பேசப்படுகின்றன.

### சூலம்- திரிசூலம்-திரிரத்னா

பொதுவாகச் சிவசக்தித்தத்துவத்தை குறிக்கும் சூலம், திரிசூலத்திற்கு மூவிலை, நெடுவேல், முத்தலை வேல் எனவும், அதன் மய்யம், இருபக்க கிளைகள் ஆகிய மூன்றை முறையே பிரம்மா-**ஜெனனி** (ஆக்கல்), விஷ்ணு - **ரோதயித்ரி** (காத்தல்),

உருத்திரன் -**ஆரணி** (அழித்தல்) ஆகிய தத்துவங்களையும், சத்துவ, ரஜோ, தாமசம் ஆகிய முக்குணங்களையும் குறிக்கும். அச்சின்னம் கொற்றவைக்கும் உரிய சின்னமாகும்.[3]

சைவம், சாக்தம், ஆகிய இரண்டு சமய சார்புடைய சின்னங்களின் உட்பொருளில் வேறுபாடுகள் இருப்பதில்லை. சாக்தம் கூறும் தாரா என்ற பெண்தேவதை பற்றி பௌத்த சமயத்திலும் பேசப்படுகிறது.

அதன் அடிப்படையில் இதைப் பொதுவானதொரு சின்னமாகவும் சூலம் (சைவம்)- திரிசூலம் (சாக்தம்)- திரிரத்னா (பௌத்தம்) எனக் கருதலாம்.

மேலும் அம் மூன்றும் ஒரு தண்டாவிலிருந்து மூன்று கிளைகளாகப் பிரிவது போன்ற அமைப்புடையவை.

இதன் பக்கவசத்திலுள்ள இரு கிளைகளின் அமைப்பிலுள்ள சிறிய வேறுபாடுகளைப் போலவே அதன் உட்பொருளிலும் மிகச் சிறிய வேறுபாடுகளே உள்ளன.

மையத்திலுள்ள கிளை அன்னையின் வடிவமாகும். அதாவது சலனத்திற்கு உட்பட்ட விமர்சனம் எனும் இயக்க சக்தியான பெண் சக்தியைக் குறிப்பிடுவதால் மையக்கிளையை சக்தி என்பர்.

**சக்தி**

சக்தியிலுள்ள ஒவ்வொரு சாய்ந்த சதுரங்களுக்குள்ளே நான்கு, ஆறு அல்லது எட்டு இதழ்களுடன் கூடிய இலைகளின் வடிவங்கள் சிற்ப வேலைபாடுகளுடன் காணப் படும். அம்மூன்றும் ஒரு தண்டு வடத்துடன் இணைக்கப் பட்டிருக்கும். அங்ஙனம் இணைக்கும் பகுதியில் தாழி, குடம், பலகை எனும் தூண் அணிகள் எனப்படும் சிற்பக் கலை உறுப்புக்கள் உடையதாக வடிவமைக்கப் பெற்றிருக்கும்.



அம் மூன்று சாய்ந்த சதுரங்களை- பிரம்மன், விஷ்ணு, உருத்திரன் எனும் வெளிப்படுதல், காக்கப்படுதல், ஒடுங்குதல் ஆகிய மூன்று தத்துவங்களுடன் ஒப்பிடுவர். அம் மூன்று தத்துவங்களைச் சத்வ, ரஜோ, தமோ ஆகிய முக்குணங்களாகவும் கார்ஹபத்யம், ஆஹவனீயம், தாக்ஷணாத்யம் எனும் மூன்று அக்னி சக்திகளாகவும் குறிப்பிடுவதுண்டு.

சக்தியின் ஆயுதமான இது ஸ்கந்தனின் ஆயுதமாகவும் கூறப்படுகிறது.[5] இச்சா, ஞான, கிரியா, ஆகிய மூன்று சக்தி ஆயுதத்தை வடிவமைப்பதில் உள்ள நுணுக்கங்களைச் சிற்ப சாஸ்திர நூல்கள் துல்லியமாக விவரிப்பது இதன் தனிச்சிறப்பை வெளிப்படுத்துவதாகக் கருதலாம்.

சக்தி ஆயுதம் யௌகிகம், லௌகிகம் என இருவகைப்படும்[6]. அரசன்,ஊர்மக்கள், தர்மகர்த்தா ஆகியோரின் நலன் கருதி நிறுவப்படும் சக்தி ஆயுதம் யௌகிகம் எனவும், கோயில்களில் தனியாகஓர் இடத்தில் பிற வேலைகளுக்காக நிறுவப்படும் சக்தி ஆயுதம் லௌகிகம் எனச் சிற்ப செந்நூல் கூறுகிறது.

## மய்யக் கிளை


மேற்கண்ட சக்தி எனும் மையக் கிளையிலிருந்து பக்கவசமாக இரண்டு கிளைகள் பிரிகின்றன. அவ்வாறு பிரிந்த வடிவங்களை சூலம் - திரிசூலம் - திரிரத்னா என மூவகைப்படுத்துவர். இவ் வடிவங்களின் மையக்கிளை சற்றே மாறுபட்டுக் காணப்படுவதுண்டு. குறிப்பாகச் சூலத்தில், சக்தியின் 45 பாகைகள் சாய்ந்த இரண்டு சாய்ந்த சதுரங்கள் மட்டும் சற்று நீண்ட இடைவெளியுடன் ஒன்றோடு ஒன்றெனப் பொருந்தியிருக்கும். அவ்விரண்டு சாய்சதுரங்களின் இருபுறங்கள் ஒரே ஒரு வளைவு கோட்டால் இணைக்கப்பட்டிருக்கும்.

சூலத்தின் மையக்கிளையின் நுனிக்குச் சற்று மேலே ஒரு துளை காணப்படுவதுண்டு. அந்தத் துளை திரிசூலத்தின் மையக்கிளையின் நடுவே அரிதாகக் காணப்படுவதுண்டு. அத் துளையானது அனைத்துக்கும் மூலஆதாரமாகிய பிந்து எனும் பிரம்மத்தைக் குறிப்பதாகும். திரிரத்னாவின் மையக்கிளை திரிசூலத்திலுள்ளது போலவே காணப்படும்.

சைவம், சாக்தம், பௌத்தம் சமய சின்னங்களான சூலம், திரிசூலம், திரிரத்னா ஆகிய மூன்றின் மையக்கிளை முறையே சத்வ குணம், ஞானசக்தி, தர்மம் ஆகியவற்றைக் குறிப்பிடுவதாகும்.

## இருபக்க வசக் கிளைகள்

மேற்கண்ட மையக்கிளையக் கொண்ட தண்டுப் பகுதியிலிருந்து இருபக்க வசமாகப் பிரியும் இருகிளைகள் பொதுவாக ஒடுக்கத்தைக் குறிப்பிடுவதாகும். சூலத்தில் இவ்விரு கிளைகள் மையக்கிளையை (சத்வ குணத்தை) நோக்கியும், திரிசூலத்தில் அதன் இருமுனைகள் சற்று விலகியும், திரிரத்னாவில் இவை இரண்டும் நன்றாகவே விலகியிருக்கும்.




இவ்விருகிளைகள் சூலம், திரிசூலம், திரிரத்னா ஆகிய மூன்றில் முறையே (சைவம்) ரஜோ, தமோ ஆகிய இரு குணங்களையும், (சாக்தம்) இச்சா சக்தி, கிரியா சக்தி ஆகிய இரண்டு சக்திகளையும், (பௌத்த சமயத்தில்) பௌத்தம், சங்கஹ ஆகிய இரண்டு தத்துவங்களையும் சுட்டும். திரிசூலம் போலவே காணப்படும் சூலக் குறியீடுகளை அதிக அளவில் காணலாம். அத்தகைய சின்னங்கள் சிவம் இல்லையேல் சக்தி இல்லை, சக்தி இல்லையேல் சிவம் இல்லை என்ற தத்துவத்தை உணர்த்துவதாகக் கருதலாம்.

## சூலத்தின் தண்டு

மேலே கண்ட மூன்று கிளைகள் தண்டில் பொருந்தும் இடத்தில் குண்டலம்[7], அல்லது தூண்களில் இடம்பெறும் சிற்பகலை உறுப்புக்களைக் கொண்டதாக அமையப் பெற்றிருக்கும். இந்த நீண்ட தண்டு பிரபஞ்ச சுழற்சியின் மைய அச்சைக் குறிப்பிடுவதாகும். இதனை மகாமேருவுடனும், குந்தலினி யோகத்தில் 33 கணுக்கள் கொண்ட மனித உடலின் முதுகு தண்டுவடத்துடனும் ஒப்பிடுவதுண்டு. அதற்கு உதாரணமாகத் திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரத்திற்கு அருகில் உள்ள அக்கரைப்பட்டிப் பாறையில் பொறிக்கப்பட்டுள்ள குண்டலினி யோக குறியீட்டைச் (படம், ப.93) சுட்டிக்காட்டலாம்.

## பீடம்

சூலம், திரிசூலம் ஆகிய இரண்டும் பீடத்துடனும் திரிரத்னாவில் மேல் நோக்கி விரிந்த இதழ்களை கொண்ட தாமரை மலரின் வடிவத்துடன் காணப்படுவதுண்டு.



பொதுவாகப் பீடத்துடன் கூடியவை குறியீடுகளைச் சிவன் அல்லது சக்தியின் ஆலயத்தையோ அல்லது பௌத்த மடத்தையோ குறிப்பிடுவதாகக் கருதலாம்.

மேலே ஒரு துளை, கீழே ஒரு பீடம், பரசு ஆகியவையுடன் கூடிய சூலத்தை து.கள்ளிக்குடியிலும், தாமரையை பீடமாக கொண்டதொரு திரிரத்னா, பரசு ஆகியவற்றை பூலாங்குறிச்சியிலும் காணலாம். அவற்றின் பீடங்கள் சிற்பக்கலை நயத்துடன் அமைக்கப் பட்டுள்ளது நோக்கத்தக்கது. (நன்றி: தமிழகத் தொல்லியல் துறை)

அவற்றில் தி.லெ.சு.ச.போஸ் கண்டறிந்ததும், துறையூர் - நாமக்கல் சாலைக்கு அருகே உள்ள கள்ளிக்குடியில் கீழே சாய்ந்து கிடப்பதும், 8 அடி உயரமுள்ளதுமானக் கல்தூணின் நான்கு பக்கங்களிலும் துளையுடன் கூடிய சூலம், பரசு ஆகிய இரண்டு



சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. சூலத்தின் பீடம் படுக்கைவசக் கோடுகளால் சூழப்பட்டுள்ளது. அவ்வாறு சூழப்பட்டுள்ள படுக்கைக் கோடுகள் சம்ஸாரம் எனும் மஹா சமுத்திரத்தில், பற்றற்றதும், சலன மற்றதுமான தெளிந்த மனநிலையைக் குறிப்பிடுவதாகக் கருதலாம்.

## சூலம் பொறிக்கப்பட்ட எல்லைக் கல்தூண்கள்


திருத்தலங்களில் நடைபெறும் பூஜைகள், திருப்பணிகள் முதலிய அனைத்துக் காரியங்களுக்காக இறையிலியாகவும் தேவதான மாகவும் வழங்கப்பட்ட நிலங்களின் எல்லைகளைச் சூலம் பொறிக்கப் பட்டக் கல்தூண்களால் சுட்டிக் காட்டுவது பழங்கால மரபு.





அவற்றில் குறிப்பாகத் திருச்சி மாவட்டம், குழுமணி அகிலாண்டபுரத்தில் கி.ஸ்ரீதரன் கண்டறிந்ததும், கீழக்குறிச்சியில் தி.லெ.சு.ச.போஸ் கண்டறிந்ததுமான இரண்டு கல்தூண்கள் குறிப்பிடத்தக்கவை.

திருச்சி ,திருவானைக்கா திருத்தலத்தைக் குறிக்கும் யானை, சிலந்தி, மரம், சூரியன், சந்திரன் வடிவங்களுடன், ஒன்பது துவாரங்களை கொண்ட ஸ்ரீ குருவைக் குறிக்கும்[9] குறியீடும், பரம் அல்லது பரமன் என்பதைக் குறிக்கும் நான்கு கட்டங்கள் கொண்ட க [8] எனும் குறியீடும், கொண்ட இரண்டு கல்தூண்கள் மிகவும் சிறப்புடையவை.



ஒன்பது கட்டங்கள்- ஒன்பது துவாரங்களைக் கொண்ட மானுட உடலின் இதயக் குகையில் குடிக் கொண்டுள்ள இறைவனே இத்திருத்தலத்தின் கர்ப்பகிரகத்தில் அர்ச்சை எனும் அர்ச்சனா மூர்த்தியிலும் எழுந்தருளியுள்ளார் என்ற தத்துவத்தை உணர்த்துவதாகக் கூறுவர்.



வட்ட வடிவத்துடன் கிழக்கு, தெற்கு, மேற்கு மற்றும் வடக்கு ஆகிய நான்கு புவியின் திசைகளில் சூலமிட்ட குறியீடும், அத்துடன் வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு ஆகிய சோதியின் திசைகள் ஆகிய எட்டு திசைகளில் சூலமிட்ட குறியீடும், அரியவகையாகும்.

தி.லெ.சு.ச.போஸ் கண்டறிந்த நான்கு சூலக்குறியீடு கரூர் மாவட்டம், ஐயர் மலைக்கு மேற்கு திசையில் உள்ள வரகூர் எனும் ஊரை சார்ந்ததொரு பாறையிலும், எட்டு சூலக்குறியீடு திருமானூருக்கு அருகில் உள்ள காமரசவள்ளி எனும் சிற்றூரில் எழுந்தருளியுள்ள ஈசனது ஆலயத்தின் முன்மண்டபத்திலும் பொறிக்கப்பட்டுள்ளன. (நன்றி: இந்துசமய அறநிலையத்துறை)

## குருக்ஷேத்திரம்

திருச்சி, லால்குடி வட்டம், கீழ்மாரிமங்கலம் என்ற கிராமத்திலுள்ள தொரு தெருவின் நடுவே ஒரு கல்தூண் நிறுவப் பட்டிருந்தது தற்போது அக் கல்தூண் அத்தெருவின் தென்புறத்தில் நிறுவப் பட்டுள்ளது.





அத் தூணில் பொறிக்கப் பட்டுள்ள சூலமும் அதன் இரு புறமும் உள்ள இரண்டு வட்ட வடிவங்களும் இரு புருவ மத்தியிலுள்ள ஆஞ்யா சக்கரமாகும். அதனை அவிமுக்தம் எனவும், ஜீவன் உடலைவிட்டு கிளப்பும் போது உருத்திரன் குருவாக அங்கு தோன்றித் தாரகமந்திரத்தை உபதேசிப்பதால் இவ்விடத்தை குருக்ஷேத்திரம் என்பர்.

அந்த அழகிய இரு கண்களின் வடிவங்களை திருச்சி மாவட்டம், இலால்குடி வட்டம், தேவிமங்கலம், சமயபுரம்- கரியமாணிக்கம் சாலையில் அமைந்துள்ள அக்கரைப்பட்டி எனும் கிராமப் பகுதியைச் சார்ந்ததொரு பாறையில் பொறிக்கப்பட்டுள்ள சூலத்திலும் காணலாம். யோக நிலையில் இட மிருந்து வலமாகவும், வல மிருந்து இடமாகவும் மாறிமாறி மேலெழுந்து ஆஞ்ய சக்கரத்தில் சந்திக்கும் இட, பிங்கல ஆகிய இரு நாடிகளின் கோட்டுருவங்கள் இக் குறியீட்டில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. மேற்கண்ட இரண்டும் தி.லெ.சு.ச.போஸ் அவர்களால் கண்டறிப்பட்டதாகும்.

## முத்தீஸ்வரர்

திருச்சி, சமயபுரம் அருள்மிகு முத்தீஸ்வரர் ஆலயத்தின் வெளிப்புற அதிஷ்டானப் (தாங்குதளப்) பகுதியில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டிலுள்ளதொரு

சூலக் குறியீடு குறிப்பிடத் தக்கது. முத்தீஸ்வரர் உடையார் எனும் ஈசனது பெயர்ச் சொல்லில், **முக்தீஸ்வரர்** என்பதற்கு முக்தி தரும் சூலத்தின்வடிவமும், அதனை அடுத்து **உடையார்** எனவும் அதற்குக் கீழே **திருநாமம்** என்ற எழுத்துப் பொறிப்பும் காணப்படுவது அதனது சிறப்பாகும்.

## வஜ்ராயுதம்



இரண்டு சூலங்கள் ஒன்றோடு ஒன்றாக மேலும் கீழுமாக இணைந்த வடிவம் வஜ்ராயுதமாகும். இடி மின்னலைக் குறிக்கும் இச்சின்னம் இந்திரனுக்கும் சிவ பெருமானுக்கும் உரியதொரு ஆயுதமாகவும், முக்தி அளிக்கும் சின்னமாகவும் குறிப்பிடுவர்.

இச்சின்னம் வலது கரத்தில் இருந்தால் வஜ்ரா எனும் ஆண் தத்துவத்தையும், இடது கரத்தில் இருந்தால் (பிரஞ்சனா) ஞானம் எனும் பெண் தத்துவத்தையும் குறிக்குமென்பர்.[10]



இரண்டு வஜ்ராயுதங்கள் இணைந்திருக்கும் வடிவத்தை விஸ்வ வஜ்ராயுதம் எனவும் அமோக சித்தியைக் குறிக்கும் வடிவம் எனப் பௌத்த மதம் கூறுகிறது.

ஈரோடு மாவட்டம், முசிரி, வெள்ளூர், சிவாலய கர்ப்பகிரக விமானதளத்தில், கீழ் திசை நோக்கிய வாறு இந்திரனின் சிற்பம் உள்ளது. அத்திருவுருவம் இடது கரத்தில் வஜ்ராயுதத்துடன் ஐராவதம் எனும் யானையில் அமர்ந்த கோலத்தில் உள்ளவாறு காட்சியளிக்கிறது. (நன்றி: தமிழக இந்து சமய அறநிலையத் துறை)

## சூலமும் அதனுடன் கூடிய மற்ற சின்னங்களும்

ஈசனைக் குறிக்கும் சூலத்துடன் திருப்பாதம், பரசு, பூ , எனும் கோடரி, கண்ணாடி, குடை ஆகிய குறியீடுகளைக் காணலாம்.

திருப்பாதத்துடன் கூடிய கல்தூரனைத் திருச்சி- குழுமணி-கோப்பு வழியாக ஐயர் மலைக்கு செல்லும் சாலையின் அருகில் உள்ளதொரு வயல் வெளியில் காணலாம்.

பரசு எனும் கோடரியுடன் கூடிய சூலத்தின் வடிவத்தை துறையூர்-நாமக்கல் மார்க்கத்தில் அமைந்துள்ள தேவப்பராயன் பட்டியைச் சார்ந்த து.கள்ளிக்குடி கிராமத்திலும், இரண்டு கண்ணாடிகளுடன் கூடியதை திருச்சி- புதுக்கோட்டை சாலையில் குண்டூரை அடுத்துள்ள மாத்தூர், புதிய குடியிருப்பு பகுதியின் மேற்கு திசையில், தனியாருக்கு செந்தமானதொரு விவசாய நிலத்தின் வரப்பில் புதைந்து கிடக்கும் கல்வெட்டின் மேல் பகுதியில் காணலாம்.

திருச்சி மாவட்டம், இலால்குடி தாலுகா, பல்லபுரம், பாறையின் மீது பொறிக்கப்பட்டுள்ளதொரு கல்வெட்டு[11] ஒன்றை தி.லெ.சு.ச. போஸ் கண்டறிந்தார். அதில் காணப்படும் கட்டங்கம், திருப்பாதங்கள், திருக் குறியீடு, செவ்வந்தி மலரின் வடிவம் பீடத்துடன் கூடிய சூலம், ஆகியவை குறிப்பிடத்தக்கவை.



## திருப்பாதம்



பொதுவாக திருபாத தரிசனத்தினாலும் அதனை வணங்குவதாலும் நவகிரங்களால் ஏற்படக் கூடிய துன்பங்கள் அணுகாமல், வாழ்வில் இன்பம் பெருகும்[12] எனக் கூறப்படுகிறது.

கன்னிப் பெண்கள் அதிகாலையில் எழுந்து, நீராடி, பரமன் திருஉரு முன் திருவிளக்கேற்றி மனமுருகி ஸ்ரீ வேதாந்ததேசிகன் அருளிச் செய்த கீழ் கண்ட பாதுகாஸஹஸ்ரம் எனும் மந்திரத்தை உச்சரிப்பதன் வாயிலாக கன்னியர் தம் மனத்துக்கேற்ற மனாளனைப் பெற்று நல் வாழ்வு வாழ்வர் என ஸ்ரீ பாதுகையின் மகிமையில் கூறப்பட்டுள்ளது.

இரத்தினப் பாதுகையே ! சுபமான பாதங்களை உடைய நீ, உன்னிடம் அமைந்துள்ள இரத்தினங்களின் கிரணத் தொகுதியால் பகவானாகிய பதியை மணக்கின்ற சுருதிகளின் கழுத்துக்களில் திருமாங்கல்யத்தைக் கட்டுகின்றாய் போலும் ![13]

இறைவனின் திருவடியை தரிசிக்கும் பொருட்டு நந்தனார் சிதம்பரம் சென்ற போது, அவருக்குத் தமது திருப்பாதம் நன்றாக காட்சியளிப்பதற்கு இடையில் இருந்த நந்தியைச் சற்று விலகியிருக்கும்படி ஈசன் கட்டளையிட்டார் என்பதை **சற்றே விலகியிரும் பின்னாய், சந்நிதானம் மறைக்குதாம்** என நந்தனார் சரித்திரக் கீர்த்தனை கூறுகிறது.

வைத்திடுங் காலைப் பிடித்துக் கண்ணில் மார்பில்

வைத்தணைத்துக் கொண்டு கையால் வளைத்துக் கட்டி

சித்தமிசை புக இருத்திப் பிடித்துக் கொண்டு

தியக்கமற இன்பசுகஞ் சேர்வதென்றோ ? - என இறைவனின் திருவடியை கட்டி அணைப்பதனால் பெறும் இன்ப சுகத்தை தாயுமானவர் பகர்ந்துள்ளார்.

மானிடராய்ப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் நம் வாழ்நாளின் இறுதிக்குள் தன்னந் தனியாக இறைவனின் சன்னிதானத்தை நோக்கி பயணித்து அவனிடம் சென்றடைய வேண்டும் என்பதே பிறப்பின் ரகசியமும், வாழ்க்கையின் இலட்சியமும் ஆகும். இதையே ஞானம், கிரியை என ஈசனின் இரண்டு திருப்பாதக் குறியீடுகளாக நம் முன்னோர்கள் வடிவமைத்துள்ளனர்.

திருப்பாதங்களை பிரான்மலை மீது ஏறும் வழியிலுள்ள பாறைகளில் மிக அதிக அளவில் காணலாம்.

பிரான் என்பதற்குத் தலைவன் அல்லது இறைவன் எனப்பொருள். ஈசனது பெயரான தம்பிரான் என்ற பெயர்ச் சொல்லில் உள்ள பிரான் என்ற சொல் அதற்கோர் சான்றாகும்.

சேரமான் பெருமான், திரு கைலாயம் சென்று, திருக்கைலாய ஞானஉலா எனும் திருப்பதிகத்தை ஈசனது திருமுன்பு படைக்க உதவியரும், அவரது நெருங்கிய நண்பருமான சுந்தரருக்குத் தம்பிரான் தோழன் என்ற சிறப்புப்பெயருண்டு.

தம்பிரான், **தம்புரான்** என்ற பெயருடன் வாழ்ந்த முன்னோர்களும், தற்போது வாழும் அன்பர்களும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஏராளமுண்டு.

**மலர்கள்**

அதிகாலையில் கீழ்திசையில் எழும் ஆதவனைக் கண்டு ஓர் மலர்கள் மகிழ்ச்சியுடன் மலர்கின்றன. காண்போரை கவரும் வடிவமும், வாசனையும்,

கொண்ட அம்மலர்கள் கதிரவனின் வெப்பத்தால் மாலைக்குள் வாடிவிடுகின்றன. இருப்பினும் இறைவனுக்கு அர்ப்பணிப்பதற்காகவே காலையில் மலர்ந்த தம்மை விரைவிலேயே கொய்து ஈசனுக்கு மலர் மாலையாகச் சாத்தி விடுவார்கள் என்ற தன்னம்பிக்கையுடன் மனம் மகிழ்சியுடன் மலர்ந்தாக அம்மலர்களைக் குறிப்பிடுவர்.[14]

மேலும் அம் மலர்களின் வாயிலாக நீர்க்குமிழி போன்று நிலையற்றது நம் மானிட வாழ்க்கை என்பதை நமக்கு குறிப்பால் உணர்த்துவதாகவும் கூறுவர்.

### மழு எனும் பரசு



மழு எனும் பரசு, மனித குலத்தை அறியாமை எனும் இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு கொண்டு வந்து உலகப் பற்றிலிருந்து விடுவித்து முக்தியை அளிக்கவல்லது.

பரசை ஸ்ரீ மகா விஷ்ணுவின் ஆறாவது அவதாரமாகிய பரசுராமன், போர்க் கடவுளான ஸ்கந்தன், மகாகணபதி ஆகியோருக்குரிய ஆயுதமாகவும் கூறுவர்.

பௌத்த சமயத்தில் திரிரத்னாவுடன் இணைந்து காணப்படும் பரசின் வடிவம் கோடரி எனக் குறிப்பிட்டு அதில் கண்களால் காண இயலாத அமோக சக்தி (பெருகும் தன்மை) எனும் புனிதத் தன்மைகள் நிறைந்துள்ளதாக கருதப்படுகிறது. மேலை நாட்டினர் போர்க் கோடரி (*Battle axe*) என்ற பெயரால் அழைக்கப்படுவது இதனது சிறப்பை உலக மக்கள் அனைவரும் அறிந்துள்ளனர் என்பதற்கொரு சான்றாகக் கருதலாம்.

### பரசு பாணி

மருமலர்க் கொன்றையார்க்கு வாகனமிடப மாகும்,

பரசொடுகடிய சூலம்பினாகவில் படைகளாமே - என


ஈசனுடைய பரசுபாணி என்ற சிறப்புப் பெயரைப் பற்றி சூடாமணி நிகண்டு (12.140) கூறுகிறது.[15]

ஈசன் தமது வலது திருக்கரத்தில் பரசு எனும் கோடரிக் கொண்டிருப்பார். அவ்வாறு கொண்டிருப்பதில் முக்தி அளிக்கக் கூடியதுமான ஓர் தத்துவம் ரகசியப்படுத்தப்பட்டுள்ளது. அதுவானது; இதயக்குகையில் உள்ளதும், தூய்மையானதும்,

முழுமையானதும், பிரகாசமுடையதுமான ஆன்மா ஒரு சக்கரம். உடலுடன் கூடிய மனமானது மற்றொரு சக்கரம். இவ்விருச் சக்கரங்களையும் கர்மவினைகள் என்ற அச்சு பிணைத்து பிறப்பு, இறப்பு என்ற மாயச் சுழற்சியில் சுழலச் செய்கிறது.

கர்ம வினை எனும் அச்சை ஞானமாகிய பரசு துண்டித்தால் ஆன்மாவாகிய சக்கரம் அந்த மாயச் சுழற்சியிலிருந்து விடுபட்டு உடனடியாக நின்றுவிடும். ஆனால் உடலுடன் கூடிய மனமெனும் மற்றொரு சக்கரமோ கர்ம வினையின் எதிர்ச் செயல் தீரும் வரை சுழன்ற பின்னரே நிற்கும், அது நின்றவுடன் உடலும் மனமும் வீழ்ந்து விடும். ஆன்மாவானது பிறப்பு, இறப்பு என்ற மாய சுழற்சியிலிருந்து விடுதலையடைந்து முக்தியடையும் என வீரத் துறவியின் ஞானயோகம் கூறுகிறது.[16]

மேற்கண்டத் தத்துவத்தைக் குறிக்கும் பிரபஞ்சக் குறியீடு ஒன்று, திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருத் தவத்துறை எனும் இலால்குடி அருள்மிகு சப்தரிஷிஸ்வரர் கோயிலின் தென் புறமுள்ள மண்டபத்தின் பலகைக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளதை தி.லெ.சு.ச. போஸ் கண்டறிந்துள்ளார். (நன்றி: இந்து சமய அற நிலையத் துறை)



**மான்**



பொதுவாக மான் என்பது கருவில் தோன்றும் மனிதப் பிறவியை குறிப்பிடுவதாகும். மேலும் இரண்டு கால்களைத் தரையில் ஊன்றி நிமிர்ந்து நிற்கும் மானின் வடிவம், ஆதியில் முக்தி அடைந்த முதல் மனிதனை சுட்டிக் காட்டுவதாகும். மானைக் கொற்றவையின் வாகனமாகவும் குறிப்பிடுவர். முன்ஜென்ம கர்ம வினைகளே பல்வேறு வகையான பிறப்பும், ஆயுளும் போகமுமாய் அமைகின்றன. இதனையே பொதுவாக விதி என்பர். நல்ல கர்மாக்களின் பயனால் மனிதப் பிறப்பை அடைகிறோம். சற்றுப் பலம் குறைந்த கெட்ட

கர்மாக்களாக இருப்பின் அம்மனிதன் மிருகக் குணங்கள் உடையவனாகப் பிறக்கிறான். முற்பகுதியில் மன்னனாகவும் பிற்பகுதியில் அனைத்தையும் துறந்து துறவறம் பூண்டு ரிஷியாக வாழ்ந்த பரதர், மரணத்தின் தருவாயில் தாம் வளர்த்த மான் மீது கொண்ட பற்றால் மீண்டும் மானாகப் பிறந்ததை ஓர் உதாரணமாக ஸ்ரீ பதஞ்சலி யோக சூத்ரம்[17] சுட்டிக்காட்டுகிறது.

அதாவது; மரணத்தின் தருவாயில் ஒரு மனிதனின் விருப்பத்திற்கு ஏற்ப மறுபிறவி அமைகிறது என்றத் தத்துவம், மேற்கண்ட பரதர் மானாக பிறந்ததில் உள்ளடங்கி இருப்பதாகக் கருதலாம்.

**மான்தோல்**

வேதகாலத்திற்கு முன்னர், மிரிக [18] எனும் மானின் தோல், உலகத்தில் மனிதனின் விசித்திரமான அகன்று விரிந்த ஆசைகளை உணர்த்துவதாக கருதப்பட்டது. அதனால் இத்தோல்கள் மீது அமர்ந்த நிலையிலுள்ள முனிவர்களின் தோற்றம், ஆசைகள் அற்றவர்கள் என்பதை அடையாளப்படுத்திக் காட்டுவதாக கூறப்படுகிறது. வெண்மை, கருமை என இருபுள்ளிகளைக் கொண்ட புள்ளிமான்களின் தோல், சுக்ல கிருஷ்ண யஜுர் வேதயாகத்தைக் குறிப்பிடுவதாகவும் கருதப்படுகிறது.

மேற்கண்ட மானின் தோலுக்குள்ள சிறப்புக்கள் அனைத்தும் மகாகாளியின் வாகனமாகிய புலியின் தோலுக்கும் உண்டு எனவும் கூறுவர்.

**குடை**

பல்வேறு வண்ணங்களுடைய குடை பொதுவாகப் புகழைக் குறிப்பிடும் சின்னமாகும். ஒருவரது சிறப்பான செயலைப் பாராட்டும் வகையில் ஒரு குடையை அரசு மரியாதையுடன் வழங்குவது பழங்கால மரபாகும். அரியலூர் மாவட்டம் திருமானூருக்கு அருகிலுள்ள காமரசவள்ளியில் பதிவு செய்யப்பட்டுள்ள கல்வெட்டில்;



**ஸ்வஸ்திஸ்ரீ இத்திருமண்டபம் தட்டோடு இடுவித்தார் புதுக்குடையான் அரையன் திருவரங்கமுடையரான செம்பியத்தரையர் தன்மம்:** என்ற கல்வெட்டில் **புதுக்குடையான்** என்றச் சொல்லை மேற்கண்டதற்கான உதாரணமாகச் சுட்டிக் காட்டலாம்.(நன்றி: இந்து சமய அறநிலையத் துறை).

**சத்திரம்** என்பது குடை எனவும், **சத்திரபதி** என்பது குடையுடைய தலைவன் எனவும் பொருள்படும். தீயசக்திகளிடமிருந்துக் காக்கக் கூடிய **சத்தர** எனப்படும் இதனை, தேவாதி தேவர்களுடன் காணப்படுவதாகவும் கூறுவர். மேலும் இதைப் பாதுகாப்பு, அதிர்ஷ்டம், ஆனந்தம் ஆகியவற்றின் சின்னமாகவும், வைகுந்தத்தையும், மஹாவிஷ்ணுவின் அவதாரமாகிய வாமனரையும், ஸ்ரீ விநாயகரையும் குறிக்கும் வடிவம் என்பர்.[19]

திருத்தலங்களின் மூலஸ்தானம் கர்ப்பக்கிரகமாகும். அதன் மேலுள்ள விமானத்தை மேடு, குடை, ஸ்தூபி வடிவத்தில் அமைப்பது சிற்பசாஸ்திர மரபு. குடை வடிவத்தோடு திரு மாளிகையைக் குறிக்கும் சிற்பகலை அலங்காரங்களுடன் கூடியதொருச் சின்னத்தைத் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மேலரசூரில் எழுந்தளியுள்ள அருள்மிகு தியாகராச பெருமான் திருத்தலத்தின் முன்புறமுள்ள கல்தூணில் (ப.80) காணலாம்.

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், மட்டப்பிறையூர் என்னும் ஊரில் இருவத்தினேரிக்கு அருகே 86 x 54 செ.மீ அளவுகளுடைய கற்பலகை ஒன்றில் பொ.ஆ. 1321 ஐ சார்ந்த கல்வெட்டு சாஸணம் ஒரு புறத்திலும், சித்திரமேழி பெரிய நாட்டாரின் ஏர், கலப்பை, வில்-அம்பு, பிறைச்சந்திரன், திரிசூலம், குடை, (திருப்) பாதம், கொம்புத்தாரை, ஆகிய உருவங்கள் மற்றொரு புறத்திலும் பொறிக்கப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதில் முருகமங்கலப்பற்று (சித்ரமேழி) நாட்டவர் திருவண்ணாமலையில் இருக்கும் சித்திரமேழி மடம் என்ற இடத்தில் அமைந்துள்ள பரமானந்த ஈசுவரருக்கு 600 குழி நன்செய், புன்செய் நிலங்களைத் தானமாக அளித்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது என வேலூர் ம.காந்தி, காவேரிப்பாக்கம் ப.வெங்கடேசன் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். [20]

**உடுக்கையும் ஏர் கலப்பையும்**

இரண்டு கூம்புகள் அல்லது பத்ம வடிவ கிண்ணங்கள் அடிப்பாகங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து காணப்படும் இவ் வடிவத்தை உடுக்கை, டமருகம் அல்லது துடி என்பர். மானுடரின் ஸ்தூல உடலைக் (விழிப்பு நிலையைக்) குறிக்கும் இச் சின்னம் இறைவனின் படைத்தல் சக்தியைச் சுட்டிக் காட்டுவதாகும்.



ஏர்க்கலப்பை காலத்தை குறிப்பிடும் சின்னமாகவும், அது வேளாண்மையை முக்கியமாக கொண்ட விவசாயப் பெருங்குடி மக்களின் சின்னமாகவும் கருதப்பட்டதாகும்.

இவ்விரு சின்னங்கள் - வணிக நகரத்தார், பேரிளமையர் எனும் வேளாண் பெருமக்கள், கோட்டம் வகைச் செய்யும் அரசு அதிகாரிகள் ஆகியோர் ஒருங்கிணைந்த கூட்டமைப்பின் அடையாளச் சின்னம் எனவும் அறிஞர் பெருமக்கள் கருதுகின்றனர்.

சித்திரமேழி பெரிய நாட்டாரின் தர்மக் காரியங்களைப் பறைசாற்றும் கல்வெட்டுச் சான்றுகள் தமிழகத்தில் மட்டுமே அதிக அளவில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

அச்சான்றுகளில், திருவண்ணாமலை, தாமரைபாக்கம், அக்னீஸ்வரர் கோயிலில் இரண்டாம் இராசேந்திர சோழனின் 5, 10 -ஆம் ஆட்சியாண்டாகிய பொ.ஆ. 1057, 1062 -யில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு குறிப்புக்கள்[21] சிறப்புடையவையாகும்.

சித்திரமேழி பெரியநாட்டார் எனும் பெருங்குடி மக்கள் சைவம், சாக்தம், வைஷ்ணவம், பௌத்தம், ஆகிய சமயங்களையும் ஆதரித்துள்ளனர் என்பதற்கு ஆதாரங்களாகப் பல சிலாசாஸனங்கள் தமிழகத்தில் கண்டறிப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அச் சாஸனங்களில் பொதுவாக வலதுபுறத்தில் ஏர்கலப்பையும் இடதுபுறத்தில் உடுக்கையும் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். ஆனால் வைணவத்தைச் சார்ந்த சிலாசாஸனங்களில் மட்டும் இச் சின்னங்கள் மாறி இடம் பெற்றிருப்பது நோக்கத்தக்கது.

### கட்டங்கம்

மகேஷ்வரனின் ஆயுதங்களில் கட்டங்கமும் (தண்டா) ஒன்றாகும். அதனை **கத்வாங்கம்** எனவும் கூறுவர். கத்வாங்கத்தில் தொடை எலும்பு, மண்டை ஓடு, பாம்பு ஆகிய மூன்று உருவங்கள் காணப்படுகின்றன. தொடை எலும்பின் மேலே மண்டை ஓடு ஒன்று பொருத்தப்பட்டிருக்கும். அதில் பாம்பு ஒன்று தொடை எலும்பைச் சுற்றிச்சுற்றி மேலே எழுந்து மண்டை ஓட்டின் ஒரு கண்ணின் துவாரத்தின் வழியாகத்



தனது தலையை வெளியே நீட்டிக் கொண்டிருக்கும். மகேஷ்வரனின் ஆயுதங்களில் ஒன்றான கட்டங்கம் ஞானத்தின் சின்னமாகும், இதனைச் சிவனடியார்கள் சைவ சமய அடையாளமாகக் கருதுவர். **எல்** எனப் பெயர் கொண்ட சூரியனுக்கும், **பாலைநிலத்தின் தேவி** எனும் துர்க்கைக்கும்[22] கட்டங்கம் ஓர் ஆயுதமாகும்.

**கட்டங்கம் கையில் ஏந்துவான் காண்** என்பது அப்பர் எனும் திருநாவுக்கரசரின் வாக்காகும். இரண்டாம் திருமுறையில் **கறையார் மணிமிடற்றான் காபாலி கட்டங்கன்** (பா.1964)[23] எனவும் சேரமான் பெருமான் இயற்றிய திருக்கயிலாய ஞானஉலா எனும் திருப்பதிகத்தின் இறுதியில் **காபாலி கட்டங்கன் ஊரேறு போந்ததுலா**[24] எனவும் **கட்டங்கன்** என்ற சொல் வருவதைக் காணலாம்.

வைகுந்த பெருமாள் கோயில் கல்வெட்டு, பல்லவ மாமன்னன், **2-ஆம்** நந்திவர்மனுடைய முடிசூட்டு விழாவின் போது அவருக்குச் செங்கோலுடன் கத்வாங்கம் எனப்படும் கட்டங்கம் முதலியன அளிக்கப்பட்டன என்ற செய்தியைக் கூறும் ஒரு கல்வெட்டுச் (*S.I.I. Vol-II, no. 135 p.2*) சாஸனமாகும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருத்தவத்துறையில் (இலால்குடி) உள்ள அருள்மிகு சப்தரீஷ்வரர் ஆலயத்தில் கட்டங்கத்தை மேல் இடது கையில் ஏந்திய மகேஷ்வரனின் கல்சிற்பம் ஒன்றை திருச்சி, இராச மாணிக்கனார் வரலாற்றுப் பேரவை நிறுவனர், முனைவர் கலைக்கோவன் கண்டறிந்துள்ளார். மேற்கண்ட இலால்குடிக்கு அருகில் உள்ள பல்லபுரம் எனும் கிராமத்திலுள்ள ஒரு கல்வெட்டில் (படம், ப.95) கட்டங்கம் குறியீடு ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது[25] குறிப்பிடத்தக்கது.



அமெரிக்கா நாட்டின் மாயா மக்கள் விட்டுச் சென்ற எச்சங்களில் கட்டங்கமும் ஒன்று. அதில் தொடை எலும்பு, பாம்பு, மண்டை யோடு ஆகிய வடிவங்களை மூன்று அறுகோணங் களுடன் காணலாம். (நன்றி: மேடம் கேத்தி டோரே *Labyrinthina. com* )

### சூலம், சங்கு, சக்கரம், வாமனர், மகாபலி



கரூர் மாவட்டம் ஐயர் மலைக்கு அருகே உள்ள வயலூரில் அரியவகைக் கல்தூண் ஒன்று தி.லெ.சு.க.போஸ், முனைவர் வை.இராம்குமார் ஆகியோரால் கண்டு-பிடிக்கப்பட்டுள்ளது.

அதில் முஞ்சிப் புல்லால் ஆன இடுப்பில் கட்டும் கயிறு, பூணூல், மான் தோலால் ஆன மார்பில் குறுக்காகக் கட்டப்படும் தோல்வார், கீழாடையுடன், கரங்களில் குடை, கமண்டலம், தண்டம் ஆகியவற்றுடன் வாமனரின் கோட்டுருவம் ஒரு சூலத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

அந்த சூலத்தினுடைய பீடத்தின் வலது புறத்தில் சக்கரமும், இடது புறத்தில் சங்கும் புடைப்புச் சிற்பங்களாக உள்ளன. கீழ்ப் பகுதியில் இரண்டு குத்து விளக்குகளின் நடுவே கூப்பிய கரங்களுடன் மகாபலி அமர்ந்த கோலத்தில் காட்சி அளிக்கிறார்.

மகாபலியிடம் மூன்றடி மண்ணை (நிலத்தை) இரந்து கேட்ட வாமனராக அவதாரம் எடுத்து வந்த ஸ்ரீ மகா விஷ்ணு, திரிவிக்கிரமராக உருவமெடுத்து பூலோகத்தை ஓர் அடியாகவும், மேலுலகத்தை மற்றொரு அடியாகவும் அளந்தார், மூன்றாவது அடிக்கு இடம் இல்லாததால் மகாபலியின் தலைமீது கால் வைத்து அமுத்தி பாதாளலேகம் செல்ல அனுகிரகம் செய்தார் என்று விஷ்ணு புராணம் கூறுவது இதில் வடிவமைத்துக் காட்டப்பட்டுள்ளது.

இக்கல் தூணில் மிகச் சிறந்த இரண்டு தத்துவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஜீவனும், மகாதேவனும், மகா ஹரியும் பரபிரம்மமே என்பது முதலாவது தத்துவம். அதுவானது; மகாதேவனே! உமது கருணையின் ஒரு துளியால் நான் நழுவாத நிலையடைந்து விட்டேன். விஞ்ஞானத் திரட்சியாகி விட்டேன். சிவமாகிவிட்டேன். அதற்குமேல் என்ன இருக்கிறது.

அந்தக் கரணத்தின் வியாப்தியால் நிஜம் நிஜமாகத் தோன்றவில்லை. அந்தக் கரணம் அழிந்தால் அந்த நிஜ ஸ்வரூபம் ஹரியாக அறிவு மயமாக விளங்கும். நான் அறிவுமயமாகவும் உள்ளேன், பிறவாதவனாகவும் உள்ளேன். அதற்கு மேல் என்ன இருக்கிறது. ஜடமாக வேறுபட்டதாகத் தோன்றியது எல்லாம் கனவைப் போல அழிகிறது.

சித்தையும், ஜடத்தையும் எவன் பார்க்கிறானோ அவன் அச்சுதன், ஞானமே உருக் கொண்டவன். அவனே மகாதேவன், அவனே மஹா ஹரி. அவனே ஒளிக்கெல்லாம் ஒளி. அவனே பரமேஸ்வரன்.

அவனே பரப்பிரம்மம். அந்த பிரம்மம் நான் தான். சந்தேகமில்லை. ஜீவன் சிவனே. சிவனே ஜீவன். அந்த ஜீவன் கேவலம் சிவனே.

உமியால் கட்டுப்பட்டது நெல்; உமி நீங்கினால் அரிசி. அதாவது உமி நீங்கின அரிசி என்பதைத் தொலியல் என்பர்.

அவ்வாறு கட்டுப்பட்டவன் ஜீவன். கர்மம் அழிந்தால் சதாசிவன். பாசத்தால் கட்டுபட்டவன் ஜீவன்.


பாசத்தினின்று விடுபட்டவன் சதாசிவன். விஷ்ணு ரூபியான சிவனுக்கு, சிவரூபியான விஷ்ணுவுக்கு (நமஸ்காரம்). சிவனுடைய இருதயம் விஷ்ணு. விஷ்ணுவுடைய இருதயம் சிவன்.

எப்படி விஷ்ணு சிவமயமோ, அப்படியே சிவனும் விஷ்ணுமயம். பேதத்தை நான் காணாமையால் ஆயுள் முழுவதும் மங்களம்.

சிவனுக்கும் கேசவனுக்கும் வேற்றுமைகள் இன்மையால் ஜீவனே சிவன் என்றும் தேகமே கோயில் என்றும் கூறப்படுகிறது. அஞ்ஞான நிர்மால்யத்தை விலக்கி அவனே நான் என்று பாவித்துப் பூஜை செய்யவேண்டும் - என ஸகந்தோபநிடதம்[26] கூறுவதே முதல் தத்துவமாகும்.

அரியும் சிவனும் ஒன்று என்பதற்கும், இந்துசமயத்திற்கு சைவமும் வைணமும் இரண்டு கண்கள் என்பதற்கும் இக் கல்தூண் தக்கதொரு சான்றாகும்.

தானமாகக் கேட்கும் போது தேவைக்கு அதிகமாகக் கேட்கக்கூடாது என்பது மிகச்சிறந்தது. தானமாகக் கேட்பவர் தம்மை அழிப்பதற்காகவே அவதாரம் எடுத்து வந்தவர் என்றாலும் கூட, அவருக்கு தருகிறேன் எனக் கொடுத்த சத்தியத்தை மீறக் கூடாது என்றும், உலகில் சத்தியத்தை விட மேலானது எதுவுமே இல்லை என்பதும், பொய் சொல்பவர்களை என்னால் சுமக்க முடியாது ஆனால் சத்தியவான்கள் எவ்வளவு பேர்கள் இருந்தாலும் அவர்களைச் சுமப்பேன் எனப் பூமித்தாய் கூறியதையும், சத்தியவானாகிய மகாபலி தனது குருவுக்கு எடுத்துரைத்ததே அந்த இரண்டாவது தத்துவமாகும்.



## ஊர்த்துவபுண்டரம்

வைணவ சமயத்தின் அடையாள சின்னமாகிய நாமம் என்பதை ஊர்த்துவபுண்டரம்[27] என்பர். அச்சொல்லிலுள்ள ஊர்த்துவம் என்பதற்கு மேல் அல்லது மேல் நோக்கும் எனவும் புண்டரம் என்பதற்கு நெற்றிச் சின்னம் எனப் பொருள்படும். அதில் நடுக் கோடு சிவப்பு நிறத்திலும் பக்கக் கோடுகள் வெள்ளை நிறத்திலும் இருக்கும். மஹா விஷ்ணுவின் மற்றுமொரு அவதாரமான ஸ்ரீ நிவாசப் பெருமாளை வழிபடுவோர் இச்சின்னத்தை வைணவ சமய அடையாளச் சின்னமாகத் தங்களது நெற்றி, மார்பு, முன் கரங்கள் ஆகிய உடல் பாகங்களில் வரைந்து கொள்வர்.

மேற்கண்ட ஊர்த்துவ புண்டரத்தை தங்களது வைணவ சமயத்தின் பொதுவானச் சின்னமாகச் சுட்டிக்காட்டினாலும் அதன் இரண்டு பக்கவசக் கோடுகள் இணையும் அடிப்பகுதி வளைந்து அரைவட்டமாக இருப்பின் அதனை வடகலை எனவும், கூராக இருப்பின் அதனைத் தென்கலை எனவும் கூறுவர்.

ஊர்த்தவபுண்டரத்தின் உட்பொருளையும், அதை ஏன் அணிய வேண்டும் என்பதன் காரணத்தை வாசுதேவோபநிடதம்[28] கீழ்க் கண்டவாறு கூறுகிறது.

பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் எனும் மூர்த்திகள் மூவர், ஸ்தூலம்,சூட்சுமம், காரணம் எனும் சரீரங்கள் மூன்று, பூ: புவ: ஸுவ; என்று வ்யாஹ்ருதிகள் மூன்று, ருக்,யஜுர்,சாமம் என்று வேதங்கள் மூன்று, ஜாக்கிரம், ஸ்வப்பனம், ஸுஷுப்தி என்று அவஸ்தைகள் மூன்று.

ஆன்மாவுக்கு ஊர்த்தவபுண்டரங்கள் அகாரம், உகாரம், மகாரம் என்பவையும் மூன்று. ஊர்த்தவ புண்டரங்களான இவையே பிரணவமயம், ஓங்காரமயம். அந்த ஒன்றே பலவாயிற்று.

ஓங்காராதிகாரியே மேலே அழைத்துச் செல்பவன். ஆகையால் ஊர்த்தவ புண்டரம் தரிக்கவேண்டும்.

சங்கு, சக்ரம், கதை, தாமரை, வனமாலை, ஆகியவற்றைத் தரித்து ஞானஸ்வரூபமான பரஞ்ஜோதி கோவிந்தர். எனினும் அவருக்கு ரூபமில்லை.

பிரம்மாவே! எப்பொழுதும் என்னை இப்படி தியானிப்பவர் என்னுடைய பரமபதத்தை அடைவது நிச்சயம் - என கோபாலதாபின்யுபநிடதம்[29] கூறுகிறது.

பலபிறவிகள் செய்த புண்ணியப் பயனால் பெற்ற அரிய இந்த மனித உடல் அழியக் கூடியதாதலின் அழியா இன்பத்தை அடைய ஒவ்வொருவரும் பாடுபட்டு உய்யவேண்டும் என அறிவிப்பதே இச்சின்னம் என்பது நம் முன்னோர்களின் நம்பிக்கை - என ஸ்தோத்ரமாலை[30] கூறுகிறது.

மஹாவிஷ்ணுவின் சங்கு சக்கரம் ஆகிய இரண்டின் நடுவே காணப்படும் ஊர்த்துவபுண்டரம் மனக்கட்டுப்பாட்டுடன், அகந்தையை அகற்றி இறைவனின் திருப்பாதங்களில் சரணடைய வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்தும் சின்னம் எனக் கூறுவர்.

யோகமார்க்கத்தில் வெள்ளை நிறமுடைய இரண்டு பக்கக் கோடுகளை மாறி மாறி வளைந்து மேல் எழும் இட, பிங்கல நாடிகளாகவும், சிவப்பு நிறமுடைய நேராக மேல்நோக்கி எழும் நடுகோட்டை சுழுமுனை நாடியாகவும், அம்மூன்று கோடுகளையும் குண்டலினி யோகத்துடன் ஒப்பிடுவோரும் உண்டு.

முப்பெரும் தேவர்களில் ஒருவரும் காக்கும் கடவுளுவுமான ஸ்ரீ மஹாவிஷ்ணு அர்ச்சை எனும் அர்ச்சனா மூர்த்தியாகப் பக்தர்களுக்கு அருளும் பொருட்டு திருப்பதியில் எழுந்திருளியுள்ள ஏழுமலையான் எனும் அருள்மிகு வெங்கடாசலபதி ஊர்த்துவபுண்டரம் தரித்து காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கது.

## ஆழி

ஆழி என்றச் சொல்லிற்கு சக்கரம், வட்டம் எனப்பொருள். இது மகா விஷ்ணுவின் ஆற்றலை உணர்த்துமொரு சின்னமாகும். இதனைக் **காலச் சக்கரம், கிரஹச் சக்கரம், சௌச் சக்கரம், தர்மச் சக்கரம், உலகச் சக்கரம்** [31] என சிற்பச் செந்நூல் கூறுகிறது.



இது, தீமைகளை அழித்து, காத்து, பூரணத்துவம் அடைவதற்கான சக்தியை அளிக்கக் கூடிய சர்வ வல்லமை பொருந்தியது எனக் கருதப்படுவதாகும். ஆழியைத் துர்க்கை அம்மனுக்கும் சூரியனுக்கும் உரிய ஆயுதமாகவும் குறிப்பிடப்படுவதுண்டு.[32]

மேலும் இதனைக் குண்டலினி யோகத்தில் மூலாதார சக்கரத்திலிருந்து ஒவ்வொரு மய்யத்தையும் கடந்து சிவசக்தியாக ஐக்கியமாகும் ஆக்ஞா சக்கரத்தைக் குறிக்கும் என்பர்.

இச் சக்கரம் பிரபஞ்சத்தின் சுழற்சி தத்துவத்தைக் குறிக்கும் மய்ய அச்சாகிய தண்டு, தாங்குதளம் எனும் பீடம் ஆகியவற்றுடன் இணைந்தும் தனித்தும் காணப்படுவதுண்டு. இதன் மேல், கீழ், இருபுறங்கள் எனும் நான்கு புவியின் திசைகளில் தீ பிழம்புகளைக் கொண்டிருக்கும்.

பத்ம வடிவமுடைய சக்கரத்தின் நடுவே 8 அல்லது 10 மூங்கில் இலைகள் ஆரங்களாகக் கொண்டிருப்பது சிறப்புடையது என்பர். 24 ஆரங்கள் கொண்டது உத்தமம், 20 ஆரங்கள் மத்திமம், 16 ஆரங்கள் அதமம் எனச் சிற்பச் செந்நூல்[33] கூறுகிறது.

பொதுவாக ஸ்ரீ மகாவிஷ்ணுவின் ஆலயத்திற்கான நிலங்களைக் குறிப்பிடுவதுதற்காக நிறுவப்பட்ட எல்லைக் கல்தூண்களில் ஆழியின் வடிவத்தை காணலாம். இத்துடன் சித்திரமேழி பெரியநாட்டார் என்ற பெரும் குழுமத்தின் சின்னங்களும் காணப்படுவதுண்டு. இதில் ஏர்க்கலப்பையும் உடுக்கையும் மாறி இடம் பெற்றுள்ளது நோக்கத்தக்கது.

இந்த வடிவங்களை ஓவியர் கா. மோகன் அவர்களால் கண்டறியப்பட்ட திருச்சி திருவெள்ளறை - வீராணி செல்லும் காலையின் கீழ் புறத்தில் நடப்பட்டுள்ளதொரு பெரிய கல்தூணிலும் காணலாம். ரங்கசத்திரம் என்ற எழுத்துப் பொறிப்புடன் கூடிய சிறிய ஆழிகல் ஒன்று திருச்சி- திண்டுக்கல் செல்லும் தேசிய நெடுஞ்சாலையின் கீழ் புறத்திலுள்ள பழங்காலச் சத்திரத்தில் உள்ளது. மிகச் சிறிய ஆழியின் வடிவத்தை புதுக்கோட்டை மாவட்டம், மலையடிப்பட்டி மகா விஷ்ணுவின் குடைவரைக் கோயிலின் மகாதுவாரத்தின் தென் புறச்சுவற்றில் காணலாம்.

**கதை**




மரத்திலான நீண்ட தண்டமும் அதன் மீது உருண்டையான அல்லது நீண்ட உருண்டையான பகுதியைக் கொண்டதைக் கதை என்பர். அத் தண்டத்தின் மேல் பாகம் பெருத்தும் நுனிப்பாகம் சிறுத்தும் காணப்படும். இது, ஒருவரை மற்றொருவர் அடித்துத் தாக்கும் வகையைச் சார்ந்த போர்க் கருவியாகும்.

அழகிய பூண்களைக் கொண்ட கதைகளைத் துவாரபாலகர்களின் கரங்களில் காணலாம். மஹா விஷ்ணுவின் கரத்திலுள்ள கதைக்குக் கௌமோதகி எனும் சிறப்பு பெயருண்டு.[34] மகா காளேஸ்வர், மகாகாளி, துர்க்கை, தேவி, பைரவர், வினாயகர், முருகன் ஆகிய தெய்வங்களுக்குக் கதையும் ஓர் ஆயுதம் எனக் கூறுவர். இக்கருவி ஆரம்பத்தில் மனித எலும்பின் உச்சியில் ஒரு மண்டை ஓடு பொருத்தப்பட்ட வடிவமாகவும், காலப்போக்கில் பல்வேறு வடிவங்களாகவும் மாறியுள்ளதாகவும் கூறப்படுகிறது.[35]

பொ.ஆ. 8 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததும் கையில் கதை ஒன்றை கொண்டதுமான மனித கோட்டுருவத்தைப் புதுக்கோட்டை மாவட்டம், மலையடிப்பட்டி, பிஞ்சாத்தான் பாறையில் உள்ளதொரு பிஞ்சுக்கல்லின் அடிப்பாகத்தில் பொறிக்கப்பட்டுள்ளதை காணலாம்.

வாயு புத்திரனாகிய அருள்மிகு அனுமனின் ஆயுதமாகிய இதனை அவரது வம்ச வழியில் தோன்றிய பீமனுடையதாகவும் குறிப்பிடுவர். வில்லின் செல்வனான ஸ்ரீ இராமபிரானும் பணியின் செல்வனான ஸ்ரீ இலக்குமணனும் வில்,அம்பு ஆகிய இரண்டுடன் நின்று கொண்டிருக்க, சொல்லின் செல்வனான ஸ்ரீ வீர அனுமன் கதையுடன் அமர்ந்திருக்கும் இராமாயனத்தின் கிஷ்கந்தா காண்டத்தின் ஓர் அற்புதமான காட்சியின் மிகப்பழமையான தொடர் புள்ளிகளான கோடுகளைக் கொண்ட பொ.ஆ. 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கோட்டுருவத்தை[36] திருச்சி, புதுகோட்டை எல்லைப்பகுதியில் அமைந்துள்ள சிங்காத்தா குறிச்சியின் கீழ்த் திசையில் உள்ள காரகாட்டுப் பாறையில் காணலாம்.





**சாலகிராம**

சாலகிராம என்பது வட்ட வடிவமான, கருமை நிறமுடைய, ஒரே ஒரு துவாரமுடைய பொருள். இதனை ஸ்ரீ மஹா விஷ்ணுவை குறிப்பிடும் சின்னம் எனக் கூறுவர்.

இது, வட இந்தியாவின் பீகார் மாநிலத்தில் வட பகுதியில் பாய்ந்தோடும் கந்தக் நதிக்கரையில் மிகவும் அரிதாகக் கிடைப்பதாகும். அதிலுள்ள துவாரமும், புள்ளியிலிருந்து துவங்கி முடிவின்றி விரியும் வட்டவடிவமும் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் சக்கரத்தைக் குறிப்பிடுவதாகக் கூறுவோரும் உண்டு.[37]

89 வகைளைக் கொண்ட இதில் 14 அல்லது 9 வகையே பொதுவானதாகக் கருதப்படுகிறது.[38] இயற்கையின் படைப்பான இந்த அரியப் பொருள் மிகவும் சக்தி உடையது எனவும் இதனை வழிபடுவதால் நிரந்தமான நற்பலன்கள் உண்டு எனக் கூறப்படுகிறது. எனினும், இதனைத் தெய்வத் திருத்தலங்களில் வைத்து வழிபடுவதில்லை. அதற்கு மாறாக இல்லங்களில் மட்டுமே வைத்து விரும்பி வழிபடுவது குறிப்பிடத்தக்கது.

### துளசி



பிரபஞ்சம் எனும் பாற்கடலைத் தேவர்களும் அசுரர்களும் சோம பாணத்தை கடைந்து எடுக்க முயன்ற போது இந்த துளசி செடி வெளிப்பட்டதாகக் கூறப்படுகிறது.[39] இதகைக் காக்கும் தெய்வமான மஹா விஷ்ணு, ஸ்ரீ இலக்குமி ஆகியோருக்கு உகந்ததாகக் கூறுவர்.

பூதக்கினி எனும் பெயர் கொண்ட இந்த புனிதமான செடியை வீட்டிலோ அல்லது பூந்தோட்டத்திலோ வளர்ப்பதால் இறப்பின் தூதர்களை நெருங்க விடாமல் தடுத்து நிறுத்தப்படுவதாக நம்பப்படுகிறது.[40] துளசிச் செடியின் சிறியக் குச்சிகளை ஈமச்சடங்குகளில் பயன்படுத்துவதும் உண்டு.

பாரத நாட்டில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் விளையும் இச் செடியை மூலிகையின் மகாராணி என்பர். இது சகல நோய்களை தீர்க்கும் மருந்து எனவும் இதில் தேவாதி தேவர்களின் சக்தி நிரந்தரமாகக் குடிகொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.[41]

ஸ்ரீ மகா விஷ்ணுவின் பூசைக்கான சாதனங்களில் **திருத்துழாய்**[42] எனும் பெயரில் இடம் பெறுவது இந்த துளசியே ஆகும். இந்தப் பூசைக்குரிய செடி உள்ள இடத்தில் ஸ்ரீ மகாவிஷ்ணு எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பார் என்பதன் அடிப்படையில்

துளசிச் செடியைக் குடியிருப்பு வீடுகளில் வளர்த்து இல்லரத்தரசிகள் வலம் வந்து கீழ்கண்ட மந்திரத்தை உச்சரித்து வழிபடுவர்.

ப்ருந்தா, ப்ருந்தாவனீ, விச்வ பூஜிதா, விச்வ பாவனீ /

புஸ்பஸாரா, நந்தனீச, துளசி, க்ருஷ்ண ஜீவனீ //

ஏகந்நாமாஷ்டகம்சைவ ஸ்தோத்ரம் நாமார்த்த ஸம்யுதம் /

ய ; படேத் தாம்ச ஸம்பூஸ்ய ஸோச்வமேத பலம் லபேத் //

## கரும்பு வில், புஷ்பபாணம், பாசம், அங்குசம்

ஆதி சக்தியின் வடிவமாகிய ஸ்ரீ திரிபுர சுந்தரியாகிய ஸ்ரீ லலிதா பரமேஸ்வரி நான்கு கரங்களைக் கொண்டவளாகக் காட்சியளிக்கிறாள். கரும்பு வில், பூஷ்ப பாணம், பாசம், அங்குசம், ஆகியவற்றை ஏந்திய ஸ்ரீமஹா வித்யா ஸ்வரூபிணி என தேவ்யுபநிடதம்[43] கூறுகிறது.

இச்சாசக்தி மயம் பாசம் அங்குசம் ஜ,ஞானரூபிணம்/

க்ரியா சக்திமயே பாணதனுஷீ தததுஜ்ஜ்வலம்//- யோகினி ஹ்ருதயம்.

பொருள்: பாசம்-இச்சாசக்தி; அங்குசம்-ஞானசக்தி; வில்லும் பாணங்களும் - க்ரியாசக்தி. கரும்பு வில்லும் புஷ்ப பாணங்களும் மனஸ் தத்துவத்தையும் ஞானேந்திரிய தத்துவங்களையும் குறிக்கும். இவை அஞ்ஞானிகளுக்கு சம்ஸார பந்தத்தையும், ஞானிகளுக்கு மோக்ஷத்தையும் அளிப்பவையாகும்.

மேற்கண்ட நான்கு ஆயுதங்களைத் தியானிப்பதால் ஏற்படும் சித்திகளை சக்திமஹிம்ன ஸ்தோத்ரம் கீழ் கண்டவாறு விவரிக்கிறது. [44]

சாப-த்யான-வசாத்- பவோத்பவ- மஹாமோஹம் மஹாஜ்ருப்ப்பணம்

ப்ரக்க்யாதம் ப்ரஸவேஷு¯சிந்தன்-வசாத் தத்தச்- சரவ்யம் ஸ¯தீ:/ பாசத்த்யானவசாத் ஸமஸ்தஜகதாம் ம்ருத்யோர் வசத்வம் மஹா-

துர்க்கஸ்தம்ப்ப - மஹாங்குசஸ்ய மனனான்மாயா மமேயாம் தரேத்//-

பொருள்: நல்ல புத்திபடைத்த சாதகன் கரும்பு வில்லை தியானம் செய்வதன் பயனாகப் பிரசித்திமானதும், வெகுவாக விரிந்து கொண்டே போவதும், பிறவிச்சுழலைத் தோற்றுவிப்பதுமான பெரிய மதிமயக்கத்தையும், புஷ்ப பாணங்களை தியானம் செய்வதன் பயனாக அந்தந்த பாணத்திற்குரிய தன்மாத்திரையையும், பாசத்தை தியானம் செய்வதன் பயனாக உலகனைத்திற்கும் உள்ள மரணப் பீடையையும், பெரியபெரிய இடையூறுகளையும் அடக்கக்கூடிய மகிமை வாய்ந்த அங்குசத்தினுடைய தியானத்தினால் அளவு கடந்த மாயையையும் தாண்டிவிடுகிறான், என்பது அதன் பொருளாகும்.

தன்மாத்திரை-ஐம்பொறிகளுக்குக் காரணமான சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் மூலப்பொருள்களாகும்.

**வில்லும் அம்பும்**

இந்து சமயத்தில் புனிதமானதாகக் கருதப்படும் வில்லும் அம்பும் பெரும்பாலும் ஒன்றோடு ஒன்றாக இணைந்தே காணப்படும்.

***ஸ்ரீ ருத்திரத்தில்*** தியானிக்கப்படும் ரூபம் வெகுவாக வில்லும் அம்பும் தாங்கிய வேட வடிவமாகும்.[45]

தனுஸ்தாரம் சரோஹ்யாத்மா ப்ரஹ்ம தல்லக்ஷ்ய -முச்யதே /- ஓங்காரம் வில், ஆன்மா அம்பு, பிரம்மம் லட்சியம் என ருத்ரஹ்ருத யோபநிடதம்[46] கூறுகிறது.

ப்ரணவோதனு: சரோஹ்யாத்மா ப்ரஹ்ம தல்லக்ஷ்ய -முச்யதே // - பிரணவம் வில்; ஆத்மா அம்பு; பிரம்மம் குறி- என த்யான பிந்து உபநிடதம்[47] கூறுகிறது.

மேற்கண்ட இரண்டு உபநிடதங்கள் கூறுவது போலவே; அப்ரமத்தேன வேத்தவ்யம் சரவத் தன்மயோ -அலை பாயாத மனத்தினனாக இருக்கவேண்டும்; அம்பைப் போல அந்த இலக்குமயமாக ஆக வேண்டும்[48]-என முண்டக உபநிடதமும் கூறுகிறது.

ஓம் என்பதை வில்லாகவும், மனத்தை நாணாகவும், ஆன்மாவை அம்பாகவும், பிரம்மம் எனும் இலக்கை நோக்கி, மனத்தை ஒரு நிலைப்படுத்தி, தன்னம்பிக்கையுடன் நாணை இழுத்து குறி தவறாமல் எய்ய வேண்டும். அவ்வாறு எய்யப்பட்ட அம்பே பிரம்மத்தில் உட்புகுந்து நிலைத்து நிற்கும் [49] என முண்டக உபநிடதம் விவரிக்கிறது.

வில்லும் அம்பும் ஒருங்கிணைந்திருப்பதில், வில்- பெண் சக்தியையும், இறப்பின் ரகசியத்தை அறிந்து அதனை விரும்பும் தன்மையையும் குறிக்கும். அம்பு - ஆண் சக்தியையும் அன்பையும் குறிக்கும் எனக் கூறுவோரும் உண்டு. இரண்டும் இணைந்த நிலை ஞானம் மற்றும் சார்பற்ற நடுநிலையை குறிக்கும் என்பர்.[50]

போருக்குச் சென்று வீரமரணம் (தெய்வ நிலையை) அடைந்த வீரர்களின் நடுகற்களில் வில்லையும் அம்பையும் கையில் ஏந்தியநிலையில் வீரர்களின் புடைப்பு மற்றும் கோட்டுருங்களை காணலாம். பழங்காலப் பாறை ஓவியங்களில் மனிதர்கள் வில் அம்புடன் மிருகங்களை வேட்டையாடுவதும் ஒருவரோடு ஒருவர் போரிடும் காட்சிகளும் குறிப்பிடத்தக்கவை.

**வில்**

ஓம் எனும் தீர்க்கப் பிரணவ மந்திரத்தைக் குறிக்கும் வில்லின் மய்யப்பகுதி பருத்தும் அதன் இருபக்கங்கள் சிறுக சிறுக மெலிந்தும், இரண்டு நுனிப்பகுதிகள் வளைந்தும் காணப்படும். இரண்டு நுனிகளையும் ஒரு நாண் இணைத்திருக்கும்.

மகா விஷ்ணு தமது எட்டுக் கரங்களில் வலது புறக் கரம் ஒன்றில் அம்பையும் இடது புறக் கரம் ஒன்றில் வில்லையும் கொண்டிருப்பார். அதனடிப்படையில் முறையே **சாரங்கன், கோதண்டன், பினாகன், காண்டிபன்** என்றழைக்கப்படுகின்றனர்.

வில்லை - தனு என்பர், இதனை மகாவிஷ்ணு தமது இடப் புறத்தோளில் தாங்கியுள்ளது போன்று சிற்பிகள் சிற்பங்களிலும், ஓவியர்கள் ஓவியங்களிலும் வடிவமைப்பர். தனிப்பட்ட முறையில் வில்லை மரிச்சி எனும் தேவன் எனவும், மாரா எனும் துஷ்டர்களைத் தண்டிப்பதை உணர்த்துவதாகவும் கூறுவர்.

ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்தப் பட்டயகாளி பாளையம் எனும் சிற்றூரிலுள்ள ஸ்ரீ காளகத்தி நாதர் ஆலயத்தின் கர்ப்பகிரகத்தின் தென்புறத்து பிரஸ்தாரத்திற்குச் சற்றுக் கீழே, பொ.ஆ. 1914 ஐ சார்ந்த தமிழ், கிரந்த எழுத்துக்களுடைய கல்வெட்டு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

அக் கல்வெட்டு, **ஸ்ரீ கணோசாயநம : பஞ்ச பூத ஸ்தலங்களில் ஒன்றாகி (ய) ஸ்ரீ காளத்தீ நாதர் ஆதினம். கண்ணப்ப கோத்திர வில் வேடுவர், வெட்டுவர், மர வுலவர், பூ வுலவர், கர வுலவர் இதைச் சார்ந்த முப்பத்திரண்டு ராயர் குலம், லச்சத்தி ஒரு வீர குலத்தவர்களும், வெற்றி வாளும், வீரத்தண்டும், புலிக் கொடியும்** - என்ற சொற்களுடன் முற்றுப் பெறுகிறது. இதில் வில் என்பது வீரத் தண்டு என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேற்கண்ட வெற்றி வாள், வீரத் தண்டு, புலி ஆகிய வடிவங்கள் சேலம் அரசு அருங்காட்சியகத்தில் கிரந்த எழுத்துப் பொறிப்புக்கள் கொண்ட பழங்காலக் கல்தூணில் ஓர் வட்டத்திற்குள் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

அதன் மேற்பகுதி சிதைந்த நிலையில் இருந்தாலும், இரட்டைச் சாமரம், வலம்புரி சங்கு, ஓம், நந்தி ஆகிய கோட்டுருவங்களையும் காணலாம். ஓம் - எனும் ஓங்காரத்தைக் குறிக்கும் வில்லும், நீலகிரியில் வாழும் தோடர், கோத்தர் எனும் பழங்குடி மக்களின் **போர்ச்** [51] எனும் வில் வடிவக் கோயிலும், இந்து சமயத்தின் மிகவும் பழைமையான சின்னங்களாகும்.





## அம்பு

ஆன்மாவை குறிப்பிடும் அம்பைக் கணை அல்லது பாணம் என்பர். வில்லின் நாண் கயிற்றில் பொருந்துவதற்கு அதன் அடியில் நாபி என்ற பெயரில் ஒரு பள்ளமும், பலவகையான அழகிய இறகுகளும் இணைக்கப்பட்டிருக்கும்.

இதனது நுனிப் பகுதி மிகவும் கூர்மையாக இருக்கும். அம்பை அஸ்தரம் என்பர். மிகவும் சக்தி வாய்ந்த அஸ்தரங்களில் ஒன்றைப் பிரம்மாஸ்திரம் என்பர். புஷ்பபாணம் எனும் அம்பு ஐந்து ஞான இந்திரியங்களையும், அது உயர் அறிவிற்கான விழிப்புணர்வையும் உணர்த்துவதாகக் கூறும் நூல்களும் உண்டு.

பல்வேறு வடிவங்களுடன் மாறுபட்ட நுனிப்-பகுதியை கொண்ட அஸ்திரங்களின் வடிவங்களை சித்திரமேழி பெரிய நாட்டாரின் கல்தூண்களில் காணலாம்.

அதற்குச் சான்றாகத் திருச்சி-துறையூர் சாலையில் அமைந்துள்ள காளிபட்டிக்கு மேல் திசையிலுள்ள சிங்களாந்தபுரம் எனும் ஊரில் உள்ளதொரு கல்தூணையும், மண்ணச்சநல்லூர் அருகிலுள்ள பாச்சூர் பெருமாள் கோயிலில் நிறுவப்பட்டிருந்த கல்தூணையும் அதற்கான சான்றுகளாகக் குறிப்பிடலாம்.



## பாசம்

பாசம் என்பது மூன்று வடங்களாக உள்ள கயிறு. அது நன்றாக வளைந்திருப்பது போன்ற அழகிய அமைப்புடைய. அக்கயிறு இறுக்கமாக முறுக்கப்பட்டு ஓர் முடிச்சுடனோ சிறியக் கயிற்றாலோ கட்டப்-பட்டிருக்கும். சிற்பிகள், இதனது விரிந்த மேல் பகுதியில் தாமரை மலரைச் சூட்டிச் சிறப்புறச் செய்வர்.

அதன் மூன்று வடங்கள் முறையே கன்மம், மாயை, அகங்காரம் ஆகிய மும்மலங்களைக் குறிப்படுவதாகும். முறுக்கு, முடிச்சு, கட்டப்படுதல்- இறைவன் தம்மால் படைக்கப்பட்ட உயிர்களுக்குப் போகங்களைக் கொடுத்து, அவற்றுடன் கட்டுண்டு கிடக்கும் நிலையைக் குறிப்பிடுவதாகும்.[52]

மகாகணபதியின் கரத்தில் காணப்படும் இவ்வடிவம் புற உலகப் பற்றால் கட்டுண்டு அறியாமையில் கிடக்கச் செய்யும் துஷ்ட சக்திகளை பிடிக்கக்கூடிய சக்தியைக் குறிக்கும்[53] என்பர்.

திரிபுரசுந்தரியே! எவன் ஒருவன் பரிபூர்ணமான சிறந்த நல்ல புத்திப்பிரகாசத்தை உடையவனாய், அனைத்து உலகத்தையும் வசப்படுத்துவதிலும் சக்தி வாய்ந்த உம்முடைய பாசத்தை மனதில் தியானம் செய்கிறானோ, அவன் மூவுலத்தையும் வசப்படுத்தக் கூடியவனாக ஆவான் - எனச் சக்தி மஹிம்ன ஸ்தோத்ரம்[54] கூறுகிறது.

**அங்குசம்**

அங்குசம் என்பது மரத்தினால் செய்யப்பட்ட கைப்பிடியுடன் இணைக்கப்பட்ட கொக்கியைக் கொண்டது. தூரத்தில் உள்ள வற்றையும், எளிதில் தம் வயப்படாத வற்றையும், வளைத்து எளிதில் வயப்படுத்தக் கூடிய இதனைத் தோட்டி எனவும் குறிப்பிடுவர்.

மஹா அங்குசம் ஜீவராசிகளின் சித்த மலமாகிய அகங்காரம் எனும் ஆணவத்தை நீக்கி, தம்வயப்படுத்தி, நல்வழிகாட்டி, அனைத்து ஜீவராசிகளையும் இறுதியில் முக்தி அடையச் செய்யக்கூடிய சர்வ வல்லமை படைத்ததாகக் கருதப்படுகிறது.[55]

ஒரு யானையை அதனது பாகன் அங்குசத்தால் அடக்குவது போல, யோக மார்க்கத்தில் இந்திரியங்களை அறிவால் அடக்கப் படுவதாக நிர்வாணோபநிடதம்[56] கூறுகிறது. அங்குசம், ஸ்ரீ வினாயகப் பெருமான் மற்றும் ஸ்ரீ முருகப்பெருமானின் கரங்களிலும் காணப்படுவதாகும்.



அன்னை ஸ்ரீ லலிதா பரமேஸ்வரியின் கரத்திலுள்ள அங்குசம் நிறமற்றத் தன்மையையும், ஈசனின் கரத்திலுள்ள அங்குசம் அவரது பத்துக் குணங்களில் ஒன்றான நிறமற்ற குணத்தையும் குறிப்பிடுவதாகும்.



தாயே ! மூவுலகத்தையும் அசையாமல் கட்டக்கூடிய திறமையுள்ளதும், மிகச் சிறந்த வீரியம் படைத்ததும், வெற்றியுடன் விளங்குவதுமான உமது அங்குசத்தை எவனொருவன் தனது உள்ளத்தில் தியானிக்கிறானோ, அந்த பண்டிதன்; ஸ்திரீகளையும், தேவர்களையும், பூவுலகை ஆள்பவர்களையும், எதிரி சேனைகளையும் அசையாமல் கட்டுப்படுத்தக் கூடியவனாவான் - என சக்திமஹிம்ன ஸ்தோத்ரம் கூறுகிறது.[57]

திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறி தாலுகா, வெள்ளூரில் ஸ்தபதி பழனிச்சாமி, போஸ் ஆகியோரால் கண்டறியப்பட்ட பழங்காலக் கல்தூண் ஒன்றில் மஹா அங்குசம் அதன் வலது, இடது புறத்தில் முறையே உடுக்கை, ஏர்கலப்பை ஆகிய கோட்டுருவங்களைக் காணலாம்.

மஹா அங்குசமும் பீடத்துடன் அமையப் பெற்றுள்ள இக்கல்தூண் நிறுவப்பட்டுள்ள இவ்வூரிலுள்ள சிவனாலயத்தையோ அல்லது அருள்மிகு லலிதா பரமேஸ்வரியின் ஆலயத்தையோ குறிப்பிடுவதாகக் கருதலாம்.

## உடை வாளும் (கத்தியும்) கேடயமும்

உடை வாளும் (கத்தியும்) கேடயமும் இரட்டைச் சின்னங்களில் ஒன்றாகும். வீரவாள் மற்றும் கேடயத்துடன் போரிடும் காட்சியைச் சித்திரித்து காட்டும் பாறை ஓவியங்கள் ஏராளம்.

வீர மரணம் அடைந்த மன்னர்கள் மற்றும் போர் வீரர்களின் நடுகல் எனும் வீரக்கல் தூண்களில் இவ்விரு சின்னங்களை அதிக அளவில் காணலாம். பாவம் செய்த மானிடரைக் கட்டை விரல் அளவிலும், கருமை நிறமுடையவராகவும், சிவந்த கண்களுடனும், தாடியோடும், தலை குனிந்தபடியும், தாழ்ந்த கரங்களில் வாளும் கேடயமும் கொண்டபடியும், யோகியின் வயிற்றின் இடது புறத்தில் தலைகீழாக இருப்பதாகவும் தி ஆர்ட் ஆப் தந்திரா எனும் நூல் கூறுகிறது.[58]

ஸ்ரீ மகாவிஷ்ணுவின் ஆலயங்களில் இவ்விரண்டும் இணைந்து காணப்படும் இவற்றை திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், நத்தமாங்குடியிலுள்ள ஸ்ரீ ஆதி மூல பெருமாள் ஆலயத்தின் முன் மண்டபத்தின் மேற் கற்கூரையில் உடைவாளும், கேடயமும் புடைப்புச் சிற்பங்களாகப் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.



**உடை வாள்**

கூர்மையான நுனியும், நடுப்பகுதி கனத்தும் இருபுறமும் சரிந்து கூர்மையாக வெட்டக் கூடிய நீண்ட கத்தியை உடைவாள் என்பர். கூர்மையான முன்பகுதி நேராக இல்லாமல் வளைந்துள்ள உடை வாள்களும் உண்டு. இது கைப் பிடியும், கைக்குப் பாதுகாப்பு வளையமும் கொண்டதாக அமைக்கப் பெற்றிருக்கும்.

இதற்குக் **கட்கம்** என்ற பெயருமுண்டு. வீரத்திற்கு அடையாளமாகக் கருதப்படும் உடைவாளைச் செங்குத்தாகப் பிடித்திருப்பதை **கடக ஹஸ்த முத்திரை** என்பதாகும். ஜீவாத்மாக்களின் அஞ்ஞானத்தை வெட்டி சாய்த்து மெய்ஞ்ஞானத்தை அருளும் சின்னம் **59** - என சிற்பச் செந்நூல் நூல் கூறுகிறது.


இது பரிசுத்தமான தன்மையை உடையதாகவும், பிரம்மஞானத்தை அளிக்கக் கூடியதாகவும் குறிப்பிடுவர். அதாவது அறியாமையால் உலக பந்தத்தில் கட்டுண்டு கிடப்போரை மீட்டு நல்லதொரு எதிர்காலத்தை அருளும் சின்னமாகவும் கூறப்படுகிறது.**60**

புதுக்கோட்டை மாவட்டம், மலைக்கோயில் எனும் ஊரிலுள்ள பாறையில் திரிரத்னாவுடன் தீப்பிழம்பை உமிழும் சர்பம் சுற்றிக் கொண்டிருக்கும் ஒரு ஞான வாளை **அகாலநந்த வித்யராஜா 61** என பௌத்த சமயம் சுட்டிக்காட்டுகிறது. இந்த அரியதொரு வடிவத்தை முனைவர் வை.இராம்குமார் கண்டறிந்துள்ளார்.

**கேடயம்**



கேடயம் என்பது எதிராளியின் தாக்குதலிருந்து பாதுகாக்குமொரு தற்காப்புக் கருவி. இதற்குக் கேடகம் மற்றும் கேடக போன்ற பல்வேறு பெயர்களும் உண்டு. இது முதன் முதலில் மொத்தமான தோலாலும் பின்னர் உலோகத் தகட்டாலும் செய்யப்பட்டிருக்கும். இது வட்டம் அல்லது சதுர வடிவத்துடன். வெளிப்பகுதி குவிந்தும் உட்பகுதி குழிந்தும், இதற்கான கைப்பிடி உட்பகுதியில் உள்ளவாறு வடிவமைக்கப் பெற்றிருக்கும்.



இதனது குவிந்த வெளிப்புறத்தில் பிரத்தியேகமான சின்னங்களைக் கொண்டிருக்கும். எதிராளிகளின் தாக்குதலில் இருந்து பாதுகாப்பதற்குப் பயன்படும் இது ஒருவரது வாழ்வில் ஏற்படும் இன்னல் மற்றும் இடையூறுகளை எதிர் கொண்டு தடுத்து நிறுத்துக் கூடிய சின்னமாகக் கருதப்படுகிறது.[62]

பொதுவாகச் சிறிய கிராம தெய்வங்களின் கரங்களில் காணப்படும் இக்கேடயம் மற்ற பெரிய தெய்வங்கள் கரங்களில் காணப்படுவதில்லை. ஆயினும், கண்களுக்குப் புலப்படாதபடியும், எவ்விதமான தீய சக்திகளால் அணுகமுடியாதபடியும் அப்பெரியத் தெய்வங்களைச் சூழ்ந்துள்ள சக்தியே கேடயம் [63] எனக் கூறப்படுகிறது.

**ஈட்டி**



ஈட்டி என்பது நீண்ட மூங்கில் அல்லது உறுதியானக் குச்சியில், உலோகத்தாலான மிகக்கூர்மையான நுனியைக் கொண்டிருக்கும் கைவிடு படையைச் சேர்ந்த, எறிந்து தாக்கும் போர்க்கருவி. இதனை அஸ்திரம் என்பர்.[64]

இதனைப் புனிதமான சின்னமாகவும், கூர்மையான புத்தியைக் குறிப்பிடுவதாகவும், பிரபஞ்சத்தைத் தோற்றுவித்த தேவதச்சனாகிய விஸ்வகர்மாவின் கரத்திலுள்ளதாகவும், இது மற்றவரது புறக்கண்களுக்குப் புலப்படாதது எனவும் ஸ்கந்தன், அக்னிதேவன் ஆகிய இருவரின் ஆயுதமாகவும் கூறுவர்.[65]

**கத்தி**

இது அருகிலிருந்து தாக்குமொரு சிறிய ஆயுதம். இதற்கு **சுரிகை, க்ஷுரிகா** போன்ற பெயர்களுண்டு.[66] பல்வேறு வடிவமுடைய இந்த ஆயுதத்தை உயிர் மீது படிந்துள்ள பாசங்களை அறுத்தெரியும் சக்தி உடையதாகக் கூறுவர். அற்புதமான சக்தியைக் கொண்ட இதனை மிகப்பழமையான சாஸ்தாவின் திரு உருவசிற்பங்களில் காணலாம்.



மேலும் இதனைத் துர்க்கை, காளி ஆகிய இருவரின் அச்சுறுத்தும் தன்மையை வெளிப்படுத்தி காட்டும் சின்னமாகவும் கூறுவர்.67

**கர்திகா**

இது ஒரு வகையான கத்தி, நன்கு தீட்டப்பட்ட, கூர்மையான, வளைந்த வடிவில் உள்ள இப் போர்க்கருவி வஜ்ராவை கைப்பிடியாகக் கொண்டிருக்கும்.



உலகப் பொருள்கள் மீதுள்ள பிடிப்பினை அகற்றி உலக பந்தங்களை அறுத்து நற்செயல் புரியும் சக்தி படைத்தது என்பர்.

மகாகாலன், தக்னி, தர்மபாலா, இதமஸ், மரண தேவனான எமன், எமாந்தகன் ஆகியோரை குறிப்பிடும் சின்னமாகக் கூறப்படுவதுண்டு.68

**வேல்**



**ஞான பூரண சக்தி தரித்தருள் பெருமானே** - என்ற சிறப்பு பெயர் அருள்மிகு முருக பெருமானுக்கு உண்டு.

**வேதங்கள் ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே**- என்கிறது திருவாசகம்.

வேலைத் தனது ஆயுதமாக கொண்டவன் என்பதால் வேலாயுதன் என்பர். வேல் - அவனது அன்னையால் அவனுக்கு அளிக்கப்பட்ட சர்வ வல்லமை படைத்ததொரு ஆயுதம்.

இரத்தனங்களும் மணிகளும் பதிக்கப்பட்ட வேலை இரத்தனவேல் என்பர். வேலின் நுனி அரசிலை போன்று கூர்மையாக அமையப் பெற்றிருக்கும். வேலின் அடிப்பகுதி ஆழமாகவும், நடுப்பகுதி அகலமாக அகன்றும் இருக்கும்.

அதன் பொருள் அறிவு எனும் ஞானமானது ஆழமாகவும், அகலமாக பரந்தும், கூர்மையாகவும் [69] இருக்க வேண்டும் என்பதைக் குறிக்கும்.

வேல் சின்னம் ஓர் ஆயுதமாகக் குறிப்பிட்டாலும் மெய்ஞ்ஞானத்தில் அறிவு எனும் ஞானத்தை குறிக்கும் சின்னமாகும்.

மேற்கண்ட வேலின் வடிவத்தை பெரம்பலூர் மாவட்டம், செட்டிக்குளம், பழனியாண்டவர் கோயில் கல்தூண் கல்வெட்டு ஒன்றில் காணலாம். (நன்றி: தமிழக இநது சமய அறநிலையத்துறை)

**சம்மட்டி**

சம்மட்டி என்பதைக் குதிரைச் சவுக்கு என்பர். இதற்குச் செண்டு எனும் மற்றொரு பெயருண்டு. முறுக்கிய கயிற்றால் ஆன சவுக்கின் நுனி மடித்துக் கட்டிப் பிரம்பில் இணைக்கப் பட்டிருக்கும்.[71]



யோகத்திற்கு அடித்தளமாகிய வைராக்கியம், மனத்திடம், நம்பிக்கை ஆகியவற்றைக் குறிக்கும் இவ் வடிவத்தை சாஸ்தாவின் சிற்பங்களில் காணலாம்.

**யோகம்** என்பதற்கு சேர்க்கை அல்லது இணைப்பு எனப் பொருள்படும். அதாவது இறைவனுடன் சேருதல் அல்லது இணைத்தல் என்பதாகும்.

**தண்டா**



பொதுவாக குச்சி அல்லது தடி போன்ற இது அடித்து தாக்கும் ஆயுத வகையைச் சார்ந்தது. ஞானிகளின் கரத்திலுள்ள தண்டத்தை, **விசாரதண்டம்- ஞான விசாரம்** என நிர்வாணோப நிடதம்[72] கூறுகிறது. பௌத்த சமயத்தினர் இதனுடன் மனித எலும்பும் அதனது மேலே மண்டை ஓட்டையும் பொருத்தி, அதற்கும் மேலே ரத்னாவை ஓர் குமிழ் போல பதித்து அலங்கரித்து வழிபடுவதாகக் கூறப்படுகிறது.

## தலைக்கோல்

நாட்டியக்கலை கலைஞர்களின் கலைத்திறனைக் கௌரவிக்கும் பொருட்டு மன்னர்கள் அவர்களுக்குத் தலைக்கோலை வழங்குவது பழங்கால மரபு. இதனை, நாட்டியக் கலைக்கு நாயகன் என்று கருதப்படும் தேவந்திரனின் மகனான ஜெயந்தனின் வடிவமாக கருதி, நாட்டியக் கலைஞர்கள் வழிபடுவது இதனது தனிச் சிறப்பாகும்.

பெரும் பேரும் புகழும் பெற்றப் பேரரசன் ஒருவன் போர் புரிந்தபோது, போரில் தோற்றுப் புறமுதுகு காட்டி ஓடிய பகைவனது வெண்கொற்றக் குடையைக் கவர்ந்து கொண்டு வந்து, அதனைத் தகுந்தாற் போல் நறுக்கி, அதன் கணுக்களின் மய்யப்பகுதியை பொன் தகட்டால் போர்த்தி, ஒவ்வொரு கணுக்களிலும் நவமணிச் சரங்களைக் கட்டி அலங்கரித்துத் தயாரிக்கப்படும் கோலைத் **தலைக்கோல்** என்பர்[73] தலைக்கோல் பற்றியக் கல்வெட்டுக் குறிப்பு ஒன்று திருச்சிமாவட்டம், பாச்சூரில் உள்ள சிவாலயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## செங்கோல்



செங்கோல் என்பதைத் தண்டம் என்பர். இதனை தேர்ந்தெடுக்கப்பட்ட பாலுள்ள தருக்களால் (மரங்களால்) செய்து, அதன் மேல் பொன் தகட்டைப் போர்த்தி, சித்திர வேலைப்பாடுகள் நிறைந்ததாக அலங்கரித்து, அதன் உச்சியில் அம் மன்னனது நாட்டிற்கே உரித்தானச் சின்னத்தைப் பொருத்தி, மிகுந்த அழகுடன் அமைக்கப்பட்டிருக்கும்.

ஒரு மன்னன் சிம்மாசனம் ஏறி முடிசூட்டிக் கொள்ளும் விழாவில் அவனது கரத்தில் செங்கோலைக் கொடுப்பது அரச மரபு. அச் செங்கோலை நீதி பரிபாலனம் செய்வதைக் குறிப்பால் உணர்த்தும் சின்னம் என்பதும், தர்மத்தின் அடையாளம் என்பதும், அதன் தனிச் சிறப்பாகும். [74]

## ஆயுத புருஷர்

சிற்ப சாஸ்திரத்தில் ஆயுதங்களின் ஆற்றலைக் கொண்டு மனிதர்களுக்கு வடிவம் கொடுக்கப்படுவது ஓர் மரபாகும். அவ்வடிவத்தை ஆயுத புருஷர் என்பர். அப் புருஷர்களை ஆணாகவோ, பெண்ணாகவோ, இரண்டிற்கும் அகப்படாதவர்



அலியாகவோ இருப்பர் என சிற்ப கலை நூலாசிரியர் கூறுவர். அதற்கு உதாரணமாக, வஜ்ரம்- ஆண், சக்தி ஆயுதம் - பெண், பாசம்- அலி என வேறுபடுத்திக் காட்டுவர்.

சிற்பிகள், ஆயுத புருஷர்களின் படிமங்களை நின்ற கோலத்தில், கரண்ட மகுடம் அல்லது தகுந்த தலைக் கோலத்துடன் ஒரு குறிப்பிட்ட ஆயுதத்துடன், இரு கரங்களைக் கூப்பியபடி வடிவமைப்பர்.

அங்ஙனம் கூப்பிய கரங்களுக்கு இடையிலோ அல்லது வலது புறத்திலோ அந்த ஆயுதத்தை கொண்டிருப்பதாக அமைப்பதும் சிற்ப சாஸ்திர மரபாகும்.[75] நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் உள்ள சிவாலயத்தின் எதிரே ஆயுத புருஷர்களின் பழங்காலச் சிற்பங்களைக் காணலாம். (நன்றி: தமிழக இந்து சமய அறநிலையத் துறை)

### காங்குலிங்



காங்குலிங் என்பது மனிதத் தொடை எலும்பில் துளையிடப்பட்டு அதனது ஒரு முனையில் குஞ்சங்கள் கட்டப்பட்ட ஒரு இசைக் கருவியாகும்.[76]

இதனைக் குடியிருப்பு வீடுகளின் வாயில்களில் கட்டித் தொங்க விடுவது பழங்கால மரபு.

மனித உடம்பிலுள்ள எல்லா எலும்புகளிலும் தொடை எலும்பே மிகவும் உறுதியானது.

முற்காலத்தில் ரிஷிகளாகிய குருமார்களின் மறைவுக்குப் பின்னர் அவர்களது தொடை எலும்பு பத்திரப்படுத்தப்பட்டு, அடுத்துத் தலைமைப் பொறுப்பு ஏற்கும் குருமார்களுக்கு அதனைக் கொடுப்பது ஓர் ஆசிரம மரபாகவும் இருந்துள்ளது.

இதனை அனைவரும் அறிந்திருப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவு என்றாலும், அதனைப் பற்றிக் குறிப்புக்கள் ஞானகாண்டத்தைச் சார்ந்த உபநிடதங்கள் எனும் தத்துவநூல்களை ஆழ்ந்து நோக்கினால் நன்கு புலப்படும்.

அதற்கு உதாரணமாக, **வஜ்ராயுதம்** என்பது தேவர்களுக்கெல்லாம் தலைவனாகிய இந்திரனின் ஆயுதங்களில் ஒன்றான இதற்கு இரண்டு பொருள்கள் உண்டு. முதலாவது (மின்னலுடன் கூடிய) இடி என்றும்; இரண்டாவது விருத்திராசுரனை அழிப்பதற்காகத் ததீசி முனிவரின் (தொடை) எலும்பிலிருந்து செய்யப்பட்ட ஆயுதம் என்றும் பொருள் கூறுவர். இவ்விரண்டுமே பேராற்றலின் சின்னங்கள் எனக் கட உபநிடதம்[77] குறிப்பிடுவதைச் சுட்டிக்காட்டலாம்.

அமெரிக்காவின் பழங்குடியினராகிய மாயா கலாச்சாரத்தில் மேற்கூறிய இந்திரனின் ஆயுதமாகிய வஜ்ராயுதத்தின் பொருள் (மின்னலுடன் கூடிய) இடி என்பதும், காங்குலிங் போன்ற இசைக் கருவிகள் புனிதமான சின்னங்களாக உலக அளவிலும் அங்கீகரிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இச் சின்னத்தைப் புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான் மலையில் தாயார் சன்னதியின் நுழைவாயிலின் முன்புள்ள ஓர் கற்பலகையில் பொறிக்கப் பட்டுள்ள, **ஸ்வஸ்தி ஸ்ரீ திருநலக் குன்றத்து இராகுத்தராயன் ஆசிரயம் (ஆசிரமம்) அஞ்சினான் புகலிடம்**- என்றக் கல்வெட்டு சாசனம் கொண்ட கற்பலகையில் மேலே வலது புறத்திலும் மனித மனத்தை குறிக்கும் ஒரு குரங்கின் வடிவத்தை இடது புறத்திலும் காணலாம்.

## மனம் எனும் குரங்கு

மனிதனது மனத்தைக் குரங்குகிற்கு ஒப்பிடுவதுண்டு. மனிதனது மனத்தைக் குரங்குடன் ஒப்பிட்டால், குரங்கின் மனத்தை எதனுடன் ஒப்பிடுவது என்பது சிந்திக்கத்தக்கதாகும். இயற்கையிலேயே மனிதனது மனம் குரங்கைப் போல சஞ்சலமானது. ஒரு குரங்கு பனை மரத்திலேறிக் கள்ளைப் பருகி, கீழே வரும் போது அதைத் தேள் ஒன்று கொட்டி விட்டது.

மேலும் அத் தேள் கொட்டி விட்டதால் கள் அருந்திய குரங்கின் மனநிலையானது, காமமாகிய கள்ளின் வெறியும், குரோதமான தேளின் விஷமும் சேர்ந்து அதிக பதட்டமுள்ளதாக இருக்கும் என குரங்கின் மனத்தை மனித மனத்துடன் ஒப்பிடுவர்.

சிவனே ! எங்கும் நிறைந்தவரே ! எனது மனம் எப்போதும் மதிமயக்கமாகிய காட்டில் அலைந்து திரிகிறது. பருவப் பெண்களின் நகில்களாகிய மலைகளில் கூத்தாடுகிறது, ஆசைகளாகிய கிளைகளில் வேகமாக நாற்புறமும் இஷ்டப்படி திரிகிறது.

கபாலம் ஏந்திப்பிச்சை கேட்பவரே ! மிகுதியாக ஓடியாடும் எனது மனதாகிற குரங்கைக் கெட்டியாக அன்பெனும் கயிறால் கட்டி உமது வசமாக்கிக் கொள்ளும் - என ஈசனிடம் வேண்டிக் கொள்ள வேண்டும் எனச் சிவானந்த லஹரீ கூறுகிறது. 78

மனமானது ஒரு நிலைப்படும் போது புதுமையான காட்சிகளில் மயங்கி அதிலேயே ஈடுபடுத்திக் கொள்கிறது. இது முழு அறிவு பெறாத நிலை. அது தான் மனிதனை ஆச்சரியப்படச் செய்கிறது. இதை **மதிமை சாலா மருட்கை** என தொல்காப்பிய இலக்கணம் குறிப்பிடுகிறது.

ஆச்சரியம் ஏற்படுவதற்குப் புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் என நான்கு காரணங்கள் உண்டு. அவை சென்ற காலம், நிகழ்காலம், பேதமில்லாத ஒரே நிகழ்காலமாக இருப்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாகும். இந்த நிலை ஏற்படும் போது **ஏகாக்ரத சித்த பரிணாமம்** தோன்றுகிறது என்பர். மகா புருஷரான வள்ளலார் தான் பெற்ற ஏகாக்ரத சித்த பரிணாம நிலையின் அனுபவத்தை,

வனக் குரங்கும் வியப்ப எந்தன்
மனக் குரங்கு குதித்த குதிப்பு அடக்கி
ஆட் கொண்ட துரையே ! - என

இறைவனின் பெருங்கருணையை அனுபவித்துப் பாடிப் பரவி இருக்கிறார். மனிதனது மனத்தைக் குரங்குடன் ஒப்பிட்டால், குரங்கின் மனத்தை முழு அறிவு பெறாத நிலையில் (**மதிமை சாலா மருட்கை**) இருக்கிறது என நம்முடன் வாழ்ந்து மறைந்த மகா புருஷரான வள்ளலார் தான் பெற்ற ஏகாக்ரத சித்த பரிணாம நிலையில், அனுபவித்துப் பாடியது நமது மனம், புத்தி, சித்தம் ஆகிய மூன்றின் உட்பொருளை விளக்கி நம்மைத் தெளிவு பெறச் செய்வதாகக் கருதலாம்.

அவரவர் செய்யும் கர்மத்தின் பலனாகப் பலப் பிறவிகளையும், பலவகையான உடம்புகளையும் எடுக்கின்றனர். அன்பில் குறை இருந்தால் பெண்ணாகவும், அறம் செய்வதில் குறை இருந்தால் ஆணாகவும் பிறந்து அக்குறையை நிறைவு செய்ய வேண்டும். இரண்டிலும் குறை இருந்தால் விலங்காகப் பிறக்க வேண்டும். விலங்காகப் பிறந்த பிறவியிலேயே அந்தக் குறைகளைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்ற கருத்தும் இதில் சுட்டிக் காட்டப்படுகிறது.

மானிட மனம் ஏகாக்ரத சித்த பரிணாம நிலையில் உள்ளதைக் கண்டு ஆச்சரியப்படும் குரங்கின் மனம் முழு அறிவு பெறாத நிலை (மதிமை சாலா மருட்கை) யில்

இருப்பது ஐம்புலன்களின் ஆளுமைக்குள் அகப்பட்டு வாழ்நாள் முழுவதும் சஞ்சலப்பட்டுக் கிடக்கும் மனம் முழு அறிவு பெறாத நிலையைக் குறிப்பதாகும்.

குரங்கின் மனம் படிப்படியாக உயர்ந்து மனமானது முழு அறிவு பெற்ற நிலை (ஏகாக்ரத சித்த பரிணாம நிலை) அடைந்தால் அது எவ்வாறு இருக்கும் என்பதை வலது கரத்தில் சின் முத்திரையுடன், இடது கரத்தை இடது முழங்காலில் கிடத்தி, தனது வாலை நிமிர்த்தியவாறு அமர்ந்த நிலையிலுள்ளதொரு குரங்கின் வடிவமாகச் சித்திரித்துக் காட்டப்பட்டுள்ளதை, புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான் மலை தாயார் சன்னதியின் நுழைவாயிலின் முன்பு ஓர் கற்பலகையின் மேலே இடது புறத்தில் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

**சின் முத்திரை** என்பது பரமாத்வுடன் ஆன்மா ஒன்றுபட்டு உயர்ந்த ஞான நிலையை அடைவதைக் குறிக்கும் சின்னம் என்பதை ஆலமரக்கடவுளின் சின் முத்திரையின் வாயிலாக அறியலாம்.

சின்முத்திரைகள் சாதக சின்முத்திரை, சாத்திய சின்முத்திரை, போதக சின்முத்திரை என மூவகைப்படும். சாதக சின்முத்திரை என்பது பெருவிரல் அடியில் ஆள்காட்டி விரலின் நுனி பொருந்துவது எனவும், சாத்திய சின்முத்திரை என்பது பெருவிரல் மத்தியில் ஆள்காட்டி விரலின் நுனி பொருந்துவது எனவும், போதக சின்முத்திரை என்பது பெருவிரல் நுனியில் ஆள்காட்டி விரலின் நுனி பொருந்துவது எனவும் ஞானிகள் கூறுவர்.

இறைவனடியைச் சாரும் ஜீவாத்மாக்கள் படிப்படியாக ஸ்ரீ வித்யா எனும் பிரம்ம ஞானம் பெற்று இறுதியில் இறைவனிடம் ஒடுங்கிவிடும் என்பதே மேற்கண்ட மூவகை சின் முத்திரைகளின் உட்பொருள் என்பதைச் சின்முத்திரை தரித்து கையை உயர்த்திக் காட்டுவதாகத் தெய்வத்திரு கிருபானந்தவாரியார் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார்.[79]

ஞானத்தைக் குறிக்கும் சின்முத்திரை என்பதற்கு **வித்தகம்** என்ற பொருளுமுண்டு. அதனடிப்படையில் வித்தகர், **வித்தகன்** என்பதற்கு ஞானி எனப்பொருள் கூறப்படுகிறது.


### ஐந்து முனை நட்சத்திரம்

ஐந்து முனை நட்சத்திரம்; ஆரோக்கியமான உடல், பேச்சு ஆகியன ஐம்புலன்களின் ஆளுமையில் இருந்து விடுபட்டு, மும்மலங்களை நீக்கி, மூலமுக்குணங்கள் ஒன்றோடு ஒன்றாகச் சத்துவத்தில் ஒடுங்கிய பின்னர்,

மனமானது முழு அறிவு பெற்ற (ஏகாக்ரத சித்த பரிணாம நிலை) நிலையான ஞான நிலைக்கு உயர்த்துவதை குறிக்குமொரு சின்னமாகும்.

அதற்குச் சான்றாக இச் சின்னம் இல்லாமலும் திரிசூலத்தையும் பற்றாத ஒரு குரங்கின் வடிவத்தைத் திருச்சி, தீரன்நகர், மயிலாடும் பாறையிலும் (நடு), ஐந்து முனை நட்சத்திர வடிவங்களுடன் திரிசூலத்தை இறுக்கமாகப் பற்றிக் கொண்டிருக்கும் குரங்கின் கோட்டுருவங்களைக் கொண்டதும் பொ.ஆ. 1000-க்கும் முற்பட்டதுமான கற்பலகைளை திருச்சி மாநகர எல்லைக்கு உட்பட்ட கொரவன் தோப்பிலும் (வலது), கே.சாத்தனுரில் எழுந்தருளியுள்ள சப்தமாதர்களின் ஆலயத்திலும் (இடது) காணலாம்.

குரங்கின் வடிவம் மனதையும்,அன்னை ஆதிபராசக்தியின் ஆயுதமாகிய திரிசூலத்தின் தண்டு மனத்தை செம்மைபடுத்தும் ஞானசக்தியைக் குறிக்கும். மய்யத்தில் புள்ளியுடன் காணப்படும் ஐந்து முனை நட்சத்திர வடிவம், மனத்தை பேதலிக்கச் செய்யும் ஐந்து புலன்களின் ஒடுக்கத்தைக் குறிக்கும்.



**நாகம்**

பாம்பு அல்லது நாகம் என்றால் படையும் நடுங்கும் என்பது ஒரு புறமிருந்தாலும் நாகம் உலக முழுவதிலும் மெய்ஞ்ஞானத்தின் சின்னமாகக் கருதப்படுகிறது. வட்டமாகச் சுருண்டு படுத்திருக்கும் இதனைப் பெண் சக்தியாகவும், விழித்துச் சீறி உயர்ந்தெழுவதை ஆண் சக்தியாகவும் சுட்டிக் காட்டுவர்.

இந்து சமய தத்துவப்படி நாகத்தின் வடிவம் பரலோகத்தில் பிறப்பற்ற நிலையின் காலத்தைக் குறிக்கும் சின்னமாகும். இதன் வடிவம் மழையை அருளி பூமியைச் செழுமைப்படுத்தி எல்லாவற்றையும் நியமிக்கும் வல்லமை படைத்த தெய்வமாகவும் வணங்கப்படுவதுண்டு.[80]

இதனை, பாரத நாட்டின் வடபகுதியில் காக்கும் கடவுளாகவும், தென்பகுதியில் ஒன்றை மற்றொன்று நோக்கும் இரண்டு நாகங்களின் வடிவங்களை இனவிருத்தியின் அடையாளச் சின்னம் என்பர். மூன்று தலை நாகத்தை, கன்மம் மாயை அகங்காரம் எனும் மும்மலங்கள் படிந்த ஆன்மா என நடராஜப் பெருமானின் காலடியில் கிடக்கும் முயலகன் கரத்தில் சுட்டிக் காட்டப்படுவதுண்டு. மகாவிஷ்ணுவுக்கு ஐந்து தலை நாகம் குடையாகவும், ஏழுதலைகள் கொண்ட **க்ஷேசநாகம்** மீது நாராயணன் படுத்து உறங்கும் படுக்கையாகவும் சிற்பிகள் சித்தரித்துக் காட்டுவர்.

ஐந்து தலைகள் ஐம்புலன்களையும், ஏழுதலைகள் ஐம்புலன்களுடன் புத்தி அகங்காரத்தையும் சேர்த்து ஒப்பிடுவதுண்டு. வாசுகி எனும் நாகத்தை அணிந்திருக்கும் ஈசனின் வடிவத்தை மூவுலகையும் எரித்து சாம்பலாக்கும் கொடுஞ்சினத்துடன் ஒப்பிடும் நூல்களும் உண்டு.

எவ்வாறு காளேஸ்வரன் நாகங்களின் தலைவனோ அவ்வாறே காளியும் நாகங்களுக்குத் தலைவியாவாள் என்பர். இந்து சமயத்தைக் கடைபிடிக்கும் நேபாள நாட்டினர் இதனை நாகராஜன் என நாகபஞ்சமி விழாக் காலங்களில் வழிபடுபவர். **மானசா**[81] எனும் நாகதேவதையை, தந்திர முறையில் நாக தேசத்தினர் வழிபடுவர்.

இராஜயோகத்தில் மூலாதார சக்கரத்தில் மூன்றரைச் சுற்றுக்களாகச் சுருண்டு கிடக்கும் பாம்பின் வடிவத்தைக் குண்டலினி எனவும் அதனைப் பெண் சக்தியுடன் ஒப்பிடுவர். அதன் மூன்றுச் சுற்றுக்களை சத்வ, ரஜோ, தமோ ஆகிய முக்குணங்கள் எனவும், அரைச்சுற்றைப் பிரகிருத்தி எனவும் குறிப்பிடுவர்.

சக்தி ஸ்ரூபமான குண்டலினி சக்தியைப் புத்திமான்கள் எழுப்பிச் சஞ்சரிக்கச் செய்யவேண்டும். அங்ஙனம் அதன் உறைவிடமான மூலாதாரத்திலிருந்து எழுப்பிப் புருவ மத்தி வரை செலுத்துவதை சக்திசாலனம் என்பர்.

குண்டலினி சக்தி தாமரை நூல் போன்ற மங்களவடிவானவள், தாமரைக் கிழங்கு போன்ற மூலாதாரத்தைப் பார்த்துக் கொண்டும் தன் வாயினால் தன் வாலையே பிடித்துக் கொண்டும் பாம்பு போல் சுருண்டு கிடப்பவள், எழுந்தபின் பிரம்மரந்திரம் எனும் உச்சி வரை செல்லக் கூடியவள். - என யோக குண்டலின்யுபநிடதம்[82] கூறுகிறது.



தனது உடலை வட்டமாக சுருட்டிக் கொண்டு, வாலின் நுனியை அதனது வாயில் கவ்விகொண்டிருப்பது போன்ற நாகத்தின் வடிவத்தை இராஜயோகத்தின் சின்னமாகவும், **சர்பச் சக்கரம்** எனவும் கூறுவர். இதையே, தியானத்தின் உக்கிரத்தால் கும்பக மேற்பட்டு, வெப்பத்தால் மூலாதாரத்தில் தன் வாலைத் தானே கவ்வியப்படி சுருண்டு கிடக்கும் குண்டலினி சக்தி எனப் பதஞ்சலி யோக சூத்திரம்[83] கூறுகிறது.

### கீரி




பாம்பு என்றவுடன் அடுத்து நினைவுக்கு வருவது கீரி. கீரி என்பதை கீரிப்பிள்ளை என்றழைப்பது வழக்கு. கீரி பாம்புக்குப் பகையாளி. அதே நேரத்தில் செல்வத்தைப் பாம்பாகவும், அச்செல்வத்தைக் காக்கும் சக்தியாகக் கீரியையும் கூறப்படுவதுண்டு.

செல்வத்தின் அதிபதிகளான குபேரன், ஸ்ரீ எனும் இலக்குமி ஆகியோருடன் கீரிப்பிள்ளை தொடர்புடையது எனவும் குபேரனின் அழுத்த சக்தியால் கீரி பூலோகத்திற்கு அனைத்து வளங்களைக் கொடுத்து செழிப்படையச் செய்வதாகவும் கூறுவர்.

நேபாளத்தில் **மௌரிமுசா** என்று அழைக்கப்படும் கீரியை **நகுலா** எனக் குறிப்பிடுவர்.[84] கீரிப் பிள்ளை ஒன்று பஞ்ச பாண்டவர்களுக்கு தன்னலம் கருதாமல் தானம் செய்யவேண்டுமெனும் கர்மயோகத்தை போதித்த நீதிக்கதை ஒன்றை ஞான தீபம்[85] நினைவு கூறுகிறது.

## கொடி


தண்டமும் கொடியும் இணைந்த அமைப்பைக் கொடி என்பர். இது வெற்றி, உரிமை, அதிகாரம் ஆகியவற்றைக் குறிக்கும் சின்னமாகும். சிவத் தத்துவத்தை உணர்த்தும் இச் சின்னம் ஜோதி லிங்கம் எனக் கருதப்படுகிறது.



இச்சின்னம் தேவாதி தேவர்களின் கரங்களில் காணப்படும் ஆயுதம் எனவும், இது சிவத் தத்துவத்தை குறிப்பிடுவதாகவும்[86] கூறுவர். பொதுவாகக் கோயில்களில் காணப்படும் கொடியை **துவஜம்** எனவும் கொடிமரத்தை **துவஜஸ்தம்பம்** என சிற்பசாஸ்திர நூல் கூறுகிறது. மேலும் ஒவ்வொரு தெய்வத்திற்கும் விஷேமான சின்னங்களைக் கொண்ட கொடி உண்டு. அக் கொடியில் தெய்வத்தின் வாகனமே அடையாளச் சின்னமாகக் பொறிக்கப்பட்டிருக்கும். பொதுவாக திருத்தலங்களில் துவஜஸ்தம்பம் எனும் கொடிமரங்களில் கொடியேற்றித் திருவிழா நிகழ்ச்சிகள் துவங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. கீழ்க் கண்டவை ஒவ்வொரு தெய்வங்களுக்குரிய கொடியில் காணப்படும் சின்னங்களாகும்.

அருகன் - அருள்
துர்க்கை - சிங்கம்
காளி - பேய்
மூதேவி - காகம்
சிவன் - ரிஷபம் எனும் இடபம்
விஷ்ணு - கருடன்
பிரம்மன் - அன்னப்பறவை
பலதேவன் - பனை
எமன் - எருமை
விநாயகர் - மூஷிகம்
முருகன் - கோழி, சேவல் மற்றும் மயில்
சூரியன் - வியோமா. ஆகாயம் போன்ற வெட்டவெளியை குறிக்கும் சின்னம்.
வருணன் - அன்னம்
குபேரன் - நரனுடைய உருவம்
இந்திரன் - யானை (இடியேறு)
மன்மதன் - மீன்
விநாயகர் - மூஷிகம்
முருகன் - கோழி, சேவல் மற்றும் மயில்
வருணன் - அன்னம்
குபேரன் - நரனுடைய உருவம்
இந்திரன் - யானை (இடியேறு)
மன்மதன் - மீன்





## வீணையும் புல்லாங்குழலும்

வீணையும் புல்லாங்குழலும் இசைக் கருவிகளாகும்.

கம்பிகளை கொண்ட இசைக்கருவியான வீணை நம் பாரத நாட்டின் பாரம்பரியத்தின் ஓர் அடையாளச் சின்னம்.

அன்னை சரஸ்வதிதேவிக்கு விருப்பமாக இந்த இசைக் கருவியை மேரு தண்டத்தோடு ஒப்பிட்டுக் கற்பது, ஞானம், கலை, காவியம் ஆகியவற்றைச் சுட்டுவதாகக் கூறுவர். [87]

புல்வகையைச் சார்ந்த மூங்கில் குழாயில் துளையிட்டு, சீரான காற்றினால் வேறுபட்ட ஒலியை வெளிப்படுத்தும் ஒரு இசைக்கருவியை புல்லாங்குழல் என்பர்.

வெளிக்காற்றை உள்ளே இழுத்துச் சீராக வெளிப்படுத்தி இனிய இசையை வெளிப்படுத்தும் இந்த இசைக் கருவியை உயர் நிலை அறிவை குறிப்பிடும் சின்னமாகவும் மஹா விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றான ஸ்ரீ கிருஷ்ணனின் விருப்பான இசைக் கருவி எனவும் கூறுவர். [88]

## சிலம்பு



சிலம்பு என்பது ஒலி; மகளிர் காலணி; பூசாரிச் சிலம்பு; பக்கமலை; எனப் பொருள்படும்.

இது பெண்கள் தங்களது கால்களில் அணியும் ஒரு அணிகலன். பெண்கள் நடந்து வரும் போது அவர்கள் அணிந்துள்ள சிலம்பு ஒலியின் வாயிலாக வருபவர் இன்னார் என அடையாளம் காணப் பயன்படுவதாகக் கூறுவர்.

மேலும் இதனைக் கற்பின் சின்னவும் பழம்பெரும் நூல்கள் சுட்டிக்காட்டுகின்றன. பொன்னால் செய்யப்பட்டு அதனுள்ளே முத்து, மாணிக்கப்பரல்கள் போன்றவைகள் கொண்டதாக இருப்பின் அவை விலையுயர்ந்த சிலம்புகளாகக் கருதப்பட்டன. சிலம்பின் சிறப்பிற்குக் கற்புக்கு அரசியான கண்ணகியின் **89** காவியமாகிய இளங்கோ அடிகளின் படைப்பாகக் கூறப்படும் சிலப்பதிகாரம் சிறந்ததொரு உதாரணமாகும்.

**வீரக்கழல்**



கயிற்றால் கட்டப்பட்ட மணிகளைக் கொண்ட இதனைக் **கண்டை, கண்டாமணி**, பெரு-மணி என்பர். போர்வீரர்கள் இதனை வெற்றியின் சின்னமாக தத்தம் கெண்டைக் காலில் அணிந்து கொள்வது பழங்கால மரபு.

தலையில் வாகைப்பூவை சூடிக்கொள்வது, கழுத்தில் புலிப்பல் பொருத்தப்பட்ட அணிகலன்களையும் , புலிநகக் கொன்றை மலர் மாலையையும் அணிவது, கையில் கொடியைப் பிடித்துக்கொள்வது, காலில் மணியைக் கட்டிக்கொள்வது போன்றவை திடமான மனத்துடன், அஞ்சாமல் மரணத்தை எதிர்கொள்ளும் வீரத்தை வெளிப்படுத்தி காட்டும் அடையாளச் சின்னங்களாகும்.

ஈசனது காலில் உள்ள வீரக்கழல், ஜீவன்களின் பல்வேறு வினைகளை அறுத்து அவற்றை தடுத்தாட்கொண்டு வீடுபேறு அளிக்கும் தத்துவத்தை உணர்த்துவதாகக் கூறுவர். ஸ்ரீ இராமர் போன்ற அவதார புருஷர்களில் வீரத் திருவுருங்களின் கால்களில் வீரக்கழலை அணிவிப்பது சிற்ப சாஸ்திர மரபாகும். **90**

**கமண்டலம்**

பொதுவாக யோகிகளின் கரங்களில் காணப்படும் இது தண்ணீர் வைத்துக்கொள்ளும் பாத்திரம் என்றும் இதனை அனைத்து நூல்களின் சாரங்களைக் குறிக்கும் வடிவம் என்றும் கூறுவர். கமண்டலத்தின் உள்ளே தண்ணீர் எவ்வாறு அடங்கி, ஒடுங்கி, நிரம்பியுள்ளதோ அவ்வாறே யோகிகளிடம் ஞானமும் உள்ளதாக ஒப்பிடுவர். மேலே வளைவான கைப்பிடியுடன் அகண்டு பருத்த வடிவத்தில் மூக்கெனும் ஓர் சிறிய குழாயும், அடிப்பகுதியில் கலவடை எனும் வளையமும் பொருத்தப்பட்டிருக்கும்.

கைப்பிடி இல்லாத கமண்டலம் **குண்டிகை** எனப்படும். இது, கையில் அடங்கும் அளவுடைய ஓர் குழாயைக் கொண்டதாக அமையப்பெற்றிருக்கும். இத்தகைய குண்டிகையைக் கலைமகளின் திருக்கரத்தில் காணலாம்.

எங்ஙனம் பூமியில் நீர் பரந்து விரிந்து சூழ்ந்துள்ளதோ அவ்வாறே குண்டிகையிலும் அந்நீர் உள்ளது எனவும், அதனைத் தனது திருக்கரத்தில் கொண்டிருக்கும் கலைமகளிடம் எல்லா கலை ஞானங்களும் குடிகொண்டுள்ளதாக அதற்குப் பொருள் கூறுவர்.

ஆதியில் உலகமுழுமையும் நீர் மயமாக இருந்தது எனவும், அது பிரம்ம-தேவனின் கரங்களிலிருந்து வெளிப்பட்டது என்ற தத்துவத்தை உணர்த்தும் வகையிலும், சிற்பிகள் பிரம்மதேவனின் திருக்கரங்களில் கமண்டலத்தையும் குண்டிகையையும் வடிவமைத்துக் காட்டுவர்.[91]

கமண்டலமானது; பிரம்மன், சிவன், வருணன், கங்கை, சரஸ்வதி ஆகியோரைக் குறிக்கும் சின்னமாகக் கருதப்படுவதாகும்.[92]

மகா விஷ்ணுவின் பத்து அவதாரங்களில் ஒன்றான வாமன அவதாரத்தில் வலதுகரத்தில் கமண்டலத்தையும் இடது கரத்தில் குடையையும் காணலாம்.



புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், வீரப்பம்பட்டி என்ற கிராமத்தின் கிழக்குத் திசையில் அமைந்துள்ள பன்றக்குடி குளத்தின் நடுவே தி.லெ.சு.ச.போஸ் கண்டறிந்த கல்வெட்டில்; **ஸ்வஸ்திஸ்ரீ இந்த ஊர் திருஅறவெட்டும் பெருமாள் பேர் அழகிய தசமநல்லூர் (குறி) என்று பேர் இட்டேன். தேவன் கண்டநென்,** என்ற பொ.ஆ. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த எழுத்துப் பொறிப்புக்களின் இறுதியில் இரண்டு குத்து விளக்குகளுக்கு இடையே ஓர் குண்டிகையின் அழகிய வடிவத்தைக் காணலாம்.

குண்டிகையில் உள்ள புனிதமான நீரை தரையில் வார்த்து ஊருக்குப் பெயரிடும் மங்கலகரமான நம் பழங்கால மரபையே இக் குறியீடுகள் உணர்த்துகின்றன.[93]



**அக்னி**

ஆரம்ப காலத்தில், அக்னி எதிராளிகளை அழிப்பதற்கு தகுந்த தொரு போர் சாதனமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. பிற் காலத்தில் இறைவனின் படைத்தல்- காத்தல் - அழித்தல் ஆகிய மூன்று செயல்களில், அக்னி அழித்து புதியதொருத் தோற்றத்தை படைக்கும் சக்தி எனக் கருதப்பட்டுள்ளது.

யாகக் குண்டங்களில் அக்னியை வளர்த்து இறைவனை வழிபடும் முறை பழமையானது எனக் கூறுவர். மேலும், இதனை ஜீவாத்மாக்களின் மீது படிந்துள்ள பாசங்களைச் சுட்டுப் பொசுக்கி அவற்றைத் தூய்மைப்படுத்தும் இறைவனின் ஆற்றல் மிகுந்த சக்தி எனவும், அச்சக்தியை அக்னிதேவன், சிவன், துர்க்கை, காளியை ஆகியயோரைக் குறிப்பிடும் சின்னமாகவும் கூறுவர். 94

பிரபஞ்சத்தின் நடுநாயகமாக திகழும் அக்னியை நடுவே அமைக்க வேண்டுமென ஆகம நூல்கள் குறிப்பிடுகின்றன.


பன்னிரண்டு ஆரங்கள் கொண்ட தேவலோகத்தைச் சுற்றிச் சுழலும் உண்மை எனும் சூரியச் சக்கரம் மங்கி மறைவது இல்லை. எழுநூற்று இருபது இரட்டைக் குழந்தைகளைக் கொண்ட அதன் மய்யத்தில் அக்னி குடிகொண்டுள்ளது - என ருக்வேதம் (1.164.11) மேற்கண்ட அக்னியின் சிறப்பைச் சுட்டிக்காட்டுகிறது.

நல்வினைப் பயனால் சிலகாலம் மேலுலகங்களில் வாழ்ந்து முடித்த பின்னர், ஜீவன் பூமிக்கும் சந்திரனுக்கும் இடைப்பட்ட தொரு பகுதியை வந்தடைகிறது.

அங்கே அது சிலகாலம் தங்கியிருந்த பின்னர் **பஞ்சாத்மகம்** எனும் ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், பூமி ஆகிய ஐந்து அக்னிகளால் ஹோமம் செய்யப்பட்டு மீண்டும் ஜீவராசியாய் இப்புவியில் பிறக்கிறது என சந்தோக்கிய உபநிடதம் கூறுவதைப் பஞ்சாக்னி வித்தை என்ற தலைப்பில் முன்பகுதியிலும் பேசப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

திருத்தலங்களின் திருச்சுற்றுக்களின் நான்கு திசை திருக்கோபுரங்கள் அல்லது மகாத்துவாரங்கள் வழியாக உள்ளே செல்வது (ஒடுங்குதல்), வெளிவருவது (வெளிப்படுதல்) ஆகிய இரண்டு இயக்கங்களும் மேற்கண்ட அக்னியால் தூய்மைப்படுத்தப்படும் தத்துவத்தையே உணர்த்துவதாகும்.

எல்லையில்லாப் பெருவெளியான பிரபஞ்சமே ஈசன். அவரே ஆனந்தம், அவரே பரமானந்தம், அவரே அனைத்தையும் இயக்கும் மகாசக்தி. அந்தச் சக்தியின் வெளிப்பாடு நெருப்பு (அக்னி), அதுவே இயக்கம் - என ஒளிமயமான ஈசனின் உன்னதமான தத்துவத்தை உணர்த்துவதே கோபுரத் தத்துவமாகும்.[95] எனவே கோபுரத்தை சிவனின் அக்னித் தத்துவத்தை உணர்த்தும் சின்னம் எனக் கூறுவர்.



## சிருக்-கருவம்

வேள்வித்தீயில் நெய் விடுவதற்கும், **பூர்ணஹுதி** எனும் இறுதி சடங்கின் போது மரத்திலான இரு கரண்டிகளைப் பயன்படுத்துவர். சிருக்கென்பது சாதாரண கரண்டி, இது மரத்திலானது. கருவம் என்பது காம்பும் அகன்ற கரண்டியும் கொண்ட தாகும்.[96] இதன் கரண்டிப் பகுதி சதுரமாகவும், கோமுகம், யானை முகம் முதலிய பல்வேறு வடிவங்களில் ஏதேனும் ஒன்றைக் கொண்டதாகக் காணப்படும்.

தேவாதிதேவர்களின் கரங்களில் காணப்படும் இதனை தியாகத்தின் அடையாளச் சின்னம் எனக் கூறுவர். பிரம்மனை புரோகிதனாகவும், வேள்விக்குத் தலைவனாகவும் கருதப்படுவதால் பிரம்மனை[97] வேதியனாகவே கருதுவர். சிருக், பார்வதியின் அவதாரமான அன்னபூரணி, அக்னி, சரஸ்வதி மற்றும் பிரம்மன் ஆகியோரையும் குறிப்பிடும் சின்னமாகவும் கூறப்படுவதுண்டு.

## மயில் இறகு



எட்டி இருக்கும் இடத்தில் கொடிய நாகங்கள் எட்டிப்பாரா என்பர். அதவாது மயில்கள் வாழும் இடத்திலும் விஷமுடைய நாகப்பாம்புகள் தலைக்காட்டாது என்பர். அதற்கிணங்க மயில் இறகுகள் விஷத்தன்மை வாய்ந்த சூழ்நிலையை முற்றிலுமாக மாற்றும் சக்தி படைத்த தாகவும் கூறுவர். அருள்மிகு நடராஜ பெருமானக் குறிக்கும் சின்னமான மயில் இறகு வீரசேனாதிபதியான ஸ்கந்தனுக்கும், மகாவிஷ்ணுவுக்கும் உரித்தானதாக் கூறுப்படுகிறது.[98]

### நாரையின் இறகுகள்

நாராய் ! நாராய் ! செங்கால் நாராய் என்று சத்திமுற்றப் புலவர் பாடிய பாடலும், நாரை விடு தூது எனத் தமிழ் இலக்கிய உலகிலும் நாரைப் புகழப்படுவதுண்டு. கொக்கு வகையைச் சார்ந்த நாரை உயரமானப் பறவை. ஆழ்ந்த உறக்கத்தின் போது தனது நீண்ட கால்களில் ஒன்றை மடக்கி நீண்ட கழுத்தை தன்னுடைய உடலில் சுற்றிக் கொள்வது இதனது சிறப்பு அம்சமாகும்.

வேடன் ஒருவன் எய்த அம்பால் தனதுதோர் சிறகை இழந்து சிவலிங்கத்தின் மீது விழுந்து இறந்த நாரைக்கு முன் ஈசன் வெளிப்பட்டு அந்நாரைக்கு முக்தியளித்ததாகத் திருவிளையாடல் புராணம் கூறுகிறது.

அதுவானது; மீன்கள் நிறைந்திருந்த அச்சோ தீர்த்தம் எனும் குளத்தில் வாழும் மீன்களைத் தின்று மகிழ்ந்ததொரு நாரை சிவபக்தனாக பிறந்தது. சோமசுந்தரர் எழுந்தருளியுள்ள மதுரையைச் சென்றடைந்து, அக்குளத்தில் குளிக்கவரும் தவ முனிவர்களை நாள் தோறும் தரிசித்து வந்தது.

அவ்வாறு இறைவனைத் துதித்து வாழ்ந்த போது, பொற்றாமரைக் குளத்தில் துள்ளிக் குதித்த மீன் ஒன்று அந்நாரைக்கு மீன் தின்னும் ஆசையைத் தூண்டி விட்டது.

மீன் உண்ணுதலே தமது மறுபிறவிக்கு காரணம் என்பதை நன்கு அறிந்துணர்ந்த அந்நாரை தனது சிவபக்தியை பன் மடங்காக்கிக் கொண்டு இறைவனை வழிபட்டு வாழ்ந்தது. அந்நாரைக்கு அருள்செய்யும் பொருட்டு இறைவன் அதன் முன் தோன்றினார்.

இறைவனைக் கண்ட நாரை மனமுருகி, இறைவா ! உந்தன் திருவடியில் வாழ்வதே பேரின்பமாதலால் எமக்கு அதனை அருள வேண்டும், மேலும் இனிவரும் காலங்களில் எனது சந்ததியினரும் இக்குளத்தில் உள்ள மீன்களைத் தின்னாதிருக்க வேண்டும். அதற்கு இக்குளம் மீன்கள் அற்றதொரு குளமாக மாற்றி அருள வேண்டும் என வேண்டியது.

நாரையின் பக்திக்குச் செவிசாய்த்த இறைவன், அப் பக்தனின் எண்ணம் நிறைவேறும்படியாக அக்குளத்தில் மீன்கள் மட்டுமின்றித் தவளை, பாம்பு ஆகிய நீரில் வாழும் உயிரினங்கள் எதுவுமோ வாழாது என வரம் அளித்ததாகத் திருவிளையாடல் புராணம் கூறுகிறது.

நாம் மட்டும் நல்லவர்களாக வாழ்ந்தால் மட்டும் போதாது, தமது சந்ததியரும் நல்லவர்களாகவே வாழ வேண்டும் என்பதற்காக, நாம் வாழ்ந்து உய்யநெறிக்காட்ட வேண்டும் என்பதே மேற்கண்ட நாரையை மையப்படுத்தி திருவிளையாடல் புராணம் கூறுமொரு தத்துவமாகும்.

### மரம்

ஒரு அரசமரத்தின் வேர் மேல் (வானத்தை) நோக்கியும், தூயதும் அழிவற்றதுமான அதனது கிளைகள் கீழ் (பூமியை) நோக்கியும் இருப்பதாகக் கடஉபநிடதம்[99] கூறுகிறது. ருத்ரர் தம்மை பூமியில் கிளைகளுடன் கூடிய மரம் போன்றும் அதில் வேரும், நடுவும், உச்சியும் முறையே மகேச்வரர், விஷ்ணு, பிரம்மா என மூவராக ஆக்கிக் கொண்டார் என மூவுலக விருக்ஷம் பற்றி ருத்ரஹ்ருதயோபநிடதம்[100] கூறுகிறது.



### அஸ்வத்தரு (ஆலமரம்)

அஸ்வத்த என்பதற்கு ஆலம் எனவும் தரு என்பதற்கு மரம் எனவும் பொருள். அதாவது ஆலமரம் தேவர்களின் தலைவனான இந்திரனால் அருளப்பட்டதாகக் கூறப்படுவதாகும். மேலும் இம்மரம், மிகப் புனிதமான மரங்களை விட சிறந்த மரம் எனக் கருதப்படுவதாகும்.

**மஹா பாண்டீரம்** எனும் ஆலமரத்தடியில் ஒரு பெரிய ஸத்ரயாகத்திற்கு மஹரிஷிகள் கூடியிருந்ததாக தக்ஷிணாமூர்த்யுபநிடதம்[101] கூறுகிறது. அவ்வாறே பூலோகவாசிகளும் புனிதத்தன்மையும், தெய்வத் தன்மையையும் பெறுவதற்கு இந்த பூலோக ஆலமரத் தடியின் கீழ் ஒன்று கூடி நலம் பெற விரும்புவதாகவும் கூறப்படுகிறது.

### வில்வ மரமும் அதன் இலையும்

சிவசக்தி ஐக்கியத்துடன் நெருங்கிய தொடர்புடையதாகக் கருதப்படும் வில்வ இலைகளை கொண்ட வில்வ மரம் வணங்குதலுக்கு உரியது எனவும், மேலும் இதனை ஈசனின் தாவரத் தன்மையை உணர்த்தும் சின்னமாகவும் சைவ சமயத்தினர் குறிப்பிடுவர். வில்வ இலைகளைத் தொடுத்து ஓர் அணிகலனாக அணிவதால் அது மிகுந்த




சக்தியை அளிப்பதாகவும், வில்வக் காய்களிலிருந்து தயாரிக்கப்படும் மருந்துகள் சில குறிப்பிட்ட நோய்களைக் குணப்படுத்தும் தன்மை உடையதாகவும் கூறுவர்.

மூன்று வில்வ இலைகளின் மீது கை வைத்து சத்தியபிரமாணம் செய்வது மிகப்புனிதமான செயலுக்கு ஒப்பானது எனக் கருதப்படுகிறது.[102]

ஈசனை பில்வதளத்தாலும், பில்வப் பழச் சாம்பலாலும் அர்ச்சித்து, இறைவனை வேண்டி த்ரிபுண்ட்ர விதியை அறியவேண்டும் என பஸ்மஜாபாலோபநிடதம்[103] விவரிக்கிறது.

**பசு**



பன்னெடுங்காலமாகப் பசு ஓர் புனிதமான ஜீவனாகக் கருதப்படுகிறது. இது பூஜைக்குரியது என்பதற்கு ஆலயங்களில் நிகழும் **கோபூஜை** ஓர் உதாரணமாகும்.

மேலும் இது தேவர்களும் அசுரர்களும் திருப்பாற் கடலைக் கடைந்தபோது வெளிப் பட்டதாகவும் கூறுப்படுகிறது.

பூஜைக்குரியதாகக் கருதப்படும் இதனது உடலின் பல்வேறு பாகங்களில் தேவர்கள் குடிகொண்டுள்ளதாகவும் கருதப்படுகிறது.

பசுவை ஸ்ரீ கிருஷ்ணர் தமது உடலில் இருந்து தோற்றுவித்தார் எனவும், அது தேவலோக காமதேனுவின் வம்ச வழியில் தோன்றிய ஜீவன் எனவும், இதன் உடலில் முப்பத்து முக்கோடி தேவர்களும் ஜீவிப்பதாகவும் கூறப்படுவதுண்டு. பசுவின் பால், தயிர், நெய். கோமியம், சாணம் ஆகிய ஐந்தைப் பஞ்சகவியம் தயாரிக்கப் பயன் படுத்துவர். ஜீவாத்மாவுக்கு ஒப்பான பசுவைத் தானமாகக் கொடுப்பது மிகச் சிறப்புடையதாகும், பசுவதை மிகக் கொடுமையானது மட்டுமின்றி மிகக் கொடிய பாவச்செயல் என்பர்.[104]

அதற்கு ; **இத்தர்மத்திற்கு அகிதம் (தீங்கு) செய்வோர் கங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ற பாவத்திற்குப் போகக் கடவர்** என்ற கல்வெட்டுச் சொற்களே சான்றுகளாகும்.

யாவர்க்கு மாம் இறை வற்கொரு பச்சிலை


யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை

யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி

யாவர்க்கு மாம்பிறர்க்கு இன்னுரை தானே - எனப்

பசுவுக்கு உணவு கொடுப்பது மிகப் புண்ணியமான செயல் எனத் திருமந்திரம் **105** கூறுகிறது. பசுவானது இறைவனின் மீது கொண்ட பக்தி எனும் அன்பில் திளைத்து இறைவனது திருமேனி மீது தனது மடியிலிருந்து பாலைச் சுரக்கச் செய்து பாலபிஷேகம் செய்யும் நற்செயலை சிவாலயங்களின் சுற்றுச் சுவர்களில் புடைப்புச் சிற்பங்களாக சிறப்பித்துள்ளதைக் கண்குளிரக் காணலாம்.

**யானை**



மிகவும் சக்திவாய்ந்த யானை அதிக மரியாதைக்குரிய சின்னமாக கருதப்படுவதாகும். சமஸ்கிருத்தில் யானை என்பதைக் கஜ எனக் குறிப்பிடுவர். அதில் **க** என்பது எண்ணியலில் முதலாம் எண்ணையும் (ஒன்று), ஜீவன்களின் ஆதி மூலமாகிய பிரம்மத்தையும் குறிப்பிடுவதாகும்.

**ஜ** என்பது தோற்றத்தின் மூலமாகிய பிரபஞ்சத்தையும் எண் 8 -யும் குறிக்கும். எண் 18 = **கஜ** அல்லது யானை என்பதாகும்.**106** **கஜ** எனும் யானை; 18 மங்கலச் சொற்களில் ஒன்று என்பதை சீர்; மணி; பரிதி; **யானை;** திரு;நிலம்; உலகு; திங்கள்;கார்; மலை; சொல்; எழுத்து; கங்கை; நீர்; கடல்; பூ; தேர்; பொன்; ஆகியவை பதிணென் வகை மங்கலச் சொற்களில் காணலாம். சிருஷ்டி லயக்கிரமத்தின் போது மரம் போல விரிந்த பாகுபாடுகள் எல்லாம் ஒரே பிண்டமாக, பெரிய உடம்புடைய யானையைப் போல ஒடுங்குவதைக் குறிக்கும் என்பர். இறைவன் யானையின் மீது அமர்ந்து வருவது ஆணவத்தையும், ஐம்புலன்களையும், அருள் எனும் அங்குசத்தால் அடக்குவதைக் குறிக்கும் என தெய்வத்திரு கிருபானந்த வாரியார் சுவாமிகள்**107** குறிப்பிட்டுள்ளார்.

இந்திரனின் வாகனமாகக் கருதப்படும் **ஐராவதம்** எனும் நான்கு கொம்புகள் கொண்ட வெள்ளை யானை ஏழு மாமுழம் உயரமுடைய தாகச் செவ்வந்திபுராணம்**108** கூறுகிறது.

சிவப் பெருமானின் வாகனமான வெள்ளை யானையின் பெயர் **ஐராவணம்** என்பதாகும். பூமித் தாயை நான்கு யானைகள் தாங்குவதாகவும், பிரபஞ்சத்தை எட்டுத் திசைகளைத் திக்பாலகர்கள் காத்தருளுவது போலவே எட்டு யானைகள் காப்பதாகவும் குறிப்பிடுவர்.

அவை ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பந்தம், சார்வபவுமம், சுப்ரதீகம் எனவும் பெண் யானைகளின் பெயர்கள் முறையே சுப்மிரமை, கபிலை, பிங்கலை, அனுபை, தாம்ரபர்ணி, சுபதந்தை, அங்களை, அஞ்சனாவதி எனக் கூறுவர்.

அனுதினமும் கோயில் யானைகளுக்குப் பூஜை செய்வது பழங்கால மரபு. அதனைக் **கஜ பூஜை** என்பர். அவ்வாறு பூஜிப்பது யானையின் உடலில் குடிக்கொண்டுள்ள முப்பத்து முக்கோடி தேவர்களைப் பூஜிப்பதற்கு ஒப்பாகும் எனக் கூறப்படுகிறது.

அவர்களில் குறிப்பாகத் தலையில் பிரம்மதேவனும், நெற்றியில் முருகப்-பெருமானும், கண்களில் வீரபத்திரரும். மத்தகத்தில் சூரிய சந்திரர்களும், மூக்கில் முழுமுதல் கடவுளான விநாயகரும், மூச்சுக் காற்றில் மத்திரரும், முகத்தில் பாக்கிய இலக்குமியும், தந்தத்தில் வீரஇலக்குமியும், அதன் நுனியில் எமதர்மனும், கபாலத்தில் நரசிம்மமூர்த்தியும், பாதங்களில் நான்கு வேதங்களும், தும்பிக்கையில் மகாவிஷ்ணுவும், வயிற்றில் அக்னிதேவனும் குடிகொண்டுள்ளதாகச் சிற்பசாஸ்திர நூல்கள் கூறுகின்றன.

மேருமலையை மத்தாகவும் வாசுகி என்ற சர்ப்பத்தை கயிறாகவும், தேவர்கள் ஒரு புறமாகவும் அசுரர்கள் மறுபுறமாகவும் திருப்பாற்கடலை கடைந்த-போது யானை வெளிப்பட்டதாகவும், மஹாலட்சுமியை அபிஷேகம் செய்த போது பிளிறி ஆனந்தஒலியை எழுப்பியதாகவும், அதைக் கண்ட அன்னை மகாலட்சுமி மகிழ்ச்சி அடைந்தாகவும் ஸ்ரீ சூக்தம் கூறுகிறது.



அதற்குச் சான்றாக ***ஆதிலட்சுமி, கஜலட்சுமி, வரலட்சுமி*** ஆகிய மூவரின் திரு உருவங்களை யானைகள் அபிஷேகம் செய்வது போன்ற சிற்ப அமைப்பைச் சுட்டிக் காட்டலாம். மேலும் இத்திருவுருவங்கள் மிகவும் தொன்மையானது என்பதும் குறிப்பிடத்தக்கது.


## குதிரை முகம்

குதிரையானது சுவாசக் காற்றை உள்ளே இழுத்து உள்நிறுத்தி சீராக வெளியிடும் தன்மை உடையதால்

குதிரையின் முகத்தை யோகத்திற்கு ஒப்பிடுவர். ஐகிரீவர் குதிரை முக முடையவர். ப்ரணவஉக்கீதம் வடிவினரும், குதிரைத் தலை படைத்த வரும்,[109] சங்கு, சக்ரம், மகா-முத்திரை, புஸ்தகம் ஆகியவற்றுடன் புர்ண சந்திரப் பிரகாச முடைவருமான ஹயக்ரீ-வரை தியானிக்கிறேன், என ஹயக்ரீவோப நிடதம்[110] கூறுகிறது. குதிரையைப் புலன்களுடன் ஒப்பிட்டு மானுடரின் வாழ்க்கைப் பயணத்தைப் பற்றி கட உபநிடதம் விவரிக்கிறது.[111]

## இணைக்கயல்

பொதுவாகக் கயல் எனும் மீன் காக்கும் கடவுளான மஹா விஷ்ணுவின் அவதாரத்தைக் குறிப்பிடுவதாகக் கூறுவர். இரண்டு மீன்கள் இணைந்து காணப்படும் **இணைக்கயல்** மீனராசியைக் குறிக்கும் என்பர்.



இரண்டு தங்க நிற இணைக்கயல்கள் அதிர்ஷ்டத்தின் அடையாளமாகவும், வறுமையில் இருந்து மீட்டுச் செல்வத்தை அளிக்கும் சக்திபடைத்தாகவும் கூறப்படுகிறது. ஒன்றை ஒன்று நோக்கும் கயல்கள் எட்டு மங்கலகரமான சின்னங்களில் ஒன்றாகும்.[112] பாண்டியர்களின் சின்னமாக இரண்டு மீன்களின் வடிவத்தைத் திருச்சி திருவானக்காவில் சுந்தரபாண்டியனால் கட்டப்பட்ட திருச்சுற்றின் வடக்கு வாசலின் வலது புறத்தில் காணலாம்.

## மகரம், நாசித்தலை, திருவாசி



தெய்வத் திருமேனியைச் சுற்றி வளைவாகக் காணப்படும் பித்தளை, வெள்ளி ஆகிய உலோகத்திலான ஓர் அமைப்பை திருவாசி என்பர். அதன் இருபுறங்களின் ஆரம்பத்தில் அடையாளம் காண இயலாத ஓர் உருவம் இடம் பெற்றிருக்கும். அவ்வுருவம்; குரங்கின் கண்கள், கோரைப் பற்கள், யானையின் துதிக்கை, பன்றியின் காதுகள், மீனின்

உடல், சிம்மத்தின் கால்கள், பறவையின் இறகுகள், இலை, தழைகளால் ஆன வால் போன்று அமைந்திருக்கும்.

இந்த இனவகையைச் சார்ந்தது என அடையாளப்படுத்த முடியாதபடி குழப்பத்தை உண்டாக்குமொரு கற்பனை வடிவமாகிய இது மகரம் எனக் கூறப்படுகிறது. **113**

**காலமகரத்**தை சமுத்திரத்திலிருந்து மேலெழுந்து அதன் வாயிலிருந்து அமிர்த மழையாகப் பொழியும் இராஜயோகத்துடன் ஒப்பிடுவர்.**114** அமிர்தமானது பிரளயக் காலத்துக்கு முந்திய குழம்பிய நிலையைக் குறிப்பிடுவதாகவும் கூறுவர். இதனது வாயிலிருந்து கட்டுமாலை, சுடர்கள், முத்துத்தாமங்கள் வெளிப்படுவதைக் காணலாம்.

இதன் பொருள் பிரளயத்திலிருந்தே பிரபஞ்சம் தோன்றியது என்பதைக் குறிப்பிடுவதாகக் கருதப்படுகிறது. **பிரளயம்** என்பதற்கு கல்ப முடிவு; வெள்ளம்; எனப்பொருள்படும்.

உலகம் தோன்றி வளர்ந்த பராக்கிரம நிலையின் உச்சக் கட்டத்தைச் சுட்டி-காட்டுவதாகும், உச்சத்தை அடைந்த பின்னர் அனைத்தும் சாய்ந்து சரிந்து மீண்டும் மகரத்தின் வாயில் எனும் இலயநிலைக்கு மீண்டும் வந்தடைகிறது எனப் பொருள் கூறப்படுகிறது. இந்த இலயத்தலின் பின்னணியில் இறைவனே உள்ளார் என்பதை உணர்த்தும் வகையில், ஸ்தூலத்தில் பல்வேறு ரூபங்களாக அதாவது மூர்த்திகளாக எழுந்தருளிய தெய்வச் சிற்பங்களின் பின்புறம் திருவாசி வைக்கப்படுகின்றன எனச் சிற்ப நூல்கள் கூறுகின்றன.

**இலயம்** என்பதற்கு இரண்டறக் கலக்கை எனவும், இலயித்தல் என்பதற்கு ஒடுங்குதல்; ஐக்கியமாதல்; எனவும் பொருளாகும். திருவாசியின் உச்சிந்தலையில் காணப்படும் வடிவத்தை நாசித்தலை என்பர். அது இளித்த வாயுடனும், உருண்ட விழிகளுடனும், கோரைப் பற்களைக் கொண்டதாகவும் அதனது வாய் அமையப் பெற்றிருக்கும். ஆனந்த நடனம் புரியும் நடராச பெருமானின் திருவாசியில் மேற்கண்ட நாசித்தலை இடம் பெறுவதில்லை. அதற்கு மாறாகத் தீப்பிழம்புகள் சூழ்ந்துள்ளதாகவே அமைக்கப் பெற்றிருக்கும். தீப் பிழம்புகளான வட்டவடிவ திருவாசியின் நடுவே காணப்படும் நடராஜரின் திரு வடிவத்தின் உள்ளிருந்தே அண்ட சராசரம் அனைத்தும் இயக்கப்படுகிறது என்றத் தத்துவத்தை உணர்த்து வதாகக் கூறுவர். **115**



**வனஸ்பதி**



உயர் அறிவு அல்லது மெய்ஞ்ஞான ரீதியில் வனஸ்பதி என்பது உண்மையான முகத்தை மறைக்கும் மாயை எனும் **முகமூடி**. இதனை அன்னையின் மாய சக்தியைக் குறிக்கும் வடிவமாகக் கூறுவர். அதாவது கண்களால் காணும் அனைத்தும் மாயை எனும் தத்துவத்தை எடுத்துக் கூறுவதாகும்.

இந்தியத் திருமண்ணில் தோன்றி வளர்ச்சிப் பெற்ற இச் சின்னத்தை, உலகம் முழுவதும் ஏற்றுக்கெண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. பௌத்த சமயத்திற்கும் முற்பட்ட காலத்தில் இச்சின்னத்தை போன்போ எனக் குறிப்பிட்டு திபெத்தியர் பூதகணங்களாக வழிபட்டுள்ளனர். இதனை அக்னியாக வழிபட்டு புனிதத் தன்மையை அடைய முடியும் என்பதும் அவர்களது நம்பிக்கையாகும். **116**

**கீர்த்தி முகம்**



திருக்கோயிலில் காணப்படும் கீர்த்தி முகத்தின் பின்னனியில் ஓர் தத்துவம் உள்ளது. திருக்கோயிலின் ஆதிதளத்தில் இடம்பெறும் தூணின் மேற்பகுதியில், கருக்கணிகளுடன் கூடிய கூட்டின் உச்சியில் கீர்த்தி முகம் காணப்படும்.**117** அது அலங்கார அமைப்புடைய கபோதகத்தில் இடம் பெற்றிருக்கும். அக் கீர்த்தி முகத்தின் (*Face of Glory*) சிறப்பு ஸ்கந்த புராணத்தில் கூறப்பட்டுள்ளது. அதுவானது;

ஆதியில் ஜலந்திரன் எனும் அசுரன் அகில உலகத்தையும் வென்றான். உலகிலுள்ள அழகிய பெண்களையும் அடைய விரும்பிய அவன் மலைமகளைக் கொண்டுவரும்படி ராகுவை அனுப்பி வைத்தான். இதனை அறிந்து, சினமுற்ற ஈசனது முன்றாம் கண்ணிலிருந்து ஓர் அக்னி வெளிப்பட்டது. அதிலிருந்து எதையும் தின்றுத் தீர்க்கும் அசுர உருவம் ஒன்று தோன்றியது. அந்த அசுர உருவம் ராகுவைப் பிடித்துத் தின்பதற்கு ஓடிவந்தது.

*அங்ஙனம் வருவதை அறிந்த ராகு தப்பித்துக் கொள்ள ஓடி ஒளிந்து கொள்ள மேற்கொண்ட முயற்சியில் தோல்வி அடைந்தது. அது தன்னைக் காத்தருளும் பொருட்டு ஈசனிடம் சரணடைந்தது. தம்மிடம் சரணடைந்த ராகுவைக் காக்கும் பொருட்டு, அந்த அசுர உருவத்தை நோக்கி ராகுவை விட்டு விடு எனக் கட்டளையிட்டார்.*

*அது ஈசனின் கட்டளையை ஏற்றுக் கொண்ட போதிலும், இனி நான் எதை தின்பது என ஈசனைக் கேட்டது. நீ ஏன் உன்னையே தின்னக் கூடாது என்றார் அவர்.*

*அதன்படியே அந்த அசுர உருவம், தனது பாதம் முதல் கழுத்து வரை தின்று தீர்த்தது. இனிமேல் தம்மை தானாகவே உண்ண முடியாது என்ற நிலையை உணர்ந்த போது இறைவனை நோக்கியது.*

*அதனது செயலைக் கண்ட ஈசன், மனமகிழ்ந்து, இனி நீ கீர்த்திமுகம் என்று அழைக்கப்படுவாயாக ! ஜீவராசிகள் யாவும் முதலில் உன்னை வழிபட்ட பின்னரே எம்மை வழிப்படுவராக, எனவும் வரம் அளித்தார்* ***118*** *என்பதாகும்*



### பாத்திரம்


*மதக் குருமார்கள் அமர்ந்த கோலத்தில் ஓர் பாத்திரத்தை தங்களது தொடையில் வைத்திருப்பது அவர்களது உயர் நிலையைக் குறிப்பிடுவதாகும்.*

### கபாலா



*மனித மண்டை ஓட்டை கபாலா என்பர். இதனை நிலையற்ற உலக வாழ்க்கையில் மரணம் நிகழ்வது நிச்சயம் என்பதைக் குறிக்கும் அடையாளச் சின்னம் எனக் கூறுவர்.*

*இதை ஈசன், துர்க்கை அம்மன், ஹெருக்க எனும் அருள்மிகு விநாயகர் ஆகியோரைக் குறிக்கும் சின்னமாகக் குறிப்பிடுவர். அனைத்து ஜீவராசிகளைக் காத்தருளும் பொருட்டு ஈசன் கபாலம் ஏந்தி சுற்றித் திரிந்தார் எனவும் கூறுவர்.* ***119***



### அகர் கபாலா / மான்ச கபாலா

மனித மண்டை ஓட்டின் மேல் பகுதியான அரைப் பகுதியை பாத்திரமாகவும் அதில் இரத்தத்தை நிரப்பினால் அதற்கு அசுர் கபாலா எனவும் மாமிசத்தை நிரப்பினால் மனசக பாலா எனக் குறிப்பிடுவர்.



இப்பாத்திரம் இறப்பைக் குறிக்கும் சின்னமாகவும், பூதகணங்களை வழிபடும் ஓர் அடையாளமாகவும் கூறப்படுவதுண்டு.***120***

### பிச்சைய பாத்திரம்

கபாலத்தின் மேல் பாகமான அதன் அரைப்பகுதியைக் **கபால பாத்திரம்** அல்லது பிச்சைய பாத்திரம் என்பர். இச்சின்னம் சிவன், பிரம்மா, விநாயகர் ஆகியோரைக் குறிப்பிடுவ தாகவும் கூறுவர். ***121***

### மோதகம்

மோதகம் என்பது அப்பம், கொழுக்கட்டை, பிட்டு முதலிய உணவு வகையைக் குறிக்கும் சொல். அருள்மிகு விநாயகர் சதுர்த்தியன்று ஸ்ரீ விநாயகப் பெருமானுக்குக் கொழுக்கட்டையைப் படைத்துப் பூசிப்பதை அதற்கு ஒரு சிறந்த உதாரணமாகச் சுட்டிக்காட்டலாம்.

### கடவுட் சோறு எனும் பிரசாதம்




தெய்வத் திருமேனிகளுக்குப் படைக்கப்படும் உணவைத் தேவருக்கான உணவு அல்லது நிவேதனம் என்பர். **நிவேதனம்** என்பதற்கு ஒப்புவித்தல் எனப் பொருள். அதில் பழங்கள், இனிப்பு பண்டங்கள், அமுது எனும் வெண்பொங்கல், சர்க்கரைப் பொங்கல், வேக வைத்த சுண்டல் போன்றவை யாவும் உள்ளடங்கும்.***122***

இறைவன், இறைவி ஆகியோருக்கு உணவு படைத்தல் அதாவது ஒப்புவித்தல் என்பதையே அமுது படைத்தல் எனக் கல்வெட்டுச் சான்றுகள் பகர்கின்றன. **அமுது** என்பதற்குச் சோறு எனப் பொருள். இறைவனுக்குப் படைக்கப்பட்ட உணவே அனைவருக்கும் உண்ண வழங்கப்படுவதால் இவ்வுணவு கடவுட்சோறு எனக் கூறுப்படுகிறது.

தமிழ்ச் சொல்லான சோறு என்பது சாதம் எனவும் கூறப்படும். கடவுட்சோறு என்பதே கடவுள் பிரசாதம் என மாறியுள்ளது. இறை வனுக்குப் படைக்கப்பட்ட மேற்கண்ட கடவுட் சோறு அனைவருக்கும் பகிர்ந்தளிப்பதும், ஒற்றுமையாக அமர்ந்து உண்பதும் இந்து சமய மரபாகும்.

## புத்தகம்




புத்தத்தை புஸ்தகம் எனவும் **புஸ்தகா** எனவும் மறை நூல்களுக்கு ஒப்பாகவும் சுட்டிக் காட்டுவர். இதனை, அன்னையின் மடியையும், தாமரை மலரையும், ஞானத்தையும் குறிக்கும் அடையாளச் சின்னமாகக் கூறுவர். இதற்கு மெய்ஞ்ஞானம் எனும் உயர் அறிவை சேமித்து வைத்துள்ள ஞானக் களஞ்சியம் என்ற சிறப்புப் பெயருண்டு. இது, பிரம்மதேவனையும், வாக்குவாதினி எனும் சரஸ்வதி தேவியையும், உலகைக் காத்தருளும் ஸ்ரீமஹா விஷ்ணுவையும் குறிப்பிடுவதாகவும் கூறுவர்.[123]

## ஜபமாலை

ஓம் எனும் மந்திரத்தை நூற்று எட்டு முறை உச்சரித்து ஜபம் செய்வதற்காக ஓர் நூலில் தொடுக்கப்பட்ட மணிகளைக் கொண்ட மாலையை ஜபமாலை என்பர். தீப்பொறியை உண்டாக்கும் ஸ்படிக மணிகளைக் கொண்ட மாலை ஸ்படிக மாலையாகும். பொதுவாக வாசனைத்தரும் சந்தனக்கட்டை, அழகிய முத்துக்கள், வண்ணமிகு கற்கள், மனித எலும்புகள் ஆகியவற்றை மணிகளாகக் கொண்டவை சாதாரண ஜபமலையாகும். நோய் தீர்க்கும் சக்திபடைத்த துளசி மாலையும், காந்த சக்தி கொண்ட உருத்திராட்ச மாலையும் சிறந்தவையாகும்.

மனத்தை ஒருநிலைப்படுத்தி, ஓம் எனும் மந்திரத்தை நூற்று எட்டு முறை உச்சரிக்கும் போது, ஒவ்வொரு முறையும் வலது கரத்தின் ஐந்து விரல்களில்,

குறிப்பாக ஐந்து விரல்களில், குறிப்பாக ஆள் காட்டிவிரலை நீட்டி நடுவிரலால் ஒவ்வொரு மணிகளை நகர்த்துவதற்கு பிரத்யோகமானதே ஜெபமாலை யாகும். அவ்வாறு நூற்று எட்டு முறை ஜெபம் செய்வதை, பிரபஞ்சக் காலத்தின் சுழற்சியைக் குறிப்பிட்டு, ஸ்ரீ பிரம்மன், ஸ்ரீ கிருஷ்ணன், ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சரஸ்வதி தேவி ஆகியோரை மனத்தால் வணங்குவதற்கு ஒப்பானதாகக் கூறுவர்.[124] ஓம் எனும் மந்திரத்தை உச்சரித்து மணிகளை ஒவ்வொரு முறை உள் வாங்கும் போது மானுடரின் பிறப்பு- இறப்பு என்ற வாழ்க்கைச் சுழலில் விடுபட்டு நிர்வாண நிலையை (முக்திநிலையை) நெருங்குவதுடன் ஒப்பிடுவர்.



**அக்ஷமாலை எனும் அட்சயமாலை**

51 மணிகள் கொண்ட ஜபமாலையில் **அ** முதல் **ள** வரையிலான 50 அக்ஷரங்களையும் நடுவே உள்ளதொரு மணி **க்ஷ** எனும் அக்ஷரத்தை குறிக்கும். **க்ஷ** என்பது மேரு எனவும் ஜபம் செய்யும் போது அதனை தாண்டாமல் திருப்பி எண்ணிக் கொள்ளவேண்டும் என்பர். ஒவ்வொரு மணிகளும் ஒரு அக்ஷரங்ளை குறிப்பிடு வதால் இது அக்ஷமாலை / அட்சயமாலை[125] எனப் பெயர் பெற்றுள்ளது. அட்சயம் என்பது அழியாத் தன்மையைக் குறிக்குமொரு சொல்.

பவளம், முத்து, ஸ்படிகம், சங்கு, வெள்ளி, பொன், சந்தனம், மணி, ருத்ராக்ஷம் ஆகியவற்றைக் கொண்ட இதில் ஒவ்வொரு அக்ஷரங்களைத் தொடும் போதும் **அம் நம: ஆம் நம** என உச்சரிக்கவேண்டும் என அக்ஷமாலிகோபநிடதம்[126] கூறுகிறது.

**உருத்ராக்ஷமாலை**

ஸம்ஹாரகாலத்தில் ஸம்ஹாரம் முடிந்ததும் (உருத்ரன்) ஸம்ஹாரக்கண்ணை மூடியபோது அக்கண்ணிலிருந்து தோன்றியதே உருத்ராக்ஷமாகும்.

ஆதியில் உருத்ரருடைய கண்களிலிருந்து தோன்றியதால் அதற்கு உருத்ராக்ஷம் எனவும் உருத்ராக்ஷங்களை மணிகளாகக் கொண்டதால் இம் மாலைக்கு உருத்ராக்ஷமாலை எனப் பெயர் பெற்றுள்ளது எனப் ப்ருஹஜ்ஜாபாலோபநிடதம்[12] கூறுகிறது.

நெல்லிக்காய் அளவுடையவையும், இயற்கையாகவே துவாரமுடையவையும், பொன் வர்ணக் கோடுகள் தெளிவாக தெரிகின்றவையுமே சிறந்தவை.

அவையே உத்தமம். இலந்தப்பழம் அளவுள்ளவையும், செயற்கையாக துவாரம் செய்யப்பட்டவையும் மத்திமம் ஆகும். கடலை அளவுள்ளவை கடைப்பட்டவை-யாகும்.

ஒரே மாதிரி அளவுள்ளவை சாமான்யமாகும். அவற்றில் சமமாகவும், பளபளப்பாகவும், கெட்டியாகவும் , பருமனாகவும், உள்ளவற்றைத் தேர்ந்தெடுத்து பட்டுநூல் கயிற்றில் கோர்த்து மாலையாக அணிந்து கொள்ளலாம் என ருத்ராக்ஷஜாபாலோபநிடதம்[128] கூறுகிறது. உருத்ராக்ஷட்சத்தின் முகங்களின் எண்ணிக்கை அதன் பொன் வர்ணக்கோடுகளால் அறியப்படுகின்றன. மேலும் அம்முகங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அவற்றின் ஸ்ரூபம், பலன்கள் பற்றி ருத்ராக்ஷஜாபாலோபநிடதம் கூறுகிறது.

| முகங்கள் | ஸ்ரூபம் | கிடைக்கும் பலன்கள் |
|---|---|---|
| ஒன்று | பரத்வம் | இந்திரிய ஜெயம் |
| இரண்டு | அர்த்தநாரீச்வரர் | அர்த்தநாரீச்வரர் அருள் |
| மூன்று | மூன்று அக்னிகள் | அக்னிதேவருடைய அருள் |
| நான்கு | பிரம்ம தேவன் | பிரம்மா ப்ரீத்தியடைவார் |
| ஐந்து | பஞ்சபிரம்மம் | பிரம்மஹத்தி பாவத்தை போக்கும் |
| ஆறு | கார்த்திகேயன் | பெருஞ்செல்வம், சிறந்த ஆரோக்கியம், விநாயகப் பெருமானின் அருள் |
| ஏழு | சப்த மாதர்கள் | செல்வபெருக்கு, உத்தமஉடல் நலம், சிறந்த ஞான சம்பத்து |
| எட்டு | எட்டு மாத்ருகா | சத்தியவாதிகளாகும்,தேவிகள்உறைவிடம் எட்டுமாத்ருகா ப்ரீதி, கங்கையின் அருள் |
| ஒன்பது | நவசக்திகள் | நவசக்திகளின் அருள் உறைவிடம் |
| பத்து | யமன் | தசைகளில் சாந்தி |
| பதினொன்று | ஏகாதச ருத்ரர்கள் | ஸௌபாக்கிய வளர்ச்சி |
| பன்னிரண்டு | மஹாவிஷ்ணு | பன்னிரு ஆதித்தியர்களை தன்னுள் கொள்ளும் சக்தி |
| பதின்மூன்று | காமதேவன் | விரும்பிய சுப சித்தி |
| பதினான்கு | உருத்ரநேத்திரம் | எல்லாவியாதிகளையும் போக்கி எப்போதும் ஆரோக்கியமான உடல் நிலை |

ஒவ்வொரு ருத்ராக்ஷத்தில் பிரம்மா, விஷ்ணு உருத்திரன். ஆகிய மும்மூர்த்திகளும் குடிகொண்டுள்ளனர். எனவே சிவலிங்க வடிமாகவே பாவித்து அபிஷேக ஆராதனைகள் செய்வது சிறந்தது. அதனை தலையில் 26, மார்பில் 50, தோளில் 14, மணிக் கட்டில் 14 என ருத்ராக்ஷ மணிகளை மாலைகளாக அணியலாம்.

குறிப்பாக மார்பில் 108, 50, 27 என்ற எண்ணிக்கையில் மாலையாக அணிவதும் சிறந்தது என தேவிபாகவதம்[129] உருத்ராக்ஷத்தின் மகிமையைப் பகர்கிறது.

## திரிபுரம் எனும் சந்திரன் சூரியன் அக்னி

நம் வாழும் பூமியின் ஒரே உபகிரகம் சந்திரன். இது, பிரபஞ்சம் எனும் மஹா சமுத்திரத்தில் தேவர்களும் அசுரர்களும் கடைந்து சோம பாணத்தை எடுத்த போது பால்வெளியில் எறியப்பட்ட உபபொருள்களில் ஒன்று எனவும், இது ஒரு அமிருதம் நிறைந்த பாத்திரம் எனவும், நம் முன்னோர்களும் தேவர்களும் அந்த அமிருத்ததை அருந்தினர் என்பர். இவ்விடத்து **அமிருதம்** என்பது மோக்ஷம், அழிவின்மை, சாகாமை, தெய்வம் எனப்பொருள்படும்.[130]

நட்சத்திரக் கூட்டத்தை அரசாட்சிபுரியும் சந்திரனை, இறப்பிற்கு பின்னர் உயிர்கள் வாழும் உலகம் எனக் கூறுவர். சந்திரனை, பிரபஞ்சத்தில் வியாபித்துள்ள விராட் புருஷனின் மனம் எனக் குறிப்பிட்டு அப்புருஷனின் பிரபஞ்ச மனத்தால் தோற்றுவிக்கப்பட்ட பிரபஞ்ச பொருட்களின் கூட்டுருவம் என்பாரும் உண்டு. இங்கே நம் முன்னோர்கள் வாழ்ந்து வருவதாகவும் கூறுவர்.

சந்திரனுக்குரிய பல்வேறு பெயர்களில் சோமன் எனும் பெயருண்டு. சோமன் என்பது சிவபெருமானையும், சாம்பரையும், துர்க்கை அம்மனையும் குறிக்கும் சொல்.[131] இதைச் சிவபெருமானின் சிகையில் பதித்துச் சிறப்பிப்பது சிற்பசாஸ்திர மரபு. சோமனைத் தனது சிகையில் சூடிக் கொண்டிப்பதால் ஈசுவரர் **சோமசுந்தரேசுவரர்** என்றழைக்கப்படுகிறார்.

உலகில் உயிர் வாழும் அனைத்து ஜீவராசிகளின் வாழ்க்கைக்கு ஜீவதாரமாக திகழ்வது சூரியன். மேலும் இதனது இயற்கையான ஒளியையும் உஷ்ண சக்தியையும் தோற்றுவிக்கும் சக்தியுமே தெய்வமாகக் கருதப்படுவதன் காரணமாகும்.

இதனைப் பிரபஞ்ச தியாகத்தின் சின்னமாகவும், பிறவா நிலையை அடைவதற்குத் தேவலோக வாயில் கதவு எனவும் கூறப்படுகிறது.[132] ஆதியில் பூலோகத்தில் முக்தியடைவதற்கான ஞானத்தை அருளும் சூரியனை வழிபடாதோர் எவருமே இல்லை எனக் கருதப்பட்டது.

*ஆயிரமாயிரம் ஒளிக்கதிர்களைக் கொண்ட சூரியனே, ஆதித்தியன். அந்த ஆதித்தியன் காலை, மாலை எனத் தோன்றி மறையும் காலத்தில் சந்தியாவதனம் எனும் அவனை வழிபடுவதற்கு உச்சரிக்கப்படும் மந்திரமே காயத்திரி மந்திரமாகும்.*

*அம் மந்திரத்தில் குறிப்பாக; **ஹம்ஸஹம்ஸாய வித்மஹே பரமஹம்ஸாய தீமஹி/ தந்தோ ஹம்ஸ: ப்ரசோதயாத்//** என்பது ஹம்ச காயத்திரி மந்தரமாகும். காயத்திரி என்றால் எவரெல்லாம் தன்னை ஜெபிக்கிறார்களோ அவர்களைக் காப்பாற்றுபவள் என்று பொருள்.*

*இதுவே, சூரியனுக்கு ஒளி தருமாறும், உலகுக்கெல்லாம் ஞான ஒளி கொடுக்குமாறும் வேண்டுமொரு மந்திரமுமாகும்.*

### *காயத்திரி மந்திரம்*

*__ஓம் பூர் புவ ஸ்வஹ தத்ச விதுர் வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோனி பிரசோதயாத்__ - என்பதே காயத்திரி மந்திரமாகும். ஓம் - எல்லா உலகத்தைப் படைத்தவரும் பிரகாசமான ஒளி பெருந்தியவரும் தமது பேரொளியின் ஒளிக்கதிர்களால் நம் அனைவரது புத்தியின் சக்திகளை உயர்த்தும், நல்வழியைக் காட்டும் பேரொளியாகிய இறைவனைத் தியானிப்போமாக என்பது அக்காயத்திரி மந்திரத்தின் உட்பொருளாகும்.*

*பிரம்மதேவனின் மனைவியான காயத்திரியின் பெயரால் விளங்கும் இம்மந்திரம் காரணவடிவம், அதனது சூட்சும வடிவம் காயத்திரி யந்திரம். அந்த காயத்திரி யந்திரத்தை உருவாக்கக் கூடியது பதினாறு கட்டடங்களாகும்.*

*அக்கட்டடங்கள் விராட் புருஷரின் பதினாறு அங்கங்களைக் குறிக்கும். பதினாறு கட்டடங்கள் ஒரு விசித்திரமான வரைபடமாகும். அக்கட்டடங்கள் பெரும்பான்மையான பழங்காலக் கோயில்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதைக் காணலாம்.*

*காயத்திரி மந்திரத்திற்கு எண்ணிக்கையில் அடங்காத சிறப்புகளுண்டு. அச் சிறப்புக்களில் குறிப்பாக, புரச்சரியார்நவா, தரங்க 10 - யில் காணப்படும் ஒரு ஸ்லோகத்தை உதாரணமாகக் கூறலாம்.*

*இரவு நேரம் முடிந்து பகல் நேரம் வரும் காலைப் பொழுது, மலையில் பகல் நேரம் முடிந்து இருள் சூழும் மலைப்பொழுது, ஆகிய இரண்டு நேரங்களைச் சந்தியா என்பர். அந்த நேரத்தில் ஒவ்வொரு நாளும் உதயமாகும் ஆயிரமாயிரம் தீக்கதிர்களைக் கொண்ட சூரியனை மண்டேஹா எனும் அரக்கர்கள் தங்களது வாயின் உமிழ்நீரால், அணைத்துவிட முயற்சிக்கின்றனர்.*



இருப்பினும் சூரியன் அனுதினமும் போராடி அவற்றை அழித்து விடுகிறார். அவ்வாறு தினமும் போராடித் தானும் ஜீவித்து ஜீவராசிகளுக்கு ஒளி கொடுக்கும் சூரியனுக்குச் சந்தியா நேரத்தில் உச்சரிக்கப்படும் காயத்திரி மந்திரத்தின் மூலம் சக்தி மேலும் பெருகுகிறது என அச் சுலோகத்திற்குப் பொருள் கூறப்படுகிறது.

அந்த சுலோகத்திற்கானச் சான்று மாயா மக்களின் எச்சங்களிலிருந்தும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது (நன்றி: கேத்தி டோரே).

ஆதித்தியன் எனும் சூரியனை வழிப்படாதவர்கள் கூட தமது உடலில் சூரிய ஒளி படுவதற்காக அதனது ஒளியைத் தேடிச் செல்வர். ஆதிகாலம் முதல் சூரியனை வழிபட்ட நம்முன்னோர் மற்றொரு கருத்தையும் முன்மொழிந்துள்ளனர்.

அதுவானது; **எல்** எனும் சூரியனை விட - இதயக்குகையில் குடிகொண்டுள்ளதும், தகதக என மின்னும் தங்கத்தை போன்றதும், பொன்னிறமுடையதுமான **ஏல்** எனும் பேரொளியே மிகவும் பிரகாசமானது என்பதே அக்கருத்தாகும்.

பிரபஞ்சத்தின் நடுவே அக்னி குடிகொண்டுள்ளதாக ருக் வேதம் கூறுகிறது. இந்து சமயம் தீச் ஜுவாலைகளுடன் அக்னியை அக்னிதேவனாக வணங்குவதோடு மட்டுமின்றி அதனை அழிக்கும் சக்தி எனவும் கூறுகிறது. அக்னி ஈசனையும், துர்க்கை அம்மனையும் மகாகாளியைக் குறிப்பிடுவதாகவும் கருதப்படுகிறது.

திரிபுரம் என்பதில் சந்திரன், சூரியன், அக்னி ஆகிய மூன்றும் உள்ளடங்கும். முக்கண்ணன் எனும் ஈசனது மூன்று கண்களில் முதல் இரண்டும் சந்திரன், சூரியன் எனவும் மூன்றாவது அக்னியாகவும் உள்ளது என்பர்.

## சந்திராதித்தன்

ஆன்மிகம் - குறியீடு - கல்வெட்டு ஆகிய மூன்றும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவை. ஆயிரம் சொற்களால் விளக்கமாகக் கூறக்கூடிய மிகஉயர்ந்த ஆன்மிக தத்துவங்களை ஓர் சிறிய குறியீட்டில் உள்ளடக்கி விடலாம். இதன் காரணமாகவே கல்வெட்டுச் சாஸனங்களில் குறியீடுகளுக்கு முக்கியத்துவம்

கொடுக்கப் பட்டுள்ளதற்கான காரணமாக் கருதலாம். ஒருசில கல்வெட்டுக்களின் மேல் பகுதியில் சூரியன் சந்திரன் ஆகிய இரு குறியீடுகள் பொறிக்கப்பட்டிருக்கும். வலது புறத்தில் சூரியனும், இடது புறத்தில் சந்திரனின் பிறை வடிவமும் பொறிக்கப்பட்டிருக்கும்.

வளர்பிறை ஐந்தாம் நாள் பஞ்சமி திதியை குறிக்கும். பொதுவாக இச்சின்னங்களுக்கு சூரியன் சந்திரன் சாட்சியாக எனப்பொருள் கூறுவர்.

கல்வெட்டுக்களில் **சந்திராதித்தன் உள்ளவரை** என்ற எழுத்துப் பொறிப்பும் காணப்படும். குறியீடுகளில் சூரியன் முன்னதாகவும் சந்திரன் அடுத்ததாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது. ஆனால் சந்திராதித்தன் என்ற சொல்லில் இது மாறுபடுகிறது.

சந்திரனுக்கு எனத் தனிப்பட்ட வகையில் ஒளி ஏதுமில்லை. ஆதித்தனின் ஒளியாலே சந்திரன் பரிவேடம் பூண்டு பிரகாசிக்கிறது என்பதே உண்மை. அவ்வாறு இருக்க சந்திரனை முன்னிறுத்தி ஆதித்தனை பின்நிறுத்தி சந்திராதித்தன் எனக் குறிப்பிடுவதன் காரணம் என்ன?

வினாடி, மணி, நாள், வாரம், மாதம், வருடம், யுகம் என காலத்தைக் கணக்கிட்டு அறிந்தவர்கள் நம்முன்னோர்கள். அவர்கள் காலத்தைக் குறிப்பிடும் போது திங்கள் எனும் சந்திரனை (திங்கட்கிழமை) முன்னிறுத்தி ஆதித்தனை (ஞாயிற்றுக்கிழமை) பின்னிறுத்தி அறிவித்துள்ளனர்!

இரவில் நித்திரை செய்வதை உறங்குதல் என்பர். உறங்குதல் என்பதற்கு ஒடுங்குதல் எனப்பொருள். அதாவது, நமது ஒடுங்கிய நிலையிலும் கூட அறியாமை நம்மை சூழ்ந்து விடாமல் சந்திரனின் ஒளி பாதுகாப்பதாகக் கருதுவதாகும்.

எனவே அறியாமை எனும் இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வர சந்திரனே உதவுகிறது என்பது உயர்நிலை (மெய்ஞ்ஞான) சிந்தனை.

இதுவே சந்திராதித்தன் என்றச் சொல்லின் உட்பொருள் எனக் கருதுவோமாயின், அச்சொல்லிற்கு அறியாமையை அகற்றி, அறிவின் இறுதி நிலைக்கு நம்மை அழைத்துச் செல்லும் வழிகாட்டி எனலாம். ஈசனைப் **பித்தா பிறை சூடி**- எனப்புகழ்வதில் உட்பொருளும் அஃதே. இவ்விடத்து பித்து என்பதற்கு பைத்தியம்; அறியாமை; எனப் பொருள்படுவது குறிப்பிடத்தக்கது.

நோய்களைக் குணப்படுத்தும் மூலிகைச் செடிக் கொடிகள் முதல் அனைத்து ஜீவராசிகள் வரை அனைத்திற்கும் தேவையான சக்தியைச் சந்திரன் சூரியனிடமிருந்தும், சூரியன் இறைவனிடமிருந்தும் பெறுவதாக தைத்தரீய உபநிடதம்[133] கூறுகிறது.

அறியாமை எனும் இருளை நீக்கும் சந்திரனுக்கும் சூரியனே உதவுகிறது என்பதால் சூரியனே எக்காலத்திலும் முன்னிற்கிறது. பூலோகத்திலுள்ள அனைத்திற்கும், உயிர்ச் சக்தி வடிவாகிய சந்திரனாக ஆகி செடிக்கொடிகளை எல்லாம் வளர்க்கிறேன்- எனக் கீதைக் கூறுகிறது.

பழங்கால வரலாற்றுப் பதிவேடுகளில் முதலில் சூரியனை வட்டமாகவும் சந்திரனை வளர் பிறை வடிவமாகவும் வடிவமைப்பர். அவ்வடிவங்கள் கோட்டுருவங்களாகவோ அல்லது புடைப்புச் சிற்பங்களாகவோ காணப்படும்.




(படம்: காண்பதற்கரிய சேலம்,மேட்டூர் நீர்தேக்கம், கோட்டையூர், நந்தி மண்ட மேற்கூரை புடைப்புச் சிற்பங்கள்)

**சூரியச் சந்திரர்**

மகாயோகம் என்பதற்கு மந்திரயோகம், லயயோகம், ஹடயோகம், ராஜயோகம் ஆகிய நான்கும் ரகசியப்படிகளாகும். ஹம்ஸ ஹம்ஸ என்பது மந்திரயோகம். அதில் ஹகாரம் சூரியன், ஸகாரம் சந்திரன். சூரிய சந்திரர்களின் ஐக்கியம் ஹடயோகம். ஹட யோகத்தால் எல்லா தோஷங்களும் தோன்றுவதற்குக் காரணமான ஜடத்தன்மை விழுங்கப்படுவதாக யோகசிகோபநிடதம்[134] கூறுகிறது.

ஈசன் தமது பக்தர்களின் பிரார்த்தனைக்குச் செவிச்சாய்த்து உமையம்மையோடு மானும் மழுவும் ஏந்தி எழுந்தருளி தடுத்தாட் கொள்ளும் காட்சியில் ஆகாயத்தில் சூரியனும் சந்திரனும் மலர்களை ஏந்திப் பறந்து வருவது போன்று சிற்பிகள் சித்திரித்துக் காட்டுவர். திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெள்ளறை, மாற்பிடுகு பெருங்கிணற்றில் காணப்படும் சூரியசந்திரரின் புடைப்புச் சிற்பங்களை அதற்கோர் உதாரணமாகச் சுட்டிக்காட்டலாம். (நன்றி: தமிழகத் தொல்லியல் துறை)

**தூப, தீப, காந்த ஆராதனை**

தூப, தீப, காந்த ஆராதனை என்பது தெய்வத்தை வழிபடுவதை குறிப்பிடுவதாகும். இதனை, வாசனை மிகுந்த திரவியங்கள் அக்னியோடு இணைவதால் வெளிப்படும் நறுமணம் கமழும் புகையையே தூபமாகவும், கற்பூரத்திலிருந்து வெளிப்படும் ஒளியை தீபமாவும், மணியிலிருந்து வெளிப்படும் ஓசையை காந்தலாகவும் ஒப்பிடுவர். தூப, தீப, காந்த ஆராதனையை ஆகாயத்தில் ஒளியாகவும் ஒலியாகவும், நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளை வணங்கும் புனிதமான செயலைக் குறிப்பிடுவதாகவும் கூறுவர்.

**தூபம்**



தூபம் என்பதற்குப் புகை எனப்பொருள். வாசனைத்தரக் கூடிய சாம்பிராணியைத் தீயிலிட்டு அதிலிருந்து சாம்பிராணிப் புகையை வெளிப்படுத்தித் தெய்வங்களை வழிபடுவதாகும்.

இது முற்றிலும் அறிய இயலாத ஆகாயத்தை வழிபடுவதற்கு ஒப்பாகும்.

அப்புகையை வெளிப்படுத்தும் உபகரணம் தூபக்கால்[135] அல்லது தூப் தனி (தூப் தானி) எனப்படும்.

தொல்காப்பியரை வட மொழியில் திரண தூமாக்கினி என்பர். திரண என்பது ஒருவகையான வாசனைத் தரும் புல், தூமாக்கினி என்பதற்கு தீமைகளை அழிக்கும் சக்தி எனப் பொருள்படும்.

**தீபம்**



தீபம் என்பது பொதுவாக ஓர் விளக்கின் ஒளியைக் குறிக்கும் சொல். விளக்கொளி என்பது ஒரு விளக்கில் வெள்ளைத் திரி, சுத்தமான நெய் அல்லது வெண்ணெய் கொண்டு தீப் பொறியால் ஏற்றப்படும் ஒளியாகும்.[136]

விளக்கிலிருந்து வெளிப்படுவதால் இதன் ஒளியை விளக்கொளி என்பர். சிறிய தீபத்தைப் பிரம்மத்தின் பேரொளியுடன் ஒப்பிடுவர். திருவிழாக் காலங்களில் விளக்கேற்றித் தெய்வங்களை வழிபடுவது மிகப்புனிதமான செயலாகும்.

தீபத்தின் ஒளியைச் சலனமற்று மேல் நோக்கிக் கூர்மையாக உயரும்படி சிற்பிகள் வடிவமைப்பர். அதில் மிக உயர்ந்த தத்துவம் உள்ளடங்கியுள்ளது. அத்தத்துவத்தை இரண்டு பழங்காலக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

பொதுவாகக் கல்வெட்டுக்களில் வட்டவடிவிலான புள்ளிவைத்த எழுத்துக்களைக் காண்பது மிகவும் அரிது.

ஆயினும், திருச்சி, திருவெள்ளறை, ஸ்வஸ்திக வடிவ மாற் பிடுகு பெருங்கிணற்றில் பொறிக்கப்பட்டுள்ளதும், பொ.ஆ. 801 ஐ சார்ந்ததுமான ஒரு கல்வெட்டில் புள்ளிக்குப் பதிலாகச் சுடர் விட்டு எரியும் தீப் பிழம்பின் வடிவம் போல காணப்படும் ஜோதியின் வடிவத்தைக் காணலாம்.

அதில் தீப்பிழம்பு வளைந்து மேல்நோக்கிச் செல்வது போல் அமைக்கப்பட்டுள்ளது. அதன் பொருள், மனம் அமைதி அடையாத நிலையாகும். அதாவது உலகப் பற்றாகிய காற்று மனமாகிய தீபத்தை எப்போதும் அலைக்கழிக்கிறது என்பதாகும். அதற்குச் சான்றாக பைங்கலோபநிடதம் கூறுவதாவது;

அறிவையும், அறிபவனையும் கடந்து அறியப்படும் பொருளுடன் ஒப்பிட்டுக் காற்றில்லாத இடத்தில் தீபத்தைப் போல,[137] உலகப்பற்று அற்ற நிலையில் மனமாகிய தீபம் எப்போதும் அலைக்கழிக்கப்படுவதில்லை.

அதற்கு உதாரணமாக திருச்சி- தஞ்சை செல்லும் தேசிய நெடுஞ்சாலையின் தென்புறத்தில் அமைந்துள்ளப் புதுக்குடி சிவாலயத்தின் பாடல் கல்வெட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள புள்ளியின் வடிவத்தைச் சுட்டிக்காட்டலாம்.

**காந்த**

மணியை, காந்த எனக் குறிப்பிடுவர். காந்துதல் என்பதற்கு ஒளிர்தல், முதிர்தல் எனப் பொருள்படும். எவ்வாறு ஒரு ஆலய மணியின் ஓசை அமைதியான நிலையிலிருந்து உயர்ந்து, அமைதியில் கரைகிறதோ, அவ்வாறே பிரபஞ்சத்தின் முதன்மை யான ஓங்காரமும் உள்ளதாக கூறுவர்.



மிகவும் புனிதமான இவ் வடிவத்தை துர்க்கை அம்மன் தனது கரங்களில் கொண்டிருப்பாள். மணியிலிருந்து வெளிப்படும் மணிஓசை எதிராளிகளிடம் பய உணர்வை ஏற்படுத்தக் கூடிய சிவத்தின் குணமாகவும், காளியின் குணமாகவும் கூறுவர்.

சங்கின் ஒலியுடன்இணைந்து எழும் மணி ஓசை இந்து சமய வழிபாட்டில் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது.[138]

திருக்கோயில்களில் உபயமாக **மணிக்கட்டுவதல்** என்பதன் உட்பொருள் இஃதே. இறைவனை ஒலிவடிவினன் எனவும் ஒலி எனும் நாதத்திற்கு அவனே தலைவன் எனவும் கூறுவர்.

**நாதம்** என்பதற்கு ஓசை; இசை; **அரை வட்டமான பிரணவ எழுத்து;** சிவதத்துவம்; எனப் பொருள்படும்.

**வணங்குதல்**



வணங்குதல் என்பது இரு கரங்களின் உள்ளங்கைகளும், விரல்களும், ஒருங்கிணைத்து பணிந்து இறைவனை வணங்கும் நற்செயலாகும்.

அவ்வாறே ஒருவர் மற்றொரு வரை சந்திக்கும் போதும் விடைபெறும் போதும் மரியாதை நிமித்தம் பணிவுடன் வணங்குதலை வணங்கல் எனும் நமலுதல் என்பர். இறைவனின் சன்னிதானத்தில் இருகரங்களைக் குவித்துத் தலையைத் தாழ்த்தி வணங்குதலை **நமலுதல்** என்பர். நமலுதல் என்ற சொல்லே **நமஸ்காரம்** என மாறியுள்ளது.

தலையால் மட்டும் இறைவனை வணங்குவது **ஏகாங்க நமஸ்காரம்** எனவும், தலையின் மேல் வலது கரத்தைக் குவித்து வணங்குவது **துவிதாங்க நமஸ்காரம்** எனவும், தலையின் மேலே இருகரங்களையும் குவித்து வணங்குவது **திரிவிதாங்க** நமஸ்காரம் எனவும் கூறுவர்.

தலை, இரண்டு முழங்கால், இரண்டு உள்ளங்கைகள் ஆகிய ஐந்து உடல் உறுப்புக்கள் தரையில் படும்படி வணங்குவது **பஞ்சாங்க நமஸ்காரம்** எனவும் இரண்டு கைகள், இரண்டுகால்கள், இரண்டு காதுகள், நெற்றி, மார்பு ஆகிய உடலின் எட்டு அங்கங்கள் தரையில் படும்படி வணங்குவது **அஷ்டாங்க நமஸ்காரம்** எனவும், நெடுஞ்சாண் கிடையாகத் தரையில் வீழ்ந்து வணங்குவது **சாஷ்டாங்க நமஸ்காரம்** எனக் கூறப்படுகிறது.[139]

இந்த பூத உடம்பு நம்முடையதன்று எனத் தடியைப்போல் கீழே விழுந்து இறைவனின் சன்னிதானத்தில் போட்டு வணங்குவதைத் **தண்டம் சமர்ப்பித்தல்** என்று கூறுவர்.

ஒரு தர்ம கர்த்தா தாம் செய்யும் தர்மகாரியத்தைத் தொடர்ந்து காப்பதற்குப் பிற்காலத்தில் முன் வருவோரை இப்போதே வணங்குவதாக, **இது காத்தாரடி என்றலை மேலன** (இதனை காத்தார் (திரு)அடி எந்தன் தலை மேலென) எனக் கல்வெட்டெழுத்துக்களாகப் பதிவு செய்துள்ளனர்.

பழந்தமிழினக் கலாச்சார மரபைப் பறைசாற்றும் கல்வெட்டுக்களைப் புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் கோட்டை, கரூர் மாவட்டம் குடிவண்டை, ஈசுவரன் பாறை ஆகிய இடங்களில் உள்ள சிவாலயங்களில் காணலாம்.

அவ்விரண்டில் ஆய்வாளர் பாலகிருஷ்ணன் கண்டறிந்த கீழ்க்கண்ட குடிவண்டைக் கல்வெட்டு (படம், ப.86)பொ.ஆ. 700-900 ஐ சார்ந்ததாகும். அதுவானது;

ஸ்வஸ்திஸ்ரீ பாண்டிமுத்தரையஞ்யன் அரட்டவதிய

ஞ்யார் பாண்டிபெருந்தேவி பாண்டிமுத்தரையராஞ்யன்

சோழிக அரையரைச் சார்த்திஎடுப்பித்தான்


காலகஸ்வரம் இதுகாத்தாரடி என்ற(த)லை மேலன - என்பதாகும்.

இக்கல்வெட்டில் ஒரு தமிழ் மன்னனது முன்னோக்குச் சிந்தனை, விருப்பம், செயல் மட்டுமின்றி ஒட்டுமொத்த தமிழகத்தின் பண்பாடும் பிரதிபலிக்கிறது எனப் பதிவு செய்வதில் யாம் பெருமையடைகிறோம்.

## மனம் என்னும் மனத்தில் மலரும் அட்ட மலர்கள்

**நலம் சிறந்தார் மனத் தகத்து மலர்கள் எட்டும்** - என்பது திருநாவுக்கரசரின் திருக்குறிப்பு. பிரமாண்டத்தில் குடி கொண்டுள்ளது புருஷ மனம்.

பிண்டாண்டத்தில் குடி கொண்டுள்ளது பிரக்கிருத்தி (இயற்கை) மனம். இவ்விரண்டு மன நிறைவால் பெருவது மானுட மன நலம்.



இவ்விடத்தில் நலம் என்பதற்கு அன்பு எனப் பொருள். புருஷ மன நிறைவின் வெளிப்பாடு ஆனந்தம், விளைவு பிரமாண்ட சமநிலை.

இயற்கை மனத்தின் வெளிப்பாடு மகிழ்ச்சி, விளைவு பிண்டாண்ட சமநிலை. புற இன்பங்களால் ஏற்படுவது சந்தோசம், அக இன்பங்களால் ஏற்படுவது மகிழ்ச்சி. சந்தோஷம், மகிழ்ச்சி ஆகிய இரண்டுக்கும் மேற்பட்டதே ஆனந்தம்.

புற உலகில் அர்ச்சை எனும் அர்ச்சனாமூர்த்தியாக வெளிப்பட்டுள்ள இறைவனை இயற்கையின் மலர்களால் அர்ச்சனை செய்து மனம் சந்தோஷமடைவது போலவே அகஉலகிலும் மன மலர்களால் அர்ச்சனை செய்து மன மகிழ்ச்சியடைவது என யோகிகள் ஒப்பிடுவர். அம்மலர்களை எட்டு (அட்ட) மலர்கள் எனவும் குறிப்பிடுவர்.

அம்மலர்களை அஹிம்சை (கொல்லாமை); இந்திரிய அடக்கம் (ஐம்பொறி அடங்கல்); சாந்தி (பொறுமை), தயா (அருள்); ஞானம் (அறிவு), தபஸ் ( தவம்),; சத்தியம் (வாய்மை); பாவனை (அன்பு); என வரிசைப்படுத்தித் தமிழ் மொழிச் சொற்களோடு ஒப்பிட்டுத் தமிழுக்குச் சிறப்புச் சேர்த்தனர் தமிழ் மூதறிஞர்கள்.

மேற்கண்ட எட்டு மலர்களை இதய கமலத்தில் மலரச்செய்து நிரந்தரமான ஆனந்தத்தை அடைவதே வாழ்க்கையின் இலட்சியமும், பிறப்பின் ரகசியமும், ஆகும் என இந்து சமய நூல்கள் முழங்குகின்றன.


## நூல்குறிப்புக்கள்


1. S.K. Rama Chandra Rao vastu Silpa Kosha, part-2, ps. 263-264
2. வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப.122
3. ibid, ப.124
4. ibid, ப.124
5. ibid, ப.124.
6. ibid, ப.124
7. ibid, ப.123
8. Bruno Dagens, Mayamata, verses.7.50-57
9. அண்ணா, 108 உபநிடத் சாரம், 3-ஆம் பாகம், பாவனோபநிடதம், சூ.1
10. J.R. Santiago, Sacred symbols of Hinduism, p. 48.
11. சுபாஷ் சந்திர போஸ், பழங்காசு, இதழ் 1, பல்லபுரம் கல்வெட்டு, பக். 28-29
12. ஸ்தோத்திர மாலை, ஸ்ரீ பாதுகையும் நவக்கிரகங்களும், ப.99
13. ibid, ஸ்ரீ பாதுகையின் மகிமை, ப.65
14. அண்ணா, சிவானந்த லஹிரீ, இந்திரியங்களுக்கு கட்டளை, சூ. 41. ப. 63-64
15. நல்லூர் ஆறுமுக நாவலர், சூடாமணி நிகண்டு (மூலமும் உறையும்) பா.12.140
16. சுவாமி விவேகானந்தர், ஞானயோகம், உண்மையான மனிதனும் தோன்றும் மனிதனும், பக். 373- 374
17. ஸ்வாமி, ஸ்ரீ பதஞ்சலி யோக சூத்ரம். சூ. 2. 13 ப.138
18. J.R. santiagp, Sacred Symbols of Hinduism, p. 41
19. ibid, ஸ்ரீ. 68
20. தமிழகத் தொல்லியல் கழகம், ஆவணம்-23, 2012.
21. தமிழக அரசு வெளியீடு, தாமரைப் பாக்கம் கல்வெட்டுக்கள்,சென்னை, 1999
22. J.R. Santiago, Sacred Symbols of Hindusim, p. 52
23. ஜீ.ச.முரளி, பன்னிரு திருமுறை ப.1964
24. பதினோராம் திருமுறை, திருக்கையிலாய ஞான உலா, ப.190-199
25. சுபாஷ் சந்திர போஸ், பழங்காசு பேழை:1 இதழ் எண்:1, பக். 28-29
26. அண்ணா. 108 உபநிடத் சாரம், 2-ஆம் பாகம், ஸகந்தோபநிடதம், சூ. 1-10

27. *Swami Hashananda, Principal Symbols of world Religion, p.12*
28. *அண்ணா, 108 உபநிடத் சாரம், 3-ஆம் பாகம்,வாசுதேவோபநிடதம், சூ.4*
29. *ibid, கோபாலதாபின்யுபநிடதம், சூ.2.1.*
30. *ஸ்தோத்ரமாலை, நெற்றிக் குறி இடுதல், ப. அ.5*
31. *வை.கனபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல். ப.129*
32. *J.R. Santiago, Sacred Symbols of Hindusim, p. 26*
33. *வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப.129*
34. *ibid, ப.127*
35. *J.R. Santiago, Sacred Symbols of Hindusim, p. 53*
36. *சுபாஷ் சந்திர போஸ், பழங்காசு, இதழ் 7, பழங்கால பாறை ஓவியமும்..., ப.37*
37. *Swami Harshananda Principal Symbols of world Religions, p. 23*
38. *ibid, ப. 23*
39. *ibid, ப. 25*
39. *ibid, ப. 25*
40. *Swami Harshananda Principal Symbols of world Religions, p. 25*
41. *ibid, ப.26*
42. *ஸகல கார்ய ஸித்தியும் ஸ்ரீதேவி பாகவதம் அநுபந்தம்-5, ப.148*
43. *அண்ணா, 108 உபநிடத் சாரம், 3-ஆம் பாகம், தேவ்யுபநிடதம், சூ. 5*
44. *அண்ணா, சக்திமஹிம்ன ஸ்தோத்ரம் -50, ப.61*
45. *அண்ணா, சிவானந்தலஹிரீ, ப. 67.*
46. *அண்ணா, 108 உபநிடத் சாரம், 3-ஆம் பாகம், ருத்ரஹ்ருதயோபநிடதம், சூ.3*
47. *ibid, 2-ஆம் பாகம், த்யான பிந்து உபநிடதம்*
48. *சுவாமி ஆசுதோஷானந்தர் (விளக்கவுரை), முண்டக உபநிடதம், சூ. 4*
49. *ibid, சூ.2.2.3-4*
50. *J.R. Santiago, Sacred Symbols of Hindusim, p. 50*
51. *பாரம்பரிய சின்னமாகும் போர்ச் கோயில், தினமலர், சண்டே ஸ்பெஷல், 1.12.2013.*
52. *வை.கணபதி ஸ்தபதி, சிற்பச்செந்நூல், ப.126*
53. *J.R. Santiago, Sacred Symbols of Hindusim, p. 71*
54. *அண்ணா, சக்திமஹிம்ன ஸ்தோத்ரம் -48, ப.59*
55. *வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப.127*
56. *அண்ணா, 108 உபநிடத் சாரம், 2-ஆம் பாகம், நிர்வாணோபநிடதம், சூ.37*
57. *அண்ணா, சக்திமஹிம்ன ஸ்தோத்ரம் -48, ப.59*
58. *Philip Rawson, The Art of Tantra, p.162.*
59. *வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப.133*
60. *J.R. Santiago, Sacred Symbols of Hindusim, p.49*
61. *Adrian Snodgrass, The Symbolism of the Stupa, p.293*
62. *வை.கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப. 133*
63. *J.R. Santiago, Sacred Symbols of Hindusim, p.49*
64. *வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப.134*
65. *J.R. Santiago, Sacred Symbols of Hindusim, p.46*
66. *வை.கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப. 125*
67. *J.R. Santiago, Sacred Symbols of Hindusim, p.50*
68. *ibid, ப.51*
69. *தெய்வத்திரு கிருபானந்தவாரியார், ஆலயம் ஏன்? ப.48*
70. *Bruno Dagens, (translation) Mayamata, verses- 36.198b-200*
71. *வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப.134*
72. *அண்ணா, 108 உபநிடத் ஸாரம், 2-ஆம் பாகம், நிர்வாணோபநிடதம், சூ. 25*
73. *வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப.135*
74. *ibid, ப.135*
75. *ibid, ப.136*

76. *J.R. Santiago, Sacred Symbols of Hindusim, p.60*
77. சுவாமி ஆசுதோஷானந்தர்(விளக்கவுரை) கடஉபநிடதம், மரண பயத்தை வெல், சூ. 2.3.2
78. அண்ணா, சிவானந்த லஹரீ, மனக்குரங்கைக் கட்டும் கயிறு சூ.20
79. தெய்வத்திரு கிருபானந்தவாரியார், ஆலயம் ஏன்? ப. 28.
80. *J.R.Santiago, Sacred Symbols of Hinduism, p. 40*
81. *ibid,*
82. அண்ணா, 108 உபநிடத்சாரம், 3-ஆம் பாகம், யோக குண்டலின்யுபநிடதம், சூ. 1
83. ஸ்வாமி, பதஞ்சலி யோக சூத்திரம் ப. 128
84. *J.R.Santiago,Sacred Symbols of Hinduism, p. 41,*
85. சுவாமி விவோகானந்தர் ஞானதீபம் முதலாம் பாகம் பக்.172- 174
86. *J.R. Santiago, Sacred Symbols of Hindusim, p.76*
87. *ibid,* ப. 58
88. *ibid,* ப. 59
89. வை.கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப.134
90. *ibid,* ப.13291. வை.கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப.131
91. *J.R. Santiago, Sacred Symbols of Hindusim, p.74*
92. *ibid,*
93. சுபாஷ் சந்திர போஸ்,வீரப்பம்பட்டி ஊர்ப்பெயர்.கல்வெட்டு, பழங்காசு, இதழ்.7, ப.24
94. *J.R. Santiago, Sacred Symbols of Hindusim, p.25*
95. முனைவர் குடவாயில் மு.பாலசுப்ரமணியன்,தமிழகக் கோயில்கலை மரபு பக். 30-31
96. வை.கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப.134
97. *J.R. Santiago, Sacred Symbols of Hindusim, p.73*
98. *ibid,* ப.70
99. சுவாமி ஆசுதோஷானந்தர் (விளக்கவுரை) கடஉபநிடதம், மரனத்தை வெல்சூ. 2.3.1
100. அண்ணா, 108 உபநிடத்சாரம், 3-ஆம் பாகம், ருத்ரஹ்ருதயோபநிடதம் சூ. 2.
101. ஷ்ஷுஷ் , 2 -ஆம் பாகம், தக்ஷிணாமூர்த்யுபநிடதம் சூ.1.
102. *Swami Harshananda, Principal Symbols of world Religions, p. 17-18.*
103. அண்ணா, 108 உபநிடத்சாரம், 3-ஆம் பாகம், பஸ்மஜாபாலோபநிடதம், சூ.1
104. *Swami Harshananda, Principal Symbols of world Religions, p. 17-18.*
105. திருமூலர், திருமந்திரம் பா.252
106. *Swami Harshananda, Principal Symbols of world Religions, p. 17-18.*
107. தெய்வத்திரு கிருபானந்த வாரியார் சுவாமிகள்ஆலயம் ஏன், ப. 46)
108. சைவ எல்லப்ப நாவலர், பா.314
109 அண்ணா, 108 உபநிடத்சாரம், 3-ஆம் பாகம், ஹயக்ரீவோபநிடதம், சூ. 1.3
110. *ibid,* சூ. 1.5
111. சுவாமி ஆசுதோஷானந்தர் (விளக்கஉரை) கட உபநிடதம், சூத். 3-9)
112. *J.R.Santiago, Sacred Symbols of Hindusim, p.42.*
113. வை.கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், பக். 131-132
114. *Adrian Snodgrass , The Symbolism of the Stupa, p.307*
115. வை.கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், பக். 131-132
116. *J.R. Santiago, Sacred Symbols of Hindusim, p.64*
117. ஸ்தபதி வே.இராமன், பழங்காசு, இதழ். 5, திருக்கோயிலைத் தெரிந்துக் கொள்வோம், ப. 57
118. *Adrian Snodgrass, The Symbolism of the Stupa, p.107*
119. *J.R. Santiago, Sacred Symbols of Hindusim, p.75*
120. *ibid,* ப.75
121. *ibid,* ப.74
122. *ibid,* ப.70
123. *ibid,* ப.66
124. *ibid,* ப.69

125. சக்தி மஹிம்ன ஸ்தோத்திரம், ஸௌபாக்கிய வித்யா ஜபம் சூ.8. பக். 23-24
126. அண்ணா, 108 உபநிடத்சாரம் (3-ஆம் பாகம்) அக்ஷமாலிகோநிடதம், சூ.1
129. ப்ரஹ்மஶ்ரீ வ.கை. கேதாரீச்வர சர்மா (தொகுப்பு) தேவிபாகவதம்,ப.95
130. J.R. Santiago, Sacred Symbols of Hindusim, p.24
131. ibid, ப.24
132. ibid, ப.47
133. சுவாமி ஆசுதோஷானந்தர் (விளக்கவுரை), தைத்தரீய உபநிஷதம் ,சூ. 5.3
134. அண்ணா, 108 உபநிடத் சாரம், 3-ஆம் பாகம், யோகசிகோபநிடதம்,சூ 1.5
135. J..R. Santiago, Sacred Symbols of Hindusim, p.73
136. ibid, ப.73
137. அண்ணா, 108 உபநிடத் சாரம், 3-ஆம் பாகம், பைங்கலோபநிடதம், சூ.3
138. J.R. Santiago, Sacred Symbols of Hindusim, p.47
139. தெய்வத்திரு. கிருபானந்தவாரியார், ஆலயம் ஏன், ப. 15.



# இந்து சமய சின்னங்களின் உட்பொருள்

| | |
|---|---|
| பிரம்மனின் நான்கு முகங்கள் | - நான்கு வேதங்கள் |
| பிரம்மனின் சடை | - மூலிகை |
| ஈசனின் ஐந்து முகங்கள் | - ஐந்து தொழில்கள் |
| சத்யோஜகதம் | - பூமி |
| வாமதேவம் | - நீர் |
| அகோரம் | - நெருப்பு |
| தத்புருடம் | - காற்று |
| ஈசானம் | - வானம் |
| திருஉருவங்களின் இருகண்கள் | - சூரியன் மற்றும் சந்திரன் |
| மூன்றாவது கண் | - அக்னி |
| சங்கு,சக்கரம், கெதை,பத்மம் | - வானம், காற்று, நெருப்பு, நீர் |
| சாராங்கம் சங்கு | - சத்வ, தமோ,அகங்காரம். |
| சக்கரம் | - மனம் |
| விஷ்ணுவின் உறக்கம் | - யோக நித்திரை, அதாவது எல்லாவற்றையும் தம்முள்ளே அடக்கி கொண்டு அவற்றைச் செவ்வனே செயல் பெறச் செய்து, அதிலிருந்து நீங்கி ஆனந்த மயமாய் இருப்பதைக் குறிக்கும். |
| புத்தகம் அல்லது ஓலைச்சுவடிகள் | - அனைத்து அறநூல்கள் |
| அட்சய மாலை | - காலம் |
| ஏர்க்கலப்பை | - காலம் |
| உலக்கை | - மரணம் |
| சரஸ்வதியின் கைகள் | - வேதங்கள் |
| மணிஆரம் | - புருஷன் (கௌஸ்துபமாக) |
| ஸ்ரீ வத்சம் எனும் திருமரு | - மூலப்பிரகிருதி |
| கெதை | - மஹத் தத்துவம் |
| கத்தியும் அதன் உறையும் | - ஞானமும் அஞ்ஞானமும் |
| ஞானம் மற்றும் கர்மேந்தரியங்கள் | - அம்புவனமாலை |
| | - பஞ்ச பூதங்களும் பஞ்ச கன்மாக்கினைகளும் |

| | |
|---|---|
| கருடன் (வைணவம்) | - மறை |
| கருடன்(பொது) | - மனம் |
| சிம்மம் | - வீரம் |
| குதிரைகள் | - திசைகள் மற்றும் புலன்கள் |
| முயலகன் | - கன்மம்,மாயை,ஆணவம் கட்டுண்டு கிடக்கும் உயிர் |
| காமதேனு மற்றும் கற்பத்தரு | - விரும்பியவற்றையெல்லாம் தரும் சின்னம் |
| அரசமரம் | - ஞானம் |
| விழுதுகளோடு கூடிய ஆலமரம் | - சூக்குமத்திலிருந்து ஸ்தூலமாக ஓங்கி உயர்ந்து கண்டு இருக்கும் பிரபஞ்சம் |
| நெற்கதிர் | - சுக்லமும் குரோணியும் |
| பலிபீடம் | - கன்மம், மாயை, ஆணவத்தைப் பலிகொடுத்தல் |
| துவஜஸ்தம்பம் | - 33 கணுக்கள் கொண்டமேருதண்டு (முதுகெலும்பு) |
| தீவட்டில் | - அறியாமை எனும் இருளை நீக்கும் ஒளி (ஞானம்) |
| **நிறங்கள்** | |
| வெள்ளை | - சத்வ குணம் |
| சிவப்பு | - ரஜோ குணம் |
| கருப்பு | - தமோ குணம் |
| மஞ்சள் | - மங்கலம் மற்றும் செல்வம் |
| நீலம் | - வானும் கடலும் போல இறைவனின் பரந்த தன்மை. விஷ்ணுவின் நிறம் |
| பச்சை | - வளம் மற்றும் செழிப்பு |
| மின்னல் | - விஷ்ணுவின் வில் |
| இடி | - இந்திரன் |
| **மலர்கள்** | |
| தாமரை | - தெய்வத்தன்மை, செல்வம் |
| நீலோற்பலம் | - வைராக்கியம் |
| குமுதம் (ஆம்பல்) | - மகிழ்ச்சி |
| வாகை | - வெற்றி |
| வஞ்சி | - போர்க்குணம் |

**ஆயுதங்களின் நிறங்களும் தத்துவங்களும்**

| | | |
|---|---|---|
| வஜ்ரம் | பல வண்ணங்கள் | ஆண் |
| சக்தி | பொன் | பெண் |
| தண்டம் | நீலம் | ஆண் |
| கத்தி | நீருண்ட மேகம் | ஆண் |
| பாசம் | சிவப்பு | அலி |
| அங்குசம் | பதுமராகம் | ஆண் |
| கெதை | பனி | பெண் |
| சூலம் | இந்திர நீலம் | ஆண் |
| சக்கரம் | நெருப்பு | ஆண் |
| பத்மம் | சிவப்பு | அலி |
| வில் | செந்தாமரை | பெண் |
| அம்பு | சிவப்பு | ஆண் |
| சங்கு | பால் | பெண் |
| கொடி | சிவப்பு | அலி |
| நந்தகி (வாள்) | சிவப்பு | ஆண் |
| சாரங்கம் (வில்) | கறுப்பு | பெண் |
| வெள்ளை | | பெண் |
| சிவப்பு | | பெண் |
| பச்சை | | பெண் |
| மஞ்சள் | | பெண் |

# நிறைவு

*எந்த ஒரு நாடு தன் வரலாற்றையும் பண்பாட்டையும்*

*மறந்துவிடுகிறதோ அது தன்னையே மறந்துவிடும்*

*நமது புறக்கண்களுக்குத் புலப்படும்படியாகத் திருக் கோபுரங்களின் நிலைக்கால் படிகளிலும், திருக்கோயில் திருச்சுற்றுக்களின் கல் தரைகளிலும், கிராம பொதுக் கூடங்களிலும், கல்தூண்களிலும், மலைப் பாறைகளிலும் பதிவு செய்யப்பட்டுள்ள, குறியீடுகள் அனைத்தும் நம் அகக்கண்களைத் திறக்கும் திறவு கோல்கள்.*

*நாம் ஆன்மிக சிந்தனையுடன் என்றென்றும் நன்றாக வாழ வேண்டும் என்பதைப் பறைச்சாற்றிக் கொண்டிருக்கும் அரியபொக்கிஷங்களான குறியீடுகளைப் பாதுகாப்பதன் மூலம் இந்து சமயத்தின் அங்கங்களான தத்துவம், புராணம், சடங்கு - சம்பிரதாயமும், நம் நாட்டின் வரலாறும், பண்பாடும் பாதுகாக்கப்படும் என்பது நிச்சயம்.*

*எனவே அக்குறியீடுகளைப்பற்றியத் தகவல்களை இந்திய அரசு இந்தியத் தொல்பொருள் துறை, தமிழகத் தொல்லியல் துறை, இந்து சமய அறநிலையத் துறை, தன்னார்வ ஆய்வு நிறுவனம் போன்ற ஆய்வு மையங்களுக்கு அறிவிப்பது அவசியமாகும்.*

*அவ்வாறு அறிவிப்பதன் வாயிலாக இனிவரும் காலங்களில் குறியீடுகளின் முக்கியத்துவம் மாறாமலும் மறையாமலும் நம் வருங்கால சமுதாயத்திற்குச் சென்றடையும் என்பதும் நிச்சயம்.*

*எனவே, திருக்குறியீட்டியல், திருக்கோயில் திருக்குறியீடுகள் எனும் இந்நூல், பல்வேறு இடங்களிலும் காணப்படும் குறியீடுகளையும் அவற்றின் விளக்கங்களையும் ஒரு நூலாகத் தொகுத்து அதனைப் பாதுகாக்கும் முயற்சியின் முகப்படுதலாகும் (முன் தோன்றுதலாகும்). இனிவரும் காலங்களில் இந்நூலை நிறைவு செய்ய முன் வருவோரது* ***திருவடிகள் எங்கள் தலை மேல்*** *- என வணங்குகிறோம்.*



**கா. பாலகிருஷ்ணன்,**

42. முருகவேல் நகர்,

கே.கே. நகர்,

திருச்சிராப்பள்ளி-620 021

அலைபேசி எண்: 99449 66826

காளீஸ்வரன் பாலகிருஷ்ணன் பெரம்பலூர் மாவட்டம் பாடாலூரில் பிறந்தவர். தமது ஆரம்பக் கல்வியைத் திருச்சி, காஜாமியான் மேல் நிலைப்பள்ளியில் பயின்று, ஈ.வெ. ரா. அரசினர் கல்லூரியில் இளங்கலைக் கணிதவியல் பட்டமும், மதுரை காமராசர் பல்கலை கழகத்தில் முதுநிலைக் கணிதவியல் பட்டமும் பெற்றவர். கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தில் இளங்கலைக் கல்வியியல் பட்டமும், திருச்சி பாரதிதாசன் பல்கலைகழகத்தில் முதுநிலை கல்வியியல் பட்டமும், பெற்றவர்.

25 ஆண்டுகளுக்கு மேலாகப் பல்வேறு கல்வி மையங்களில் பணியாற்றிய இவர் தற்சமயம் திருச்சி, இந்தியன் வங்கிக் குடியிருப்புப் பகுதியிலுள்ள, பாரதி மெட்ரிக்குலேசன் மேல் நிலைப்பள்ளியின் முதல்வராவார்.


திருச்சி, **அறிவோம் அறிவிப்போம் அமைப்பின்** நிறுவனரான இவர், பல்வேறுத் துறைகளைச் சார்ந்த ஆதாரச்சான்றுகளைத் தொகுத்து அனைத்துக் கல்வி மையங்களுக்கும் பகிர்ந்தளிக்கும் மகத்தான பணியில் தம்மை அர்ப்பணித்து வருகிறார். மனைவி, மகன், இரண்டு மகள்கள் ஆகியோருடன் வாழ்ந்து வரும் இவரது வயது 48.



**முனைவர் வை.இராம் குமார்,**
*3/105, அக்ரஹாரம் விரிவாக்கம்,*
*கம்பரசம் பேட்டை,*
*திருச்சிராப்பள்ளி-620 101*
*அலைபேசி எண்: 94434 94824*

*முனைவர் வையாபுரி இராம்குமார் அவர்கள் கரூர் மாவட்டம் விசுவநாதபுரி கிராமத்தைப் பூர்வீகமாகவும், தோட்டக்குறிச்சி கிராமத்தைப் பிறப்பிடமாகவும் கொண்டவர். ஆரம்பக் கல்வியைத் தோட்டக்குறிச்சிப் பள்ளியிலும், உயர்நிலை பள்ளிக் கல்வியைக் கரூர் முனிசிபல் உயர்நிலைப் பள்ளியிலும், புகுமுக வகுப்புக் கல்வியைக் கரூர் அரசுக் கல்லூரியிலும், பட்டவகுப்பு (வரலாறு) திருச்சி பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரியிலும், முதுநிலை(வரலாறு) ஈரோடு வாசவி கல்லூரியிலும் படித்தவர். திருச்சி, பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.*

*பல்வேறு நிலைகளில் 29 ஆண்டுகள் பணியாற்றித் தற்சமயம் திருச்சி, தேசியக்கல்லூரியில் வரலாற்றுத்துறைப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். கல்வி சார்ந்த பல அமைப்புகளில் உறுப்பினராக இணைத்துக் கொண்டும், இந்திய அளவில் பல்வேறு மாநாடுகள், கருத்தரங்குகளில் தனது கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார். இந்திய அளவில் பல சுற்றுலா மையங்களுக்கு மாணவர்களை அழைத்துச்சென்று வருபவர். வரலாறு மற்றும் சமூகப் பண்பாடுகள் ஆகியவற்றில் மிகவும் ஆர்வமுடையவர். மனைவி, மகள், மகன் ஆகியோருடன் வாழ்ந்து வரும் இவரது வயது 57.*



**தி.லெ.சுபாஷ் சந்திர போஸ்**
3/43.பி. புது ரெட்டித்தெரு,
பீமநகர்,
திருச்சிராப்பள்ளி-620 001,
அலை பேசி எண்: 97508 94532

திருச்சிராப்பள்ளி, லெட்சுமணன் சுபாஷ் சந்திர போஸ் கீழக்குறிச்சி கிராமத்தைப் பூர்வீகமாகக் கொண்ட இவரது பிறப்பிடம் திருச்சி மாநகரமாகும். திருச்சி க்ஷேசசாயி இன்ஸ்டிடூட் ஆப் டெக்னாஜியில் பொறியியல் கல்வி பயின்று, இந்தியா மற்றும் (கென்யா மற்றும் சூடான்) ஆப்பிரிக்க நாடுகளில் பணிபுரிந்து, சர்க்கரை ஆலை ஆலோசகராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். கோவை பண்பாட்டு ஆய்வு மையத்தின் தொல்லியல் துறையின் தலைவராக அங்கம் வகித்தவர். குறியீடுகள் மற்றும் கல்வெட்டாய்வு இவரது தன்னார்வத்தின் வெளிப்பாடாகும். ஈரோடு தமிழ்ச் சங்கம் இவருக்கு **அறிவியல் ஆன்மிக விஞ்ஞானி** என்ற பட்டமளித்துக் கெளரவபடுத்தியது.

பழங்காசு இதழில் இவரது ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. மேலும் பல்வேறு தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகளை இணையதளத்தில் வெளியிட்டுள்ளார். தி மாஸ்டர் கீ டு அக்லாக் தி மிஸ்டரி ஆன் கான்சன்டிரிக் சர்க்கில் என்ற தலைப்பில் இவர் வெளியிட்ட ஆய்வுக் கட்டுரையின் மூலம் உலகளவில் குறியீடுகளைப்பற்றி ஆய்வு செய்து வரும் ஆய்வு அறிஞர்களுக்கு நன்கு அறிமுகமானவர். தனது ஆன்மிக குருவான முனைவர் தவத்திரு ஸ்ரீ ஜெகநாத சுவாமிகளின் ஆசியால், அன்னை இராஜ ராஜேஸ்வரியின் சூட்சும வடிவமாகிய ஸ்ரீ சக்ரத்தை உருவாக்கும் பெரும்பாக்கியம் கிடைக்கப்பெற்றவர். ஒரு மகளும், ஒரு மகனும் என இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையாகத் தற்போது தனது இல்லத்தரசியுடன் திருச்சி மாநகரில் வசித்து வரும் இவரது வயது 68.



**செம்மைப்படுத்தியவர்**

**முனைவர் பி.தமிழகன்**
*தமிழாசிரியர் (ஓய்வு)*
*2, பிச்சையம்மாள் நகர்,*
*காசாமலை, திருச்சி-23*
*அலை பேசி எண்: 99407 04702*



**ஓவியர்கள்**

**அ.சின்ராசு**
*நிறுவனர், ஓவியக்குடில்,*
*15, நியூ ஆல்பா நகர்,*
*ஆர்.எம்.எஸ். காலனி,*
*கருமண்டபம், திருச்சி-01*
*அலை பேசி எண்: 99438 94936*



**கா. மோகன்**
*ஓவியக்கலை ஆசிரியர்,*
*10 எல்.ஐ.சி. காலனி,*
*கே.கே.நகர்*
*திருச்சி- 21*
*அலை பேசி எண்: 97913 60726*

## குறிப்புக்கள்